
# Union's Special Souvenir 2011



# யூனியன் சிறப்பு மலர்

# மக்கள் வங்கி என்றும் உங்களுடன்......

www.peoplesbank.lk




மக்கள் வங்கியின்
இசுறு உதான

அன்பான பிள்ளைகளே,
உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு இம் முறையும்
**மக்கள் வங்கியிடமிருந்து** பெறுமதிமிக்க பரிசுகள்

1000 சிறுவர் பைசிக்கிள்கள்
100 உயர்கல்வி புலமைப்பரிசில்கள்
500 மௌன்டன் பைசிக்கிள்கள்

மக்கள் வங்கி
சிசு உதான
சிறந்த எதிர்கால சந்ததியினர்

AAA- Brand Finance Rating, AA⁻(lka) Fitch Rating

விரையுங்கள். மேலதிக விபரங்கள் அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில்.

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி


யூனியன்ஸ் சிறப்பு மலர் இனிதே வெளிவர வாழ்த்துபவர்கள்.
SINGER
160
EXCELLENCE
160 வருட கால
நிகரற்ற சேவையில்
திகழும்
SINGER
Samsung SMART TV
SINGER
சங்கானை
077 2208232
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5408
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4389
சுன்னாகம்.
021 224 0555
நெல்லியடி.
021 226 4937
மானிப்பாய்.
021 225 5343
சாவகச்சேரி
021 227 0197
சிங்கர்
யாழ் மண்ணின் பரம்பரைத்தோழன்



## உங்கள் பணத்தையும் சுயாதீனத்துவத்தையும் ஒருங்கே பேணக்கூடிய இலங்கை வங்கியின் "காந்தா ரண் கினும்"

**கணக்கை ஆரம்பிக்கும் முறை**

18 வயதிற்கு மேற்பட்ட மகளிர் ஆகக்குறைந்த தொகையான 500/- வைப்பிலிட்டு காந்தா ரண் கினும் கணக்கினை ஆரம் கலாம்

மகளிர்கள் தங்களுக்கென ஒரு கூட்டுக்கணக்கையும் ஆரம்பிக்க

**அதிகவட்டி வீதம்**

சாதாரண சேமிப்புக் கணக்கினை விட 05% கூடிய வட்டி வழங்கப்ப

**இலவச காப்புறுதி வசதிகள்**

கணக்கு வைப்பாளர் விபத்தினால் முழுமையாக அங்கவீனமடைந் அல்லது மரணத்தின் போது வைப்பிலிருக்கும் தொகையின் 10 ம கினை காப்புறுதித் தொகையாகப் பெற்றுக் கொள்வார்கள்

(ஆகக் கூடிய தொகை ரூபா 5,00,000/-)

காந்தா ரண் கினும

BANK OF CEYLON BOC Bankers to the Nation

(கணக்கை வைத்திருப்பவர்கள் மேற்குறிய காப்புறுதி வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு விபத்த நடப்பதற்கு 6 மாதங்க முதலிருந்தே கணக்கில் ஆகக் குறைந்தது ரூபா 10,000/- வைப்பிலிட்டிருக்க வேண்டும்)

## வீசா இலக்ரோன் கார்ட்

உங்களுக்கு வழங்கப்படும் வீசா இலக்ரோன் கார்ட் மூலம் ATMயில் இருந்து இலங்கையிலும் வெளிநாட்டிலும் பண மீளப் பெறும் வசதிகளை பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் உங்கள் தேவைகளுக்கேற்ப உள்ளூரிலோ அல்லது வெளியூரிலோ உங்கள் தேவைகளுக்கேற் பண்டங்கள் ம சேவைகளை நியமிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## குறைந்த வட்டியில் கடன் அட்டை

நிலையான வருமானம் கொண்ட கணக்கு வைத்திருப்பவர்கள் கடன் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

## வங்கிக் கடன் வசதிகள்

விஷேட கடன் திட்டங்களின் கீழ் குறைந்த வட்டியில் ஏற்றுக் கொள்ளக்கூடிய உத்தரவாதத்தின் பேரில் கடன் வசதி பெறலாம்.

(மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை மாற்றவோ அல்லது திருத்தங்களை மேற்கொள்வதற்கோ உரிமை இலங்கை வங் உண்டு)

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்

# Union Special

## Souvenir

## யூனியன் சிறப்பு மலர்

## 2011

# யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை

## கொடிக்கீதம்

தெல்லியூரில் ஆதியாக வந்த அன்னையே என்றும்
ஏற்றமோடு நாம் துதிப்போம் ஒன்று கூடியே
கல்வி ஓங்க கலை சிறக்க வந்த அன்னையே
தெல்லியூரின் யூனியன் கல்லூரி வாழ்க வாழ்கவே

அதிபர் துரை ரத்தினம் ஐயாவின் சேவையால்
எங்கள் கல்லூரி வளர்ந்தது பல்வளங்கள் கொண்டதாய்
பெருகும் பெருமை பேணிக்காக்க பச்சை நீலமாய்
கொடியை ஏற்றிடுவோம் எங்கள் அன்னை பாதம் பணிந்தே

ஆயிரத்தெண்ணூற்றிப் பதின் ஆறாம் ஆண்டிலே
மக்கள் அறிவுத்தாகம் தீர்க்க வந்த அன்னை ஜோதியே
ஆயிரம் பல்லாயிரம் அறிஞர் கூட்டத்தை நம்
நாட்டிற்கீயும் யூனியன் கல்லூரி வாழ்கவே

செந்தமிழோடாங்கிலமும் கணிதம் விஞ்ஞானம்
சேரும் அழகியலும் தொழில்நுட்பம் சமயம் சமூகம்
சுந்தர மனையியலும் வர்த்தகம் விளையாட்டிலும்
சிந்தை நிறை வெற்றி தரும் கல்லூரி வாழ்கவே.

அதிபரோடு ஆசிரியர் மாணவர் வாழ்க
வெற்றிமேலே வெற்றி நல்கும் எங்கள்
அன்னையே வாழ்க என்று கொடியை ஏற்றி
அன்னை பாதம் பணிந்து போற்றுவோம் - எங்கள்
யூனியன் கல்லூரி வாழ்க வாழ்க வளர்கவே!

**இயற்றியவர் : பொன். ஸ்ரீ.வாமதேவன்**


## எங்கள் அதிபர்



**திரு.சு.புண்ணியசீலன்**

BEd. (Hons), SLPS - 1

திரு



பகுதி
செ
BA


# முகாமைத்துவக்குழு-2011



அதிபர்
திரு.சு.புண்ணியசீலன்
BEd(Hons), SLPS - I



பிரதிஅதிபர்
திரு.இ.சண்முகேஸ்வரன்
BSc,Dip.in.Ed,M.Ed



உபஅதிபர்
திரு.வே.சந்திரசேகர்
BSc,Dip.in.Ed,M.Ed



பகுதித்தலைவர் (தரம் 6-7)
செல்வி.பு.இளையதம்பி
BA,Dip.in.Ed,M.A



பகுதித்தலைவர் (தரம் 8-9)
திருமதி.நந்தினி.கமலநாதன்
Sp.Trd in Science



பகுதித்தலைவர் (தரம் 10-11)
திரு.சி.ஜெயரூபன்
BA,Dip.in.Ed

මගේ අංකය
எமது இல.
My Number

ඔබේ අංකය
உமது இல.
Your Number

දුරකථනය :
தொலைபன்னி
Telephone : 021-2222294, 021-2222483, 021-2222006

යාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

තැ.පෙ.අංකය 57
තිරුනෙල්වේලි
යාපනය.

த.பெ.எண் 57
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்

P.O.Box 57,
Thirunelvely,
JAFFNA

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்துச்செய்தி



தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கல்லூரி ஸ்தாபக தினமான 15.10.2011 அன்று நடைபெறுவதையிட்டு பெருமகிழச்சியடைகின்றேன். இவ்விழாவினை முன்னிட்டு வெளிவரும் "யூனியன்ஸ்" எனும் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதை பெருமையாக கொள்கின்றேன்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பெரும் இடர்களுக்கு மத்தியிலும் பலவகையான இடர்ப்பெயர்வுகளின் பின்னரும் கல்வியிலும் விளையாட்டிலும் பலவிதமான இணைபாடவிதானச் செயற்பாடுகளில் முதன்மை வகிப்பதையிட்டு ஆச்சரியப்பட வேண்டியுள்ளது. இது இங்கு கல்விகற்கும் மாணவர்களின் சிறப்பியல்புகளையும் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களது அர்ப்பணிப்பையுமே எடுத்துக் காட்டுகின்றது. இக்கல்லூரி மேலும் மேலும் சிறப்புற வளரச்சியடைந்து பெயரம் புகழும் பெற்று ஒரு சிறந்த உதாரணமாகத் திகழவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பேராசிரியர்
வசந்தி அரசரத்தினம்
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# கல்வி அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் ஏழாவது வெளியீடாக "யூனியன்ஸ்" என்னும் சிறப்பு மலர் வெளிவரும் இவ்வேளையில், பாராட்டி - வாழ்த்த - நல்லாசிகள் வழங்குவதில் பேருவகை அடைகிறேன்.

இக் கல்லூரி பெயர்ந்த போதும் கல்விச் செயற்பாட்டில் வெற்றிநடை போட்டதை நினைத்து இன்றும் பெருமையாக உள்ளது.

2010 ஆம் ஆண்டு க.பொ.த (உ/த) பரீட்சையில் இருபது வீதமானவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளதை ஒரு சாதனையாகவே கருதுகின்றேன். கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் மட்டுமல்லாமல் விளையாட்டு, தமிழ்த்தினப் போட்டி, ஆங்கில தினப்போட்டி ஆகியவற்றிலும் தமது ஆற்றல்களை மாணவர்கள் வெளிக்காட்டுவதற்கு களம் அமைத்துக் கொடுத்த அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமுகம் ஆகியோரை மனமார வாழ்த்துகின்றேன்.

இக் கல்லூரியின் பெருமைகள் முழுவதையும் எடுத்துக்கூற விழைந்தால், இவ் வாழ்த்துச் செய்தி பெரிய கட்டுரையாக மாறிவிடும் என்பதால், இத்தோடு எனது வாழ்த்துச் செய்தயை நிறைவுசெய்கின்றேன்.

இக்கல்லூரியின் வளரச்சிக்காக அரும்பாடுபட்டுழைத்த சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மீண்டும் எனது நல்லாசிகளையும் கூறுவதுடன் "யூனியன்ஸ்" மலரில் உள்ள ஆக்கங்கள் மாணவர்களுக்கு பயன்படும் என்பதையும் கூறி வெளியீட்டு விழா சிறப்புற வாழ்த்துவதில் பெருமகிழச்சி அடைகின்றேன்.

இ.இளங்கோவன்
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடமாகாணம்.

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය
தொலைபேசி
Telephone } 021-222 2235

ෆැක්ස්
பக்ஸ்
Fax } 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු
பொது தொலைபேசி
General Telephone } 021-222 22
021-222 22

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය
எனது எண்
My No. } Message from GA

ඔබේ අංකය
உமது எண்
Your No.

දිනය
திகதி
Date } 27.09.2011

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரி தனது வருடாந்த பரிசளிப்பு விழாவை முன்னிட்டு "யூனியன்ஸ்" எனும் சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழச்சியடைகிறேன்.

கடந்த பதினான்கு வருடங்கள் நடைபெற்ற க.பொ.த சா/த பரீட்சையில் கோட்ட, வலய மட்டங்களில் 1ம், 4ம் இடத்தையும் இக் கல்லூரி பெற்றதுடன் 2010ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சா/த பரீட்சையில் 26 மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியமை இக் கல்லூரியின் கல்வி வளர்ச்சியைப் பிரதபலிப்பதாக அமைகின்றது. அதுமட்டுமல்லாமல் விளையாட்டுத் துறைகளில் வலைப்பந்தாட்ட அணியானது 14 வருடங்களாக, கோட்ட, வலய, மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தை ஈட்டியுள்ளதுடன், தேசிய மட்டத்தில் தொடர்ந்தும் பங்கு பற்றிக்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இதேபோல் மேசைப்பந்தாட்ட அணி, ஹொக்கி, கிரிக்கட்ட அணி போன்ற விளையாட்டுக்களில் பங்குபற்றி வருவதுடன் வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பங்கு பற்றி வெற்றியீட்டியுள்ளமையும் குறிப்பிடட்த்தக்கது.

மேலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் இரண்டாம் மொழி (சிங்களம்) போட்டியில் பங்கு பற்றி மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளமையும், தமிழ் மொழித்திறன், இசை, இலக்கணம், சமூகவிஞ்ஞானம் ஆகிய போட்டிகளில் சாதனை படைத்துள்ளமையும் பாராட்டுக்குரிய விடயங்களாகும்.

இவ்வாறு இப் பாடசாலையானது கல்வியிலும், விளையாட்டிலும் மென் மேலும் பல சாதனைகள் படைத்து வளரச்சி பெற எனது மனமாரந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், இவற்றுக்கெல்லாம் உறுதுணையாகச் செயற்பட்ட அதிபர், ஆசிரியர்களுக்கும் எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி.இமெல்டா சுகுமார்
அரசாங்கஅதிபர் / மாவட்டச்செயலர்,
யாழ் .மாவட்டம்

# செஞ்சொற்செல்வரின் ஆசிச் செய்தி



யாழ்குடாநாட்டில் எழுந்த உன்னத கல்லூரிகளில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி காலத்தால் முந்தியது. சாதி சமயங்களுக்கு அப்பால், அனைவருக்கும் கல்வி வழங்கிய வரலாற்றுப் பாடசாலை இப் பாடசாலைகளின் சீரிய வளர்ச்சிக்கு உதவிய அதிபர் ஆசிரியர்களின் பணி மறக்க முடியாது. போரின் அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து அல்லற்பட்ட இக்கல்லூரியின் மேன்மையைக் காத்த அதிபர்கள் வரிசையில் திரு.சு.புண்ணியசீலன் அவர்களின் பங்களிப்பு மெச்சத்தக்கது. இவரது துணிவும் ஆளுமைச் சிறப்பும் தனித்துவமானது. இவரது அயராத முயற்சியால் யூனியன் கல்லூரி தன் சொந்த இடத்தில் மீளவும் நிலை பெற வழிபிறந்தது. இக் கல்லூரியின் பல்வேறு வெற்றிகளுக்கு காரணமாக விளங்கும் ஆசிரியர்களும் மாணவர்களும் பாராட்டுக்குரியவர்கள். இக் கல்லூரியின் வெற்றிக்குப் பெரிதும் பக்கத்துணையாக நின்று உழைக்கும் பிரதி அதிபர் திரு.சு.சண்முகேஸ்வரனின் சீரிய சேவையை பலரும் புகழ்ந்துரைப்பர். எல்லோரது கூட்டு முயற்சியால் சிறப்புற்று விளங்கும் இக்கல்லூரி என்றும் பெருமையுடன் தன்மேன்மையை நிலைநாட்டத் துர்க்காதேவியைப் பிரார்த்தித்து நல்வாழ்த்து கூறி அமைகிறேன்.

"யாவர்க்குமாம் என்றும் இன்னுரைதானே"

தலைவர்
ஸ்ரீ.துர்க்காதேவஸ்தானம்
தெல்லிப்பழை


மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்
පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත
PROVINCIAL DEPARTMENT OF EDUCATION, NORTHERN PROVINCE

மருதனார்மடம், சுன்னாகம் | මරුතනාර්මඩම, චුන්නාකම | Maruthanarmadam, Chunnakam

☎-021 3215545 ✉: apdeedne@sltnet.lk

எனது இலக்கம் / මගේ අංකය / My No: NP/20/SO/C/25 உமது இலக்கம் / ඔබේ අංකය / Your No: Date:- 07.10.2011

# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி



யா/யூனியன் கல்லூரி தனது வருடாந்த பரிசளிப்புத் தினத்தில் "யூனியன்" என்ற சிறப்பு மலரை வெளியிடுவதையிட்டு மிகவும் உவகையடைகிறேன். தாபகரின் நினைவு தினத்தை நன்றியுணர்வுடன் போற்றுவது மட்டுமன்றி பாடசாலையில், மாணவர்கள் படைத்த சாதனைகளை ஆவணப்படுத்தி பிற்கால சந்ததியினருக்கு வழங்கும் செயற்பாடும் போற்றத்தக்க ஒன்றாகும்.


இக்கல்லூரி பொதுப்பரீட்சைப் பெறுபேறுகளில் மிக உன்னதமான இடத்தைப் பெற்று நிமிர்ந்து நிற்பது மட்டுமன்றி, இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் அபரிதமான ஓர் உயர்வுண்டு மிக உச்சஸ்தானத்தில் இருப்பது ஏனைய கல்லூரிகளுக்கு ஒரு முன்மாதிரியாகவும் உள்ளது.

வலயமட்ட, மாவட்ட மட்ட, மாகாணமட்டப் போட்டிகளில் உயர்நிலை அடைந்து தொடர்ச்சியாக தேசியமட்டப் போட்டிக்கு, மாணவர்களை விளையாட்டுப்போட்டி, தமிழ்த்தினப்போட்டி, சமூகவிஞ்ஞானப்போட்டி, இரண்டாம்மொழிப் போட்டி போன்றவற்றில் துறைரீதியாக பங்குபற்றச் செய்து பூரணமனிதனை உருவாக்கும் செயற்பாட்டின் தன்னிறைவு பெற்ற ஒன்றாக விளங்குகின்றது. இத்தன்மை மேலும் பல்லாண்டுகாலம் வளர்ச்சியடைய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் இறைவனின் நல்லாசிகள் கிடைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பணிந்து எனது மனப்பூர்வமான ஆசிகளை வழங்குகின்றேன்.

வாழி பல்லாண்டு

ப.விக்னேஸ்வரன்
மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.

# வலயக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி



குடாநாட்டுப் பாடசாலைகளின் பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகள் தொடர்பான ஆய்வறிக் கைகளைத் தொடர்ந்து பார்த்து வருபவர்களுக்கு ஒரு விடயம் தெளிவாகும். தேசியப்பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளில் பெறுபேறுகள் உயர்நிலையிலேயே இருந்து வருகின்றன. தவிர மாகாணப் பாடசாலைகள் சிலவும் உயர்ந்த பரீட்சைப் பெறுபேற்றைத் தொடர்ந்து வெளிக்கொணர்ந்து வருகின்றன. இவ்வாறு உயர்பெறுபேற்றின் வாயிலாக கடந்த ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக எனது கவனத்தை ஈர்த்து வரும் பாடசாலைகளில் ஒன்றுதான் யா/ யூனியன் கல்லூரி.

இப்பாடசாலையின் வளர்ச்சி நிலைக்கான காரணிகள் எவை? பலரிடம் வினவினேன். மாணவர்களுக்கான பொதுவான கருத்தரங்குகளை நடத்து வதற்கான வளவாளர் பட்டியல்களில் உள்ள ஆசிரியர்களின் பெயர்களை அவதானித்து வருகின்றேன். அப்பட்டியல்களில் இப்பாடசாலை ஆசிரியர்களின் பெயர்கள் நிச்சயம் இடம்பெற்றிருக்கும். இவ்வாறானதொரு சிறந்த ஆசிரியர் குழாம் எப்படி இங்கே உருவானது?

2006ம் ஆண்டு காலப்பகுதி மாணவர்களுக்கான இலவச பாடநூல்களை எடுத்துவருதல், அதனை விநியோகித்தல் தொடர்பில் உச்சக்கட்ட சிரமங்களை எதிர்நோக்கிய காலம். கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட பாடநூல்களை வலயங்களுக்கு விநியோகிக்கும் அடையாள நிகழ்வொன்று இக்கல்லூரியில் இடம்பெற்றது. பாடசாலை நாளொன்றில் பாடசாலை மூடும் நேரத்திற்குச் சற்று முன்னதாகப் பாடநூல் விநியோக நிகழ்வுக்குச் சென்றிருந்தேன். அதிபர் திரு. சு. புண்ணியசீலன் அவர்கள் மகிழ்ச்சியுடன் என்னை வரவேற்று வகுப்பறைகளைச் சுற்றிக் காண்பித்தார். சகல வகுப்பறைகளிலும் வினைத்திறன் மிக்க கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், சகல ஆசிரியர்களிடத்தும் புது உற்சாகத்தை அவதானித்தேன். மாணவர்களும் சிறந்த துலங்கல்களை வெளிப்படுத்தினர். அதன் பின்னர் புத்தக விநியோக விழாவில் கலந்து கொணடேன். விழாமுடியப் பிற்பகல் 5மணியாகி விட்டது. மீண்டும் இப்பாடசாலையின் வகுப்பறைகள் சிலவற்றை அவதானித்தேன். மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. மைதானத்தை நோக்கினேன். ஆசிரியை ஒருவரும் சில மாணவர்களும் வலைப்பந்தாட்டப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். இக்கல்லூரி அவ்வேளை உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருந்தது. பாதுகாப்புத் தொடர்பாக உயர் கெடுபிடிகள் நிலவிய நேரம். மாலை ஆறுமணிக்கு முன்னரே ஊரே அடங்கிவிடும் காலப்பகுதி. அக்காலப்பகுதியில் இக்கல்லூரியின் இவ்வாறான

செயற்பாடுகள் இடம்பெற்றிருந்தன. இப்பாடசாலையின் வளர்ச்சி நிலைக்கான காரணங்களும் எனக்குத் தெளிவாயிற்று.

நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழலால் தமது கட்டிடங்களை மாத்திரமன்றி கல்விப்பாரம்பரியங்களையே இழந்த பாடசாலைகள் பல. ஆனால் கட்டிடங்களை மாத்திரமன்றி சகல வளங்களையும் இழந்தபோதும் தனது கல்விப்பாரம்பரியத்தை நிலைநிறுத்தி வந்த பாடசாலைகளில் ஒன்றுதான் இக்கல்லூரி. இதன் இன்றைய உன்னத நிலைக்கு உழைத்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் அனைவரும் போற்றத் தகுந்தவர்கள். இவர்களுக்கு எனது நன்றிகளையும் மதிப்பையும் வெளிப்படுத்துவதோடு இக்கல்லூரி பல நூற்றாண்டு காலம் சிறப்புடன் மிளிர வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

ஆ. ராஜேந்திரன்
வலயக்கல்விப் பணிப்பாளர்
வலிகாமம் கல்வி வலயம்.

# கோட்டக்கல்விப்பணிப்பாளரின் ஆசியுரை



வலிவடக்குப் பிரதேசம் மீளக்குடியமர்த்தல் துரிதப்படுத்தப் பட்டிருக்கும் வேளையில் அங்கு குடியேறும்மக்கள் தங்கள் செல்வங்களின் கல்விப்பசியை தீர்க்க வேண்டிய வாய்ப்பினை நிறைவுசெய்யத் வேண்டிய அவசியம் முதன்நிலையானதாகும். அதற்குரிய தயார் நிலையிலும் வெவ்வேறு சாதனங்களால் அலங்கரித்துக் கொண்டு கல்வி இணைப்பாட விதான செயற்பாடுகளை அளவின்றி வழங்கி மாணவரை நல்ல நிலைப்படுத்தும் முழுமையான செயல்திட்டத்துடன் இயங்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவை கொண்டாடும் இவ்வேளையில் சிறப்புடன் வெளியிடும் "யூனியன்ஸ்" மலரை மன நிறைவுடன் வாழ்த்துகின்றேன்.

யூனியனின் செயற்பாடுகளை சற்றுப்புரட்டிப்பார்க்கும்போது அதன் வரலாறு ஏடுகளிலே பலசிறப்பு தன்மைகள் பதிக்கப்பட்டிருக்கின்றன. பாடசாலையில் சாதாரண, உயர்தர பேறுகள் மாகாண மட்டத்தில் ஒப்பிடக்கூடிய தன்மையிலும் கோட்ட வலைய மட்டத்திலும் முன்னணியிலும் காணப்படுகின்றன. விளையாட்டுத்துறையில் பாடசாலையில் சிலதுறை அணிகள் தேசிய மட்டம் வரை தமது பங்களிப்பை செய்துள்ளது. அதுமட்டுமன்றி எமது நாட்டின் பலபாகங்களிலும் யூனியன் வீரர்கள் பல போட்டிகளில் பங்குகொண்டு வெற்றி வாகை சூடியுள்ளனர்.இத்துடன் நின்று விடாது எழுத்துத்துறை ,பேச்சுத்துறை , நாடகத்துறைகளிலும்யூனியனின் பங்களிப்பும் வெற்றிப்பேறும்சிறப்பாக உள்ளது. இத்தனைக்கும் காரணம் மனநிறைவுடன் ஈடுபடும் மாணவரும் முன்னின்று உழைக்கும் அதிபரும் இணைந்து செயல்படும் ஆசிரியரும் ஆவார்.இவர்களினால் கல்வி நிர்வாகத்தில் உள்ள அனைவரும் பெருமை அடைகின்றோம்.

"யூனியன்ஸ்" குளிர்மையான காலநிலையிலிருந்து வரண்டு இன்று செழுமை பெறும் வரலாற்று பெருமை மிக்க தெல்லிப்பழையில் மீண்டும் மலர்கிறது.மலரும் மலர் தந்த யூனியனும் என்றும் நறுமணம் கமழும்.

வாழ்க மேலும் வளமுடன்.

சற்குனானந்தன்.கைலாசநாதன்,
கோட்டக்கல்விப்பணிப்பாளர்,
தெல்லிப்பழை

பிரதேச செயலகம், வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை
**DIVISIONAL SECRETARIAT, VALI NORTH, TELLIPPALAI**
ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය, වලිකාමම් උතුර, තෙල්ලිප්පලෙයි

Divisional Secretary } 021 321 7333 Administrative Office } 021 224 1726 Accountant } 021 224 1725 Assistant Director of Planning } 0212241722

அலுவலகம் Office 021 224 1726 தொலைநகல் Fax 021 224 1726 மின்னஞ்சல் Email dstellippalai.@yahoo.com.

My No } DS/VN/ADM Your No } Date } 2011.09.20.

## வலிகாமம் வடக்கு, பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



எங்கள் பிரதேச செயலக பிரிவில் தனித்துவமான கல்லூரியான யூனியன் கல்லூரியின் "யூனியன்ஸ்" சிறப்பு மலர் வழக்கம் போல இம்முறையும் தனது சிறப்பு மலரை வெளியிடுவது கல்லூரியின் சிறப்பான செயற்பாட்டின் வெளிப்பாடாகும்.

15.10.2011ம் திகதியாகிய இன்றைய தினம் கல்லூரியின் ஸ்தாபன தினம், பரிசளிப்பு விழாவும், நடப்பது கல்லூரிக்கு உத்வேகம் கொடுக்கும் ஒரு நடவடிக்கையாகும்.

தற்போதைய எமது மாணவச் செல்வங்களை நம்பியே எமது நாட்டின் எதிர்காலம் உள்ளது என்பது மறக்க முடியாத உண்மை. மாணவர்களை நல்லவர்களாக, வல்லவர்களாக உருவாக்குவது பாடசாலைகளின் கடமையாதலால் சமூகத்தில் பாடசாலைகளின் பங்கினை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

அந்த வகையில் யூனியன் கல்லூரி தனது சமூகப் பொறுப்பினை உணர்ந்து மாணவர்களின் மேம்பாட்டுக்காக அயாராது உழைத்து வருவதனை என்னால் உணர முடிகின்றது.

அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என சகலரும் ஒன்றிணைந்து செயற்பட்டு எமது பிரதேசத்தினையும், மொத்த நாட்டினையும் மேன்மையுறவைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

க.பொ.த (சா/த) பெறுபேறுகளின் அடிப்படையில் 97மு மாணவ, மாணவிகள் சித்தி பெற்ற நிலையில், கோட்ட மட்டத்தில் கடந்த பதினான்கு வருடங்களாக முதலாம் இடத்தினை யூனியன் கல்லூரி பெற்றிருப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

அவ்வாறே க.பொ.த (உ/த) பரீட்சை பெறுபேறுகளின் பின் சுமார் 26 மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றுள்ளமை கவனிக்கத்தக்கது.

இதுதவிர விளையாட்டுத் துறையிலும் ஏனைய கலை, இலக்கிய செயற்பாடுகளிலும் இக்கல்லூரி முதன்மை பெற்று விளங்குகின்றது.

இத்தகைய பின்னணியில் இந்த மகோன்னதமான தினத்தில் கல்லூரியில் "யூனியன்ஸ்" சிறப்பு மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் நிறைவடைகிறேன்.

பிரதேசசெயலாளர்,
வலிகாமம் வடக்கு,
தெல்லிப்பளை.

# Union College Old Students Association
# SydneyAustralia



I am very pleased to hear that our old school is performing splendidly in the District and National level in both sports and education and we hope that this trend of high achievement continues into the future. This could not have been possible in the last fourteen years without the support from students, parents and teachers. Under the difficult circumstances the Principal, Deputy Principal and Vice Principal have lead the school to achieve these outcomes and as old students who live in Sydney, Australia we appreciate the services of the principal, teachers and well wishers of the school in its functioning on a day to day basis. Our school has nurtured and helped develop great people in the past and we hope this will continue into the future produce to the leaders who will be a great asset to the community. We will continue to support the school and we wish you all the very best.

Ambalavanar Jegathees
President
OSA Sydney

## MESSAGE FROM THE PRESIDENT- UNION COLLEGE OLD STUDENTS' ASSOCIATION COLOMBO

### FOR PRIZE GIVING DAY - 2011.



It gives me great pleasure to send "Heartiest Congratulation" on behalf of the OLD STUDENTS' ASSOCIATION, COLOMBO on the occasion of the greatest day of any Educational Institution " THE PRIZE DAY" where the excellence of the growing up students is recognized in a very significant manner.It is also the day the Teachers and Administrators of the Institution derive much happiness when they see their effort providing super results. Their toil has not been in vain. The recognition of their excellence in education and extra curricular activities in the presence of their Teachers, their Parents and also in front of the surrounding public and distinguished guests gives a severe boost to the morale of the student who inspired by these events will reach out for greater excellence in the respective fields in which he or she had shown. I am indeed happy to convey on behalf of the OLD STUDENTS' ASSOCIATION, COLOMBO our Congratulations to all prize winners. We also urge the other students to follow "Prize Winners" example and excel similarly in the years to come. We the OLD STUDENTS' ASSOCIATION, COLOMBO also Congratulate the Principal, Deputy Principal, Vice Principal and all the members of the Tutorial Staff of Union College for molding the young minds in to a disciplined mind set and through such discipline bring such excellence in all School activities. Thanks and Well Done. We do follow the activities of the students very closely, through communication from the Principal, and have been providing every possible assistance to reach you on time. We assure that we would continue to follow your progress, and provide all the encouragement and assistance needed for you to improve your performance to become the Best Educational Institution firstly in the Jaffna Peninsula and then to capture the All Island Trophy of Excellence.

BEST WISHES.

Mano Thevasakayam,President,
OLD STUDENTS' ASSOCIATION,
UNION COLLEGE,
COLOMBO BRANCH.

# கனடா பழையமாணவர் சங்கத்தின் ஆசிச்செய்தி



யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா கிளையின் சார்பாக "யூனியன்ஸ்" மலருக்கு ஆசிச்செய்தியினை மீண்டும் ஒருமுறை வழங்க சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அண்மையில் எனக்கு யூனியன் கல்லூரிக்கு வருகைதர சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. அத்தருணம் யூனியன் கல்லூரி மிகவும் சிறப்பாக இயங்குவதை நேரில் காணக்கூடியதாக இருந்தது. மிகப்பழமை வாய்ந்ததும் பலசிறப்புகளை கொண்டதுமான யூனியன் கல்லூரி வடமாகாணத்தில் மட்டுமல்ல இலங்கையிலும் ஒரு சிறந்த கல்லூரியாக விளங்குகின்றது. கல்வி ,விளையாட்டு, இணைப்பாடவிதான செயற்பாடுகள் என பல துறைகளிலும் யூனியன் கல்லூரி மாணவர்கள் வெற்றிகளையும், பரிசில்களையும் பெற்றுவருவது இதற்கு சான்றாகும். மாணவர்களின் வெற்றிக்கும் சாதனைகளுக்கும் பின்னால் பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் கடின உழைப்பு முக்கிய பங்கு வகிக்கின்றது. பல இக்கட்டான சூழ்நிலையிலும் மாணவர்கள் சாதனை படைத்து வருவது மிகவும் பெருமைக்குரியதாகும். யூனியன் கல்லூரி மேன்மேலும் பலதுறைகளிலும் வெற்றிபெற எனது வாழ்த்துக்கள். யூனியன் கல்லூரி மாணவர்களின் சாதனை தொடரட்டும்.

திருமதி ராஜினி விமலகாந்தன்
தலைவர்
யூனியன் கல்லூரி பழைய மாணவர்சங்கம்
(கனடாக்கிளை)

# The Unions

Old Students Association of Union College (UK)
Tellippalai, Sri Lanka
theunions.org.uk

26 Bromyard Avenue, London W3 7AU

**President**
Mr. R. T. N. Thayalan
020 8813 0592-H
07901517539-M
**Secretary**
Mr. S. Pathmanathan
020 8743 8289
**Treasurer**
Dr. K Ganeshaguru
020 8958 9979
**Vice President**
Mr. V. Vijayakumar
**Asst. Secretary**
Mrs. S. Thambipillai
**Asst. Treasurer**
Mr. A. Vanthan
**Social Secretary**
Mrs. P. Thayalan
**Asst. Social Secretary**
Mr. V. Baskaran
**Sports Secretary**
Mr. A. Sathianathan
**Asst. Sports Secretary**
Mr. N. Narendran
**Committee Members**
Dr V Ananthasayanan
Mr. Joshi Jeyendran
Mr. S. Kirupakaran
Mr. M. Thillaiampalam
Mr. V. Sahathevan

**The Union College Past Students Association in the United Kingdom (UNIONS UK) wishes the principal, staff, students and parents a memorable Prize Day 2010/2011. The UNIONS UK is proud to learn of the brilliant achievements of the students of Union College, Tellippalai in various examinations last year. Firstly huge success in O/L 97% and A/L 87% (26 Students enter the University from A/L).The school needs to recruit more teachers in English, Maths & Science. A special mention and congratulations to the Netball teams who were champions for the last 14 years at the National level. Apart from netball our table tennis, hockey and cricket teams also became champions for last few years. We, the OSA in the UK are immensely proud of this success. Achieved under high security conditions. The UNIONS UK congratulates the principal, staff, students and their parents for this incredible success.**

**The UNIONS UK was formed 20 years ago. We have, through various functions and generous donations raised funds that have supported many essentials and activities at Union College, Tellippalai for many years. We are going to celebrate our 200th Year Anniversary On the 15/10/2016 that is in just over 5 year's time. Our president and secretary (UK) visited the school in March 2011 and set up a five year development programme with the help of Jaffna, Colombo, England, Canada, Australia OSA, Principal and teachers. (Reconstruction of the damaged class rooms, new science labs, school canteen, store rooms for sports equipment and the new sports pavilion.) All OSA members are kindly requested to get fully involved to ensure that our project is a success and complete in time before 15/03/2016. We pledge our continued support to our alma mater for justified causes in the foreseeable future.**

**Our best wishes to all.**



**President**
**MR R.T.N.THAYALAN**



**Secretary**
**MR S. PATHMANATHAN**



**Treasurer**
**DR K. GANESHAGURU**

**28th September 2011**

# பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளரின் ஆசிச்செய்தி



வலி வடக்கு பிரதேசத்தில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட கல்விச்சாலை என்கின்ற பெருமையினைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் யா/யூனியன் கல்லூரியின் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்வடைகிறேன்.

இப் பிரதேச மாணவர்களின் அறிவுத் தாகத்தைத் தீர்க்கும் அன்னையாம் இக் கல்லூரி தனது கல்விச் செயற்பாடுகளில் மட்டுமல்ல இணைபாடச் செயற்பாடுகளிலும் வருடந்தோறும் அளப்பரிய சாதனைகள் புரிந்து பல வெற்றிகளைத்தனதாக்கிப் பரிசுகளை வென்றுவருகின்றமை மாணவர்களது திறமையினையும் அவர்களை வழிநடத்துகின்ற கல்லூரி அதிபர், உபஅதிபர், மற்றும் ஆசிரியப்பெருந்தகைகளின் அழப்பரிய சேவையினையும் விடாமுயற்சியையும் தியாக மனப்பான்மையையும் எடுத்துக்காட்டுகின்ற குறியீடுகளாக அமைகின்றன.

தொடர்ந்து 14 வருடங்களாக க.பொ.த சாதாரண பரீட்சைப் பெறுபேற்றில் வலயமட்டத்தில் முதலாம் இடத்தையும் மாவட்டமட்டத்தில் 4ம் இடத்தையும் பெற்று வருகின்றமையும் க.பொ.த உயர்தரம் 2010 பெறுபேற்றின் அடிப்படையில் 26 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்தமையும் பெருமைதரும் விடயங்களாகும். அத்தோடு வருடந்தோறும் தழிழ்த்தினப்போட்டிகளில் தேசியமட்டம் வரை வெற்றி பெறுகின்றமையும், பெண்களின் வலைப்பந்தாட்ட அணிகள் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண தேசியமட்ட போட்டிகளில் வென்று சாதனைகள் படைக்கின்றமையும் மற்றும் ஏனைய விளையாட்டுக்களில் வெற்றிவாகை சூடுவதும் இக்கல்லூரியின் மேன்மையை உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் பறை சாற்றுவதாக அமைந்துள்ளது.

மேலும் மாற்றுவலுவுள்ளோரின் கல்வி மேம்பாட்டிற்காக தனி அலகு ஒன்றை அமைத்து அவர்களுக்கு விசேட கல்வி அறிவூட்டி சமூகத்தில் உயர்வான நிலையினை ஏற்படுத்திக் கொடுக்கும் நற்காரியத்தை ஆற்றி யாவர்க்குமாம் கல்வி என்கின்ற உயர்வான இலட்சியத்தோடு சேவையாற்றுகின்றமை போற்றுவதற்குரியதாகும்.

விரைவில் இருநூறாவது ஆண்டு விழாவைக் கொண்டாடவுள்ள யூனியன் தாயை மேலும் பல்லாண்டு பலகோடி நூற்றாண்டு காலம் கல்விச் சேவையாற்றி மாணவர்களுக்கு கலங்கரை விளக்கமாக திகழ வேண்டும் என்று வாழ்த்தி நல்லாசி கூறுகின்றேன்.

வாழ்க யூனியன் கல்லூரி
வளர்க அதன் நற்பணிகள்..............................

செயலாளர் - பா.அ.சங்கம்.
மு.சொர்ணலிங்கம்

## மலரின் உள்ளே.....


| | பக்கம் |
|---|---|
| ❖ அதிபர் அறிக்கை | 1 |
| ❖ உதவும் கரங்கள் | 32 |
| ❖ இதழாசியரின் இதயத்திலிருந்து | 34 |
| ❖ கல்லூரிப் புகழ் பரப்பும் தாரகைகள் | 35 |
| ❖ பொருளாதாரத்தைப் பெறஉவும் தேனிவளரப்பு | 38 |
| ❖ கற்க கசடற | 41 |
| ❖ தமிழும் நீதிப்பாடல்களும் | 42 |
| ❖ என்னகைம்மாறு செய்வோம் நாம் | 44 |
| ❖ பேச்சு மொழியும் இலக்கியமும் | 45 |
| ❖ நாவலரும் புராணபடனமும் | 47 |
| ❖ இலசவ வைத்தியசாலை | 54 |
| ❖ எது கவிதை? | 56 |
| ❖ எனக்குப் பெருமை | 59 |
| ❖ சிறுவர்களே எம் நாட்டின் சொத்துக்கள் | 60 |
| ❖ புவி வெப்பமடைதல் | 62 |
| ❖ பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் தமிழ்ப் பணி | 64 |
| ❖ நான் பார்த்த நாணயக் கண்காட்சி | 68 |
| ❖ நூலகங்கள் | 69 |
| ❖ முயற்சி திருவினையாக்கும் | 70 |
| ❖ அளவையியல் உண்மைவிருட்சமுறை | 72 |
| ❖ Importance of a family | 79 |
| ❖ Sport and Games | 80 |
| ❖ Pollution | 81 |
| ❖ How can we renovate our hous? | 82 |
| ❖ Science and Technology | 83 |
| ❖ Embironmentil Effects of Goblal Warming | 84 |
| ❖ Value of Reading | 86 |
| ❖ The value of Sport and Games | 87 |
| ❖ Importance of English | 87 |
| ❖ School life is the best time in human life | 88 |
| ❖ Communication then and now | 89 |
| ❖ The Environment's lament | 90 |
| ❖ Question for your thought | 92 |
| ❖ பொழுது புலர்க | 93 |
| ❖ அழகு | 93 |
| ❖ தமிழிற்கு விடிவுண்டா | 94 |
| ❖ தாய் | 95 |

❖ மலர்கள் 95
❖ சுனாமி 96
❖ ஔவை மூதாட்டி 97
❖ மாதுளையே 98
❖ அம்மாவுக்குஓர் அழைப்பு 99
❖ தன்னம்பிக்கை கொள் பெண்ணே 100
❖ மௌனமாய்.... 101
❖ மனிதன் 102
❖ சமாதானம் 103
❖ இனிவருமா 104
❖ இது யாருக்கா 106
❖ வெற்றிப்புன்னகை பூக்கட்டும் 108
❖ பழமொழிகள் சொல்வது 111
❖ எனது நோக்கில் எமது அதிபர் 112
❖ மொழியில் இரட்டை வழக்கு 115
❖ 1960களின் பின் ஈழத்து தமிழ் நாவல் 118
❖ உயிரியல் பாட வினாக்களுக் எவ்வாறு விடையளித்தல் 121
❖ நற்சிந்தனையாளர் 125
❖ இன்று ஒரு தகவல் 128
❖ புதியபாடத்திட்டம் தரும் பரீட்சையும் சவால்களும் 129
❖ சைவஉலகில் சிவாகமங்களுக்குரிய மரபுவழிச் சிறப்புகள் 132
❖ ஆசிரியரும் கல்வி உளவியலும் 137
❖ மகாத்தமாகாந்தியினுடைய கல்விச் சிந்தனைகள் 141
❖ நீடு வாழ்வாய் தாயே 151
❖ A New approach to English teaching and Learning English as a life skill/ Tool of Communication 152
❖ Electracity 154
❖ Evil Effects of tel - drama 155

# யா/யூனியன் கல்லூரி - தெல்லிப்பழை.
# பரிசில் நாள் 2010/2011
# 2011.10.15

மாற்றங்களுக்கு முகம் கொடுத்து, சவால்களைச் சந்தித்து, வெற்றிகளை ஈட்டிட, கல்லூரித் தாயின் புகழ் பரப்ப என்றென்றும் அருள்பாலித்து நிற்கும் அன்னை புவனேஸ்வரித் தாயின் பாத கமலங்களை வணங்கி,

இன்று 195வது அகவை காணும் எம் கல்லூரித்தாயின் இன்றைய நன்னாளை சிறப்புற்றிட மண்டபத்தை அலங்கரித்து நிற்கும், எம்மழைப்பை ஏற்று வருகை தந்திருக்கும்,

வளமும், கல்வியும், கோயிலும் கொண்ட இணுவையூர்தந்த அரும் புதல்வன், கணிதத் துறையில் மிளிர்ந்திருக்கும், எமது அன்பிற்குரிய பிரதிஅதிபர் திரு.இ.சண்முகேஸ்வரன் அவர்களது அன்புச் சகோதரர், இணுவில் இந்துக் கல்லூரியதனில் ஆரம்பக் கல்விதனைப் பெற்று, யாழ் இந்துக் கல்லூரியதனில் இடைநிலை, உயர்நிலை கல்வி முடித்து, 1982இல் யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானமாணியாகி, 1991இல் U.K தனில் கலாநிதியாகி, திறமைக்குச் சான்றாய் விருதுகள் பெற்று (British Technical Co-operation Training Award, Commonwealth Fellowship Award) யாழ் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு பல்கலைக் கழகக் கல்லூரி, கிழக்குப் பல்கலைக்கழகம் போன்றவற்றில் உதவி விரிவுரையாளராய், சிரேஸ்ட விரிவுரையாளராய், சேவை யாற்றி, இன்று யாழ் பல்கலைக் கழக கணித, புள்ளி விபரத்துறை இணைப் பேராசிரியராய், துறைத்தலைவராய்த் திகழும் இன்றைய சிறப்பு அதிதி பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன் அவர்களை அன்போடு அழைத்து நின்று உவகை கொள்கிறது நம் கல்லூரி.

நம் குழந்தைகளுக்கு அன்னையாய் நின்று, வெளிக்காட்டிய திறமைகளுக்கு பிரதிபலனாய் பரிசு நல்கி கௌர விக்கவுள்ள திருமதி.பவானி விக் னேஸ்வரன் அவர்களையும் அன்போடு வருக என வரவேற்று நிற்கின்றோம்.

கரவெட்டிமண் தந்த எம் பேரன்பிற்கும் மதிப்பிற்குமுரிய ஓய்வு பெற்ற முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் கணபதிப் பிள்ளை கந்தசாமி அவர்களே!

கரவெட்டி விக்னேஸ்வரா தன்னில் பள்ளிப் படிப்பை முடித்து, பேராதனை வளாகத்தில் விஞ்ஞானமாணியாய் மிளிர்ந்து, அவுஸ்திரேலியா தன்னில் முதுமாணியாய் தன்னை உயர்த்தி, கட்டுபொத்த ஆசிரியர் பாடவிதானப் பிரிவில் பணியேற்று தன் வாண்மை விருத்தியால் வவுனியா கல்விப் பணிமனைதனில் விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளராய், பின் கிளிநொச்சி, யாழ்நகர் கல்விப் பணிப்பாளராய், பிரதி மாகாணக் கல்விப் பணிப்பாளராய், மாகாணக் கல்விப் பணிப்பாளராய் இருந்து தமிழ்ப் பிரதேச கல்வி வளர்ச்சியில் கணிசமான பங்களிப்புகள் பல நல்கியுள்ளீர். இன்று எம்

கல்லூரி விழாக்கான சிறப்பு அதிதியாய் வந்தமை கண்டு பெருமிதமடைகின்றோம். தம்மையும் இரு கரம் கூப்பி அன்போடு அழைத்து நிற்கின்றோம்.

தெல்லிப்பழைக் கோட்ட மாணவர் வளர்ச்சிக்கு உந்துதல் தந்து உதவிகள் நல்கும் சிறப்பு விருந்தினராய் வந்து சிறப்பித்து நிற்கும் உதவிக்கல்விப் பணிப்பாளர் அவர்களையும் அன்போடு வரவேற்கின்றோம்.

ஆசிகள் நல்க அன்போடு வந்திருக்கும் துர்க்கா துரந்தரன், கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களையும் வருக வருக என வரவேற்கின்றோம்.

அத்துடன் எம்மழைப்பை ஏற்று வந்து கல்லூரிக்கு சிறப்புச் செய்யும் சகோதர பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர், பெற்றோர், நலன் விரும்பிகள் இன்னும் பலரை நாம் தனித்தனி வரவேற்கக் கடமைப் பட்டுள்ளோம்.

உங்களது ஒத்துழைப்பும், தரும் உற்சாகமுமே கல்லூரியின் உன்னத வளர்ச்சிக்கு என்றென்றும் உதவும் என்பதில் மிகையேதுமில்லை.

**வரலாறு காணும் கல்லூரி**

இன்னும் ஐந்து வருடங்களில் இரு நூற்றாண்டைக் காணும் பாக்கியம் பெற்ற எம் கல்லூரி, வடக்கின் வசந்தம், மீள்குடியேற்றம் எனப் பல முனைப்புகளில் அபிவிருத்திபற்றி பேசப்பட்டாலும், இற்றைவரை பாடசாலை தனித்து நிற்பது விசனத்திற்குரியதே. ஆனாலும், கல்லூரிச் செயற்பாடுகள் கண்டு, அதன் வளர்ச்சி கண்டு பாடசாலை மீது கொண்ட பற்றுதல், நம்பிக்கை காரணமாக தம் பிள்ளைகளை அனுப்பிவரும் நம் பெற்றோர் நம்பிக்கை வீண்போகா வண்ணம் கல்லூரி செயலாற்றி வருவது பாராட்டப்பட வேண்டியது.

ஊடகங்கள் கூறும் கருத்துக்கள் காத்திரம் பெறவேண்டுமாயின் அவை மிகத் துரிதமாக செயல் வடிவம்பெற அனைவரதும் ஒத்துழைப்பும் மிகத் தேவையானது. இது கல்லூரியின் காத்திரமான செயற் பாடுகளுக்கு உறு துணையாக அமையும். இவற்றிற் கெல்லாம் ஆண்டவன் தன் அருட் பார்வையைச் செலுத்திட வேண்டும்.

**மாணவர் வழிகாட்டலுக்காய்**

குடாநாட்டின் நிலைமைகள் பற்றி அன்றாடம் ஊடகங்கள் தரும் செய்திகள் அதிர்ச்சிக்குரியவை. "நாம் எங்கே போகின்றோம்?" என்ற எண்ணம் தோன்றுகின்றது. அதிலும் மாணவ சமுதாயத்தின் போக்கு வருந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. கட்டுக் கோப்பற்ற அந்த சுதந்திரப் போக்கு "எதனையும் செய்யலாம்" என்ற எண்ணப்போக்கு மாணவர் மத்தியில் கல்வி நிலையில் வீழ்ச்சியைத் தோற்று வித்து வருகிறது. கற்றலுக்கும் அதற்கான தேடலுக்குமான நேர ஒதுக்கீடு குறைந்து, ஏனைய தன்னிச்சையான செயற் பாடுகளுக்கு அதீத நேரத்தைச் செல விடுகின்றமை கவலைக்குரியது. இது யாவருக்கும் தெரிந்ததே. இந்நிலை தொடருமாயின் எம்மை நாமே அழித்ததற்கு ஒப்பாகும்.

இவர்களை அரவணைத்து நல் வழிகாட்டி, அவரவர் தகுதிக்கேற்ப தத்தம் துறைகளில் மேம்பாடு கண்டிட, எதிர்காலத் தேவைகளை நிறைவேற்றிட பிரச்சினைகள், சவால்களுக்கு முகம் கொடுத்திட, தொழிலுக்கு வழிகாட்டிட, இயன்றவரை முயன்றுவரும் கல்லூரி ஆசிரியர்களது செயற் பாடுகள், அர்ப பணிப்பான சேவைகள் பாராட்டப்பட வேண்டியவை நன்றிக் குரியவை. எனினும் தம் பிள்ளைகளது கல்வி பற்றி பெற்றோர் ஒவ்வொருவரும் தம் பங்களிப்பைச் செய்யத் தவறுமிடத்து, பொறுப்புக்களைத் தட்டிக்கழிக்குமிடத்து செய்யப்படும் எந்தவொரு முயற்சிக்கும் பலன் கிடைப்பது கேள்விக்குறியே.

மாணவர்தம் கல்விச் செயற் பாடுகளுக்காக 43 நிரந்தர ஆசிரியர் களையும், பகுதிநேர ஆசிரியர் ஒருவரும், வாழ்வக மாணவர் செயற்பாடுகளுக்காக ஒருவருமாகக் கொண்டு செயலாற்றி வருகிறது கல்லூரி.

**புதியவர்கள் இவர்கள்**

கல்லூரி ஆசிரியர் குழாத்தினுள் செல்வி.ச.புலேந்திரன் (தமிழ்), திரு.சி. ஜீவானந்தம் (விஞ்ஞானம்), திருமதிகள் தி.ஜெயக்குமார் (நாடகம்), வே.வசீகரன் (பரத நாட்டியம்), ஜீ.லம்போதரன் (கர்நாடக சங்கீதம்), செல்வி.ஸ்ரீ.ஸ்ரீராம் (பகுதிநேர ஆங்கிலம்) ஆகியோர் தம்மை இணைத்துக் கொண்டு கல்லூரிச் செயற்பாடுகளின் வளர்ச்சிக்கு உதவி வருகின்றனர். இவர்களைக் கல்லூரி வரவேற்பதுடன், இவர்தம் உன்னத சேவையையும் எதிர்பார்த்து நிற்கின்றது.

**வேற்றிடம் சென்றோர்**

கல்லூரியின் உயர்ச்சிக்கு அதீத பங்களிப்பு நல்கிய திருவாளர்கள் நா.தவசோதிநாதன் (நாடகம்), ஏ.அனுசாந்தன் (தமிழ்) ஆகியோர் இடமாற்றம் பெற்று வேறு மாவட்டங்களில் தம் சேவை தொடருகின்றனர். தமிழ் மொழித்தின நிகழ்வுகள், வில்லுப்பாட்டு நிகழ்வில் தேசியம் வரை சென்று வெற்றிகள் குவித்திட உதவிய இவர்களதும், தரம் 6-11 விஞ்ஞானத் துறைக்கு பாரிய பங்களிப்பு நல்கி மாணவர்தம் வெற்றிகளுக்கு உந்து சக்தகியாக இருந்த செல்வி ச. ஆறுப்பிள்ளை அவர்களது இடமாற்றமும் கல்லூரிக்கு மிகப் பெரிய பேரிழப்பே. சென்ற இடத்தில் இவர் தம் சேவை சிறப்புற வாழ்த்துக்கள். செய்த சேவைகளுக்கு கல்லூரியின் நன்றிகள்.

**பகுதித்தலைவராகிய இவர்**

இடைநிலைப் பிரிவு பகுதித் தலைவராக (தரம்:6-7) இருந்த திருமதி. நா.சிவஞானராஜா அவர்களது ஓய்வைத் தொடர்ந்து ஆசிரியை திருமதி. ந. கமலநாதன் அவர்கள் பகுதித் தலைவராக கடமையேற்றுக் கொண்டார். தனக்குரிய பகுதிக்கான (தரம்:8-9) உயர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகின்றார்.

**ஓய்வு தந்தவர்**

முப்பத்துநான்கு ஆண்டுகள் கல்லூரி அன்னையோடு உறவாடிய அன்னை. திருமதி. நா. சிவஞானராஜா அவர்கள் தனது சேவையினின்றும் 21.01.2011 இல் ஓய்வு பெற்றார். ஆசிரியராய் ஒழுக்காற்றுக் குழு உறுப்பினராய் பகுதித்தலைவராய்

(தரம் 6-7) இருந்து கல்லூரிக் கட்டுக்கோப்புகளைக் கட்டிக்காத்து, மாணவர்களை ஒழுக்கநெறிக்கு இட்டுச்சென்ற பெருமை இவருக்குண்டு, இவர் கல்லூரிக்காற்றிய சேவைகளை கல்லூரி என்றும் நினைவு கூரும். இவரது வருங்காலம் மேலும் வளம் பெற்றிட இறைவன் அருள்பாலிப்பாராக.

கல்லூரிச் செயற்பாடுகளுக்கு அன்றாடம் கைகொடுத்து அதன் உயர்ச்சிக்குப் பங்காற்றி வரும் எமது கல்விசாரா ஆளணியினருக்கு நம் நன்றிகள். இவர்கள் தம் வருங்காலம் வளம்பெற வாழ்த்துக்கள்.

**மாறும் உலகிற்கு மாற்றிட**

"எழுமின், விழுமின், இலக்கை அடையும்வரை அயராது உழைமின்". வாழ்க்கைச் சூழலில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்ட வண்ணமுள்ளன. அவற்றை எதிர் கொள்ள வேண்டியது நம் ஒவ்வொருவருக்குமுளது சூழலில் அகப்பட்டு அதன் போக்கிற்கு நாம் செயற் படுவோமாயின், மீள்வது மிகமிகக் கடினம்.

இன்றைய மாணவ சமுதாயத்தின் போக்கினை அவதானிக்கும் இடத்து வருந்துதற் குரியதாகவே உள்ளது. எதிர்காலத்தில் தம்மையும் தாம் சார்ந் தோரையும் காக்க வேண்டிய தேவை யுள்ளது. உங்களிடம் ஆற்றலுள்ளது. உங்களால் முடியும் இது உங்கள் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உதவும் இன்றைய போட்டி நிறைந்தவுலகில் தைரியமும் தன்னம்பிக்கையும் முன் முயற்சியும், உயர்வான எண்ணங்கள் உணர்வுகளும் ஒவ்வொருவரிடத்தும் இருக்கும் வரை இலக்கை அடைவது நிச்சயம்.

பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அன்றாடம் முகங் கொடுக்கும் குடும்பப்பின்னணி கொண்ட குடும்பத்துப் பிள்ளைகளை, அவர்தம் தேவையறிந்து, அவர்களை வழிப்படுத்தி எதிர்காலத்தினை எதிர்கொள்ள வல்லவராய் ஆக்கிட அன்றாடம் அர்ப்பணிப்புடன் சேவை நல்கும் நம் கல்லூரி ஆசிரியர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள், நன்றிக்குரியவர்கள்

இந்நிலையில் எமது மாணவர்கள் தத்தம் திறமைகளை வெளிக்காட்டி கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும் இவர்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. பாடவிதான அடைவு மட்டங்களைப் பார்க்குமிடத்து 2010 க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேற்று வீதம் தொடர்ந்தும் பதினொன்கு வருடங்களாக கோட்ட, வலய மட்டத்தல் முதலிடத்திலும் மாவட்ட மட்டத்தில் 4ம் இடத்திலும் இணைபாடவிதான செயற்பாடுகளில் தேசியம் வரை பங்குகொள்வதும் சான்றுகளாகும்.

இன்று நம் கல்லூரியில் இடை நிலைப் பிரிவில் 521 மாணவர்களும் உயர் தரப்பிரிவில் 277 மாணவர்களும் கல்வி கற்றுவருகின்றனர். 2010 க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றியோரில் கணிதத் துறைக்கு ஒன்பது பேரும், உயிரியல் துறைக்கு ஒன்பது பேரும், வர்த்தகத் துறைக்கு பதினொரு பேரும் கலைத் துறைக்கு எழுபத்தொரு பேரும் பல்கலைக் கழக அனுமதிக்கான தகுதி பெற்றுள்ளனர். 2010 கா.பொ.த (சா/த) பரீட்சைக்குத்

தோற்றியவர்களுள் 84 பேர் உயர்தரம் கற்கும் தகுதி பெற்றுள்ளனர் இது 97 வீதமாகும். சைவம், றோ.க, றோ.க.அ, தமிழ், சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும், புவியியல், சுகாதாரமும் உடற்கல்வியும், விவசாயம், மனைப் பொருளியல் ஆகிய பாடங்களில் 100% சித்தியையும் பெற்று, வலயமட்டத்தில் கணிதம், விஞ்ஞானம், வரலாறு ஆகிய பாடங்கள் முதலிடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இத்துடன் ஆங்கிலப்பாடம் 49.4% சித்தியைப் பெற்றிருப்பதுடன் வலயத்தில் உள்ள தனியார் பாடசாலைகளைத் தவிர்த்து நோக்குமிடத்து எமது பாடசாலையின் ஆங்கில அடைவு மட்டம் வலய மட்டத்தில் முன்னணியில் இருப்பது பாராட்டுக் குரியதாகும். இம் மாணவர்களுள் செல்வி பா.துர்க்கா ஒன்பது பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தார்.

இம் மாணவர்களது மேம்பாடுகள் கண்டு, கல்லூரி பாராட்டும் அதேவேளை, இவர்தம் உயர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்துவரும் எம் ஆசிரியர்களுக்கு நன்றிகள் பற்பல.

எதிர் காலத்தில் தம்மை, தமது குடும்பத்தை, சமூகத்தை வழிநடாத்த வேண்டிய பொறுப்பு இன்றைய மாணவரிடத்து ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கின்றே தம்மைத் தயார்படுத்தும் முகமாக தலைமைத்துவப் பண்பை வளர்த்து, முன்மாதிரியாகத் திகழ்ந்து கல்லூரியின் ஒழுக்கத்தைப் பேணி வரும் முக்கிய கைங்கரியத்தையாற்றி வருகிறது சிரேஸ்ட மாணவ தலைவர்கள். எமது சிரேஸ்ட மாணவ தலைவனாகச் செல்வன் ஸ்ரீ.சுயேந்திரன், தலைவியாக ச.தர்ஜினி ஆகியோர் செயலாற்றி வருகின்றனர். இவர்கள் அதிபர், பிரதியதிபர், உபஅதிபர், பகுதித்தலைவர்கள் ஆகியோரது வழி நடத்தலில் தம் கடமைகளை, பொறுப்புக் களை நிறைவேற்றி வருகின்றனர்.

புதிய மாற்றங்கள், படைப்பாற்றல், திறன் வெளிப்பாடுகள் என்பவை வெளிப்பட உதவுபவை **இணை பாடவிதானச் செயற்பாடுகள்**. எந்தத் துறையாயின் அந்தத்துறையில் செயல்திறன் என்பது முக்கியமானது. தொடர் பயிற்சியினால் மட்டுமே நாம் இலக்கை, வெற்றியை அடையமுடியும். ஒவ்வொரு துறையிலும் வெற்றியை அடைந்திட சிக்கல்களை எதிர்கொள்ளநேரிடும். ஒவ்வொரு சிக்கலும் ஒருசவால், ஒவ்வொரு சவாலும் ஒருவாய்ப்பு, ஒவ்வொரு வாய்ப்பும் ஒரு வெற்றிக்கான கதவு, ஒவ்வொரு வெற்றியும் நம்மை முன்னேறச் செய்யும் சின்னச் சின்ன முன்னேற்றங்கள் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும். அந்த வகையில் கல்லூரி தன்னகத்தே ஏந்தி நிற்கும் மாணவர்களைக் கொண்டு தத்தம் துறைகளில் முன்னேற்றங்கண்டு வருகின்றது. உயர் கல்வியாயினும், தொழில் வாய்ப்பாயினும் இன்று இத் துறைகளில் மாணவர் பெறும் வெற்றிகள் அவர்களுக்கு வரப் பிரசாதமாய் அமைகின்றன. எமது விளையாட்டுத் துறை கல்லூரியின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றி வருகின்றது. 2011ல் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் கோட்ட மட்டத்தில் 11 – முதலாம் இடங்கள், 8 – இரண்டாம் இடங்கள், 6 – மூன்றாம் இடங்களும், வலய மட்டத்தில் 2 – முதலாம்

இடங்கள், 4 - இரண்டாம் இடங்கள், 4 – மூன்றாம் இடங்களும், மாவட்ட மட்டத்தில் தலா ஒவ்வொரு 1முதலாம், இரண்டாம், இடங்களும் மாகாணத்தில் செல்வி. சி.கீர்த்திகா குண்டு போடுதலில் முதலாம் இடத்தையும், தட்டெறிதலில் மூன்றாம் இடத்தையும் பெற்று தேசிய மட்டப்போட்டியில் கலந்து கொண்டார்.

கல்லூரிக்கு வலுச்சேர்க்கும் வலைப்பந்தாட்ட அணிகள், பதினான்காவது வருடமாகவும் கோட்ட மட்டத்தில் சம்பியனைத் தமதாக்கின. வலய மட்டத்தில் 17வயதணி 2ம் இடத்திலும் மாவட்ட, மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தினையும், 19 வயதணி மாகாணம் வரை முதலிடத்தையும் பெற்றுத் தேசியமட்டப் போட்டியில் கலந்துகொண்டன.

"தேசத்தின் மகுடம்" (டயட்டகிருட) வலைப்பந்தாட்டப் போட்டியில் எமதணி மாகாணமட்ட சம்பியனாகித் தேசியமட்டப் போட்டியில் பங்குகொண்டது.

எமது கல்லூரி மேசைப்பந்தாட்ட 19 வயதின் கீழ் ஆண், பெண் இரு அணிகளும் கடந்த பதின்மூன்று வருடங்களாக வலயமட்டப் போட்டியில் 1ம் இடம் பெற்று வந்துள்ளன. இம்முறையும் இவ்விரு அணிகளும் வலயமட்டத்தில் 1ம் இடத்தையும், ஆண்கள் அணி (U19) மாவட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்றுக்கொள்ள, பெண்கள் அணி (U19) வலயம், மாவட்டம், மாகாணம் மட்டங்களில் முதலிடம் பெற்று தேசியப் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. பெண்கள் அணி இவ்வாண்டு முதல் முறையாக மாகாண மட்டத்தில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டமை பாராட்டத்தக்கதே.

"கிரீடாசக்தி" நிகழ்ச்சித்திட்டத்தின் மாவட்ட மேசைப்பந்தாட்ட அணிக்கு எமது பாடசாலை மேசைப்பந்தாட்ட அணி வீரர்களான செல்வன்கள் இ.ஆகீசன், ச.சிந்தாகரன், இ.ஜெனகன், ஆ.ஶ்ரீரங்கன், சி.நமணிகரன் ஆகியோரும் செல்விகள் சி.சிந்துஜா, இ.டனசிகா, வி.துவாரகா, தே.கீர்த்தனா, வி.விதுசா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

மாவட்ட செயலகத்தால் நடாத்தப்பட்ட மேசைப்பந்துப் போட்டியில் எமது அணிவீரர்கள் 1ம் இடம் பெற்று, சி.சிந்துஜா, இ.டனசிகா, வி.துவாரகா, வி.விதுசா ஆகியோர் யாழ் மாவட்ட அணிக்கு தெரிவுசெய்யப்பட்டு, மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்று, தேசியமட்டப் போட்டியில் கலந்து கொண்டனர்.

2010 இற்கான உதைபந்தாட்டப் போட்டியில் 18 வயதிற்குட்பட்ட அணி கோட்ட மட்டத்தில் முதலிடத்தையும், வலயமட்டத்தில் 2ம் இடத்தையும் பெற்று மாவட்டப் போட்டியில் கலந்துகொண்டது. இந்நிகழ்வில் நடத்துநர்களின் சில சதியால் 1ம் இடம்பெற முடியாமல் எமது அணி வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எமது கொக்கி அணி (U19) மூன்றாவது வருடமாக வலயமட்டத்தில் முதலிடம் பெற்று, மாவட்ட, மாகாண மட்டங்களில் வெற்றியீட்டி தேசியமட்டப் போட்டிகளில் கலந்து திரும்பியது.

ஸ்ரீலங்கா கொக்கி சம்மேளனத்தால் நடாத்தப்பட்ட போட்டியில் எமதணியினர் மாவட்டத்தில் முதலிடம் பெற்றனர்.

ஆண்கள் சதுரங்க அணி (U19) வலயமட்டத்தில் 2ம் இடம் பெற்று மாவட்டப் போட்டிகளில் கலந்துகொண்டது.

இவ் விளையாட்டுத் துறைக்கு வெற்றிகள் நல்கிவரும் அணி களனைத்தையும் பாராட்டுவதோடு வரும் காலங்களிலும் மேலும் தம் திறன்களை வெளிப்படுத்தி மேம்பாடுகண்டிட வேண்டிநிற்கின்றேன்.

இவ்வணிகளது பயிற்றுநர்களான ஆசிரியர்கள் திருமதி.ஜெ.ஜெயதரன் (வலைப்பந்து), செல்வி.பி.பத்மநாதன் (மேசைப்பந்து), திரு.இ.இராஜராஜன் (கொக்கி,உதைபந்து), திரு.சி.சிறீதரன், செல்வி.வை.வைத்திலிங்கம் (சதுரங்கம்) ஆகியோருக்கும், மற்றும் பொறுப பாசிரியர்களுக்கும் நன்றிகள் பற்பல.

**சிந்தனையாற்றல், வெளிப்பாட்டுத் திறன்களை வெளிப்படுத்துமிவை...**

ஆசிரியர்கள் திரு.அ.தயாபரன், செல்வி.ஜெ.செந்திவேல் ஆகியோரைப் பொறுப்பாசிரியர்களாகக் கொண்டு செயலாற்றும் **உயர்தரமாணவர் மன்று** செல்வன்கள். ப.சுயாந்த, ந. கோசலன், இ.கிருஸ்ணா ஆகியோரை முறையே தலைவர், செயலாளர், பொருளாளராகக் கொண்டு செயலாற்றி வருகிறது.

மாணவரிடத்து தலைமைத்துவத்தை வளர்க்கும் நோக்கோடு நடாத்தப்படும் தலைமைத்துவப் பயிற்சிநெறிகளில் மாணவரைப் பங்குகொள்ளச் செய்து வருகின்றது.

கல்லூரியின் உயர்ச்சிகளுக்கு அருள்பாலித்து நிற்கும் அன்றாடக் கடமைகள் செவ்வனே நிறைவேறிட கருணை நல்கும் அம்பிகைக்கு நித்திய பூசைகள், விசேடதினங்களில் அபிடேகம், பூசை வழிபாடுகள், வருடாந்த குடமுழுக்குத் தினம், வெள்ளி தோறும் நற்சிந்தனைகள் என்பவற்றைச் சிறப்பாகச் செய்து வருகிறது **இந்துமன்றம்.** அத்துடன் நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் வருடாந்த உற்சவத்திலும் கலந்து சிறப்பிக்கின்றது.

இணுவில் இளந்தொண்டர் சபை நவராத்திரியை முன்னிட்டு நடாத்திய பேச்சுப் போட்டியில் செல்வன்.க.பிரகான் (தரம் - 9) -2ம் இடத்தையும், செல்வி.சி.மதுசனா (தரம்8) ஆறுதல் பரிசையும் பெற்றுக் கொண்டனர். இவ்வாண்டு நவராத்திரி தின நிகழ்வை சிறப்பாக நடாத்தி முடித்தது.

இம் மன்றின் பொறுப்பாசிரியர்களாக செல்வி. பு. இளையதம்பி, திரு.சி. ஜெயரூபன் அவர்களும், தலைவர், செயலாளர், பொருளாராக முறையே செல்வன்கள் ம.நிரோஜன், சு.ஹரிரன், செல்வி.க.கயானா ஆகியோரும் இருந்து வருகின்றனர்.

இவர்களுடன ஆசிரியர்கள் திருமதிகள்சா.கணேசமூர்த்தி, ரு.பகீதரன், க.சிவானந்தன், செல்வி.ச.புலேந்திரன் ஆகியோர் மன்றினூடாக மாணவர்களது உயர்ச்சிக்கு உழைத்து வருகின்றனர்.

**கிறிஸ்தவமன்றின்** செயற்பாடுகளாக நாளாந்த ஆராதனை, வேத வசனங்கள், நற்சிந்தனைகள், வருடாந்த ஒளிவிழா என்பவற்றை நடாத்தி வருகின்றது.

அத்துடன் யாழ் மறைக்கல்வி நிலையத்தால் நடாத்தப்படும் மறைக் கல்வித் தேர்வுகளில் இம் மாணவர்கள் பங்குகொண்டு பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர். மன்றின் தலைவர், செயலாளர், பொருளாராக முறையே செல்வன்கள் ப.சுஜாந்த, ஜெ.அனித், ம.ஜோய் கிறேசியன் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். பொறுப்பாசிரியராக திருமதி.ஜெ.தவேந்திரராசா அவர்களும் வழிநடத்துநர்களாக ஆசிரியர்கள் திரு.ம.யூ.கலிஸ்ரஸ், திருமதிகள் லெ.சோ.லொயிட், அ.லிஸ்ரர் ஜோசப், கி.ஜெயமனோன் ஆகியோர் இருந்து வருகின்றனர்.

முத்தமிழை வளர்க்கும் நோக்குடன் ஆசிரியர்கள் திருமதி.சி.தவராஜா, திரு.சி.ஜெயரூபன் ஆகியோரை பொறுப் பாசிரியராகக் கொண்டு செயலாற்றும் **தமிழ் மன்றம்** செல்வன்கள் ச.அபிராம்சங்கர், சொ.தருமதன் ஆகியோரை முறையே செயலாளராகவும், தலைவராகவும் செல்வி.சு.கயானி பொருளாளராகவும் கொண்டு செயற்படுகின்றது.

2010ல் நடைபெற்ற தேசிய மட்ட தமிழ்மொழித்தினப் போட்டிகளில் செல்வி.க.சிவகௌரிநாயகி (இலக்கணம்-V), செல்வன் அ.சண்முகப்பிரியன் (இசை-IV) ஆகியோர் மூன்றாம் இடத்தைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர். இவ்வாண்டுக்கான போட்டிகளில் கோட்டமட்டத்தில் 10 – முதலாம் இடங்களும், 4 – இரண்டாம் இடங்களும், 7 – மூன்றாம் இடங்களும், வலயமட்டத்தில் 1 – முதலாம் இடமும், 2 – இரண்டாம் இடமும், 3 – மூன்றாம் இடங்களும், மாவட்ட மட்டத்தில் வில்லுப்பாட்டு இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

சிறுவர் தினத்தை முன்னிட்டு தெல்லிப்பழை பொலிஸ் பிரிவால் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் செல்வன்.ந.கபிலன் (தரம்-10) இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். "பன்மைத்துவக் கலாசாரத்தின் ஊடாக சமாதானம்" எனும் தொனிப்பொருளிலான கவிதைப் போட்டியில் கோட்ட மட்டத்தில் செல்விகள் ர.கீர்த்திகா – இரண்டாம் இடம், இ.கஸ்தூரி, இ.ஜெனாத்தனி – மூன்றாம் இடமும், சொ.தருமதன் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் வலயமட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இவ்வாண்டு நடாத்தப்பட்ட கை யெழுத்துச் சஞ்சிகை ஆக்கப் போட்டியில் கோட்டமட்டத்தில் இடைநிலைப்பிரிவு I,II,III ஆகியவை முறையே 2ம்,3ம்,2ம் இடங்களையும் கல்லூரி நிலைப்பிரிவு முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

போட்டிகளில் கலந்து வெற்றியீட்டிய மணவர்களுக்கும், பொறுப் பாசிரியர் களுக்கும் பாராட்டுகளும் மாணவர்களது உயர்ச்சிக்கு உழைத்து இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு.நா.தவசோதிநாதன், மற்றும் திருமதிகள் சா.கணேசமூர்த்தி, ரு.பகீரதன், ஜெ.சுரேந்திரநாத், க.நாதசொரூபன், செல்வி.ச.புலேந்திரன் ஆகியோருக்கும் நன்றிகள்.

தாய்மொழிக்கீடாக **ஆங்கில மொழியின்** தேவையை உணர்ந்து செயலாற்றி வரும் ஆங்கில மன்றானது செல்விகள் த.தர்சனா (தலைவர்), இ.கஜனி (செயலாளர்), செ.தர்சிகா (பொருளாளர்)

ஆகியோரது வழிநடத்தலில் செயலாற்றி வருகின்றது. இவ்வாண்டு நடைபெற்ற ஆங்கிலதினப் போட்டிகளில் கோட்ட மட்டத்தில் 13 முதலிடங்கள், 12 இரண்டாம் இடங்களையும், 8 மூன்றாம் இடங்களையும், வலயமட்டத்தில் 3-முதலாம் இடங்களும், 2-இரண்டாம் இடங்களும், 1 - மூன்றாம் இடமும் கிடைக்கப்பெற்று மாகாண மட்டத்தில் செல்வி ஸ்ரீ.சிந்துயா (Copy writing) மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார்.

இம்மன்றின் செயற்பாட்டிற்கு ஆசிரியர்களான செல்வி வ.வைத்திலிங்கம் திரு.க.பாலவிசாசன், திருமதிகள் கி.ஜெயமனோன், யோ. சிவராஜா. செல்வி ஸ்ரீ.ஸ்ரீராம் ஆகியோர் உழைத்து நிற்கின்றனர்.

கல்லூரியின் **கவின்கலை மன்று** மாணவரிடத்துள்ள கலைத்திறன் வெளிப்பாடுகளுக்கு ஊக்கமளித்து வருகிறது. மன்றின் தலைவராக செல்வி சு.கயானி, செயலாளர் செல்வி க.கயானா, பொருளாளராக செல்வி.இ.மோகனா ஆகியோர் இருந்து வருகின்றனர். 2010 இற்கான தனியிசை (iv) போட்டியில் தேசிய மட்டத்தில் வெண்கலப் பதக்கத்தை செல்வன். அ.சண்முகப்பிரியன் பெற்றுத் தந்தார். இம் மாணவருக்கும், மற்றும் மாற்று ஆற்றலுள்ளோர் தினத்தை முன்னிட்டு நடாத்திய தனியிசையில் த.அமலநிதுசன் கோட்ட, வலய மட்டத்தில் 1ம் இடம் பெற்றமைக்கும் நன்றிகளும் பாராட்டுக்களும்.

நல்ல நிலமைகளில் ஒரு கூட்டில் இருந்து வருடத்தில் 3 முறை தேன் எடுக்கலாம். ஒரு கூட்டிலிருந்த வருடத்திற்கு 5-10லீற்றர் தேனைப் பெறலாம். இது அவ் வீட்டுத் தோட்டத்தின் சூழல் தன்மையிலும், தேனீ தேன் சேகரிக்கும் அளவிலும் தங்கியுள்ளது. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் பொதுவாக தேனீ வளர்ப்பிற்காக "எபிஸ் இன்டிக்கா (Apis Indica)" எனும் தேனீ வர்க்கம் பயன்படுகிறது. எமது பிரதேச விவசாயிகள் தமது வீட்டுத்தோட்டத்துடன் தேனீ வளர்ப்பையும் உப தொழிலாக மேற்கொள்வார்களானால் அவர்களின் வருவாயை அதிகரித்துக் கொள்ள சிறந்த வழியாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

❀ ❀ ❀

### உங்களுக்குத் தெரியுமா?

துளசிச் செடி, கஜூத்தோல், போன்றவற்றை எரிப்பதால் உருவாகும் புகை நுளம்புகளை விரட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.



OUR STAFF

# OUR STAFF



**STEATED(LTOR)**

Miss.Elayathampy(Sectionalhead),Miss.J.Senthilvel,Mrs.K.Nathasoruban,Mr.A.Thayaparan,Mr.V.Chandrasekar (Viceprincipal), Mr.S.Punniyaseelan(Principal), Mr.R.Shanmugeshwaran(Deputyprincipal),Mr.S.Jeyaruban(Sectionalhead), Mrs.J.Jeyatharan, Mrs.N.Kamalanathan, Mrs.L.S.Lloyd.

**STANDING(1ST ROW LTOR)**

Mrs.T.Jeyakumar,Miss.S.Renuga,Mrs.R.Tharmaseelan,Miss.P.Pathmanathan,Mrs.J.Thvarajah,Mrs.R.Pakeerahtan, Mrs.M.Jeharuban,Mrs.B.Serendranath, Miss.V.Vaithilingam,Mrs.Y.Sivarajah ,Miss.S.Thuvaraka,Mrs.C.Jeyamanon, Miss.J.Murugaiah, Mrs.A.ListerJosep,Miss.S.Pulenthiran, Mrs.M.Premkumar, Mrs.V.Sakthivel,Mrs.J.Lambotheran, Mrs.J.Thavendrarajah, Mrs.S.Ganeshamoorthy, Mrs.J.Thavalingam, Mrs.M.Raveendren.

**STANDING(1ST ROW LTOR)**

Mr.R.Navaketheeswaran,Mr.M.Calistrus,Mr.V.Thushjanthan,Mr.S.Sritharan,Mr.M.Raveeswaran,Mr.V.Senthan, Mr.R.Rajarajan, Mr.B.Tharmaseelan, Mr.K.Balavisakan,Mr.S.Jeevananthan

# கற்க கசடற

**வீ.துவாரகா (11A)**

மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும் வரை பெற்றுக் கொள்ளும் அறிவு சார்ந்த அனைத்து விடயங்களும் அவனுக்குக் கல்விப் பொருளாகின்றன. கல்வி என்பது தனித்துப் பாடநூலில் இருந்தோ அல்லது ஏனைய நூலிலிருந்தோ அல்லது போதனை மூலமாகவோ பெறுவதல்ல. நமது வாழ்க்கைக் காலத்தில் நாம் பெறும் பல்வேறு வகையான அனுபவமும் சிறந்த கல்விப் பொருளாகின்றன. நாம் எவ்வளவு நூல்களைக் கற்றோம் என்பது முக்கியமானதல்ல. எத்தனையறிவு தரும் விடயத்தைக் கேட்டும், பார்த்தும் இருக்கின்றோம் என்பதோடு பெரியவர்களின் வாழ்க்கைச் சுவட்டில் இருந்து எத்தனை, விடயத்தை ஆராய்ந்து எடுத்துள்ளோம் என்பதுதான் முக்கியம். அனுபவமே சிறந்த கல்வி என ஜோன்டுஜி வெளிப்படுத்தியுள்ளார். நன்கு கற்ற, ஆனால் சிறிதளவேனும் பண்பாடற்ற ஒருவரிடம் கற்பதை விட சிறிது கற்ற, ஆனால் பண்பாடு நிறைந்த ஒருவரிடம் கற்பது சிறந்தது.

நாம் பிறந்தது தொடக்கம் இன்று வரை எத்தனை நீதிகள், அறமொழி, சிந்தனைக் கருத்தகக்ளைப் படித்துள்ளோம். அவைகளில் ஆயிரமாயிரம் பொருள்கள் பதிந்துள்ளன. எனினும் நாம் படித்தவற்றை கைக்கொள்கின்றோமா என்பது கேள்விக் குறியாகும். கற்கும் போது ஐயந்திரிபற எவ்வாறு கற்க வேண்டுமோ அதுபோல நாம் கற்பதன்படி வாழ்வதும் முக்கியமாகும். தேவையற்ற விடயத்தை மனப்பாடம் பண்ணி ஆசிரியரிடம் ஒப்புவிப்பது கல்வியல்ல. சந்தேகம் எழின் உடனுக்குடன் கேட்டுத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

பாடசாலைகள் பல நோக்கத்தைக் கொண்டு செயற்படுகின்றன. கல்வி செயற்பாடே முதன்மையானதாக இருப்பினும் சமுதாயப் பணிகளையும் முன்னெடுத்துச் செல்வதில் ஆர்வம் காட்டுகின்றன. சமுதாயத்தின் பண்பாட்டு மரபை இளஞ்சந்ததிக்கு உணர்த்தகின்றது. இத்தகைய பண்பாட்டு அம்சம் பலதை இன்றைய கலைத்திட்டம் உள்ளடக்கிய போதம் அதைக் கடைப்பிடிக்கும் மாணவர், சமூகத்தில் உருவாகி உள்ளனரா? என்பது சந்தேகமானது. இவ்விடயத்தை மாணவர் கற்கும் போது தான் அதன் மூலம் பயன் கிடைக்கும். இத்தகைய உயர் பண்பை விட எத்தனை காலம் வாழ்வில் கடைப்பிடிக்கின்றோமோ அவ்வளவு காலம் நம் வாழ்வைச் செம்மைப்படுத்த முடியும்.

கல்வியானது புதிய கருத்து, செயல்முறை ஆகியவற்றின் வளர்ச்சிக்கு தூண்டுதல் அளிக்கிறது, தொழில் புரிந்து வாழ்க்கை நடாத்த பயிற்சி அளிக்கிறது: சமுதாயத்தில் ஏனையோருடன் பொருந்தி வாழ்வதற்கான பயிற்சியை அளிக்கிறது. ஓய்வு நேரத்தை பயனள்ள முறையில் கழிக்க உதவுகிறது. அறிவுப் பெருக்கத்திற்கும், செய்திறன்களது வளர்ச்சிக்கும் உதவுவதோடு ஆன்மீக உணர்வுக்கும் வழிவகுக்கிறது. சமுதாயத்திலுள்ள பல குறைபாடுகள் கல்வியால் களையப்படும். விரும்பத்தக்க பல செயற்பாட்டை வளர்க்கப் பொருத்தமான கல்வியைக் கற்றால் வாழ்வில் உயர்வு கிடைக்கும். சமுதாய மாற்றத்திற்கு கல்வி, சக்தி படைத்த சாதனமாகும். நாளைய சமுதாயம் எதிர்பார்க்கும் அறிவையும்,

திறனையும் இன்றைய மாணவரிடம் வளர்க்கும் வகையில் கல்விப் பொருள் அமைதல் அவசியம்.

பாடசாலைக்காலம் மாணவர்களுக்கு முக்கியமானது. இக்காலப்பகுதியில் எம்மால் பெறமுடியாத விடயங்கள் எமது வாழ்வில் வேறு எப்போதும் பெறமுடியாது. பாடசாலையில் மாணவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை உண்மையில் வகுப்பறை ஒழுங்கு, முகாமைக்கு உடனடித் தீர்வாக அமையும். எனினும் நிரந்தரமாகவே சரியான முறையில் அவர்களை ஒழுங்மைக்கும் எனக் கூறமுடியாது. ஒவ்வொருவரும் தம் தவறை உணர்ந்து சரியாக நடந்தால் இத்தகைய தண்டனை தேவையற்றுப் போய்விடும். இதனால் தவறான விடயத்தை முடியுமானவரை தவிர்த்து உண்மையை உணர்ந்து நடக்கும் வகையில் எம்மை வழிநடத்தும் கல்வியே உண்மையான கல்வியாகும்.

ஆகவே கல்வி என்பது எமது உட்கிடக்கையின் தீய கூறுகளையெல்லாம் களைந்து விடுகிறது. அத்தகைய கல்வியானது தனித்து நூல்களினூடாக மட்டும் பெற்றுக் கொள்வதல்ல. அனுபவமே சிறந்த கல்விப் பொருளாகின்றது எனும் வகையில் பல்வேறு பெரியவரின் வாழ்க்கைச் சுவட்டில் உள்ள விடயத்தைப் பெறுவதோடு அதன்படி நடந்து சிறந்த நாட்டை கட்டியெழுப்பும் நல்ல பிரஜையாவோம்.

❀ ❀ ❀

# தமிழும் நீதிப் பாடல்களும்

ம. அனுஷா (8^C^)

அக உணர்ச்சிகள், புற உணர்ச்சிகள் இவ் உணர்ச்சிகளின் மோதல்கள், சிந்தனைக் குழப்பங்கள், பல்வேறு போராட்டங்கள், மனிதர் புற மனிதரோடு கொள்ளுகின்ற உறவுகள், சந்திப்புக்கள், மோதல்கள், பிணக்குகள், சண்டைகள் இவற்றினால் ஏற்படுகின்ற விளைவுகள், அழிவுகள், இன்பம், துன்பம், காதல், சாதல் ஆகிய இவையும், இவை போன்றவையும் கலந்த கலவையே வாழ்க்கை.

இத்தகைய வாழ்க்கையில் இருந்து தான் இலக்கியம் பிறக்கிறது. செய்யுள், கவிதை, உரைநடை வடிவில் இலக்கியங்கள் உதயமாகின. உதயமாகின்றன. இவ்வாறு உருவாகும் இலக்கியங்கள் மக்கள் வாழ்வினின்றும் பிறக்கின்றது. பிறக்கின்ற இலக்கியம் அப்பொழுது வாழ்கின்ற மக்களின் வாழ்வோடு பொருந்துகின்றது; காலமெல்லாம் வாழ்ந்து வரும் மக்கள் வாழ்வுடன் இணைந்து போகின்றது. அன்பும் சிவமும் அன்றைக்கும் இருந்தன. இன்றும் இருந்து கொண்டே இருக்கின்றன. காலந்தோறும் உணர்வுகள் இருந்து கொண்டே இருக்கும்.

சமுதாயம் நேர்வழியில் செல்வதற்கு நீதிக் கருத்துக்கள் தேவை. இவை விழுமியங்களாகக் கொள்ளப்படுகின்றன. எமது தாய்மொழியாம் தமிழில் நீதி பற்றிக் கூறும் இலக்கியங்கள் பல தோன்றியுள்ளன. தோன்றிய வண்ணம் உள்ளன. புறநானூறு,

சிலப்பதிகாரம் போன்றவையும், திருக்குறள் முதலான நூல்களும் நீதிக் கருத்தகக்ளைப் போதிக்க வந்தவை.

சமுதாயச் சீர்கேடு, அமைதியின்மை போன்றவற்றில் ஒழுக்கம் குன்ற வாய்ப்புக்கள் உள்ளன. காதல், வீர வாழ்வில். துன்பங்கள், துயரங்கள் ஏற்பட நொந்த மக்களுக்கு வேறு வாழ்க்கை முறை தேவைப்பட்டது. கட்டுப்பாடான வாழ்வை எதிர்பார்த்தனர். அமைதியான வாழ்வை விரும்பினர்.

இதனால் திருவள்ளுவர் போன்றோர் மக்களுக்கு நீதிக் கருத்துக்களைக் கூறி நின்றனர். "கற்றிலனாயினும் கேட்க!" மறந்தும் பிறர்க்கு கெடுதியானவற்றை எண்ணக் கூடாது. அவ்வாறு எண்ணினால் எண்ணியவனுக்கு கெடுதி விளையும். "மறந்திடும் பிறன் கேடு சூழற்க: சூழின் அறம் சூழும். சூழ்ந்தவன் கேடு!" என்றார். நல்லவர் வறுமையை விட கல்லாதவர் செல்வம் பொல்லாதது என கற்காதவன் இழிவு கூறுகிறார். நட்பு கொண்டவர் செய்த பிழை பொறுத்தல் மனித குணம். "நல்லாரெனத் தாம் நனி விரும்பிக் கொண்டாரை அல்லார் எனினும் அடக்கிக் கொள்ளல் வேண்டும்: நெல்லுக்கு உமி உண்டு. நீருக்கு நுரை உண்டு. புல்லிதழ் பூவிற்கும் உண்டு என்கிறார் நாலடியார்.

உலகமே புரண்டாலும் சொன்ன சொல் தவறாதவர் இன்றும் நம்மிடையே உளர். நிலம் பெயரினும் தாம் பெயரார். நிலம் பெயரினும் தன் சொற் பெயரார் என இலக்கியங்கள் கூறும் இத்தகைய பழமொழிகள் இன்றும் நம் மனைகளில் வலம் வருகின்றன.

தென்னை இருக்கிறது; அதன் அடியில் வெறும் தண்ணீர் ஊற்றப்படுகிறது; வளர்கிறது; சுவை மிக இளநீரைத் தருகிறது; இதற்கு இருக்கும் நன்றியுணர்வு நமக்கேன் இல்லை.

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்றும் தருங்கொல்என வேண்டா
நின்று தளராவளர் தெங்கு, தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்

இந்த உடலை வளர்ப்பதற்கு ஒரு நாழி அரிசி பெற "சேவித்துச் சென்றும் இரந்தும் தெண்ணீர் கடல் கடந்தும், பாவித்தும், பாராண்டும், பாட்டிசைத்தும் போவிப்போம்." என்கிறார் ஔவை மூதாட்டி.

"நெஞ்சிலே கரவு உடையார் தம்மைக் கரப்பர் கரவார் கரவிலா நெஞ்சத்தவர் என்றும் "பாங்கு அழியாப்புல் அறிவாளர்க்குச் செய்த உபகாரம் கல்லின் மேல் இட்ட கலம்" என்றும் "ஏற்றவர்க்கு நல்குடி பிறந்தார் நல்கூர்ந்தார். ஆனாலும் இல்லை என மாட்டார்." என்றும் மனிதன் மனிதனாக இருப்பதற்கு பல நீதிக் கருத்தக்கள் கூறிச் சென்றார் நம்முன்னோர். அவர் கூறிய வழி நடப்போமாயின் நாமும் நாடும் நலம் பெறும்.

❀ ❀ ❀

# என்ன கைம்மாறு செய்வோம் நாம்

சு. சுகஜீவன் (9B)

இம்மரங்களைப் பாருங்கள் இவைகள் பாக்கியம் பெற்றவைகள் பிறருக்கு முழுவதும் பயன்படும் வாழ்க்கை உடையவை. இவற்றிற்கு நாம் செய்யும் கைம்மாறு யாது? அவை செய்யும் உதவிக்கு நன்றியுடையவராய் நாம் இருக்க வேண்டுமல்லவா? மரம்தானே என்ற எண்ணம் நம்மனதில் இருந்து விலக வேண்டும். இயற்கை தரும் நீரையாவது ஊற்றுவது நம் கடமையல்லவா? கேடு செய்வார்க்கும் நன்மை தரும் பண்பால் மரங்களுக்கும் நன்றி செய்ய வேண்டியது மாந்தர் நம் கடமை

"மாந்தர் குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்" என்கிறார் வள்ளுவப்பெருந்தகை

கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை அவர்கள் கூறுவதைப் பாருங்கள்

"மரமே மாடே என்றெல்லாம்
மக்கள் திட்டிக் கொள்கிறார்
மரமும் மாடும் உதவுதல் போல்
மக்கள் எங்கே உதவுகிறார்"

ஆமாம் உயர்ந்த இடத்தில் வைத்தெண்ணப்படும் மனிதன் குணமே மிகவும் தாழ்ந்த இடத்தில் உள்ளது. இந்த அஃறிணைப் பொருள்கள் நமக்கு எதர்பாராது செய்கின்ற உதவிக்கு நாம் என்ன கைம்மாறு செய்கின்றோம்? எதுவுமே செய்ய வேண்டாம். அவற்றை அவையாக இருக்க விட்டாலே போதுமானது.

"அன்ன மிட்டோர் தடி கொண்டே அடித்திட்டாலும்
அகம் குழைந்து வால் ஆட்டி அன்பு காட்டும்
நன்னயம் சேர் நாயிடத்தில் உள்ளதான
நன்றி மறவாமை நம்முள் பலருக்கில்லை"

எனவே மாணவச் செல்வங்களே, எம்மிலும் உயர்ந்த பண்புள்ள இவற்றை நேசிக்கக் கற்றுக்கொள்வோம். அவை தரும் பண்பாகிய கைம்மாறு கருதாத உதவியைப் பின்பற்றுவோம்.

❀ ❀ ❀

சமூக விஞ்ஞான மன்றம்-2011



பரிசளிப்புவிழா மலர்க்குழு-2011



மாணவர் தலைவர்கள் -2011



தமிழ்மன்றம்-2011



இந்துமாமன்றம்-2011



கிறிஸ்தவமன்றம்-2011



## சாரணர்கள்-2011



## வழிகாட்டிகள்-2011



## தொழில்நுட்ப மன்றம்-2011



மாகாண மட்டத்தில்பங்குபற்றி முதலாம் இடத்தை பெற்ற
வலைப்பந்தாட்ட அணி19 வயதுப்பிரிவு-2011




மாகாண மட்டத்தில்பங்குபற்றிய மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்ட
வலைப்பந்தாட்ட அணி 17 வயதின்கீழ் -2011



வலய மட்டத்தில்பங்குபற்றிய இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்ட
வலைப்பந்தாட்ட அணி 15வயதின் கீழ் -2011









தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மன்றம் - 2011

நூலகக்குழு-2011





உளநலமன்றம்-2011

# பேச்சு மொழியும் இலக்கியமும்

ர.கஸ்தூரி (9A)

ஒருவர் தனது கருத்தின் நிகழ் பொருளை மற்றவர்களுக்கு விளக்கவும், தான் பிறர் கருத்தை விளங்கிக் கொள்ளவும் இலகுவான சிறந்த கருவியாக அமைவது மொழி. பேச்சு, எழுத்து ஆகிய இரு மொழிகளுள்ளே முந்தியது, அதிகம் பயிலப்படுவது பேச்சு மொழி. இளமை தொட்டு முதுமை வரை எல்லோராலும் பயன்படுத்தப்படுவது.

அன்றாட வாழ்வில் சமூகத்தோடு உறவாடும் போது தங்களை அறியாது பாமரர் தொடக்கம் பண்டிதர் வரை பயன்படுத்துவது. பேச்சு மொழி நாயக்கர் காலத்துக்கு முன்பு இலக்கியங்களில் இடம் பெறவில்லை, பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் முதலியவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தேமதுரத் தமிழோசை பரவும் நமதுதமிழகம், தாய்நாடு போன்றவற்றில் குறிப்பாக ஆங்கிலேயர்களின் வருகையின் பின்பு மத்தியதர வர்க்கமொன்று உருவாகியது. இம் மத்திய வர்க்கத்தினர் ஆங்கில இலக்கியங்களைப் படித்து அவற்றைப் போல் தாமும் தமது மொழியில் படைக்க வேண்டுமென்று அவாக் கொண்டனர். படைக்கவும் தொடங்கினர். இந் நிலையில் செந்தமிழில்தான் இலக்கியங்கள் படைக்கலாம் என்ற நிலை மாறி பேச்சுத் தமிழையும் கையாளலாம் என்ற நிலை மெல்ல மெல்ல உருவாகத் தொடங்கியது. இதன் தாக்கத்தை சிறுகதை, நாடகம், சினிமா போன்ற இலக்கியங்களில் நாம் கண்டு கொள்ளலாம்.

" சுந்தரம் செய்த தந்திரம்" , "காசிநாதன் நேசமலர்" , "துரைரத்தினம் நேசமணி" போன்ற இலக்கியங்களில் யாழ்ப்பாணத்து பேச்சு வழக்கை அவதானிக்க முடிகிறது. அத்துடன் மரபுச் சொற்றொடர், பழமொழிகள் என்பவற்றையும் காணக் கூடியதாக உள்ளது. நகைச்சுவைப் பாத்திரங்கள் வேலையாள் போன்ற பாத்திரங்கள் பேச்சுத் தமிழைக் கையாண்டன. சமூகம் சார்ந்த விடயங்கள் கூற பேச்சுத் தமிழ் பெரிதும் பயன்பட்டது. பெரும்பாலும் நாடக இலக்கியங்களில் கையாளப்பட்டு வருகின்றமை கண்கூடு. வீட்டிலும் வீதியிலும் பேசுவது போல அரங்கிலும் பேச வேண்டும் என்ற நிலை உருவெடுத்தது.

கொடுந்தமிழ் மொழி அந்தந்த நாட்டிற்குரியது. உயிருள்ள மொழி எல்லாம் இடைவிடாது மாறிக் கொண்டிருக்கும். எனவே அவ்வக் காலத்துக் கொடுந்தமிழும் தீட்டி வைக்கப்படல் வேண்டும் படைப்பாளி என்பவன் அரசியல், சமூகவியல் சார்ந்த சிறந்த விளக்கமும் தெளிவும் உடையவராக இருக்க வேண்டும் அவ்வாறு இருக்கும் போதே அவனது படைப்புக்களிலும் மிகத் தெளிவான கருத்துக்களை அவனால் முன்வைக்க முடியும். இவையே நல்ல படைப்புகள் உருவாகுவதற்கு அடிகோலுகின்றன. இவ்வாறான தன்மையே படைப்பாளியை மக்களுடன் இரண்டறக் கலக்கவும் மக்கள்தம் பேச்சுவழக்கினை படைப்பாளி

தனது படைப்புகளில் சித்தரிப்பதற்கும் உந்துசக்தியாக அமைகிறது.

பேராசிரியர் கணபதிப் பிள்ளையவர்களது நாடகம் ஒன்றில் பாத்திரங்கள் பேசுவதைப் பாருங்கள்.

"கார்த்தி, இந்த நாளை குத்தியன்கள் தாய் தேப்பன் சொல்லுக்கடங்கி நடக்கிறாங்களே. ஒரு பெண்புரசுகள் வீட்டிலை இருக்க முடியவில்லை. கிளப்பிக்கொண்டு ஓடுறமெண்டு நிக்கிறாங்கள் எங்கட காலத்தில் அப்பு ஆச்சி பேசி முடிக்கிறதையே செய்யிறம் இப்ப வெண்டால் பெடியளும் பெட்டையளும் ஓட்டத்தில் விடுகினம்"

பேச்சுமொழியை பொறுத்தவரை அதில் பல்வேறு அம்சங்கள் உள்ளடங்கி இருப்பதைக் காணலாம். பழமொழிகள், மரபுத்தொடர்கள், அடுக்குத்தொடர்கள், இணைமொழிகள் போன்றன குறிப்பிடத் தக்கவை. இப் பேச்சுமொழிக்கு இவை மெருகூட்டுவன. வளம் சேர்ப்பன இவ்வம்சங்கள் நகர்ப்புற மக்களது பேச்சுத்தமிழை விட கிராமப்புற மக்களின் பேச்சுவழக்கில் மிகுதியாக உள்ளன.

மஹாகவி உருத்திரமூர்த்தி அவர்கள் கிராமப்புற வாழ்வில் மனதை பறிகொடுத்தவர். 'கோடை' என்ற கவிதையில் பேச்சுமொழியினை எவ்வளவு இலாகவமாகக் கையாண்டுள்ளார் என்பதைப் பாருங்கள்

"வேண்டாம் பாருங்கோ
விடியற்புறம் எழும்புமுன்
ஆண்டான் நம் வீட்டில்
அடிவளவிற் சீவுகிற
பாளை வடித்த பதநீர் பருகி வந்தேன்
தட்டத்தை மட்டும் இஞ்சை தள்ளுங்கோ
எங்கள் அப்பருக்கு அப்பர்
அவர் அப்பர் அவ்வப்பர்
அப்பருக்கு அப்பர் அவர் அப்பர்
காலமுதல் இன்றுவரை.........
கோப்பி உங்கள் வீட்டில்
குடித்திருக்க ஞாயமில்லை"

பேச்சொலி சார்ந்த மெட்டிலே அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை, அனுபவங்களை நகைச்சுவையோடு கொடுக்க வல்லவர் மஹாகவி.

எதுகை, மோனையுடன் கூடிய சங்கீத சப்தஜாலம் நிறைந்தாலும் பேச்சுநடையால் கவிதைக்குச் சிறப்புச் சேர்த்தவர் புதுமைப்பித்தன்

"காளான் குடைநிழலில், கரப்பான் அரசிருக்க
வேளான் குடியூரில் வெள்ளெருக்கன் மூட்டருகே....."

என்பது அவரது மகாகாவியத்தின் கவிதை வரிகள். பேச்சு நடையில் பழகுதமிழ் சொற்கள் ஊடாக எழுதியமைக்கு

"கந்தா! கடம்பா! கதிர்வேலா! கட்டழகா!.
சந்தார் தடம் தோளா! சட்டணு வா"

என்னும் அடிகள் சான்றாகின்றன.

நம் நாட்டுக்கு குழந்தைக்கவி தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவர், சிறுவர் எமக்காகப் பல பாடல்கள் தந்து சென்றுள்ளார். அவை பேச்சோசை கொண்டு அமைந்தவை.

"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!
கூடிப்பனங்கட்டி கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!"
எனப் பாடியுள்ளார்.

சிறுவர்தம் உளநிலையை நன்குணர்ந்தே பாடல்கள் அமைய வேண்டும் என்பது இயல்பு. வித்துவான் வேந்தனார் "அம்மாவின் அன்பு" என்னும் பாடலில்

"அள்ளிப் பொருளைக் கொட்டிச் சிந்தி
அழிவு செய்த போதிலும்
பிள்ளைக் குணத்தில் செய்தான் என்று
பொறுத்துக் கொள்ளும் அம்மா!
பள்ளிக்கூடம் விட்ட நேரம்
பாதி வழிக்கு வந்து
துள்ளிக் குதிக்கும் என்னைத் தூக்கித்
தோளிற் போடும் அம்மா!

என மனம்கவர் பாடலை மிக அழகாகத் தந்துள்ளார்.

எனவே, பேச்சுமொழியின்றி இலக்கியம் இல்லை. பேச்சுமொழியும் இலக்கியமும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்துள்ளமை கண்கூடு. இலக்கியம் என்னும் போது பேச்சு வழக்கிலிருந்து பிரிந்து விடாத ஒன்றாக இருந்த போதிலும் பிரதேசத்திற்குப் பிரதேசம் மக்களின் பேச்சு வழக்கைத் தாங்கி வரும் பலநூறு இலக்கியங்களை இன்னும் காண்கின்றோம். எனவே நாமும் பழகு தமிழில் இலக்கியம் செய்து, இலக்கியங்களுக்கு அழகு சேர்ப்போமாக.

❀ ❀ ❀

# நாவலரும் புராணபடனமும்

சி. ஜகீர்த்தனா
2012 கலைப்பிரிவு

புராணம் என்பதற்குப் பழமை என்பது பொருள். வேதம், இதிகாசம் என்பவற்றுக்கு அடுத்து வைத்து எண்ணப்படுவது புராணம். கிராமங்களிலே புராணங்கள் படிக்கப்பட்டு அவற்றுக்கு பொருள் கூறப்பட்டு வந்தது. இவற்றைக் கேட்ட மக்கள் ஒழுக்கமும் கல்வியறிவும் மிக்கவரானார்.

எமது நாட்டைப் பொறுத்த வரையில் பல நூற்றாண்டு களாகப் புராணபடனம் செய்யும் முறை கோயில்களிலும், வீடுகளிலும் மடங்களிலும் நடைபெற்று வருகின்றன. எம்மவர் சமய மேம்பாடும் ஆன்மீகப் பயனும் கருதி ஆரம்ப காலங்களில் ஆட்சியாளரது அனுசரணையோடு புராண படன முறையினைத் தோற்று வித்தனர்.

எமது நாட்டில் புராணங்களைப் படித்துப் பயன் சொல்லல், இதிகா சங்களைப் படித்துப் பயன் சொல்லல், சமயக் கதைகள் வாசித்தல் என புராணபடன முறை அமைந்திருந்தது. ஐரோப்பியர் ஆட்சி ஏற்பட்டபோது கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து மதங்கள் செல்வாக்கு பெற்ற நிலையில் இவற்றுக்கு எதிராக அடக்கு முறையும், பிரசார வேகமும், கண்டனங்களும், புராணங்கள் படிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தின. ஆரம்பத்தில் இம் முறையினை புராணம் வாசித்தல்,

புராணம் படித்தல் என்ற வகையில் அழைத்தனர். 19ம் நூற்றாண்டிலே தான் புராணபடனம் என அழைக்கப்பட்டது.

புராணபடனம் செய்யும் நூல்களுள் கந்தபுராணமே முக்கியத்துவம் பெறுகிறது. புராண படிப்பென்றால் அது கந்தபுராணப் படிப்பையே குறித்து நிற்கும். அந்தளவிற்குப் புராணப் படிப்பில் கந்தபுராணம் உயர்நிலை பெற்று விளங்கியது. அதற்கமைய புராணபடனச் செல்வாக்கும் உயர்நிலை பெற்று விளங்குகின்றது.

புராணபடனம் என்பது சந்நிதி விரோதம் இன்றி ஒருவர் வாசிக்க மற்றொருவர் பயன் சொல்லும் முறையாகும். இது ஈழநாட்டுக்கே குறிப்பாக யாழ்ப்பாணத்திற்குரிய சிறப்புமுறை. நாவலர் தம் காலத்தில் புராணபடனம் என்பது உயர்நிலை பெற்று இன்று வரை நடைபெற்று வருவது கண்கூடு. சிந்தனை, வாக்கு, செயல் மூன்றும் இறைவன் அடியில் சென்று குவிவதற்கும் அவன் புகழ் இயம்புவதற்கும் உரிய இடமாகிய ஆலயங்களில் எம்மவர் புராண படனங்களை ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

பழைய காலம் தொட்டே ஆலயங்களிலும் மடங்களிலும் கந்தபுராணம் படித்து பொருள் சொல்லப்பட்ட போதும் நாவலர் காலத்திலே புராண படனம் உயர்நிலை அடைந்தது. 19ம் நூற்றாண்டில் சமய அரசியல் சூழ்நிலையும், பழைய சமய மரபுகளைப் புதிய வடிவிற் பேணும் முயற்சியும் நாவலரவர்களின் அயரா முயற்சியும் இப் புராண படன முறை அவர் காலத்தில் உயர்நிலை பெறுவதற்குக் காரணமாகின. நாவலரவர்களைச் சமய சிந்தனைக்கு இட்டுச் சென்ற நூல் கந்தபுராணம் "நாவலரவர்களுக்குச் சைவசித்தாந்த உணர்ச்சி கந்த புராணத்தில் இருந்தே வந்தது. அவரை அறியாமலே கந்தபுராணம் நாவலர் இரத்தத்தில் ஊறி இருந்தது" என்ற பண்டிதமணி அவர்களது கூற்று இங்கு மனங்கொள்ளத்தக்கது.

எமது தாயகத்தில் புராண படனப் படிப்பானது ஒரு தெய்வீகப் பணியாகவே இருந்து வருகின்றது. புராணபடனஞ் செய்வோர் பயன் கருதாது தம் செயலையாற்றுவார். எம் மக்களிடையே புராண பாரம்பரியத்தையும், கலாசார மரபினையும், தத்துவ சிந்தனையையும், சமய நோக்கினையும் வளர்த்துச் சென்றது புராணபடனம். தமிழகத்தை பார்க்கிலும் எமது தாயகத்தில் கந்தபுராணம் ஏற்படுத்திய செல்வாக்கு மிக மிக அதிகம். "இந்தியாவிலே சிவபுராண பிரசங்கம் செய்யும் கோயில்கள் மிக அரியன. இத் தேசத்தில் அது செய்யப்படாத கோயில் இல்லை.

"இந்தியாவிலே வித்துவான்கள், சைவ சமயக் குருமார், முதலியோரிலும் கந்தபுராணம் முதலியன அறிந்தோர் சிலர். இத் தேசத்திலோ பெண்களுள்ளும் அவை அறியாதார் இலர்" என்கிறார் நாவலர்.

கிறிஸ்தவ பாதிரிமார் சைவத்திற்கு எதிராக சமயப் பிரசாரம் செய்வது, சமயமாற்றம் செய்ய விழைந்த காலத்தில் மரபு வழிபட்ட கந்தபுராண சிந்தனைகள், கிறிஸ்தவர்களாக மாறியோரையும், மாற விழைந்தோரையும் நல்வழிப்படுத்தியதோடு, முழுமையான சமய மாற்றங்களில் இருந்து மக்களைக் காப்பாற்றிய பெருமை குரவர் நாவலருக்கு உண்டு.

புராண படன வளர்ச்சியின் உயர் எல்லையில் விளங்கிய நாவலர் அவர்களே முதன் முதலில் கந்தபுராணத்தைப் பதிப்பித்து வெளியிட்டார். அவரது பாடபேதமற்ற பதிப்பு "நல்ல பதிப் பென்றால் நாவலர் பதிப்பு" என்ற உயர் பதிப்பிற்குக் காரணமாயிற்று. தம் பதிப்பில் புராண படனம் எவ்வாறு நிகழ வேண்டும் என்பதை முதன் முதலில் குறிப்பிட்டார். நாவலர்தம் அடிநின்று மக்களிடத்து சமய பக்தி நிலையையும், ஆன்ம நேயத்தையும், கலாசார பாரம்பரியத்தையும் வளர்த்தற் பொருட்டு பிற பதிப்பாசிரியர்கள் பதிப்புகளில் ஈடுபட்டனர். உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு போல் புராண படனத்துக்கும் எம்மவர்க்கும் பிரிக்க முடியாத பிணைப்பொன்றை ஏற்படுத்தியவர் நாவலர்.

ஈழநாட்டில் கந்தபுராணப் படிப்பின் முக்கியத்துவத்தையும் பயன் பாட்டையும் அனுபவரீதியாக நன்கு உணர்ந்த நாவலர் அவர்கள், தமிழ் நாட்டுச் சைவர்களது நிலை கண்டு மனம் நொந்தார். கந்தபுராணத்தில் ஈடுபாடு கொண்டிருந்தது போல பெரிய புராணத்திலும் நாவலரவர்களுக்கு ஈடுபாடிருந்தது. நாட்டின் அரசியல் சமூக, சமய சூழ்நிலைகளை மனதிற் கொண்டு, பெரிய புராணத்தில் கொண்ட ஈடுபாட்டினால் அந்நூல் புகட்டும் அடியார் பக்தியும், வேற்றுமையற்ற சமூக சமய ஒருமைப்பாட்டியல்பும் ஆகியவற்றைக் கண்டு சைவர் யாவரும் படித்துப் பயன்பெற பெரிய புராணத்தை வசனரூபமாகச் செய்து பதிப்பித்தார். பாமரரும் விளங்கும் அரும் பெரும் பொக்கிசங்களாக இவை அமைந்துள்ளன. புராண படனம் முத்தி வழிக்கு உயர் சாதனை என்பதனை பொதுமக்கள் உணர்வில் ஏற்படுத்த விழைந்தார். மேலும் திருவிளையாடற் புராணத்திற்கும் வசனம் எழுதி புராண படனம் செய்வதற்கு உதவி நின்றார். நாவலர் இதற்கான வசனம் முற்றுப் பெறவில்லை என்ற கருத்துக்கள் கூறப்படுகின்றன.

ஆங்கிலேயரது ஆட்சிக்காலம் ஈழநாட்டின் வரலாற்றிலே நிலைமாறு காலம். சமூக, பொருளாதார, அமைப்புகளிற் பெரிதும் மாற்றம் ஏற்பட்டுச் சமய மாற்றம் வற்புறுத்தப்பட்டது. கலாசார மாற்றம் வேண்டப்பட்டது. ஆங்கிலக் கல்வியும் அறிவியல் துறையும் வளர்ச்சி கண்டன. சமய கலாசார உந்தல்கள் ஈழநாட்டின் சுதேசிய சமயவாதிகளைச் சிந்திக்கத் தூண்டின. ஆங்கிலேயர், சுதேசிய சமய கலாசார மாற்றத்தின் பொருட்டு பரிசுத்த ஆவி புகப்பண்ண மேலை நாடுகளில் இருந்து சேர்ச் மிசன் முதலான மிசனரிமாரது வருகையை அனுமதித்தனர். இவர்கள் ஈழத்தில் காணப்பட்ட சமூகக் குறைபாடுகளையும் கல்வி முறை களையும் கண்டித்தனர். சமூகத்திடையே சமன்பாட்டை ஏற்படுத்த விழைந்தனர். ஆங்கிலக் கல்வியைப் புகட்டி உத்தியோக வாய்ப்புகளை வழங்கினார் அச்சி யந்திரத்தை நிறுவினர் சமய கண்டனம், துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டனர், பத்திரிகைகளை ஏற்படுத்தினர். இவை அனைத்தையும் தமது சமயப் பண்பாட்டின் நிலை பேற்றுக்காகச் செய்ய தலைப்பட்டனர். இவர்களது தீவிர பிரசார வேகம் ஈழத்து சுதேசிய மக்களைக் குறிப்பாக சைவ, பௌத்த மக்களைச் சிந்திக்கத் தூண்டியது. இந் நிலையிலேயே சைவத்தின் காவலராக ஈழத்தின் வடபகுதியில் நாவலர் பிரசாரம் செய்யத்

தலைப்பட்டார். யாழ்ப்பாணத்து நல்லூரிலே செல்வ வளமுள்ள குடும்பத்தில் பிறந்தவர்: தமிழும், ஆங்கிலமும் நிரம்பப் பெற்றவர்: வாழ்விற்குப் போதுமான வளத்தை தரக்கூடிய பதவியை வகித்தவர். பல உயர்பதவிகள் அவரை வேண்டி நின்ற பொழுதும் சைவத்தின் கீழ் நிலை கண்டு தமது சுகபோகங்களைத் துறந்தவர் "கன்னியை நாயகனிடம் ஒரு துட்டாயினும் வாங்காது, வீடு, விளைநிலம், தோட்டம், ஆபரணம், முதலானவற்றோடு விவாகம் செய்து கொடுக்கும் வழக்கமுடையது.

என் சென்ம தேசமாகவும் நான் இல் வாழ்க்கையில் புகவில்லை. இவைகள் எல்லாவற்றுக்கும் காரணம் சைவத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாக கல்வியையும் வளர்த்தல் வேண்டும்" என்ற நாவலரது நோக்கை இங்கு குறிப்பிடலாம்.

நாவலர் அவர்கள் தமது நோக்கினை நிறைவேற்றும் பொருட்டு தனது வாழ்வினைத் துறந்தார். பல ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற் கொண்டார். இதனடிப்படையில் பிரசார அடிப்படையில் மேற்கொண்ட புராணபடன முறை இவற்றுள் ஒன்றாகும். மிசனரிமாரின் பிரசாரத்துக்கு எதிரான பிரசாரக் கருவியாக புராண படனம் கொள்ளப்பட்டது. சைவ மக்கள் புனித நாள்களில் புராண படன விதிகளுக்கு கட்டுப்பட்டு வீடுகளிலும், புனித இடங்களிலும் வாசித்துப் பயன் சொல்லிப் பயன் பெறலாம் என்ற நிலைக்குக் கொண்டு வந்தார். இது சமூக ஏற்றத் தாழ்வுகள் இன்றி எல்லாச் சைவ மக்களுக்கும் வரப்பிரசாதமாக அமைந்தது. நாவலர் அவர்கள் தமது புராண படன முறையை நல்லூரிலேயே ஆரம்பித்தார். இங்கு பிராமணர்களே இதைச் செய்து வந்தனர். இன்றும் அது தொடர்கிறது.

பெரிய புராணம், கந்தபுராணம் ஆகிய இரு நூல்களையும் புராண படனம் செய்வதில் ஈடுபாடு காட்டியபோதும் கந்தபுராண படனம் செய்வதிலேயே மிக்க ஈடுபாடு காட்டினர், நாவலர் அவர்கள் புராண படனம் செய்வதோடு நின்று விடாது தமதுமாணவர் பரம்பரை யினருக்கும் இம் முறையினை நன்கு பயிற்றுவித்து புராண படன முறையினை உச்சநிலைக்குக் கொண்டு சென்றார்.

19ம் நூற்றாண்டில் இறுதிவரை மக்கள் மத்தியில் சமய உணர்வையும் சமய கல்வியையும் ஆத்மீக ஈடுபாட்டையும் ஆலயங்களிலும் இல்லங்களிலும் ஏனைய புனித இடங்களிலும் வளர்த்த பெருமை புராண படனக் கல்வி முறைக்கு உரியதாகிறது. இந்த முறையினால் நல்ல வித்துவத் தன்மை மிக்க ஆசிரியர்களையும் சித்தாந்த வித்தகர்களையும் தோற்றுவித்தது. சமயக் கதைகள், பக்தி உணர்வையும் சமூக ஒருமைப் பாட்டையும் வளர்த்துச் செல்ல உதவின. காவிய ரசனைகள் இலக்கிய விழப்புணர்வினை ஏற்படுத்தின என்றால் மிகையில்லை.

'புராண படன முறை ஈழநாட்டின் கலாசாரம்; கந்தபுராணக் கலாசாரத்தின் வழியது' என்ற கூற்றினைப் பலரும் ஒப்புக்கொள்ள வைக்கும் அளவிற்கு உயர்நிலை பெற்று விளங்குகின்றது. நவீன பொதுசன தொடர்பு சாதனங்கள் கல்வி வசதிகள், பொருளாதார மேம்பாடுகள், வாழ்க்கையின் அபிலாசைகள் என்பன புராண படனச் செல்வாக்கினை வலுவிழக்கச் செய்ய

முற்படுகின்ற பொழுதும் தொடர்ச்சியான பாரம்பரிய கல்வி முறையின் தாக்கமும், சமய பக்தியும் ஆன்மீக உணர்வும் ஈழநாட்டிலே நிலை பெற்றிருக்கும் வரை சைவ சமயத்தின் வளர்ச்சிக் கருவிகளில் ஒன்றான புராண படன முறை அழிந்து விடுமோ என்று அஞ்சுவதற்கில்லை. அது தன் பணியினை மெல்ல மெல்ல ஆற்றிப் பக்தியின் வேகத்தை மக்கள் மத்தியில் ஊட்டவே செய்கின்றது. மேலும் செய்து வரும் என்பதிலும் எவ்வித ஐயமும் இல்லை.

எனவே நாவலரது புராண படனச் செயற்பாட்டினால் ஈழநாட்டின் சைவ பாரம்பரியத்தில் சிறந்ததொரு முது பெருஞ் சின்னமாகவும் பொக்கிஷமாகவும் இப் புராண படன முறையே இருந்து வருகிறது என்றால் அதை யாரும் மறுப்பதற்கு இல்லை. அவ் வகையில் சைவ சமய இலக்கிய வரலாற்றிலே புராண படனமுறை தனித்துவம் பெற்று விளக்குகிறது எனலாம்.

# விஞ்ஞானமும் தொழினுட்பமும்

இ. யசிகா
தரம்: (11B)

"மீனைக்கண்டான் கப்பல் செய்தான்.
பட்சிகண்டான் விமானம் படைத்தான்.
சந்திரனைத் தொட்டான் சாதனை புரிந்தான்."

இன்று நாம் 21ம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் இயந்திர யுகமும் அவசரகதியும் எம் வாழ்வாகிப் போய்விட்டன. மண்ணின் மைந்தர் நாம் விண்வெளியில் பயணித்து தண்மதியில் குதித்து விட்டோம். தலைநிமிர்ந்து நின்று கொண்டோம். பொறியியல், மருத்துவம், இலக்கியம் மொழியறிவு எதிலும் வெற்றிக்கொடி நாட்டியபடி மானுடம் பயணம் செய்கிறது. தொடக்கமும் முடிவும் இல்லாது அநாதியாய் அகன்று விரிந்திருக்கின்ற இப்பிரபஞ்சத்திலே தன்னுணர்வில்லாத சிற்றுயிர்கள் முதல் தன்னை உணரத்துடிக்கின்ற மனிதன் வரையாக கணக்கில்லா உயிர்கள் கணந்தோறும் உயிர்க்கின்றன; மடிக்கின்றன. எனினும் மனிதன் இவ்வாறான இயல்பான செயற்பாடுகளில் இருந்து வேறுபட்டும் பல்வேறு வெற்றிப்படிகளைத் தாண்டுவதற்கும் அடித்தளம் விஞ்ஞானமே. இன்று மனித வாழ்வோடு ஒன்றறக்கலந்துவிட்ட விஞ்ஞானத்தின் அதியுயர் நிலையாகவே இன்றைய தொழினுட்ப வளர்ச்சி மிளிர்கின்றது.

விரிந்து பரந்துள்ள இந்த உலகை மானுடன் அடக்கியாளும் அளவிற்கு உறுதுணையானது விஞ்ஞானமே. இன்று விஞ்ஞான வளர்ச்சி காரணமாக ஏற்பட்டுள்ள

தொழினுட்ப வளர்ச்சியானது நெருப்பிலே கலந்த சூடு போல மனித வாழ்வோடு பிணைந்துள்ளது. இவ்விஞ்ஞான வளர்ச்சியானது சடுதியாக வந்ததொரு சாதனை அன்று. அன்றைய மனிதன் விலங்கோடு விலங்காய் பேதமற்று வாழ்ந்தான். காலப்போக்கில் சிந்தனை வாழ்வில் விஞ்ஞானச் சுடர் ஏற்றிவைக்கப்பட்டது. செயலார்வங்களும் சிந்தனைத் திருப்பங்களும் சேர ஏற்றிவைத்த அகல் பிரகாசிக்கத் தொடங்கியது. தீயும், சக்கரங்களும் பிறந்தன. எங்கும் சிந்தனை ஒளி பரவத்தொடங்கியது. மனித குலத்திற்கே உரித்தான மொழிப் பயன்பாடும் கருவிக் கையாட்சியும் விஞ்ஞான வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. விலங்கு நடத்தையில் வாழ்ந்து கொண்டிருந்த மனிதன் தன்னை வேகமாய் விலக்க ஆரம்பித்தான். சிந்தனை விரிவால் விஞ்ஞானத்தின் துணையால் ஏற்பட்ட புது அறிவு மனிதனைப் பல்வேறு கோணங்களில் மேலும் சிந்திக்க வைத்தது. இச்சிந்தனைகளின் செயல்வடிவமாகவே இன்றைய தொழினுட்பங்கள் உருப்பெற்றுள்ளன. விஞ்ஞானமானது வானத்துக்கும் பூமிக்குமிடையே விரிந்து பரந்து கிடக்கின்றது என்றால் மனிதனையும், விஞ்ஞானத்தையும் இணைக்கும் பாலங்களாகவே தொழினுட்ப வளர்ச்சி காணப்படுகின்றது.

புல்லும், பூடும், புழுவும், மரமும் பரிணமித்த பாதையில் தோன்றிய மனிதன் தன்னைச் சூழவுள்ள இயற்கை சக்திகளை விஞ்ஞானத்தின் துணை கொண்டே ஆள்கின்றான் என்றால் மிகையாகாது. இவ் ஆட்சியில் மனிதனுக்குச் சூட்டப்பட்ட கிரீடமாகத் தொழினுட்பம் விளங்குகின்றது. இன்று மனிதனின் வேலைச்சுமையை எவ்வளவோ குறைத்து விட்டது. இதற்கு உதாரணமாக உலகமயமாக்கலைக் குறிப்பிடலாம். உலக நாடுகளையும் அவற்றில் வாழும் மக்களையும் ஒருங்கிணைக்கும். ஒரு செயன்முறை என வரைவிலக்கணப்படுத்தப்பட்ட உலகமயமாக்கமானது, தொழினுட்ப வளர்ச்சி காரணமாக காலத்தையும் தேசிய எல்லைகளையும் சுருக்கியும் முற்றாக இல்லாமலும் செய்தும் வருகின்றது.

இவ்வாறே தொடர்பாடல் சாதனங்கள் மட்டுமன்றி, வெகுசனத் தொடர்பு சாதனங்களும் தொழினுட்பம் காரணமாக வேகமாக வளர்ச்சி அடைந்து மனிதரை ஒன்றுபட வைக்கிறது. தொலைக்காட்சி, வானொலி மற்றும் இதர தொடர்பு சாதனங்கள் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் இன்ப நுகர்ச்சிக்கும் அவசியமாகி விட்ட நிலையில் தொழினுட்ப வளர்ச்சியானது அவற்றின் தேவையை மேலும் ஆதிக்கப்படுத்தியுள்ளது எனலாம். இன்று உலகில் மிகப்பிரபலம் பெற்ற வெகுசனத் தொடர்பு சாதனமாகத் திகழ்கின்ற தொலைக்காட்சி கட்புலன் செவிப்புலன் இரண்டிற்கும் விருந்தளிக்கும் இன்றியமையாத சாதனமாக விளங்குகின்றது. இதற்கு விஞ்ஞானத்தின் ஊக்கமும் தொழினுட்பத்தின் வளர்ச்சியுமே காரணமாகும். உலகின் எந்தப்பாகத்தில் இடம்பெறும் எந்தவொரு நிகழ்ச்சியையும் உடனுக்குடன் திரையில் பார்க்கின்றோமென்பது எவ்வளவு பெரிய அதிசயம்.

அகிலத்தை அகங்கைக்குள் ஏந்துமளவிற்கு தகவல் தொடர்பாடல் தெமாழினுட்பத்தின் வளர்ச்சி உலகை ஆதிக்கப்படுத்தியுள்ளது. சர்வதேச வலைப்பின்னல் (Internet) இன்று பலதரப்பட்ட கோடிக்கணக்கான மக்களை தன்னகத்தே ஈர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு விஞ்ஞானம் தனது வளர்ச்சிப்படிகளில் ஏறிச்செல்கின்றது.

மனித வாழ்வு என்பது விஞ்ஞான வளர்ச்சியினால் மிகவும் இலகு கண்டுள்ளது. விஞ்ஞானத்தின் பயனாக வளர்ந்துள்ள தொழினுட்பம். மனித முன்னேற்றத்திற்கு உதவுகின்றது. பற்பல விஞ்ஞானிகளால் வளர்க்கப்பட்டும், வளர்ந்துகொண்டும், வளரவும் போகின்றது. ஆரம்ப காலங்கள் தொட்டே விஞ்ஞானத்தில் ஒரு சில விதிகள் அவ்விடத்திலே புகுத்தப்படுகின்றமை இடம்பெறுதலினை நாம் அவதானிக்கலாம். இவ்விடத்தில் தான் விஞ்ஞானம் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்லத் தடைப்படுகின்றது. ஏனெனில் பிழையென அறியப்பட்ட ஒன்றினை நீக்கிவிட்டு புதிய விதிகள் அமைக்கப்படுகையில் விஞ்ஞான அறிவும், பிழைகள் களையப்பட்ட புதிப்பிக்கப்பட்ட அறிவாய் வளர்கின்றது.

ஆயினும் விஞ்ஞானம் என்பது ஆக்கத் தொழிற்பாடாகத் திகழ்கிறதேயன்றி ஒரு போதும் அழிவுப்பாதைக்குச் செல்ல தலைப்படுவதில்லை. இருந்தபோதிலும் "எந்த விசைக்கும் சமனும் எதிருமான மறுதாக்கம் இருக்கும்" என நியூட்டனின் மூன்றாவது விதி கூறுவது போல விஞ்ஞானம் ஆக்கபூர்வமான பாதையினை நோக்கி வளர்ந்தாலும் பாதகமான விளைவுகளும் ஏற்படுகின்றன. விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட போதிலும் அது சாதிக்க வேண்டிய இன்னும் பல சாதனைகள் உள்ளன.

தனிமனிதனது அதீத ஆசை, எதிர்பாரத விதமாக பாரிய அழிவுகளைச் சந்திக்க வைக்கிறது. இயற்கைக்கு முரணாக செயற்படுமிடத்து அதைத் தாங்கமுடியாத இயற்கை சீற்றங்கொள்கிறது; அழிவை ஏற்படுத்துகின்றது. அத்துடன் மனித செயற்பாடுகள், எதிர்ப்புணர்வுகள் , ஆதிக்க மனோபாவம் என்பனவும் உலகை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்கின்றமை வருந்தத்தக்கதே. இதற்கு மறைமுகமாக விஞ்ஞான, தொழினுட்ப வளர்ச்சி காரணமாய் அமைந்துவிடுகின்றது.

"அளவொடு எரிந்தால் அது விளக்கு; அளவு மீறினால் அது நெருப்பு" அது போலே விஞ்ஞானமும் தொழினுட்பமும் மனிதன் அடக்கியாளும் நிலையில் இருப்பின் அது மனிதனுக்கு உயர்வு, இந்நிலை மாறி இவை மனிதனைக் கட்டுப்படுத்தும் நிலை தோன்றின் அது மனிதனுக்குத் தாழ்வு. ஆகவே நாளைய உலகின் முடிசூடா மன்னர்களாகிய நாம், விஞ்ஞானத்தினதும், தொழினுட்பத்தினதும் துணைகொண்டு புதுயுகம் படைப்போம். இந்தப் பூவுலகையே அமைதிப் பூங்காவாக மாற்றிடுவோம்.

❀ ❀ ❀

# இலவச வைத்தியசாலை

செ. கீர்த்தனா
2012 கலைப்பிரிவு

மாரி மழையால் வயலூர்க் கிராமமே பச்சைக் கம்பளம் விரித்தது போல் காட்சி அளித்தது. அந்தக் கம்பளங்களில் அரைவாசிக்குச் சொந்தக்காரர் கதிரமலைச் செட்டியார். அக் கிராமத்தில் கதிரமலைச் செட்டியாரின் வீட்டைத் தவிர ஏனையவை எல்லாம் குடிசைகள் தான். விதானை, வாத்தியார் இப்படி வேறு சில உத்தியோகம் பார்த்தவர்களின் வீடு மண்ணால் அழகாகக் கட்டப்பட்டிருக்கும். மற்றப்படி அங்குள்ளவர்களுக்கு எல்லாம் வேலை கொடுக்கும் முதலாளி கதிரமலைச்செட்டியார் தான். பெரும்பாலும் பெண்களுக்குத்தான் வேலை கொடுப்பார். அவ்வூர் ஆண்கள் சிலபேரைத் தவிர ஏனையவர்கள் அயலூருக்குத்தான் வேலைக்குச் சென்று சம்பாதிப்பது.

இந்த வயலூர்க் கிராமத்தின் அரைவாசிக்கும் மேற்பட்ட பகுதிகள் இவருக்குச் சொந்தமாகக் காரணம் கதிரமலைச்செட்டியாரின் பாட்டனார் வைரமுத்துச்செட்டியார் தான். பெரியளவு காணிகள் இல்லாவிட்டாலும் கையில் பணம் புரள வாழ்ந்தவர் வைரமுத்துச் செட்டியார். நொச்சிக்குளத்து நீர் சிறுபோக பயிர்ச்செய்கைக்கு இந்த வருடம் திறந்து விடப்படும் என்பதை அறிந்து வயலூர் மக்கள் வைரமுத்துச் செட்டியாரிடம் தங்கள் காணியை அடைமானம் வைத்து கடன் வாங்கி நெற்செய்கையை மேற்கொண்டார்கள். விளைச்சலும் அமோகமாக நெல் அறுவடை காலத்துக்கு சில தினங்களின் முன் பெய்த மழையால் வயல் நிலம் குளமாகக் காட்சியளித்தது. அரிவி வெட்டி வயலில் வைத்தவர்களும், களத்து மேட்டில் வைத்தவர்களும் என அனைவருக்கும் ஒரே நேரத்தில் பேரிழப்பு, பேரிடி.

காணியை அடமானம் வைத்து பயிர்ச்செய்கை செய்தவர்களின் முகத்தில் பீதி குடிகொண்டது. எனினும் சோர்ந்து விடாது மேலும் கடன் வாங்கி பெரும்போகம் செய்தார்கள். எனினும் பெரும்போகமும் இலாபம் தராததால் மீண்டும் கடன்பட்டு முயற்சியைக் கைவிடாது தொடர்ந்தார்கள். பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும் மாதிரி காணியை மீட்க வசதி இன்றி அவ்வாறே காணியை விட்டுச் சென்றவர்களும், வித்து மீதிப்பணம் பெற்றும் அவ்வூரை விட்டுச் சென்றவரும் என அவ்வாறே சில காணிகளையும் வாங்கி, காடுகளையும் அழித்து தனது சொத்தைப் பெருக்கிக் கொண்டார்.

அவருக்குப் பின் அவரது பேரன்தான் சொத்துக்களுக்கு அதிபதி. கதிரமலைச்செட்டியாரும் இறுகிய மனம்கொண்டவர். தனது மகனையும் மகளையும் வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தியருக்குப் படிக்க வைத்தார். பிள்ளைகளின் ஆசைப்படி அயல் ஊரில் ஒரு மருத்துவமனையும் கட்டிக்கொண்டிருக்கிறார்.

தனக்குக் கீழ் வேலை புரிபவர்களிடம் அதீத கண்டிப்பு உடையவர். குறைந்த சம்பளத்துக்கு வரும் பெண்களுக்கு அவரிடம் எப்போதுமே வேலை காத்திருக்கும். கண்மணி, சாரதா போன்ற விதவைகள் அவரிடம் எப்போதுமே வேலைக்குச் செல்வார்கள்.

பாவம் அவர்களுக்கு அதை விட்டால் வேறு வழியில்லை. அவரிடம் வேலை பார்க்கும் எவரும் அனுமதியின்றி நிற்கக்கூடாது. அனுபவப்பட்டவள் கண்மணி.

கணவன் பாம்புக்கடிக்கு இலக்காகி இறந்ததிலிருந்து செட்டியாரின் வீட்டில்தான் வேலை செய்து வந்தாள். அவனுடைய மகளை அக்கிராமத்திலுள்ள ஆரம்பப்பிரிவு பாடசாலையில் படிக்கவைத்தாள். அக்கிராமத்திலுள்ள ஒரே ஒரு வசதி அந்த ஆரம்பப் பாடசாலைதான். வேறு எந்த வசதியும் இல்லை. பாடசாலை சிரமதானத்துக்கு தாய் வராததால் அழுதுகொண்டு வந்த மகளிடம் நாளை வருவதாகக் கூறி சமாளித்தாள். அதனை நிறைவேற்றியும் விட்டாள். இரண்டு மூன்று தடவை சிரமதானத்துக்குப் போகாததால் இந்தத் தண்டனை சரி என்றே பட்டது அவளுக்கு. கூலி வேலை செய்யும் தாய்மார் சிரமதானம் செய்ய வேண்டியதில்லை என்றால் யார்தான் சிரமதானம் செய்வது. அக்கிராமத்தில் பெரும்பாலும் கூலிவேலை செய்பவர்கள்தான் அதிகம்.

அன்று அவளுக்கு விழுந்த பேச்சுக்களை சாரதா சொல்லக் கேட்டு இடியேறு விழுந்த நாகம் போல துன்பமடைந்தாள். அவளை வேலைக்கு வராமல் நிறுத்தி விட்டதாகச் சாரதா கூறினாள். அவ்வூரில் வேலை கொடுக்கக் கூடிய ஒரு முதலாளியும் வேலையிலிருந்து நீக்கிவிட்டதால் வேறுவழியில்லாமல் திகைப்படைந்தாள். இறுதியில் செட்டியாரின் காலில் விழாத குறையாக மன்னிப்புக் கேட்டு கொண்டதற்கு இணங்க அவளை மீண்டும் இணைத்துக் கொண்டார்.

இவருடைய இந்த அதீத கண்டிப்புக் காரணமாகத்தான் இவரிடம் யாரும் நிரந்தரமாக வேலை பார்ப்பதில்லை. இதனால் வேலை பார்க்கும் எவரையும், லீவு எடுக்க விடுவதில்லை, லீவு கொடுப்பதில்லை. எனினும் சம்பளத்தை மட்டும் சரியாகக் கொடுத்திடுவார்.

அவர் கட்டும் இலவச வைத்தியசாலையை இங்கு கட்டச் சொல்லி அவர்கள் கேட்டும் அவர் தங்கள் பிள்ளைகள் பட்டணத்தில்தான் வேலை செய்யவேண்டும் என்று அங்குதான் இலவச வைத்தியசாலையைக் கட்டிக் கொண்டிருந்தார்.

அந்தக் குடிசை வீட்டை மேயுறதுக்காக கண்மணி இருநாள் லீவு எடுத்துவிட்டாள். முதலாளியின் அனுமதியுடன் பெரும் சிரத்தையுடன் எடுத்து விட்டாள். பாவம் அவள். எவரின் துணையும் இல்லாமல் தனித்து வாழ்ந்து வந்தவளுக்கு அயல் வீட்டாரின் சிறு உதவி பெரும் உதவியாகத்தான் தெரிந்தது. அந்தச் சிறுகுடிசையை மேய்வதற்கு அயலவர்தான் உதவி.

அந்தக் கிராமத்தை முன்னுக்கு கொண்டுவரும் வசதி செட்டியாரிடம் இருந்தது. கிராமம் முன்னேற்றம் அடைந்தால் தனக்குக் கீழ், தனக்கு வேலை செய்ய கூலி இல்லாமல் போய்விடும். என்று தனது சுயநலத்துக்காக மட்டுமே செயற்பட்டார்.

அவளின் மகளின் காலில் ஈர்க்கு குத்தியதற்காக வைத்தியசாலை கொண்டுபோக லீவு கேட்டுக் கெண்டிருக்கிறாள். செட்டியாரோ “அரிவி வெட்டுக் காலம் லீவு தரமுடியாது. என மறுத்துவிட்டார். அது சாதாரண காய்ச்சல் தான் ஊசி போடத் தேவையில்லை அந்த

மருந்தைப் போடு, அந்த இலையைக் அவிச்சுக்குடி" என்று கூறினாரே தவிர லீவு தருவதாக இல்லை.

கண்மணியும் என்னதான் செய்வாள். அவரை விட்டு வேறு இடத்தில் வேலை செய்தாலும் ஒழுங்காக சம்பளம் கிடைப்பதில்லை. அவளுக்கு என்ன முடிவெடுப்பது என்று தெரியவில்லை அவரின் அனுமதியை மீறினால் வேலை போகும். வேலை போனால் பட்டினிதான். அக்குடும்பத்தில் உழைப்பதற்கு உள்ள ஒரே ஜீவன் அவள்தான்.

முடிவெடுக்கத் தெரியாமல் திகைத்தாள். மகளுக்கு கால் வீங்கியதுடன் வலி, காய்ச்சலும் அதிகரிக்கத் தொடங்கின. செட்டியார் நாளை இலவச வைத்தியசாலை திறக்கப் போவதாக அறிந்த அவள் அவரை அறியாமல் மகளை வைத்தியசாலைக்கு கூட்டிச் செல்லத் திட்டமிட்டாள்.

மறுநாள் காலை தனது இலவச வைத்தியசாலையைத் திறக்க ஏ.சி காரில் புறப்பட்டார் செட்டியார். மகளை வைத்தியசாலைக்கு கொண்டுபோக வந்த கண்மணி அவளது வெற்றுடலைத் தான் கொண்டு சென்றது என்பதை வைத்தியசாலை செல்லு மட்டும் அறியாள்.

❀ ❀ ❀

# எது கவிதை?

நா. கபிலன்

(10A)

"இனிமைத் தமிழ் மொழி எமக்கு இன்பம் தரும்படி வாய்த்த நல்லமுது. கனியைப் பிழிந்திட்ட சாறு. எங்கள் கதியில் உயர்ந்திட யாம் பெற்ற பேறு. தனிமைச் சுவையுள்ள சொல்லை, எங்கள் தமிழினம் வேறெங்கும் கண்டதில்லை. யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்." என்ற புகழாரங்களைத் தனக்கே உரிமையாக்கிய எம் தமிழ் மொழியில் கவிதையின் அழகு தனியழகாகக் காணப்படுகின்றது.

பா, பாடல், கவிதை, செய்யுள் Poem, Poetry என்ற சொற்கள் ஆரம்ப காலத்தில் இலக்கிய வடிவங்களைக் குறித்து நின்றது. அதன்பின் பாடல் வடிவங்களைக் குறிக்கலாயிற்று. இன்று பா, பாடல் என்ற சொற்களே கவிதையெனக் கொள்ளப்படுகின்றது. ஆனாலும் கவிதை என்ற சொல், பழந்தமிழ் இலக்கியமாகிய பரிபாடலில் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

கவிதை என்பதற்கு அடிச்சொல் கவி - இது வடமொழிச் சொல். உள்நோக்கி பார்த்தல் எனப்பொருள் கொள்ளப்படுகின்றது. மற்றவர் கண்களுக்குப் படாதது கவிஞர்களுக்குப்படும். இங்கு அறிவைப் பார்க்கிலும் உணர்வு முக்கியமாகின்றது.

"சுவை புதிது, பொருள் புதிது
சொல் புதிது சோதி மிக்க
நவ கவிதை எந்நாளும் அழியாத மகா கவிதை"

என்றான் பாரதி.

கவிதை என்றால் யாப்பு வடிவத்துக்கு அப்பாலான கவித்துவம் இதனை பாரதியின் கவிதை வரிகளில் காணலாம்.

"காற்றே வா மகரந்தத்துள்களைச் சுமந்து கொண்டுவா" நமக்கு தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல் இமைப்பொழுதும் சோராது இருத்தல்" என்ற வரிகள் சான்றாகின்றன. கவிதையின் தலைசிறந்த பண்பு, அதன் விடயப் பொருள் விளக்கங்களிலும் பார்க்க ஞானத் திரளாக அமைவது

"தோற்றேன் என நீ உணர்ந்திடும் பொழுதினில் வென்றாய்"

என்பதன் மூலம் காணலாம்.

கவிதை கலைகளின் அரசி என்பர். அது கவின் கலைகளுள் ஒன்று. ஓவியம் நீளம், அகலம் என்ற இரு பரிணாமம் கொண்டது. சிற்பம் நீளம், அகலம், ஆழம் என்ற முப்பரிமாணம் உடையது. நடனம் இம்மூன்றுடனும் அசைவும் சேர்ந்து நாற்பரிமாணம் உடையது. இசை ஸ, ரி, க, ம, ப, த, நி எனும் ஏழு பரிமாணம் உடையது. ஓவியத்துக்கு ஊடகம் வர்ணம்; சிறபத்துக்கு ஊடகம் கல், மரம், மண். இசைக்கு ஊடகம் ஒலி; நடனத்துக்கு ஊடகம் உடல்; கவிதைக்கு ஊடகம் மொழி. மொழியின் சாத்தியப்பாடுகளுக்கு எல்லை இல்லை. கவிதை உயர்ந்து நிற்பதற்கு இப் பண்பே காரணம்.

கவிதை மிகத் தொன்மையான கலை. இருக்குவேத இந்தியன், பண்டைய கிரேக்கன், ஆபிரிக்க ஆதி மனிதன் எல்லோரும் கவிதை பாடினர். ஆக பாமரனுக்கும் படித்தவனுக்கும் கைவந்த கலை கவிதை. இது ஓசையோடு பிரிக்க முடியாதது. "ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ" என்றான் கவி பாரதி. புதுவையில் ஒருநாள் நல்ல மழை, காற்று, மின்னல், இடிமுழக்கம். பார்க்கின்றான் கவிஞன். இவற்றுக்கு இடையில் லயம் இருப்பதைக் கண்டான். பிறந்தது கவிதை.

"திக்குகள் எட்டும் சிதறி - தக்கத் தீம்தரிகிட தீம்தரிகிட, தீம்தரிகிட தீம்தரிகிட,
பக்க மலைகள் உடைந்து வெள்ளம் பாயுது பாயுது பாயுது ..........

கவிதையின் தலையாய பண்பு குறிப்பால் உணர்த்தல். ஒன்றை நேரிடையாகச் சொல்வதைவிட குறிப்பாகச் சொல்வது அதிக தாக்கத்தை ஏற்படுத்தும். பாரி என்ற தமிழ் மன்னனைப் பாராட்டாதவர் எவரும் இல்லை. ஆனால் கபிலர் என்ற புலவர் என்ன செய்தார்?

"பாரி பாரி என்று பல ஏத்தி,
ஒருவர் புகழ்வர் செந்நாப்புலவர்,
பாரி ஒருவனோ அல்லன்,
மாரியும் உண்டு ஈண்டுலகு புரப்பதுவே"

இதில் என்ன புதுமை? பாரியைப் பற்றி மற்றவர்கள் சொன்னதை மறுப்பது போன்றுள்ளது. ஆனால் மறைமுகமாக கபிலர் பாரிக்கு மாரியைவிட வேறெதுவும் இணையாக முடியாது எனப் புகழ்ந்துரைக்கிறார்.

பல பரிமாணம் கொண்டது கவிதை. உரைநடைக்கு இல்லாத வாய்ப்பு இதற்குள்ளது. பல தளங்களில் தொழிற்படவல்லது.

"நான் நீயல்ல ஆனால் நான் நானாக இருப்பதற்கு நீ ஒரு சந்தர்ப்பம் தருகிறாய் இல்லை" இக்கவிதை ஆபிரிக்கன் தன்னை அடிமைப்படுத்திய மேற்குலகிற்கு கூறுவதாக, கறுப்பன் வெள்ளையனுக்கு கூறுவதாக, ஒடுக்கப்பட்டவன் ஒடுக்குவோனுக்கு கூறுவதாகப் பல பொருள்களில் வந்து செல்லும்.

மொழியின் உச்சம் கவிதை. மொழியின் நெளிவு, சுழிவுகளை அறிந்து அவற்றைப் பயன்படுத்த வல்லவனே நல்ல கவிஞன். சொல் வைக்கப்பட்டிருக்கும் இடத்தைப் பொறுத்து அது ஆற்றலும் வேகமும் அடைகின்றது.

"பூவலைத் தோண்டிப் புதுக்குடத்தைத் தான் நிறுத்தி, ஆரம் விழுந்த கிளி அள்ளுது கா நல்ல தண்ணி"

கவிதை மொழி சாதாரண மொழியினின்றும் வேறுபட்டது.

"காற்றிலேறி அவ் விண்ணையும் சாடுவோம்,
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே"

காற்றில் ஏற முடியுமா? என யாரும் கேட்பதில்லை. இது கவிதையின் வெற்றி. கவிதை வாசகனைப் பற்றிக் கொள்ள வேண்டுமாயின், பரீட்சையமானதொன்று கொண்டு புதிய தொன்றை அவன் மனதில் பதிய வைக்க வேண்டும்.

அத்தினாபுரத்தில் துரியோதனனால் நிர்மாணிக்கப்பட்ட அழகிய மண்டபம் ஒன்று. நாம் காணாதது அத்தகைய உன்னதமானது ஆனால் கவி பாரதி காட்டுகின்றான். தன் கவிதையில் மண்டபத்தினை.

"வல்லவனாக்கிய சித்திரம் போலும்
வண்மைக் கவிஞர் கனவினைப் போலும்
நல்ல தொழிலுணர்ந்தோர் செயல் என்றே
நாடு முழுவதும் புகழ்ச்சிகள் கூற
கல்லையும் மண்ணையும் பொன்னையும் கொண்டு
காமர் மணிகள் சில சில சேர்த்து
சொல்லை இசைத்து பிறர் செய்யுமாறு
சுந்தரமாய் ஒரு காப்பியம் செய்தார்"

உவமை, உருவகம் கொண்டு படைப்பது கவிதைக்கு அழகு.

ஏலம் கராம்பே உன்னை என்ன சொல்லிக் கூப்பிடட்டும்"

எனவே, இத்தகைய சிறப்புமிக்க உயிர்த் துடிப்புடன் விளங்கும் கவிதைகளை ரசிக்க முடியாத கேட்க முடியாத, அதற்காக நேரமோ நாட்டமோ இல்லாத இன்றைய

தலைமுறை, உணர்வுகளை இழந்த தலைமுறையாக நலிந்து விடும்; நசிந்து விடும். எனவே அழகு மிகு கவிதையை நேசிக்கக் கற்றுக்கொள்வோம்.

"யாப்புடைத்த கவிதை. அணையுடைத்த காவிரி
யாப்பற்ற கவிதை் இயற்கை எழில் இருக்க
செயற்கையணி எதற்கென்று
உடையுடன் ஒப்பனையும் நீக்கிவிட்ட கன்னி"

இது கவிதைக்கு சி.மணி அவர்கள் கொடுத்த விளக்கம்.

"இலக்கணச் செங்கோல்
யாப்புச் சிம்மாசனம்
எதுகை பல்லக்கு
மோனைத் தேர்கள்
தனிமொழிச் சேனை
பண்டித பவனி"

இது மு.மேத்தாவின் கவி வரிகள்.

❀ ❀ ❀

# எனக்குப் பெருமை

ஜெ. மதுரங்கன் (7C)

எனது கல்லூரிக்கு இன்று வயது என்ன தெரியுமா? 195 வயது. ஈழத்தின் வடபால் மரச்சோலைகள் நிறைந்த, அக்கம்பக்கத்தே குடிமனைகள் அற்ற, ஓரிரு கடைகளை நிறைய காக்கிச் சட்டைக்காரர் நடமாடும் நான்கு தெருக்கள் ஒன்றுபடும் சந்தியில் தெல்லிப்பழை எனும் கிராமத்தில் தன்னகத்தே நீண்ட வரலாற்றைக் கொண்ட வேம்பு, மலைவேம்பு, புளி எனப் பல மரங்கள் தாங்கி வடபால் அன்னை புவனேஸ்வரியும் தென்பால் அன்னை மரியாளும் அருள்பாலிக்கும் கோயில் கொண்டு, கம்பீரமாய்க் காட்சி தருகிறது.

தரம் ஆறு தொடக்கம் தரம் பதின்மூன்று வரை வகுப்புகளைக் கொண்டு, கண்டிப்புடன் கூடிய அன்பான அதிபரை, எம்மை அரவணைத்து அறிவை, திறனை, மனப்பாங்கைப் பெற்றுத் தரும், பெற்றோராய்த் தாங்கி நிற்கும் ஏணிப்படிகளாய் உதவிடும் அன்பான ஆசிரியர்களை கொண்ட என் கல்லூரி இன்று தன் அகவை 195ஐ கொண்டாடி நிற்பது கண்டு பேருவகையடைகின்றேன்.

நான், இக்கல்லூரி பற்றிக் கேட்டதுண்டு, பத்திரிகையில் பார்த்ததுண்டு. 2010 தை மாதம் இக் கல்லூரியில் என்னை இணைத்துக் கொண்டேன். இதுவரை பெறாத பலதை என்னால் இங்கு பெற்றுக் கொள்ள முடிந்தது. பாடசாலைக்கு ஒழுங்கான வரவு, நேரத்திற்கு வருகை தரல் எமக்கென வழங்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றல், தூய்மை

பேணல், சீருடையில் கவனம், அமைதி பேணல், வளங்களைப் பாதுகாத்தல், வரிசையாகச் செல்லுதல், பணிவு, விட்டுக் கொடுப்பு, பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கக் கற்றுக்கொடுத்தல் போன்ற இன்னும் பல நல்ல வழிகாட்டும் செயற்பாடுகளை நான் கற்றுக் கொண்டேன்.

விளையாட்டுத் துறையில் எனது சகோதர மாணவர்கள் தேசியம், சர்வதேசம் வரை சென்று தம் திறமைகளை வெளிக்காட்டி கல்லூரிக்குப் பெருமை சேர்த்து வருவது கண்டும் பெருமகிழ்வு எனக்கு.

இன்று கல்லூரித் தாய்க்கு பெருமை சேர்த்த மாணவர்கள் கௌரவிக்கப்படுவது கண்டு ஆனந்தமடைகிறேன். நானும் முயன்று கௌரவம் பெற வேண்டும் என்ற பேரவா என்னுள் வளர்ந்து வருகிறது. இன்னும் ஐந்து வருடங்களில் இரு நூற்றாண்டைக் காணவுள்ளது எம் கல்லூரி.

இத்தகைய நீண்டகால வரலாற்றுப் பெருமை மிக்க இக் கல்லூரியில் நான் கல்வி கற்பதை என்றும் பெருமையாக நினைக்கின்றேன். நானும் என்னாலான முயற்சிகள் செய்து கல்லூரிக்குப் பெருமை சேர்ப்பேன்.

# சிறுவர்களே எம்நாட்டின் சொத்துக்கள்

**சி. தனுராஜ் (10A)**

எமது நாடான இலங்கை ஒரு தீவாகும். மிகவும் அழகிய பல பிரதேசங்களை உள்ளடக்கியதாக உள்ள இலங்கையிலே அபிவிருத்தி என்பது தரங்குறைவாகவே காணப்பட்டது என்றாலும் வளர்ந்துவரும் இளம் சமுதாயத்தின் அக்கறையும், அரசின் ஆலோசனைகளும் இப்போது இலங்கையை துணிச்சலுடன் அபிவிருத்திப்போக்கில் இட்டுச் செல்கிறது. அதே போன்றேதான் இனிவரும் காலங்களிலும் அந்தநிலை மாறாது பேணவேண்டுமாயின் எம் சிறார்களை எம் நாட்டுக்காய் கல்வி கற்க விடுவது சிறந்ததே. கல்விதான் அவரிடையே ஒவ்வொரு நோக்கையும், எண்ணங்களையும் தூண்டக்கூடியது.

"இலங்கைத் திருநாட்டை சிங்கப்பூராக மாற்றுவேன்" என்று பாராளுமன்ற தேர்தல் காலங்களில் கோசம் எழுப்பிய முஸ்லீம் இளைஞன், தன் வாக்கு இன்று ஓரளவேனும் சாத்தியமாயிற்று. அவ்வாறு இளம் யுவதிகள், இளைஞர் நினைக்கும்போது இலங்கை ஜப்பான் ஆவதும் சாத்தியமாகும். இதனை நிருபிக்கவே சிறார்களின் எதிர்காலத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்களுக்கு கல்வியோடு சில பொதுவாழ்க்கைப் பண்புகளையும் வளர்த்துவிட வேண்டும். அப்போதுதான் அச்சிறுவனோ, சிறுமியோ சமூகத்தில் எதிர்காலத்தில் தாழ்வுப்பண்பு இல்லாமல் சுமுகமாய் வாழக்கூடும்.

நாம் தற்காலத்தில் செய்யும் மிகப் பெரிய தப்பே சிறுவர்களைப் படிக்க விடாது வேலைக்குப் அனுப்புதல் தான். ஏனென்றால் அவர்கள் படிப்பதன் ஊடாகத்தான் அறிவியலையும், சமூகவியலையும் அறிகின்றனர். தற்சமயம் இலங்கையில் கல்வியறிவு வீதம் குறைவடைந்த வண்ணம் வருகின்றது. 1996ம் ஆண்டளவில் கணிப்பு செய்யப்பட்ட கல்வியறிவு மட்டத்திலே இலங்கை முன்னணியில் காணப்பட்டது என்றாலும் கூட தற்சமயம் அது குறைவடைந்த வண்ணம் செல்கிறது. இதனைத் தடுக்க ஒவ்வொரு சிறாரின் பெற்றோரும் தம் பிள்ளைக்கு கல்விக்குத் தடையாக இருக்காது அவர்களை பாடசாலைக்கு அனுப்பி இலங்கையின் பிரஜையாக அவர்களை மாற்ற வேண்டும். அதுவே ஒவ்வொரு பெற்றோரதும், பாடசாலை ஆசிரியர்களதும் கடமையும், பொறுப்பும் ஆகும். எனவே சிறுவர்களான நாமும் அதற்காக முயற்சித்தல் வேண்டும். சிறுவர்களான நாம் ஒன்றுபட்டால் தான் இத் தேசத்தை மேலும் கட்டியெழுப்ப முடியும் என்பது உறுதியானது.

அடுத்ததாக சிறுவர்களை கல்வி கற்க விடாது மன உளைச்சலுக்கு ஆளாகுவதற்கு மிகமுக்கியமாக இருப்பது சிறுவர் துஸ்பிரயோகம் என்பது தான். இவ்வாறானது துஷ்பிரயோகங்களை தடுப்பதன் மூலமாக எதிர்கால சிறுவர்களை நாட்டில் விசேடப்படுத்தப் பட்டதாக மாற்ற முடியும். அதற்காக நாம் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தல், பாடசாலைக்கு செல்லாது தடுத்தல், சிறுவர்களுக்கு மதுபான, புகைத்தல் பழக்கங்களை கூறுதல் போன்ற சிறுவர் துஸ்பிரயோகங்களை மேற்கொள்ளும் அனைவரையும் கைது செய்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போது தான் தற்கால சமூகமும், எதிர்கால சமூகமும் சிறப்படையும்.

"இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" என்று கூறுவதுண்டு. அப்படிப்பட்ட மெய்வாக்கிற்கிணங்க அன்று பத்திரிகை விற்று பணம் உழைத்து அப்துல்கலாம் மேதையாக இந்திய தலைவராகினார்.

அதுபோல கறுப் பினத்திலே கஸ்டப்பட்டு முன்னேறி இப்போது அமெரிக்க வெள்ளை மாளிகையில் கால் பதித்து ஒபாமா தலைவரானார். அதே போன்றுதான் இலங்கையை எடுத்துக் கொண்டாலும் எம் நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விவசாயக் குடும்பத்தில் பிறந்து சிறுவனாக கற்று இன்று பல பட்டங்களையும், விருதுகளையும் பெற்றவர் ஆவார். இவ்வாறு அரசியல் ரீதியில் தேசம் போற்றும் பல சிறுவர்கள் தலைவர்கள் ஆனதுண்டு. என்றாலும் இசைத் துறையிலே சிறுவனாக இருக்கும் போது கூலி வேலைத்தளத்தில் தன் தந்தையிடம் வந்திருந்த உடைந்த வயலினை வாசித்த ஏ.ஆர் ரஹ்மான் இன்று இந்தியா மட்டுமல்லாது உலகம் பூராகவும் பேசும் வகையில் ஒஸ்கார் விருது நாயகனாக மாறினார். இதற்குக் காரணம் அவர்கள் சிறுவர்களாக இருக்கும்போது பட்ட கஸ்டங்களும், துன்பங்களும் ஆகும். இதே போன்றுதான் இலங்கையிலுள்ள அனைத்து இளஞ்சிறார்களும் தாம் சிறு வயதிலே படுகின்ற கஸ்டங்களை அறிந்து அதன்வழி கல்வி கற்றால் இத் தேசத்தைக் கட்டியெழுப்புவதுடன், உலகளாவிய ரீதியில் தேசத்தை முன்னணியில் இட்டுச் செல்ல வழிகோலும்.

நிறைவாக சிறுவர்களால் மட்டுமே எதிர்கால தேசத்தையும், சமுதாயத்தையும் காக்க முடியுமென்பது உறுதியானது. சிறுவர்களை கல்வி கற்க விடாது துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்துவதாலும், சிறந்த கல்வி இல்லாமையாலும் தான் சிறுவர்கள் எல்லாம் இழிவான நிலைக்கு உள்ளாகின்றனர். அதாவது இனி மேலாவது சிறுவர்களை வேலைக்கு அமர்த்தாது, துன்புறுத்தாது இருப் போமாயின் நாம் சிறுவர்களின் மூலமாக எம் தேசத்தை கட்டியெழுப்ப முடியும். எனவே, இன்றைய சமுதாய நண்பர்களே, நீங்கள் எல்லோரும் எம் எதிர்காலத்தை சற்று நினைத்துப் பாருங்கள் நாம் வாழந்தது போதும்; இனிமேல் எம் எதிர்கால சந்ததியினரே எம் நாட்டின் சொத்துக்கள். ஆகவே அவர்களைத் தீய வழியில் கொண்டு நடத்தாது நல்ல வழிமுறைகளைக் கூறி வழிப்படுத்தினால் இலங்கைத் திருநாடு பொருளா தாரத்திலும், அபிவிருத்தியிலும் சிகரம் தொட முடியுமென்பது நம்பிக்கையான விடயமாகும். எனவே, சிறுவர்களைப் பயிலவிடுவோம்; எம் தேசத்தைக் கட்டி யெழுப்புவோம்.

"கல்வியெனும் ஒன்றே தேசம் - அதில்
சிறுவர்களே நம் நாட்டின்
சொத்துக்கள்"

❀ ❀ ❀

# புவி வெப்பமடைதல்

**இ. சுகன்யா**
**2012 கலைப்பிரிவு**

மனிதனின் சில தவறான நடவடிக்கைகள் காரணமாக வளிமண்டலத்தில் சேரும் $CO_2$, $N_2O$ உட்பட பச்சைவீட்டு வாயுக்களான காபன், நீராவி, மெதேன், நைத்திரிக்ஒட்சைட், குளோரோபுளோரோகாபன், ஓசோன் என்பவற்றின் அளவு படிப்படியாக அதிகரிப்பதால் புவியின் வெப்பம் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்றது. இதனால் வழமைக்கு மாறாகக் காலநிலையில் மாற்றங்கள் ஏற்படுகின்றது. இதனால் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உண்டாகின்றன. இத்தகைய அழிவிற்கு பெரிதும் காரணமாக இருப்பவன் மனிதனே! மனித செயற்பாட்டின் காரணமாக வளிமண்டலத்தில் சேரும் பச்சைவீட்டு வாயுக்களின் அதிகரிப்பே புவி வெப்பமடைவதற்கு பெரிதும் காரணமாக அமைகிறது என காலநிலை மாற்றத்திற்கான சர்வதேச அரசகுழுவின் (IPCC) 2001ஆம் ஆண்டு மதிப்பீட்டில் தெரிவிக்கப்படுகிறது.

20ம் நூற்றாண்டிற்குள் புவி வெப்பம் $0.6^0C$ ஆல் அதிகரித்துள்ளது. இது இந்த நூற்றாண்டின் முடிவில் $1^0C$ ஆல் கூடும் என எதிர் பார்க்கப்படுகின்றது. மனிதனின் தேவைகள் அதிகமாகின்றபோது அவனது செயற்பாடுகள் அதிகரிக்கிறது. மனிதன் தனது

தேவைகளின் நிமித்தம் செய்யும் செயற்பாடுகள் புவிக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது. இதன் விளைவாக ஏற்படும் தாக்கம் மறுதாக்கமாக மனிதனிற்கு வந்தடைகிறது. இதனால் மனிதன் பல இடர்களை சந்திக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிறது.

இப் புவியானது வெப்பமடைவதால் மனிதனும் ஏனைய உயிரினங்களும் பாரிய அழிவை எதிர்கொள்கிறது. துருவப் பிரதேசங்களில் பனிமலைகள் உருகுதல் மற்றும் மலை உச்சிகளில் பனிக்கட்டி உருகுதல் என்பன ஏற்படுகின்றன. இதனால் அங்கு வாழும் உயிரினங்கள் அழிவை எதிர்நோக்குகின்றன. அதுமட்டுமன்றி இப்பனிமலை உருகுவதால் 2100ம் ஆண்டில் சமுத்திர நீர் மட்டம் 20m - 60m வரை உயரக்கூடிய சாத்தியம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் ஆறுகளில் உவர் நீர் உட்புகும் தன்மையானது காணப்படுகிறது. அதோடு சமுத்திர நீர் மட்டம் உயர்வதால் சமுத்திர நீரோட்டம் திசைமாறி ஓடக்கூடிய சூழ்நிலை உருவாகிறது. மலையுச்சிகளில் உள்ள பனிக்கட்டி உருகுவதால் ஆறுகளின் நீர் வளம் குறைவடைகிறது.

உருகும் பனிமலையானது சமுத்திரப் பகுதியில் வந்து கலப்பதால் சமுத்திர நீர்மட்டம் அதிகரிக்கிறது. இதனால் பவளப் பாறைகள் அழிவிற்குள்ளாகிறது. இதன் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்து அந்நியச் செலாவணியில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. பவளப் பாறைகள் அழிவடைவதால் கடல்வாழ் உயிரினங்கள் அழிவிற்குள்ளாகிறது. இதன் காரணமாக மீன்பிடித் துறை வீழ்ச்சியடையக்கூடியநிலை உருவாகிறது. அதோடு கரையோரம் மாசடைகிறது. இதனால் புறச்சூழல் பாதிக்கப்படுகிறது.

சமுத்திர நீர் மட்டம் அதிகரிப்பதால் சமுத்திரத்தில் வெப்பமாற்றம் நிகழ்கிறது. இதனால் தாழமுக்கம் அதிகரித்து சூறாவளி ஏற்பட வாய்ப்புக்கள் உண்டாகின்றன. அத்தோடு புவி வெப்பமடைவதால் பாதிப்படையும் மற்றொரு துறை விவசாயமாகும். இவ் விவசாயத்துறை பாதிப்பதால் மக்கள் பெரும் இடரை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அதாவது அதிக வெப்பத்தால் வறட்சி நிலை உருவாகிறது. இதனால் நீர்ப்பஞ்சம், உணவுப்பஞ்சம் என்பன ஏற்படுகின்றன. இதன்போது பெருந்தொகையான மக்கள் உயிரை இழக்க வேண்டிய நிலை உருவாகின்றது. அதுமட்டுமன்றி தமது சொத்துக்கள், உடைமைகள் என்பவற்றை இழக்க நேரிடுகிறது.

புவி வெப்பம் அதிகரிப்பதால் காலநிலையில் பெரு மாற்றத்தை ஏற்படுத்துகிறது. வறட்சிக்கு மாறாக வெள்ளப்பெருக்கு, சுனாமி ஏற்படும் நிலைமையும் வறட்சிக் காலத்தில் கடல் நீரானது ஆற்றுப் படுக்கை வழியாக நிலப்பகுதியை நோக்கி பெருக்கெடுத்தல் போன்ற பிரச்சினைகளும் சுனாமி, வெள்ளப்பெருக்கு போன்ற அனர்த்தங்களால் பொருளாதாரம் மற்றும் சுகாதார சீர்கேடுகளுடன், நோய்பரவல் ,நோய்த்தாக்கம் என்பனவும் ஏற்படுகிறது.

புவி வெப்பம் அதிகரிப்பதால் ஏற்படும் மற்றோர் பிரச்சினை பாலைவனமாதல். ஆபிரிக்காவின் சகாராப் பாலைவனத்தை அண்மிய சாகேல் வலயத்தில் சிறப்பாகவும் வேறு சில இடங்களிலும் அடையாளம் காணப்பட்டுள்ளது. எதியோப்பியா, சோமாலியா,

சூடான், உகண்டா, மலாவி, ஆகிய நாடுகளில் குடித்தொகைப்பெருக்கம் அதிகரிக்க மக்களின் தேவை அதிகரிக்கிறது. இதனால் வளமற்ற வெப்பவலயப் புல்வெளிகளில் கால்நடை வளர்ப்பிற்கு மக்கள் தூண்டப்பட்டதுடன் விறகுத் தேவைக்கு வளமற்ற சிறு காட்டுமரங்களை அழித்தனர். ஏற்கனவே மழைவீழ்ச்சி இவ்வலயத்தில் குறைவாகக் காணப்பட்டதால் அதோடு இணைந்து மனித நடவடிக்கையும் தொடர வறட்சிக்கு இட்டுச் சென்றன. சகாராப் பாலைவனம் அதன் எல்லையை அண்டி 3Km - 4Km வரை அதிகரித்துச் செல்வதால் பாலைநிலம் பெருகுதல் அதிகரிக்கிறது.

எனவே இப் பாதிப்புக்களில் இருந்து பாதுகாக்க மக்களாகிய நாமே விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். வறட்சி ஏற்படுகின்றபோது வறட்சிக் காலத்திற்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய பயிர்களை அறிமுகப்படுத்தி அதனைப் பயன்படுத்தல் அத்துடன் காலநிலை மாற்றத்திற்கேற்ப விவசாயத்தை மேற்கொள்ளல் என்பன பற்றி விவசாயிகளுக்கு விழிப்பூட்டல் அதோடு ஏனைய அனர்த்தங்களில் இருந்தும் எம்மைப் பாதுகாக்க நாம் முன்னோடியாகச் செயற்படுவதோடு புவி வெப்பமடைவதைக் கட்டுப்படுத்த மக்களாகிய நாம் எம்மாலான முயற்சிகளைச் செய்து எமது புவியை நாம் பாதுகாப்போமாக.

# பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் தமிழ்ப்பணி.

சொ.தருமதன்
2012 கலை

ஈழத்திலே மொழியில் ஆய்வு முன்னோடிகளில் ஒருவராக திகழ்ந்த பேராசிரியர்.க.கணபதிப்பிள்ளை அவர்கள் தொன்மையும் மேன்மையும் கொண்ட கல்விப் பாரம்பரியம் மிக்க பருத்தித்துறை பிரதேசத்திலே புலோலி கிழக்கில் 02.07.1903ம் ஆண்டு வைத்தியர் கந்தசாமிப்பிள்ளை தங்கம்மா தம்பதியினருக்கு ஏக புதல்வனாகப் பிறந்தார். இவருடன் கூடவே மூன்று பெண் சகோதரிகளும் இருந்தனர். இவர் சிறுவனாக இருந்த காலத்திலேயே கல்வியில் அதிகம் ஆர்வம் உள்ளவராக விளங்கினார்.

இவருக்கு இளம் பராயத்திலே மரபு நிலைக் கல்வியைக் கற்பதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. தனது சொந்த இடத்திலே உள்ள தும்பளை கிராமத்திலே வாழ்ந்த முத்துக் குமாரசுவாமி குருக்களிடம் வடமொழியையும் தமிழையும் சிறப்பாகக் கற்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. தொடர்ந்து தனது உயர் நிலைக் கல்வியை பருத்தித்துறையிலே புகழ்பெற்ற காட்லிக் கல்லூரியிலும் கலைமாணிப் பட்டக் கல்வியை கொழும்புப் பல்கலைக் கல்லூரியிலும் கற்றார்.

இளமைக் காலத்திலே வடமொழி, தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை நன்கறிந்திருந்தமையால் இவர் பல்கலைக் கல்லூரியில் தமிழ், வடமொழி, பாளி ஆகிய மொழிகளைக் கற்று கலைமாணிப் பட்டத்தினைப் பெற்றார். அத்தோடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே

தமிழ் மொழியில் வித்துவான் பட்டத்தினையும், இலண்டன் பல்கலைக் கழகக் கீழைத்தேய, ஆபிரிக்க ஆய்வுப் பள்ளியில் கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார்.

இவரது பல்கலைக் கழக ஆய்வுப் பயிற்சிக்கு அக்காலத்தில் வாழ்ந்த தலை சிறந்த அறிஞர்கள் வழி காட்டினார்கள். பாளி சமஸ்கிருத அறிஞர்களான ஜி.பி. மாலசேகரா, நம்புக்வெல்ல சித்தாத்தர் ஆகியோரும் தமிழறிஞர்களான சுவாமி விபுலானந்தர், சோழவந்தான் சி.கந்தசாமிப் பிள்ளை, ரா.பி. சேதுப்பிள்ளை ஆகியோரும் கீழைத்தேய ஆய்வியல் வல்லுநர்களான பேராசிரியர்கள் ரேணர், பாணெற் ஆகியோரும் இவரின் ஆய்வுகளை மேற்பார்வை செய்தனர் பல அறிஞர்களின் கண்காணிப்பின் கீழ் புலமையை வளர்த்த பெரும் பாக்கியம் இவருக்குக் கிடைத்தது.

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்கள் 1936 தொடக்கம் 1947 வரை பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றினார். இவர் பன்மொழிப் புலமையாளராக இருந்த காரணத்தினால் 1947ல் சுவாமி விபுலானந்தரின் மறைவுக்கு பின் தமிழ்த்துறைப் பேராசிரியராக நியமனம் பெற்றார். இப்பல்கலைக் கழகத்திலே "கல்வெட்டியல்" என்ற பாடத்தினை அறிமுகம் செய்த இவர் பேராசிரியர்களான ஆ.சதாசிவம், கா.இந்திரபாலா, ஆ.வேலுப்பிள்ளை, கலாநிதி.சா. தனஞ்செயராசசிங்கம் போன்ற பலரை கல்வெட்டு ஆராய்சியில் ஈடுபடுத்தி வெற்றியும் கண்டார். இவர் உருவாக்கிய தமிழ்க் கல்வெட்டு ஆராய்ச்சி ஆர்வம் இன்றும் ஈழத்திலே சுடர்விட்டு ஒளிர்கின்றது. பேராசிரியர் அவர்கள் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கலாநிதி சேனரத் பரணவித்தானாவுடன் இணைந்து பல கல்வெட்டு ஆய்வுகளை மேற்கொண்டு பல தொல்லியல் உண்மைகளை வெளிக் கொணர்ந்தார். இவர் தமது சாசன அறிவையும் மொழியறிவையும் பயன்படுத்தி ஏழாம், எட்டாம் நூற்றாண்டுக்குரிய தமிழ்ச் சாசனங்களின் இலக்கணத்தை ஆராய்ந்து அரிய நூல் ஒன்றினை எழுதினார். இந்நூலைப் பின்பற்றி பிற திராவிட மொழிச் சாசனங்களை ஆராய்ந்த வர்களும் இவரது முடிவுகளை மேற் கோள்களாகக் கொண்டு நூல்களை வெளியிட்டனர்.

இவர் கல்வெட்டாய்வியல் மட்டுமல்ல மொழி ஆய்வு, பேச்சு வழக்குத் தமிழ் ஒலியியல் ஆய்வு, ஈழத்தமிழர் வாழ்வியல் ஈழத்தமிழர் வரலாறு மற்றும் தமிழ் இலக்கிய வரலாறு போன்ற பல விடயங்களில் ஆய்வுகளை மேற் கொண்டவராவார். இவை தொடர்பாக பல கட்டுரைகளையும் நூல்களையும் வெளியிட்டார். இவர் 1956ம் ஆண்டு வெளியிட்ட "இலங்கை வாழ் தமிழர் வரலாறு" என்னும் நூல் யாழ்ப்பாண தமிழ் இராட்சியம் தொடர்பானது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பேராசான் அவர்கள் ஆய்வுத் துறையில் மட்டுமல்ல எழுத்துத் துறையிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். நாடகமே இவரது பிரதான ஆக்கத்துறை எனலாம். பேச்சு வழக்கிலே அமைந்த பல நாடகங்களை எழுதி பல்கலைக்கழக மாணவர்களின் நடிப்பாற்றல் மூலம் அரங்கேற்றி வெற்றி கண்டுள்ளார். நானா நாடகம் (1940) இரு நாடகம் (1952) எனும் நாடகத் தொகுதி நூல்களும் மாணிக்க

மாலை (1950) சங்கிலி (1956) எனும் வரலாற்று நாடகமும் பிரசுரிக் கப்பட்டுள்ளன. பேச்சு தமிழில் கொடிகட்டி பறந்த இவர் செந்தமிழிலே எழுதிய நாடகம் சங்கிலி ஆகும். மற்றும் சுந்தரம் எங்கே? (1955) துரோகிகள் (1956) ஆகியவை பிரசுரம் ஆகாத நாடகங்கள் ஆகும்.

பேராசிரியரின் உடையார் மிடுக்கு, சுந்தரம் எங்கே? துரோகிகள் போன்ற நாடகங்களில் பேராசிரியர்களான கா.சிவத்தம்பி, க.கைலாசபதி ஆகியோரும் தினகரன் பத்திரிகை முன்னாள் ஆசிரியர் திரு. சிவகுருநாதன் அவர்களும் பல்கலைக்கழக மாணவர் களாக இருந்த காலத்தில் நடித்து அரங்கில் இருந்தோரின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்கள். இவரது நாடகங்கள் பேராதனையில் மட்டுமல்ல கண்டி திருத்துவக் கல்லூரி, கொழும்பு லயன்வெனற் அரங்கு, யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபம், மட்டக்களப்பு பிரதேச அரங்குகளிலும் மேடை யேற்றப்பட்டன. இவரது பல நாடகங்களை பேராசிரியர் சு. வித்தியானந்தன் தயாரித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

1969ம் ஆண்டு தினகரன் நாடக விழா மலரில் "தமிழ் நாடக வளர்ச்சிக்கு திருப்பு முனை அமைத்த பேராசிரியருக்கு அஞ்சலி" என்ற தலையங்கத்தில் இவர் எழுதிய நாடகங்கள் பற்றிய பாராட்டுக் கட்டுரை இடம்பெற்றிருந்தமை பேராசிரியரின் திறமைக்குச் சான்றாகும். அது மட்டுமல்ல அண்மையில் யாழ்.பல்கலைகழக நாடகத்துறை மாணவர்கள் இவரது உடையார் மிடுக்கு நாடகத்தினை மீளவும் புதுப்பொலிவுடன் கைலாசபதி அரங்கில் மேடையேற்றியமை பேராசிரியரின் நாடகங்களின் மேன் மைக்கு சான்றாக அமைகின்றது.

இவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தனது பங்களிப்பினை ஆற்றியுள்ளார். இவரின் "ஈழத்து வாழ்வும் வளமும்" என்னும் நூல் தன்னிகரில்லாச் சிறப்புக்களைக் கொண்டு விளங்குகின்றது. மற்றும் நீர மங்கையர், பூஞ்சோலை, வாழ்க்கையின் வினோ தங்கள் போன்ற நாவல்களையும் எழுதியுள்ளார். இவர் ஒரு கவிதைக் களஞ்சியம் என்பதற்கு இவர் யாத்த "தூவுதும் மலரே" என்றும் கவிதைத் தொகுதி சான்றாகும். பேராசான் எழுதிய "காதலியாற்றுப்படை" புதிய முறையில் அமைந்த நூல் என்று கற்றோர் போற்றுவர். "தமிழிலுள்ள மற்றும் ஆற்றுப்படை நூல்களுக்கு இது சற்றேனும் இளைத்ததில்லை" என பேராசிரியர் சு. வித்தியானந்தன் தனது இலக்கியத் தென்றல் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் மிகப் பெரிய சாதனை இவர் தோற்றுவித்த புலமைப்பாரம்பரியமே. ஈழத்தில் கல்வெட்டியல், நாடகம், தமிழாய்வு போன்ற துறைகளில் இன்று முன்னணியில் நிற்கும் ஆய்வாளர்கள் இவரின் மாணவர்களும் அவர்களது சீடர்களுமே ஆவர். இவர்கள் பேராசிரியர் கொண்டிருந்த கண்ணோட்டங்களை மேற்கொள்பவர்களாகவும் விளங்கினார். பேராசிரியர்களான வித்தியானந்தன், கைலாசபதி, சிவத்தம்பி, வேலுப்பிள்ளை, பூலோகசிங்கம், தில்லைநாதன், சண்முகதாஸ், தனஞ்ஜெயராசாசிங்கம், இந்திரபாலா ஆகியோரும், கல்வி அதிகாரி திரு. தங்கராசா, ஊடகத்துறை ஆசான் திரு. ஆ. சிவநேச்செல்வன் மற்றும் அதிபர் திரு.த. சண்முகசுந்தரம்,

நாடக ஆசிரியர் அராலியூர் சுந்தரம் பிள்ளை ஆகியோரும் இவரது தலைசிறந்த மாணவர்களே. இவர்கள் பல்துறைகளிலும் பிரகாசித்துள்ளமை பேராசானின் திறமைக்கு சான்றாக அமைகின்றது.

இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கடமையாற்றிய காலத்தில் அங்கு தமிழ்ச் சங்கம் அமைப்பதற்கு முன்னோடியாக இருந்ததோடு 'இளங்கதிர்' சஞ்சிகை வெளியானதற்கும் கால்கோளாக விளங்கினார். அங்கு குறிஞ்சிக்குமரன் ஆலயத்தினை அமைப்பதில் அதிக ஈடுபாடு கொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். இவரது தமிழ்ப் புலமைக்குச் சான்றாக 1975களில் க.பொ.த.உயர்தர பரீடசைக்கு தமிழ்ப் பாடத்தில் 'சங்கிலி' நாடக நூல் இடம்பெற்றது. தற்போது புதிய தமிழ்ப் பாடத்திட்டத்தில் இவரது ஈழத்து வாழ்வும் வளமும் நூலிலிருந்து 'விஞ்ஞானமும் அகராதியும்' என்னும் கட்டுரையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதேவேளை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் இலக்கிய வழியில் இருந்து 'நகைப் பூங்கொத்து' கட்டுரையும் இடம் பெற்றுள்ளது. பேரரசிரியர் க. கணபதிப் பிள்ளை, பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை ஆகியோர் வேறு வேறு அறிஞர்கள் என்பதை தற்போதயை தமிழ் மாணவர் சமூகம் அறிந்து கொள்வதற்கு இது நல்ல வாய்ப்பாகவும் அமைந்துள்ளது.

பேராசிரியர் கணபதிப் பிள்ளையின் ஆக்கங்களை நிரைப் படுத்திய வித்துவான் சொக்கன் அவர்கள் தனது "பைந்தமிழ் வளர்த்த பதின்மர்" என்னும் நூலிலே இவரது தமிழ்ப் பணிகளை விதைந்துள்ளார். அதேவேளை முன்னாள் அதிபரும் தமிழாசானுமாகிய திரு.த. சண்முகசுந்தரம் அவர்கள் பேராசிரியரின் நினைவாக வெளியிட்டுள்ள "கலையருவி கணபதிப் பிள்ளை" என்னும் நூலில் தனது குருவாகிய இவரது பணியை நினைவு கூர்ந்துள்ளார்.

பல்கலைக் கழக ஆசானாகவும், மொழியியல் ஆய்வாளனாகவும், பண்பாட்டாய்வாளனாகவும், கல்வெட்டியல் ஆய்வாளனாகவும், கவிஞனாகவும், நாடக ஆசிரியனாகவும் சமுதாயச் சீர்திருத்த வாதியாகவும் விளங்கிய பேராசான் அவர்கள் 12.5.1968ல் இவ்வுலக வாழ்க்கையை நீத்தார். ஆனாலும் ஈழத்தில், தமிழ் கூறும் நல்லுலகில், திராவிடவியல் ஆராய்ச்சி யுலகில் என்றென்றும் நினைவழியாது வாழ்வார்.


உசாத்துணை நூல்கள்:

1. பேராசிரியர். சு. வித்தியானந்தன் - இலக்கியத் தென்றல்.
2. பேராசிரியர். க. கைலாசபதி - இலக்கியமும் திறனாய்வும்.
3. பேராசிரியர். கா. சிவத்தம்பி - மீள் பதிப்பு முன்னுரை - ஈழத்து வாழ்வும் வளமும்
4. த. சண்முகசுந்தரம் - கலையருவி கணபதிப்பிள்ளை.
5. இ. சிவானந்தன் - பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை எழுதிய பேச்சு வழக்கு நாடகங்கள் பெரும் பயனுள்ளவை. (வலம்புரி கட்டுரை. 10.07.2002)

# நான் பார்த்த நாணயக்கண்காட்சி

செ. பானுஜா ($9^B$)

நான் பார்த்த கண்காட்சிகளில் மிகவும் என் நெஞ்சைக் கவர்ந்த கண்காட்சி என்றால் அந்தநாணயக் கண்காட்சியே ஆகும். கடந்த 2011.09.26 அன்று எமது பாடசாலை நூலகத்தில் நடைபெற்ற நாணயக் கண்காட்சி இதில் எமது கண்களுக்கு மட்டுமல்ல கருத்துத் தகவல் பெற்றிடவும் உதவுகின்றது. நான் ஆர்வத்துடன் கலந்து கொண்டேன். என்னைப் போலவே எமது மாணவர்கள் பலரும் கண்காட்சியைப் பார்த்து ரசிப்பதற்கு வந்திருந்தார்கள்.

அக் கண்காட்சியானது விரிவுரையாளர் ஒருவரது தன்னார்வ முயற்சியில் முன்வைக்கபட்டது. இக் கண்காட்சி எமது பாடசாலைக்கு 606 ஆவதாக அதிபரின் அனுமதியுடன் பார்வைக்கு கொண்டுவரப்பட்டது. எமக்கு கிடைக்க முடியாத அரிதான நாணயக் கண்காட்சியைப் பார்வையிட்டேன். அங்கு பல நாடுகளின் பழைய நாணயங்கள் முதல் புதிய நாணயங்கள் வரை காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. நாங்கள் பார்வையிட்டுக் கொண்டிருக்கும் போதே பல வினாக்களைத் தொடுத்து எமது அறிவுக்கு விருந்தளித்தார். அவர் பல நாடுகளின் நாணயங்களை பல சிரமங்களிற்கும் மத்தியிலும் தேடிக் கொண்டு வந்து எமக்குக் காட்டியது பாராட்டப்பட வேண்டியது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலப் புழக்கத்திலிருந்த நாணயங்களும் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன. இந்நிகழ்வில் ஒரு செய்தி அறிவிக்கப்பட்டது. தன்னிடம் இல்லாத நாணயங்களை அவரிடம் கொடுத்தால் பணப்பரிசில்கள் கிடைக்கும் எனக் கூறினார். சில மாணவர்கள் தம்மிடம் இருந்த நாணயக்குற்றிகளைக் கொண்டு வந்து கொடுத்தனர். அந்நாணயங்கள் இருந்தமையால் அம்மாணவர்கள் ஏமாற்றமடைந்தனர். பழைய காலங்களில் ஆமைஓடு, மிருகங்களின்தோல், துணி, மடல், மட்டை என்பவற்றிலும் நாணயங்கள் செய்யபட்டிருந்தன. செப்பு, வெள்ளி போன்றவற்றால் செய்யப்பட்ட நாணயங்களும் காட்சிக்கு வைக்கபட்டிருந்தன.

காட்சியில் அவரால் எமக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களைக் கண்டு ஆச்சரியப்பட்டோம். புராதன கால நாணயங்களைச் சேகரிப்பதனால் ஏற்படும் நன்மைகளை இதன் மூலம் அறிந்தோம். பெறுமதியற்றவை என புழக்கத்தில் இல்லாத, தேடுவாரற்று இருக்கும் இந்நாணயங்களுக்கு இருக்கும் பெறுமதி சொல்லில் அடங்காது. புராதன கால அரை, கால், முக்கால் பெறுமதியுள்ள நாணயங்களையும் பார்வையிட்டோம். ஒவ்வொரு நாணயங்களும் கண்ணாடியால் அடைக்கபட்டு நூலால் தைத்து பாதுகாப்பான முறையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இது மட்டுமன்றி இலங்கையில் பாவனையிலுள்ள நாணயங்களும் வைக்கபட்டிருந்தன. நாணயத்தின் முன்புறமும், பின்புறமும் தெரியும் வண்ணம் காட்சிக்கு வைக்கப்பட்டது. இக்கண்காட்சியானது என்னையும் என் சார்ந்த மாணவர்களையும், கல்லூரிக் குடும்பத்தையும் கவரும் வண்ணம் இருந்தது. இவ்வாறு அத்தனி மனிதரின் கடும் உழைப்பால் சேகரிக்கப்பட்ட இந்நாணயங்களை அவர் தனிமையில் பாதுகாத்து வருகிறார். அனைத்து மாணவருக்கும் நன்மைபுரியும் வகையில் இருந்த இக்கண்காட்சி மிகவும் எளிமையாக நடத்தப்பட்டது.

## உயர்தரமாணவர் மன்றம் -2011



## கணித,விஞ்ஞான மன்றம் - 2011



## வணிக மன்றம்-2011





## சுகாதாரக்கழகம்-2011



## விசேட கல்வி அலகு-2011



## விழிப்புலன் வலுவிழந்த மாணவர்கள்-2011



# நூலகங்கள்

செ.நிலோஜினி (10A)

"கண்ணுடையர் என்போர் கற்போர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லாதவர்."

என்ற வள்ளுவர் வாய் மொழிப் பொருளை ஒப்புக்கொள்ளும் நிலை மலர்ந்து விட்டது. அவ்வாய்மொழி ஊனக்கண்ணினும் ஞானக்கண்ணே சிறந்தது என்ற கருத்தினை தெளிவுறக்காட்டுகின்றது. அதாவது கல்வி கற்று அறிவு படைத்தோர் "கண்ணுடையார் எனச் சிறப்பிக்கப்படுகின்ற அதேவேளை கல்லார் அறிவிலராய், ஊனக்கண்ணாலும் கண்டு கொள்ள முடியாமையால் "முகத்திரண்டு புண்ணுடையார்" என இகழப்படுகின்றனர். அறிவு வளர்ச்சிக்கு உபகாரப்படும் கல்வியின் சிறப்பையும், பயனையும் இது புலப்படுத்துகின்றது. இத்தகைய கல்வியைப் பெற்றுப் பயன் கொள்வதற்கு நூல்கள் பெரிதும் உதவி புரிகின்றன.

இன்றுள்ள உலகில் பல பல சாதனங்கள் காணப்பட்டாலும் கல்வி என்னும் தீபம் உலகில் ஏற்றப்பட்டதால் அன்று தொட்டு இன்றுவரை அதனை அணையவிடாது நெய்யிட்டு ஒளி காணச் செய்த பெருமை நூலகங்களுக்கே உண்டு. கல்வித்துறைகள் அனைத்தையும் திறம்பட அறிவிக்க வல்லவை நூல்களே. எனவே கல்விப் பெருஞ் செல்வத்தை உலகுக்கு வரையாது வழங்கும் வள்ளன்மை நூலகத்திற்கன்றி பிறிதெதற்கும் இல்லை.

நூலக நூல்களினால் மக்கள் காலங்காலமாக அளப்பரிய நற்பயன்கள் பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அவ்வகையில் அந்நற்பயன்களை மனிதனாலே தேடற் பாலனவாய் அமைவன நூலகங்களே.

காலத்திற்கு காலம் உலகிலே தோன்றிய அறிஞர்களின் சிந்தனைகள், தத்துவக்கோட்பாடுகள், அறிவியல் முடிவுகள், ஆய்வுகள் என்பவற்றை அறிந்திட இன்றும் நமக்கு நூலகங்களே துணை செய்கின்றன. "அறம், பொருள், இன்பம் வீடடைதல் நூற்பயனே" என்ற அடியிலிருந்து நாம் நூல்களின் முக்கியத்துவத்தை அறியலாம். இகவாழ்வுக்கும் பரவாழ்விற்கும் துணைபுரியும் வகையில் மனிதனின் பூரணவாழ்விற்கு வழிகாட்டியாய் நூல்கள் அமைகின்றன.

உலகப் பேரிலக்கியங்கள் யாவும் நூல் வடிவிலமைந்து கால வெள்ளத்தைக் கடந்து மக்களின் மனவுணர்வை வளர்க்க காரணமாகின்றன. இதனால் அவை காலத்துக்குக் காலம் மலர்ந்த அறிவுத்திரள்கை அழியாவண்ணம் பாதுகாத்து வைக்கும் களஞ்சியங்களாகும். அதாவது வேண்டியவர்கள் வேண்டிய நேரத்தில் வேண்டியவற்றை துய்ப்பதற்கு ஏற்றவகையில் நூலகங்கள் காணப்படுகின்றன.

நூல்கள் நல்ல நண்பர்களிலும் பார்க்க ஒருவனுக்கு உறுதுணையாக அமையவல்லன. அதாவது ஒருவனது பல துறைகள் பற்றிய கருத்துக்களுக்கும்,

சிந்தனைகளுக்கும் உரமளித்து அவனை வளர்த்து விடும் சிறப்புடையன. இவை காலத்தாலோ, இடத்தாலோ தடைப்படுவதில்லை. பல பல காலத்திலேஇ பல பல இடங்களிலே எழுந்த நூல்களாயினும் அவன் ஒருவன் விரும்பிய போதும் அவனிடம் வந்து பழகும் இயல்பினை வழங்குன நூலகங்களே.

"நவில் தொறும் நூல் நயம் போலும் பயில் தொறும் பண்புடையாளார் தொடர்பு" என்ற அடியானது ஓய்வு நேரத்தை இன்பமாகவும், பயன்படத்தக்க முறையிலுங் களிப்பதற்கு நூலகங்கள் போல் சிறந்தனவேறில்லை. ஒரு மனிதனை, ஒரு சமூகத்தை தீங்கற்றவனாய்ச் செய்து, ஒரு நல்ல பிரஜையாக வாழ வைப்பதும் இந்நூலகங்களே.

மனித வாழ்வுக்கு மிக இன்றியமையாத கல்வியெனுஞ் செழுஞ்சுடரை உலகின் மூலைமுடுக்கு எல்லாம் பரவல் செய்யும் ஒப்பற்ற கருவிகளாக, ஒளிவிளக்குகளாக நூலகங்கள் விளங்குகின்றன. இவை மனிதனின் பூரண வாழ்விற்கு வழிகாட்டிகளாய் அமைகின்றன.

எமது அறிவுத் தாகத்தை தீர்த்துக் கொள்வதற்கும், அவப்பொழுதை தவப்பொழுதாக்க உதவும் அருமருந்துகளாவும் நூலகங்கள் மிளிர்கின்றன. பொன்னைப் பாதுகாப்பது போல் இன்றுள்ள நிலையில் நூலகங்களையும், நூல்களையும் ஆருயிர் போல் மிக அருமையாகப் போற்றிப் பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும்.

❀ ❀ ❀

## முயற்சி திருவினையாக்கும்

சி. ருகல்யா
2013 விஞ்ஞானம்

" முயற்சிக்குச் சீதேவி முன்னாகும் சோம்பும்
அயர்ச்சிக்கு மூதேவியாம்"

தனிமனிதனாயினும், சமுதாயமாயினும் முன்னேறுவதற்கு முயற்சி மிக அவசியம் என்பது யாவரும் அறிந்ததே. "முயற்சியில்லா சோம்பல் மனம்இ பிசாசின் தொழிற்சாலை"என்ற ஆங்கிலப்பழமொழி முயற்சியில்லாமையால் விளையக்கூடிய தீமைகளைச் சுருக்கமாக கூறுகின்றது."எனக்குச் செயல் புரிய வேண்டிய தேவை எதுவும் இல்லை. இருந்தும் எந்நேரமும் செயல்புரிந்த வண்ணமே உள்ளேன். ஏனெனில் நான் செயல்புரியாவிட்டால் உலகுயிர்கள் செயலிழந்து விடும்." என்பது பகவத்கீதையில் வரும் கண்ணனின் அருள்வாக்கு. அத்தகைய பரம்பொருளே எப்போதும் செயல்புரிந்து கொண்டிருப்பாரானால் சக்தி குறைந்த மனிதராகிய நாம் செயலற்று வாழ்வது எங்ஙனம்? அவ்வாறு வாழ்வோமானால் அழிவையே நாம் அறைகூவி அழைப்பதாக அமையும் என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிகள், தனிமனித முன்னேற்ற முயற்சிகள், குறைபாடான அரசியல் சார்ந்த சட்டங்கள் போன்றவை இன்றும் நல்ல நிலைக்கு வரவில்லை என்பது மறுக்க முடியாத உண்மைகளாகும். இதற்குக் காரணம் எம்மவர்களின் முயற்சி இன்மையே ஆகும்.

“ முயற்சி திருவினையாக்கும்
முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்.”

எம்மில் பெரும்பான்மையினர் ஒரு நாளின் பெரும் பகுதியை வீண் பேச்சுக்களிலும், பயனற்ற பொழுது போக்குகளிலும் கழித்து வருகின்றனர். மற்றும் முக்கியமாக நாட்டைக் கட்டியெழுப்பும் பெரும் கடமையைச் செய்ய வேண்டிய இளைஞர்கள் வீதிகளில் தேவையில்லாமல் அங்கும் இங்கும் அலைந்து தமது பொன்னான நேரத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள். இது மனவருத்தத்திற்குரிய விடயமாகும். இத்தகைய மக்களை உறுப்பினர்களாகக் கொண்ட சமுதாயம் முன்னேறுமா? என்று வினா எழுப்பினால் அதற்குப் பதிலாக “நிச்சயமாக இல்லை” என்பதையே கூறமுடியும்.

“காலமறிந்து ஆங்கு இடமறிந்து செய்வினையின்
மூலமறிந்து வினையறிந்து – மேலுந்தாம்
சூழ்வன சூழ்ந்து துணைவலிமை திரிந்து
ஆள்வினை ஆளப்படும்.”

உலகில் முன்னேறிச் சாதனைகள் புரிந்து தம் பெயர்களை வரலாறுகளிலே பொன்னெழுத்துக்களால் பொறித்தவர்கள் இன்றுவரை பலர் உள்ளனர். அவர்களது வரலாற்றை எடுத்து நோக்கினால் அவர்கள் யாவருமே மெய்வருத்தம் பாராது, கண்துஞ்சாது, பசியைப் பொருட்படுத்தாது, கருமமே கண்ணாக நினைத்து உழைத்தவர்கள் என்பதை நாம் அறியக்கூடியதாக உள்ளது. அவர்கள் தாம் உரிமையாக்காது தமது சமுதாயத்திற்கும் வழங்கினார்கள். இதனால் அவர்களது புகழ் பரவியதோடு, நாடும்,சமுதாயம் முன்னேற வாய்ப்புக் கிடைத்தது

நெப்போலியன், மகாத்மாகாந்தி, ஆபிரகாம்லிங்கன், ஜவகர்லால் நேரு போன்ற உலகிலேயே பெரும் தலைவர்களின் வரலாறுகள் “முயற்சி திருவினையாக்கும்”. என்பதற்கு அழிக்க முடியாத சான்றுகளாக விளங்குகின்றன. உலகியலில் மட்டுமன்றி ஆன்மீகவியலில் கூட இறைவனையே எந்நேரமும் துதித்து தொண்டுகள் செய்து முத்திப்பேறு அடைந்தவர்களது வரலாறுகளையும் முயற்சிக்கு சான்றுகளாக வைத்துக் கொள்ளலாம். இதன்மூலம் இன்மைக்கு மட்டுமன்றி மறுமைக்கும் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

நெப்போலியன் மிக இளம் வயதிலேயே இராணுவக் கல்லூாயில் மாணவன். ஆனால் அந்த இராணுவக் கல்லூாயில் கற்றவர்கள் யாவருமே பிரபுக்களின் பிள்ளைகள், ஆயினும் ஏழைச்சிறுவனான அவன் தனது அயராத முயற்சிகளால் உலகையே கிடுகிடுக்க வைத்து மாபெரும் வீரனாகினான். என்பது நாம் அறிந்ததே

இதனாலேயே நெப்பொலியனின் புகழ் இன்றும் அழியாது உள்ளது. இன்று நாம் ஜப்பானையே உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். அங்கு அணுகுண்டால் ஏற்பட்ட பாதிப்பு எத்தகையது என்பது எமக்குத் தெரியும். "சுனாமியும், புயலும் தந்துவரும் தாக்கங்கள் சொல்லணா. துவண்டார்களா? இல்லை எழுந்தார்கள், முயன்றார்கள். இருப்பினும் அங்கு வாழும் மக்கள் பாதிப்பினால் சோர்ந்து விடாமல், தன்னம்பிக்கையுடன் உழைத்து இன்று யாவருமே நினைக்காத அளவில் பெரும் வெற்றியை தனதாக்கிக் கொண்டுள்ளனர். இதற்கு காரணம் அவர்கள் "முயற்சி திருவினையாக்கும்" என்பதை தமது தாரக மந்திரமாக மாற்றி உழைத்தமையே ஆகும்.

ஆகவே மாணவர் நாம் எமது நாட்டை நல்லதொருவழியில் இட்டுச் செல்வது இளைஞர் சமுதாயத்தின் முயற்சியிலேயே உள்ளது என்பதை புரிந்து கொண்டு எம் நேரத்தை வீண் செய்யாமல் இடைவிடாது சோர்வின்றி முயலவேண்டும் என்பதை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

"மெய் வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்.

❀ ❀ ❀

# அளவையியலில் உண்மை விருட்சமுறை

**பரியங்கன்**
**2012 கலை**

உண்மை விருட்சி முறை

1. உண்மை விருட்சம் என்றால் என்ன? (அறிமுகம்)
2. உண்மை விருட்ச விதிகள்
3. உண்மை விருட்ச முறையில் வாதத்தை வாய்ப்புப்பார்த்தல்
4. வலுச்சமான குறியீட்டாக்கம்
5. உண்மை விருட்ச முறையில் சில உதாரணங்கள்
6. பயிற்சிகள்

## 1. உண்மை விருட்ச முறை என்றால் என்ன? (ஓர் அறிமுகம்)

உண்மை அட்டவணையைப் போன்று உண்மை விருட்ச முறையும் எடுப்பளவை இணைப்பாக்கிகளின் மூலம் முடிவு ஒன்றினைப் பெற்றுக்கொள்ளல் எனலாம். இது உண்மை அட்டவணையை அடிப்படையாகக் கொண்டதாகும். அதாவது தர்க்க அமைப்புக்களை அடுக்குதல் அல்லது வரிசைப்படுத்தல் மற்றும் கிளைப்படுத்துதல் மூலம் வாதங்களை வாய்ப்புப் பார்க்கும் ஒருமுறை ஆகும்.

இம் முறையில் வாதங்களின் வாய்ப்பினை உண்மை அட்டவணையை விட விரைவாகவும், இலகுவாகவும் துணியலாம். உண்மை விருட்சமானது வாத அடுக்குகளை தர்க்க ரீதியாக ஏற்றுக்கொள்பவையா? அல்லது ஏற்றுக்கொள்ளாதவையா? என்பதைத் துணிவதற்கு எடுப்பு இணைப்புக்களினதும், மறுப்புக்களினதும் பிளவுகளைப் பயன்படுத்துகின்றது.

## 2. உண்மை விருட்ச விதிகள்

உண்மை விருட்சமுறையின் படி வாதங்கள் குறியீட்டாக்கம் செயற்பட்டு விதிகளின் அடிப்படையில் அவற்றின் வாய்ப்புத்தன்மை தீர்மானிக்கப்படுகின்றது. இதற்குப்பிரதானமாக இரண்டு விதிகள் பயன்படுத்தப்படுகின்றது.

1. வரிசையாக்கல் அல்லது வரிசைப்படுத்தல் விதி
2. கிளையாக்கல் விதி

### வரிசையாக்கல் விதி அல்லது வரிசைப்படுத்தல் விதி

உண்மை விருட்ச முறையில் வாதங்களை வாய்ப்புப் பார்க்க பயன்படுத்தும் வரிசையாக்கல் விதி நான்கு விதிகளை உள்ளடக்கியது. அவையாவன பின்வருமாறு

1. $\dfrac{MNP}{P}$

2. $(P \wedge Q)$
   $P$
   $Q$

3. $N(P \to 2)$
   $P$
   $N2$

### கிளையாக்கல் விதி

உண்மை விருட்ச முறையில் வாதங்களை வாய்ப்புப் பார்க்க பயன்படுத்தும் கிளையாக்கல் விதி ஐந்து விதிகளை உள்ளடக்கியது. அவையாவன பின்வருமாறு

1. $(P \to 2)$
   $MP \quad Q$

2. $N(P \wedge 2)$
   $NP \quad MQ$

3. $(P \vee Q)$
   $P \quad Q$

4. $(P \leftrightarrow Q)$

$P \quad NF$

$Q \quad MQ$

$(P \wedge Q) \quad (NP \wedge NQ)$

5. $N(P \leftrightarrow Q)$

$P \quad NF$

$MQ \quad Q$

$(P \wedge MQ) \quad (MP \wedge Q)$

எனவே உண்மை விருட்ச முறையில் வாதங்களை வாய்ப்புப்பார்க்க வரிசையாக்கல் கிளையாக்கல் விதிகளில் மொத்தமாக ஒன்பது விதிகள் பயன்படுத்தப்படுகின்றது.

**உண்மை விருட்ச முறையில் வாதங்களை வாய்ப்புப் பார்க்கும் முறை**

உண்மை விருட்ச முறையில் வாதங்களை வாய்ப்புப்பார்ப்பதற்கு பின்வரும் படிமுறை ஒழுங்கில் செய்கையினை மேற்கொள்ளுதல் வேண்டும்

1. தரப்பட்ட வாதத்தை கருத்திட்டத்தில் குறித்தல்
2. அதனை குறியீட்டாக்கம் செய்தல்
3. தொடர்ந்து எடுகூற்றுக்களை வரிசையில் எழுதுதல்
4. பின் எமக்கு தரப்பட் முடிவினை மறுப்பாக எழுதல் வேண்டும்
5. பின்னர் விதிகளைப் பயன்படுத்தி வாய்ப்புப் பார்த்தல்

**உதாரணம் : 1**

1. மழை செய்தால் நிலம் நனையும். மழை பெய்துள்ளது ஆகவே நிலம் நனைந்துள்ளது
   P – மழை பெய்தல்
   Q – நிலம் நனைதல்
   $(P \to Q).P \therefore Q$
   1. $(P \to Q)$ எடுகூற்று 1
   2. $P$ எடு கூற்று 2
   3. $MQ$ முடிவு கூற்றின் மறுப்பு

$NP \quad Q$

$(\times) \quad (\times)$ வாதம் மூடப்பட்டுள்ளது

$\therefore$ வாதம் வாய்ப்பானது

$P - MP, Q - MQ$

இம் முறையில் எடுகூற்றுக்கள், முடிவு கூற்றின் மறுப்பும் வரிசைப்படுத்தப் படுகிறது. இதன் காரணம் எடு கூற்றுக்கள் உண்மையாகும் போது முடிவு பொய்யாகும் என முயற்சிக்கப்படுகின்றது.

இங்கு வாதத்தின் முடிவு மாறிகளின் உடன்பாடு, மறுப்புமாக அமைந்தால் செய்கை மூடப்பட்டு (X) வாதம் வாய்ப்பாக கொள்ளப்படும். இல்லையேல் செய்கை பூரணப்படுத்த முடியாமல் அது திறந்ததாக (✓) இருந்தால் வாய்ப்பற்றதாகவும் கொள்ளப்படும்.

உண்மை விருட்ச முறையில் ஒவ்வொரு மாறிகளுக்கும் உடன்பாடு, மறுப்பு ஆகிய இரண்டு நிலைகளையும் காட்ட முடியுமாயின் அது வாய்ப்பான வாதமாகும். இது முறையில் வரிசையாக்கல் விதியைப் பாவித்த பின்னரே கிளையாக்கல் விதியைப் பாவிக்க வேண்டும். அதாவது உட்கிடை $(\rightarrow)$, உறழ்வு $(\vee)$, இணைப்பு $(\wedge)$ போன்ற மாறிலிகளில் ஒரு கட்டத்தில் மட்டுமே வரிசையாக்கல் விதி பயன்படுத்தப்படும். ஆனால் இரட்டை உட்கிடை மாறிலியலில் $(\leftrightarrow)$ கிளையாக்கல் விதி முதலிலே நேரடியாகப் பயன்படுத்தப்படும்.

உதாரணம் 1 இல் மேற்கூறப்பட்ட நிபந்தனைகள் ஒவ்வொன்றையும் அடிப்படையாகக் காணமுடியும். அதாவது இங்கு $P, Q$ மாறிகளுக்கு முறையே உடன்பாடும் மறுப்பும் காட்டப்பட்டுள்ளது. $P - NP,\ Q - NQ$ எனவே இவ்வாதத்தின் செய்கை மூடப்பட்டு $(\times)$ வாய்ப்பானதாக அமைந்துள்ளது.

### 4. வலுச்சமமான குறியீடுகள்

1. $N(P \wedge Q) = (NP \vee NQ)$
2. $N(P \vee Q) = (NP \wedge NQ)$
3. $(P \rightarrow Q) = (NP \vee Q)$
4. $N(P \rightarrow Q) = (P \wedge NQ)$
5. $(P \leftrightarrow Q) = (P \wedge Q) \wedge (NP \wedge NQ)$
6. $N(P \leftrightarrow Q) = (P \wedge NQ) \wedge (NP \wedge Q)$

### உதாரணம்

1. $N(P \wedge Q) \leftrightarrow (NP \vee NQ)$

$F\,T\,T\,T \quad T \quad F\ F\ F$

$T\,T\,F\,F \quad T \quad F\,T\,T$

$T\,F\,F\,T \quad T \quad T\,T\,F$

$T\,F\,F\,T \quad T \quad T\,T\,T$

## 5. உண்மை விருட்ச நில உதாரணங்கள்

1. இராமன் சீதையை காதலித்தால் இராவணன் சீதையைக் கவருவான். இராவணன் சீதையைக் கவருவான் ஆயின் போர் ஏற்படும் ஆகவே இராமன் சீதையைக் காதலித்தால் போர் ஏற்படும்

P - இராமன் சீதையைக் காதலித்தல்

Q - இராவணன் சீதையை கவருதல்

R போர் ஏற்படுதல்

$(P \to Q), \ (Q \to R) \therefore (P \to R)$

1. $(P \to Q)$ எடு கூற்று 1
2. $(Q \to R)$ எடு கூற்று 2

$N(P \to R)$

3. $P$ முடிவு கூற்றின் மறுப்பு

$NR$

$NP$ $(\times)$    $Q$

$NQ$ $(\times)$    $R$ $(\times)$    வாதம் வாய்ப்பானது

2. சமாதானம் ஏற்படுமாயின் நாடுசெழிக்கும். நாடு செழிக்கும் ஆகவே சமாதானம் ஏற்படும்.

P – சமாதானம் ஏற்படல்

Q – நாடு செழிக்கும்

$(P \to Q). Q \therefore P$

1. $(P \to Q)$ எடு கூற்று 1
2. $Q$ எடு கூற்று 2
3. $NP$ முடிவு கூற்றின் மறுப்பு

$NP$ $(\vee)$    $Q$ $(\vee)$

வாதம் வாய்ப்பற்றது

3. கணிதம் கடினம் அல்லது அளவையியலும் கடினம், கணிதம் கடினமாயின் பரீட்சகர்கள் விடைத்தாள்களுக்கு இலகு முறையில் புள்ளியிடுவர். அளவையியல் கடினம் எனின் பரீட்சாத்திகள் கணிதத்தில் சித்தியடைவர். ஆகவே பரீட்சகர்கள் கணித விடைத்தாள்களுக்கு இலகு முறையில் புள்ளியிடுவர் அல்லது பரீட்சாத்திகள் கணிதத்தில் சித்தியடைவர்.

P – கணிதம் கடினம்


Q – அளவையியல் கடினம்

R – பரீட்சகர்கள் கணித விடைத்தாள்களுக்கு இலகு முறையில் புள்ளியிடுவர்.

S – பரீட்சகத்திகள் கணிதத்தில் சித்தியடைவர்.

$(P \vee Q), \quad (P \rightarrow R), (Q \rightarrow S) \therefore (R \vee S)$

1. $(P \vee Q)$ எடு கூற்று 1
2. $(P \rightarrow R)$ எடு கூற்று 2
3. $(Q \rightarrow S)$ எடு கூற்று 3
4. $N(R \vee S)$ முடிவு கூற்றின் மறுப்பு




வாதம் வாய்ப்பானது

4. குஞ்சி பண்டாரா்கவும் ஸ்ரீ பாலாவும் இராணுவ வீரர்கள் அல்ல குஞ:சி பண்டாரா இராணுவ வீரன் ஆயின் அவனிடம் துப்பாக்கி உண்டு. ஆகவே ஸ்ரீ பாலா இராணுவ வீரன் என்பதோடு அவனிடம் துப்பாக்கியும் இல்லை.

P – குஞ்சி பண்டார இராணுவ வீரன்

Q – ஸ்ரீ பாலா இராணுவ வீரன்

R – அவனிடம் துப்பாக்கி உண்டு

$N(P \wedge Q).(P \rightarrow R) \therefore N(Q \wedge R)$

❀ ❀ ❀

# Importance of a family

**R.Jenathane**
**Grade 11A**

The smallest unit of the society is the family, but there is a huge and deep meaning hidden inside this six letter word. It's a unit where we get love, care, happiness, protection, peace and faith.

Every human needs love, care and tolerance. The family is the best place where we can fulfill all these needs.

There are two types of families. They are the extended families and nuclear families. In the past all families were extended families. An extended family comprises father, mother, children, grand parents and even some relations. Extended families were very common in the past and still many live in such family units. However, in the future, people are going to become more competitive. Because of this everyone is trying to earn more money.

The father of a family has the responsibility to look after his family and when expenses are high there are big problems. So, nowadays, maintaining extended families is rather difficult and people prefer nuclear families which includes father, mother and two or three children at the most.

The members of one's family become a resourceful part of one's life. So, I think we should maintain good relationship between members of our family. A misunderstanding between members of family is very common in our society.

Apart from the money, people also haven't enough time to fulfill their responsibilities and maintain the bond between family members. This is the first step which leads to problems and disharmony among family members, sometimes, parents have no time to help their children in their studies or see to their personal needs. In modern society, most often, both parents are employed and so they are too busy to see to the needs of their children.

We can't close big holes without first closing small holes. So we can't make a good society without first having a good family .Therefore, the role of the family is most important in creating a good society.

# Sports and games

V.Thuvaraka
Grade 11A

Sports and games may appear a waste of time and energy to those who know nothing about sports at all. The development of a country depends on its healthy and active citizens. Sports help us to build our body and strengthen it. It is vital for the proper functioning of the organs. Physical development must go hand in hand with mental development. Sportsmen can be active citizens. They can play a vital role in the country's development.

Sportsmen learn how to lead and how to follow. They at time enjoy the fruit of their hard work and practice. It is possible to learn good manners, to acquire tolerance and to treat defeat and success alike children can thus learn these qualities essential for the men to engage in development activities.

A high sense of discipline develops in the minds of true sportsmen. They learn good manners, gain worthy friendships. Self confidence and perseverance will lead them in all walks of life as in sports. The late President Mr.J.R.Jayewardena once observed, "The development of the country is possible only when our citizens are disciplined". Sports and games can indeed discipline a nation and pave the way for the speedy development.

Sports are not an end in itself. It is more than more physical exercises of pastime. Sports can develop the personalities of these who will in future steer the development projects of their nation. Sports and games are important for everyone.

# Pollution

**P.Nithila**
**2013 A/L COM**

Pollution is the greatest threat to health and sanitation in the world today. It is in fact the burning question of the day. Man disturbs nature in order to make his life better and more comfortable and this causes pollution in his surroundings. This menace of pollution is more to be found in cities than in villages.

There are three major types of pollution. Pollution of air, water and land. The rapid spreads of industrialization in the form of large factory is the main cause of air and water pollution. The air becomes polluted by dust waste and smoke from factories. Burning petrol, diesel and oil emit a lot of smoke from the auto mobiles. The smoke from jet plane also pollutes the air. There are deadly gases like carbon monoxide, sulphur dioxide and various oxides of nitrogen present in this air. Man is forced to breathe this foul air and these chemicals can adversely affect his health. It is always advisable to bury our garbage then burn it. It is anti social to use belching vehicles on the high way. The testing of nuclear weapons will cause inevitable diseases. Hence it is high time the great powers of the world realized the gravity of the danger and brought an end to their arms race.

Water is also affected by man's activities. Dirty water full of waste chemicals and dyes runs into rivers, streams and ponds and causes water pollution. Thus the volume of oxygen in water becomes reduced and consequently fish, frogs and other forms of life are killed. Large quantities of oil spill from oil tankers pollute the seas and oceans. As a result fish, seals, dolphins, whales and even penguins are endangered. People sometimes dump their garbage in rivers, ponds and lakes, little realizing the ill-effects of their actions.

The land is also polluted due to various reasons. Dumping city wastes on low lying bare lands outside the cities pollutes the land. They decay in the floods and give out a foul smell as well. The cutting down of trees and the wanton destruction of forests are sure to cause soil erosion. It will also reduce the rainfall of the area. Moreover the indiscriminate use of pesticides, weedicides and chemical manures by the farming community may have calamitous consequences for all living creatures including man.

Hence all the actions of the world must join hands and take concerted action to combat this menace of pollution.

# How can we renovate our house?

M.Sobitha
Grade 11B

About twenty years back,
My parents and grandma
Had to leave their new house
With bags and boxes
Because of the civil-war.

Since then we have been living
In a rented house in Chunnakam.
My elder brother and I
were born and bred in Chunnakam.
Frequently mother told us that
We own a house in security zone.
Recently we were permitted
to go to our house.
Last month our parents
took us to place our
first step into our own house.

Father led us smartly.
From the lane we bent
our body and walked slowly
on a narrow path
through dense bushes
and tall trees.
"Stray cattle cleared
this narrow path."
Father explained us.

When we neared our house,
we were shocked to notice
our house without roof,
windows and doors.
"Only cement walls
Could stand firmly amides
Bombing; shelling and shooting."
Our father murmured
with a sigh.
Mother shed tears and described
The hardship that her father
Underwent to build the house.

On Sundays we cut down
the trees and cleared the bushes.
Now the compound is neat
Since our family lives
A hand to mouth living,
We have no savings.
though we own stretch of lands
in the heavy security zone,
we are unable to find
ways and means
to renovate our house.

# Science and Technology

**P.Pavithira**
**Grade-8B**

Science and technology has helped people to gain control over nature. Early man lived in caves in the jungle and ate raw meat and vegetables. The first scientific invention of man was the fire. Then he learnt to cook and live in small groups .He raised animals rear plants for his food in the process he discovered the use of wheels. There after he did not look back in his march towards civilization.

He gradually freed himself from dependence on nature for his needs. He built houses to live and made some tools to fulfill his needs. Then he discovered new methods to make his work easier. Human needs are unlimited but resources are limited. Many changes are brought in the human life by science and technology. Communication, transport and industry have brought changes in human life.

Industrial technology began with the invention of the steam engine. The industrial helped to make production faster and the working hours reduced. Communication media introduced in human life have totally changed the life style. The media entertainment become apart in his life. Technology helps man to live in greater comfort and security than in the past. Agriculture medicine and the mode of transport have brought many benefits to man.

Birds sound and fire were the early form to communication. They were replaced by letters, telephone, mobile phone, fax, internet and e-mail etc. Likewise modern transport facilities replaced all the methods. Car, van, lorry, train, bicycle, motorcycle and aero planes occupied the places of animals, carts and carriages etc. Many changes are created in our food, dress and shelter.

People live in modern houses, flats and sky scraper and enjoy the technological benefits. Science and technology not only brought changes in the living standard but also in languages arts and culture as well .We can say that the whole world has come together which is named the global village.

❀ ❀ ❀

# Environmental Effects of Global Warming

**M.Sotheepan**
**Grade 12 Maths**

In order to talk about global warming, we must first learn what causes the greenhouse effect. A lot of the rays from the sun are absorbed by water vapor that is naturally in our atmosphere. Water vapor accounts for 80 percent of natural greenhouse warming. The remaining 20 percent is due to other gasses that are present in very small amounts. Carbon dioxide is also a big absorber of the sun's heat rays.

Global warming will not just make sea levels rise; it will also affect sea life. Corals are intolerant of temperatures just a few degrees warmer than usual. Small increases in the temperature can kill corals. There have been problems with corals dying in the past few years because of increased water temperatures. Other marine life may migrate northward or southward because the waters are warmer. The warm water would make them think that they were in their natural habitat, when they were actually migrating toward the poles. Food would be scarce in their new habitat.

Patterns of the circulation of sea water are disturbed by global warming. Cold water moves along the sea floor towards the equator and warm water around the equator moves toward the poles across the surface of the ocean. It is known as thermohaline circulation. It is a very important process concerning ocean life. This circulation process brings oxygenated water to the sea floor. If this did not happen, water along the sea floor would become depleted of the oxygen organisms need to survive.

Fish, such as salmon, are also sensitive to the temperature of the water. During the summer when the water is warm, salmon have a higher metabolic rate. During the winter months, their metabolism slows down, which is good because less food is available. With global warming and increased water temperatures, salmon would have a higher metabolic rate, even if it were during the winter. Less food would be available for them and many salmon would die.

Another impact of global warming will be that some diseases are likely to be spread more easily. Mosquitoes are a major carrier of tropical diseases. Malaria outbreaks are usually confined to "where the minimum winter temperature reaches no lower than 16 [degrees Celsius]," According to the World Wide Fund for Nature, an independent conservation organization, Scientists are beginning to notice that malaria outbreaks are occurring outside these places. They are attributing this to increased temperatures from global warming. Places such as California, Texas, Florida, Michigan, and New York have had more cases of malaria. People from these states know that the summers have been very hot and humid lately. Malaria mosquitoes thrive in hot and humid weather. Increased temperatures and more rain in some areas will cause

hot and humid weather, which will allow for mosquitoes to migrate to new places and spread the disease.

A study suggests that malaria transmission would increase from 45% of the globe to 60%, if atmospheric levels of greenhouse gases reach concentrations equivalent to a doubling of $CO_2$ since the industrial revolution. Cholera and dengue fever are also carried by mosquitoes and thrive in warm and moist climates. As with malaria, more cholera and dengue fever outbreaks would occur because of migrating mosquitoes.

As stated earlier, the warming of the oceans will increase the amount of carbon dioxide in the atmosphere and will make global warming a problem of increasing severity. There are other ways that this happens too. As the weather becomes warmer, more organic matter in the ground will be decomposed. This causes carbon dioxide to be released into the atmosphere. If average temperatures would rise by 3 degrees C per decade, soils will release an amount of $CO_2$ equal to nearly 20 percent of the projected amount released by combustion of fossil fuels. Gas hydrates will also decompose with warmer temperatures.

Gas hydrates are ice like solids in which molecules of gas, mainly methane, are locked in the structure of water and are usually found in frozen soil or in ocean sediments. Scientists have found that "gas hydrates worldwide hold a total of 10,000 billion metric tons of carbon, twice the amount contained in all the known coal, gas, and oil reserves on the land. When temperatures increase, frozen soil will melt and release gas hydrates, and hydrates from ocean sediment will also break down. Because of this, more methane and carbon will be released into the atmosphere, making the greenhouse effect even stronger. This will damage our environment even more.

Global warming is becoming a major problem as we move to the 21st century and beyond. When more greenhouse gasses like carbon dioxide and methane are released, they trap heat rays and keep them in our atmosphere. This causes an increase in temperature. Increases in temperature can do a lot of damage, even in small increases. Only a few degrees ended the ice age thousands of years ago. Another warming like that can have huge environmental effects. Changes in temperature will upset water cycles. Precipitation, some will get less. A warming of a few degrees would cause glaciers and sea ice to melt. This would lead to ocean levels rising and would damage coastal cities and islands.

It would also cause a disruption in different species living in the ocean and increase the levels of some disease, especially ones carried by mosquitoes, which thrive in warm climates. In order to stop global warming, much has to be done. Although it is very difficult to reverse once the process is started, global warming has to be stopped if we want to live like we are now. Emission of fossil fuels by humans is a big factor in the amount of carbon dioxide in the atmosphere. Controlling these emissions is one of the first of many steps that we must take in order to combat global warming. If it is not controlled, problems such as the aforementioned ones, along with others, will definitely disrupt our living patterns.

கவின்கலை மன்றம்-2011



இடைவினைக்கழகம்-2011



புத்தாக்குநர் கழகம்-2011



**V**

er
as
sh
th
W
a

F
c
c
e
v

a
s
r
v

# Value of Reading

**M.Nirusan**
**Grade-10A**

Despite the fact that most people feel that reading is a leisure activity , it has enormously affected their lives in many diverse ways. I feel that something as simple as reading or writing will have an impact on a future job, position ,or even a game show. I feel that the different texts and contents you read will eventually turn out to be the more knowledge in different areas and fields you will come acquainted with. When I first started out reading, I read 100-paged fiction books about medieval warfare and even about different countries during that time.

It has helped me learn things that aren't taught in school or by a teacher. Reading magazine and news paper daily informs me with what is going on in the outside world and in my community. Most of the contents in newspapers are about current events and issues. By reading these articles, I can now read faster and more efficiently. Also writing e-mails to my friends, relatives definitely enhance my way of writing a "friendly letter" which isn't taught in school.

Writing and Reading can also increase vocabulary .Whether I read novels assigned by a teacher or to subtitles on movies, it always tend to increase my writing skills. Reading others work allows me to see the difference between his/her work and mine. The different words and sentence structures gives me ideas that makes my writing more efficient.

Book uses lots of divers adjectives and my work has very little adjective, I would know that is an area I need to work on my next paper would then include more adjectives and will help out my grade also learning from others mistakes will often teach me the right way to write. As I notice a mistake in a piece of writing , I would fix it by substituting the right word or punctuation for the sentence .If a sentence includes a comma where it is not needed, I would know that it does not belong there.

Friendly letters are a type of writing which is not required to be taught, but is learnt on my free time. Lastly reading short poems increases our knowledge of many different poetry methods and ideas since there are so many different poets in the world, I have learnt tons of styles just by reading a few poems.

In conclusion reading and writing skills are increased constantly due to little things that most times are not noticed. Whether it is from a book to a poem, there will always be a way that it helps out your school performance. Reading and writing in general only helps absorb information, and enhance leisure of school related writing tasks.

It has also made life itself so much easier because reading and writing are so beneficial for school and for life .How much you read and write today, will somehow affect your future job, family, position, or even your salary. So think about just how much better life could be it you just read and write a little more.

# The value of sports and games

S.Sinthuya
Grade-10A

Games played at school gives the training which is needed to fight in the battle of life. Young age is the best period for developing the body on the health lines and also for learning good habits. No one can deny the fact that health is men's best wealth.

Sports and games make our bodies strong and healthy by giving them ample exercises. They also help to develop our power of diligent learning.

A healthy mind and healthy body are equally important for making our life successful. There is a famous Latin saying "A sound mind in a sound body". Sports and games help us not only to keep our body healthy but also to learn good and noble habits.

Sports and games are very essential for child who needs exercises for both his physical and mental development. When England won the Battle of Waterloo, The Duke of Wellington, remarked that the battle of Waterloo was won and the playing fields of Eton.

More over sports and games help us to lead a disciplined life. When the rule of a game is broken it becomes a foul play. We have to play according to the umpire or the referee who decides whether the rules of a game are followed or broken. Here we are taught discipline and this kind of discipline is indispensable in our life.

# Importance of English

B.Shanchigajini
Grade-6A

English is considered to be the International language of present era. World is becoming smaller as a result of advance in it and communication technology. This makes us to realize the value of English language. All countries have their own language as their first language and consider English as their second language. So English language is in practice in all countries. Recently Tsunami caused devastation in our country. Many countries came forward to help us in many ways. During that stage. English language played an important role in having communication with helping countries. English language is highly essential for our students to get mastery in English language.

# School life is the best time in human life

**R.Keerthana**
**Grade - 12 Bio**

Happiness, sadness and other emotion or even love, sick, we all can find in our school time. That's why school life is the best time in human life. It's different from university life and adult life. During this time; we will develop many things like physical developments, emotions, relationship and specially knowledge.

School life only happens once in your life time. So it is very precious. It makes a dramatic change in our whole life. Firstly the faster physically you grow the more you develop in mental. You are innocent and carefree. Materialistic is none of your concerns. You also have wild imagination, big dreams and ambitions to choose but as a teenager you will want to be more independent-which means you don't like to depend on your parents like a little child. And sometimes may be you feel mature and rebellious. There are other things that you change in school time, but the best thing is you are yourself to do anything you want as you grow up.

Secondly, going to school also means you will have a lot of friends. There is nothing better than belonging to a great group of friend and nothing worse than feeling like an outcast. Friends are important so during this time make as many friends as you can. They are shoulders for you to cry on when you are sad or happy so your sadness will be less and your happiness will be twice. Talking about school time you can never forget the time you share your dreams to your friends and they tell you theirs. The time you have filled with them playing on the school yard or going shopping or even playing truant together. No matter how good or bad those memories of school time are still unforgettable with sweet friendship and platonic love. Going to school also means you will have new family, new members who teach you many things about life. Your life will be colourful.

School life is the best time because it's the time we learn many things. Our knowledge will be widen in both social and academic. You will discover those things you called "my story" when you were a child such as where does the sun come from and go away every day or why can't the tress grow without water and sunlight. They are really interesting lessons as your thoughts about life. You can develop your hobbies and skills are also important. Especially may be you will have your early career. When you go to the University, you will have to put those schooling memories behind and have to face the new environment in campus. You need to work and study individually to prepare for future career. And you will feel more complicated due to a wave of students from all over the country. After graduating from University you will start your own life as an adult. It is much more serious than you thought when you were in school time some years ago. Adult life is full of million complexities. Your first problem

is to find a job and join a high ranking position. Then you have to work to be individually and not depend on anyone to make important decisions about your life.

When there are many things to think about as you grow up however your school life is still the best in your life. You have known that university life and adult life are more complicated than school life. You can't depend on your parents anymore. So school time is the time for you to prepare for life.

In conclusion I just want to emphasis that school life is the very best time in human life. So when you are young and still going to school you should make this time as beautiful colourful as you can.

# Communication Then and Now

**R.Durkajini**
**Grade 12 Bio**

Communication means a connection with two or more than two persons. It is a process of transferring information from one to another.

Through the communication we exchange our thoughts, ideas, opinions and other information also. In turn, we collect new ideas and views and new information from others. Communication helps us to build up our relationship and friendship. We not only improve our knowledge but also learn other languages. We fulfill our needs easily. So it is clear that as humans, we have to communicate with others to fulfill our needs and communication is essential in human life. Because of this man has invented many types of equipments of communication such as news papers, magazines, books, radios, televisions, telephones fax, internet, e-mail and satellites etc.

In the past, people communicated in many ways such as making colourful smokes, setting fire, beating drums, playing dramas and sending messages with the help of the pigeons etc. Though they could not get information immediately. But today we get information without any delay with the help of modern equipments of communication. So we can say that communication among past people was very difficult as languages were not also improved among them.

But in this period communication methods have developed a lot. They are very simple. They bring the people very closer to us. We often use mobile phones in

this era. It is easy to contact others. Today here is no one without a mobile phone. Everyone has got mobile phones. The internet is a network of computers that offers information to people. With the use of the internet we can communicate with a person who is living in abroad not only hearing his voice but also seeing his face. Students clear their doubts with the help of the internet. The SMS and the MMS are the shortest and easiest ways to exchange messages. In few minutes people can know where their children are and what they are doing there when they are away .The E-mail is also a way of sending electronic message or data from one computer to another computer .The satellite is an electronic device that is sent into space and moves around the earth or another planet for a particular purpose .Using it we can collect information from other planets .We are able to save our lives from dangers and disaster.

At times the use of these equipments creates many problems as well. They lead people to behave badly and make the students to waste their time.

Although there are disadvantages in communication it is developed with the time. Because it changes our life style and develops our lives.

The development of communication helps the world for its development. So it is a continuous process with our inventers' inventions. They have made this period a multimedia era. Anyhow all the communication equipments aren't very valuable to us. So, it is our duty to respect and keep them for our future generation too.

❀ ❀ ❀

# The Environment's Lament

**R.Sanjayan**
**Grade-6^A^**

You sing I'm your environment,
I think you're my enjoyment.

Oh Man!
What have you been doing?

I put some trees,
You cut them in to pieces

I reserve some water
You pollute them later.

I dash my waste to fars,
You dump yours for days

I select my waste to digest,
You collect yours no suggest.

Thus Man!
I try to clean my air,
You are not to cheer.

I try to neat my hand,
You're not to give your hand.

You're quick to make me sick,
I'm sad to see your work.

That's why, Man!
You have to often fall ill,
I've to miss you in all
Please, Man
Think for a moment
about my lament

Let me live no ill
For you to live no hell

Now, Man
You come to know me right
I save you in my sight

You do all for my beauty
I do all for your safety

So, Man!
There's no hardship
But only a friendship

I can be your dear
You can live long here

If not, Man!
What can I do?

# Questions for your thought

**B.Thurka**
**Grade 12 Bio**

01. Some months have 30 days, some months have 31 days. How many months have 28 days?
02. If a doctor gives you 3 pills and tells you to take one pill every half an hour. How long would it be before all the pills had been taken?
03. I went to bed at 8'o clock in the evening and wound up my clock and set the alarm to sound at 9'o clock in the morning. How many hours sleep would I get before being awoken by the alarm?
04. Divide 30 by half and add ten. What do you get?
05. A farmer had seventeen sheep. All but 9 died. How many live sheep were left?
06. If you had only one match and entered a cold and dark room, where there was an oil heater, an oil lamp and a candle, which would you, light first?
07. A man builds a house with four sides of rectangular construction; each side having a southern exposure. A big bear comes along .What colour is the bear?
08. Take 2 apples from 3 apples .What do you have?
09. How many animals of each species did Moses take with him the Ark?
10. If you drove a bus with 43 people on board from Chicago and stopped at Pittsburgh to pick up7 more people and drop off 5 passenger and Cleveland to drop off 8 passengers and pick up 4 more and eventually arrive at Philadelphia 20 hours later, what's the name of the driver?

**Answers**

01. All of them. Every month has at least 28 days.
02. 1 hour. If you take a pill at 1'oclock, then another at 1.30 and the last at 2'0 clock they will be taken in 1 hour
03. 1 hour. It is a wind up alarm clock which can't discriminate between am and pm.
04. 70 dividing by half is the same as multiplying by 2
05. 9 live sheep
06. The match
07. White
08. 2 apples
09. None. It was Noah, not Moses
10. You are the Driver

செல்வி.ச.கிருஸ்ணலோஜினி
10C

## வாழ்த்து

இளந்தென்றல் தவழ்ந்து வர
இன்றமிழும் இசைந்து வரும்!
அழகூட்டி எங்கள் மண்
இன்புற்றே இசை பாடும்!
எல்லையில்லா ஆனந்தம் மேவிடவே
எங்கெங்கும் கலையூறும; கவி பெருகும்;
வண்ணத்தமிழ் அன்னையவள் மடிதனில்
தமிழினம் தலைநிமிர்ந்தே வாழும்!
தெருவெங்கும் நாதவொலி
தெவிட்டாத விருந்தளிக்கும்!
தேசத்தில் தேமதுரத் தமிழினிக்கும்; தமிழ்துளிர்க்கும்;
இயலுடன் இசையும் நாடகமும் அரங்கேறும்.
இன்னலின்றி மங்கலமாய்
எங்களினம் வாழவே
பொழுது புலரும், பொற்சேவல் கூவும்
குயிலினம் கிளையிடையிருந்தே கீதம் பாடும்.

❀ ❀ ❀

## அழகு

நெற்றிக் கழகு திலகம்
நல்நெல்லுக்கு அழகு கதிர்கள்
வானுக் கழகு வட்ட நிலா
மானுக்கழகு மருட்சி
இயற்கைக் கழகு பசுமரங்கள்
பயிர்ச் செய்கைக் கழகு விடாமுயற்சி
மாணவர்க் கழகோ ஒழுக்கம்
ஊனுக்கழகோ நற்சுவை
வாழ்க்கைக் கழகு இலட்சியம்
வெற்றிக் கழகு நேர்மை
எமக்கோ அழகு மனிதப் பண்பே.

செல்வி.சு. கஜதீபன்
7A

❀ ❀ ❀

# தமிழுக்கு விடிவுண்டா?

தமிழக்குயில்கள் கூவாதோ!
தமிழ்ப்பணிகள் படராதோ!
தமிழ் இசைகள் இசைக்காதோ!
இந்த ஈழநாட்டினிலே.....

ஒளி நாடி வளர்ந்த மரங்கள் - இன்று
ஒளி இன்றி தவிக்கின்றதே...
இனி இளந்தென்றல் வீசாதோ! - தமிழ்
வாசம் இங்கு வீசாதோ...!

பனைமரக்காடு பரந்த நாட்டினிலே
இரத்த வாடை வீசுகிறதே....!
தஞ்சம் புகுந்தவன் வளர்ந்துவிட்டான்
தஞ்சம் அளித்தவன் தளர்ந்து விட்டான்

எம் வாழ்வில் விடிவு இருக்குமென காத்திருப்போம்
கனவில் அல்ல நிஜத்தில்
உலகத்தின் இதயம் தமிழ் - அது
இல்லையேல் இயங்காது உலகம்.

என்றோ ஒரு நாள்...
தமிழ்க்குயில்கள் கூவும்,
தமிழ்ப்பணிகள் படரும்,
தமிழ் இசைகள் இசைக்கும்
இந்த ஈழநாட்டினிலே.

செல்வன். ம. நிருஷன்
10A

**செல்வி.வி.யசிந்தா**
**8C**

# தாய்

இவ்வுலகம் காண உதவியவள்;
தந்தையை உற்ற உறவுகளை
அரவணைப்போரை
அன்போடு காட்டியவள்;
உதிரத்தைப் பாலாக்கி
அன்போடு அமுதூட்டி
என்னோடு பாடி ஆடி
அறியாத வயதில்
வழிகள் பல காட்டி
துன்பம், நோய் வரும் போது
என் கண்ணில் வரும் நீர் கண்டு
கண்ணீர் விடும் என் அன்னையே!
மடி தந்து
துயில் நீக்கி
அருகிருந்து
அக்கறையாய் காத்து வருந் தாயே!
அன்புத் தெய்வமே!
என்றும் உன்னை நேசிப்பேன்.

❀ ❀ ❀

# மலர்கள்

இயற்கை தந்த கொடைகள்
மனம் மகிழ மலரும்
காலைப் பொழுதை நினைவூட்டும்
கண்ணுக்கு விருந்தாய் அமையும்
அம்மா கூந்தலுக்கு அழகூட்டும்
இறைவன் பாதம் சேரும்
மணமக்கள் கழுத்தில் மாலையாகி ஆடும்
தென்றல் வர மெல்லத் தலையாட்டும்
வர்ணம் பல கொண்ட பூக்களே!
நிதமும் மலர்ந்து நிம்மதி தருக.

**செல்வன்.சி.மயூரதன்**
**8C**

❀ ❀ ❀

# சுனாமி

சொல்லாமல் வரும்;
சொத்துக்கள் அழிக்கும்;
நிமிடங்களில் வந்து
நில்லாது போகும்;
உயர்வு தாழ்வு
ஏழை பணக்காரன்
அழகு அந்தஸ்து
அன்பு பாசம்
வன்மை மென்மை
எதுவும் பாராது;
கெட்டித் தனங்கள்
தொழினுட்பத்திறன்கள்
எதுவும் இதனை
ஒன்றும் செய்யாது;

அதிரவைக்கும்;
அழவைக்கும்;
ஓடவைக்கும்;
மொத்தத்தில்
யாவும் அழிக்கும்;
மனிதா!
இயற்கையை
இயல்பாய்
இருக்கவிடு!
உன்
வசதிக்காய்
புகழுக்காய்
ஆதிக்கத்துக்காய்
வசப்படுத்த நினைத்தாயானால்
அழிவு நிச்சயம்!
ஆண்டவன்
படைப்புக்கள் - அவற்றை
அழிக்க முற்படாதே!
என்ன கொண்டு வந்தாய்?
எதைக் கொண்டு போகப்போகிறாய்?
எதுவுமில்லையே

**செல்வி க. பிரதீபா**
**8C**

# ஔவை மூதாட்டி

மூதுரை தந்த மூதாட்டியே!
மூவேந்தர் புகழ் பாடி
முத்தமிழில் ஒன்றாம்
இசைத்தமிழை வாழ வைத்தாய்
மாணவர் நாம் மட்டுமன்றி
மனிதர் எவரும்
நல்வழி சென்றிட
நல்ல பல அறிவுரைகளை
நாளாந்தம் கடைப்பிடிக்க
நன்னெறி தந்தவளே!
பெண்கள் ஏடறியாக் காலமதில்
பெண்ணினம் பெருமைபெற
பெரும் புலவர் மத்தியிலே
பெரும் கருத்துக்கள் பல கூறி
அழியாப் புகழ் சேர்த்தவளே !

செருக்குடன் கூடிய மிடுக்குனக்கு
அழகன் முருகனிடம் அகப்பட்டாய்
“சுட்ட பழம் வேண்டும்” எனக் கேட்டபோதே
“தமிழால் என்னைப் பாடு” என வேண்டி
உன் புகழை இன்றுவரை போற்றி வைத்தான்.

**செல்வன். இ. துஷான்**
**9A**

செல்வன்.யோ. அலக்ஸ்ராம்
6A

# மாதுளையே

மாதுளையே!
மருத்துவ குணங்கள் நிறைந்தவளே!
பூ,பழம், பட்டை இதனால்
நோய் பல நீக்கி
காப்பாய் என்றும்.
இரும்பு, சர்க்கரை
சுண்ணாம்பொடு பொஸ்பரஸ்
வகை வகையாய்
தருவாய் சத்துக்கள் பலவும்.

தித்திக்கும் முத்துக்களதனால்
இதயம், மூளை இயங்கிட வைப்பாய்

இருமல் அதனை
விரட்டி யோட்டுவாய்;
புளிப்புடன் கூடிய முத்துக்களதனால்
வயிற்றுப் போக்கு, இரத்த வாந்தி
தடைப்படும் சிறுநீர்
குடற்புண் எதனையும்
குடியிருக்காமற் செய்திடுவாயே!

இன்னும் பயன் பல தந்திடு மாதுளையிதனை
மனைகள் தோறும் வளைந்திடுவீரே!
மருத்துவமனைகளை மறப்பீரே!

❀ ❀ ❀

# அம்மாவுக்கு ஓர் அழைப்பு

பள்ளி செல்லும் பிள்ளைக்கு
எதற்கு அம்மா கைத்தொலைபேசி?
கப்பல் ஏறி அவன்
பள்ளி செல்லவில்லையே?
பக்குவமாய் எடுத்துரைத்து
பல்கலைகள் கற்றிடவே
பகுத்தறிவு பெருகிடவே
ரியூற்றரிகள் தேவையெனில்
பிள்ளையை அனுப்பிவிட்டு
பின் தொடர்ந்து கவனி.
அன்பான அன்னையரே!
எனது தாழ்வான வேண்டுகோள்
அன்னையாய் மட்டும் இருந்திடாமல்
நல்தோழியாய் நீ இருந்து
உன் மகனை நீ அழைத்து
பெண்மையின் மகத்துவத்தை
துல்லியமாய் விளக்கிவிடு
அதை விடுத்து தொடர் நாடகங்களை
பார்த்துவிட்டு சிந்தனையை
அதில் பதித்து விட்டால்
உன் பிள்ளை வாழாது
பாதியிலே மாண்டுவிடும்.

**பா.ஜிசிந்திலா**
**2013 கலைப்பிரிவு**

# தன்னம்பிக்கை கொள் பெண்ணே!

கசந்து போன வாழ்க்கையில்
பாலைவனம் ஆன உன் மனதை
சோலை வனமாக மாறுவதற்கு
கையில் நீ எடுக்க வேண்டியது
தன்னம்பிக்கையை மட்டுமே

தன்னம்பிக்கைக் கொண்டு என்றும்
தளராத முயற்சி எனும் வழி நடந்தால்
உன் முன் இருக்கும் வெற்றி இலக்கும்
உன்னை நோக்கி வந்திடும் உறுதி

நடந்த பாதையில் கல்லும் முள்ளும்
காயம் செய்ததை எண்ணி மயங்கி
நடக்கும் நடையில் தொய்வும் கொண்டு
நனவைக் கனவாய் மாற்றி விடாதே.

கண்டங்கள் பல கண்டது எப்படி?
கால் தடம் நிலவில் பதித்தது எப்படி?
மாண்டு மடியினும் மனிதன் துணிவால்
மனதில் கொண்ட தன்னம்பிக்கையால்

உன்னுள் இருக்கும் ஆற்றல் உணர்ந்து
உலகம் பயனுற வெளியில் கொணர்ந்து
என்றும் நிலைக்கும் செயல்கள் செய்து
மலை போலும் செல்வாய் நிமிர்ந்து.

**செல்வி. சு. தர்ஷா**
**2013 கலைப்பிரிவு**

# மௌனம்...

என்னைப் போல் ஒருவர் - இங்கு
என்னிடத்தில் பேச — வேறு
யாருமே இல்லையடி — பெண்மை
மௌனத்தின் உருவமடி ..............

என் கண்மை காய்ந்த போதிலும் - உன்
பெண்மை இன்னும் மாறவில்லை - இது
ஆண்டவனின் கட்டளையோ - இல்லை
என் ஆதிக்கத்துள் அடங்கும் உன் மௌனந்தானோ......

காலையில் மக்கள் கலகலப்பு — பின்
மாலையில் ஓய்ந்ததும் பரபரப்பு — உன்
கால்விரல் ஓசையில் சலசலப்பு - இவை
எல்லாம் அடக்கும் உன் மௌனச் சிரிப்பு ..........

சத்தியம் செய்பவர் மாண்டதில்லை - இது
நானாக யாருக்கும் உரைத்ததில்லை
மௌனமும் என்றும் தோற்றதில்லை — பெண்
சாதனை யெல்லாம் மௌனப் பாதையில்.........

நீ பேசும் வார்த்தையால் வெல்லாத செயலை
பெண் மௌனப்பார்வையால் வென்றொழிக்கும் காலம்
நீ வாழும் காலம் பேச்சுத் துணை உனக்கு — நீ
வாழ்ந்து முடிந்ததும் மௌனமே கதி உனக்கு .........

பெண்மையே நீ பேசும் மௌனம்
என்னையே உன்னிடம் ஈர்க்கத் துடிக்கும் - என்
கண்ணையே நீ பறித்துவிட்டாய் - இவை
எல்லாம் யாரால்? மௌனம் .............. மௌனம்........

**செல்வன். அ. சண்முகப்பிரியன்**
**11B**



சதுரங்கஅணி-2011

மேலைத்தேய வாத்திய இசைக்குழுவினர்





கல்விசாரா ஊழியர்கள் - 2011

ை
வ
ை
ெ

பு
எ
ஆ
வ

அ
க
ெ
ச

# மனிதன்

வையகம் வாழ்வாங்கு வாழ - வழி
வகுப்பவனும் மனிதன் - அவ்
வையகம் கெட்டொழிய பற்பல
செயல்கள் செய்பவனும் மனிதன்

புதிய மனிதா பூமிக்கு வா(டா)
என்றான் கவி வைரமுத்து
அவன் குரல் கேட்டோ,என்னவோ
வந்தனர் சில மனிதர்கள்

அவர்கள் புதிய மனிதர்கள் அல்ல - அக்
கவிஞரின் பாட்டுக்கு எதிர்ப்பாய்
வந்த பழைய மனிதர்கள் - அவர்களே
கிறீஸ் மனிதர்கள் மர்ம மனிதர்கள்

வந்தனர் கிறீஸ் பூசிய மனிதர்கள் - வந்து
கொன்றனர் தமிழினத்தின் விடிவை
முடியுமா?இந்த தமிழினத்தின் யுத்தம் - அதை
முடித்துக் காட்டுவோம் என்றும் தலை நிமிர்வோம்.

புதிய மனிதனை வரச் செய்வோம் - அவன்
வழிமூலம் தமிழினத்தை வென்றெடுப்போம்
எம் தமிழினத்தை விடிவை நோக்கி கொண்டு செல்ல
வருவான் எழுந்தொரு புதிய மனிதன்.

செல்வன்.சி.தனுராஜ்
10A

❀ ❀ ❀

# சமாதானம்

மாண்புறு இலங்கை மாதாவின் மக்கள் நாம்
மேன்மையாய் இம் மண்ணில் வாழ்ந்திடவே
காண்போம் எமக்குள்ளே கனிவான ஒற்றுமையை
களிப்புடன் என்றும் ஒன்றாய் இருந்திடவே

பல்லினம் வாழ்ந்திடும் எம் திருநாட்டில்
நல்லதையே தினம் தினம் செய்திடுவோம்
எல்லோரும் ஒன்றே என எண்ணிடுவோம்
ஏற்றமுடன் எல்லோரும் வாழ்ந்திடுவோம்

புத்தரின் தர்மமும் புனித குர்ரானும்
உத்தமர் யேசுவின் உயர்வான போதனையும்
தித்திக்கும் கீதையும் திசையெங்கும் வேதமும்
அத்தனையும் எமக்காம் உத்தமராய் வாழ்ந்திடவே

போதி மரத்தடியில் புத்தரோடு விநாயகரும்
சாதியை மறந்தே சங்கமிக்கின்றனர்
சோதிவடிவான கதிர்காம கந்தனிடம் -நல்ல
செய்தி கேட்க எல்லோருமே செல்கின்றனர்

ஓடிடும் குருதியும் உதிர்ந்திடும் கண்ணீரும் - எல்லோர்க்கும்
ஓன்றேதான் எல்லோர்க்கும் என உணர்த்திடுவோம்
வீசிடும் தென்றலும் வீழ்ந்திடும் மழை நீரும் - ஒரு
சாதிக்கில்லை என அறிந்திடுவோம்

சித்திரைப் புது வருடமதை சிறப்புறவே
சிங்கள மக்களும் தமிழரும் கொண்டாடுகிறார்
தித்திக்கும் வைகாசி விசாகப் பௌர்ணமியும்
அத்தனை நிகழ்வுகளும் ஒற்றுமைக்காய் ஆகாதோ.

மோதல் அற்ற மாநிலம் உருவாக வேண்டும்
சமாதான வெண்புறா என்றும் பறந்திட வேண்டும்
பலவின மக்களாய் நாம் பறந்தாலும் - நாம்
இலங்கை மாதாவின் மக்களாய் வாழ்ந்திடவேண்டும்

**செல்வன்.சொ.தருமதன்**
**2012 கலைப்பிரிவு**

❀ ❀ ❀

# இனி வருமா

மழலைகள் கூடி மகிழ்வுடன் ஆடிய
மண்ணின் மடியிலே மாண்டனர் மடிந்தனர்
ஆண்டரைக் கணத்திலே
பசியும் பிணியும் தொடர்ந்து விரட்ட
பற்றியது இதயம் பல தடைவ
வானரங்கள் தொடர்ந்து விரட்ட
எம்மரன்கள் எமக்கெதிரியாகின.
வீடுகளை விட்டு வெளியேறியே
மரத்தடி நிழலிற்குத் தஞ்சமானோம்
சிதறிய மக்களின் பதறிய ஓசைகள்
வழி தெரியாது உருண்டு ஓடின.

கண்ணீர் சொரிந்தே
கடல் நீர்மட்டம் உயர்ந்தது
கைகளை இழந்தோம்:
கால்களை இழந்தோம்:
கணவனை இழந்தோம்
வினையோடு இணைந்தோம்
உறவினை இழந்தோம்
உரிமையை இழந்தோம்
கண்களில் ஈரமில்லை
கண்ணீரும் வற்றியது

வளர்த்தெடுத்த எம் வையகம் மீது
வழி தெரியாது வதங்கி நின்றிட்டோம்
தொடர்ந்து அணுக்கள் எம்மைத்
தொடர்ந்தும் விரட்டின.
தொடர்கதை போலெம் துன்பமும்
தொடர்ந்தது
வரலாறு காணாத
வாழ்க்கையை வாழ்ந்தோம்
குருதி பெருகியது - கூடவே
குரூரம் பெருகியது
கும்பிட்ட தெய்வமும் கைவிட்டது
குளறல்கள் எங்கும் பின்தொடர்ந்தன
எத்தனை அழிவுகள் .....?
எத்தனை அழுகுரல்கள் .......?
எத்தனை வலிகள் ........?
இத்தனையும் மனக் குமுறல்கள்
இடர்களை எண்ணிப் பார்க்கையில்


இன்னமும் இன்னல் இருக்கிறது.
பிணங்கள் மட்டுமே எஞ்சிப்போயின
சினங்கள் மட்டுமே சீறி வந்தன.
வணங்கல் யாவும் தொடர்ந்தே செய்தனர்
வளங்கள் யாவும் அழிந்தே போயின
சுமைகளும், சோகங்களும் சுட்டெரித்தன
சுடலையானதே எமது சுவர்ணபூமி
சிசுக்களின் சீறல்கள் சிறி ஒலித்தன
கொசுக்களைப் போலெம்மை
நசுக்கிக் கொன்றனர்
வாய்கள் வறண்டன!
வயிறுகள் குளறின!
உறவுகள் அழிந்தன!
உரிமைகள் பறந்தன!
வறுமைகள் தொடர்ந்தன!
வலிகள் வாட்டின!
வேதனைகள் வெருட்டின!
சோதனைகள் சோதித்தன!
சுகங்கள் வெறுத்தன!
உயக்கங்கள் எம்மை ஊடறுத்தன
ஊழியெம் ஊரை ஊடறுத்தது
ஊருலாவிய எம்மைப் பார்த்து.
ஊரரற்றியது; வானமும் கூட;
கொட்டிய மழையிலும்,
கட்டிய சேலையோடு,
தொட்டிற் பிள்ளையோடு,
தெருவிலே நின்றிட்டோம்,

எல்லா இரவுகளும் விடியலைத் தேடின
எட்சியைத் தேடி நாங்களும் சென்றோம்.
மரமதுவே கூரையாக,
மண்ணதுவே படுக்கையாக
இரவுகளே வாழ்க்கையாக,
இன்பங்களோ எட்டாதவையாக,
மண்ணினின்ற மரங்களைப்போல - மனிதர்
மனங்களுமாங்கே மரத்துப் போனது
அவலங்கள் எங்கும் அதிகரித்ததனால்,
அமைதியைக் காண்பது அரிதாகியதே
சூரியன் கூட உடம்பதனை
பதம் பார்த்தது; துப்பாக்கித்

தோட்டாக்கள்
சீறியதுவே சில காலமாக
சீரிடமாக விளங்கிய மண்
பலங்கள் பதம் பார்த்த
பிணங்கள் மிதமாகியதனால்
சுடலையாகியதே சொந்த இடங்கள்.
சடங்குகளும், சம்பிரதாயங்களும்
சாவினைத் தழுவின.
பசியினால் ஆங்கே
புலங்களை இழந்தோம்
போர்க்களத்தால் புதைந்தது பூமி
பார்,மக்கள் பார்த்து பயந்தனர்,
சீர்கெட்ட வாழ்வை நாளும் வாழ்ந்து,
தீர்விலாப் பிரச்சினையால் தினமும் திண்டாடினோம்
கார்முகில் கூட கண்ணீர் விட்டதே
நாமிங்கு படுங் கடுந் துயர் கண்டு.

இத்தனை துயர்களை,
எண்ணற்ற நாட்களாய்,
கண்ணாரக் கண்டு,
கணத்தோடு இணைந்த,
கண்களிற்கு,
இனியாவது வருமா,......
இன்பமான ஒரு விடியல்.......?

**செல்வி. கோ. சங்கீதா**
**11A**



# இது யாருக்காக..

இது யாருக்காக.........
வடக்கில் வசந்தம் வந்ததென்று
வெற்று வார்த்தைகள் கொட்டிநின்றார்
வசந்தம் வந்தது வடக்கிற்கா?
இல்லை இவர்களுக்கா?

வட்டமான பெரும் பாத்திரம் இரண்டு வைத்து
வடிவாக விறகும் கட்டிவைத்து
படங்கு கொண்டு அதனை மூடிவைத்து
வரிசை வரிசையாய் வரும்
வாகனங்களில் சுற்றித் திரிந்து
தரித்து நிற்கும் இடமது எதுவெனிலும்
விறகுமூட்டி அடுப்பு வைத்து அவித்து
வயிராற உண்டு, கழிவுகளை அதிலே வீசும்
வயதுவந்தவர்களுக்கும்
வயதுக்கு வந்தவர்களுக்கும்
வயதுக்கு வரப்போகின்ற
இவர்களுக்கல்லவா வசந்தம்

வந்த வாகனத்தில் இருந்ததுகள்
சந்தியில் வீதியில் நின்றதுகளைக்
கண்டு கரங்களை ஆட்டிட,
வந்த வாகனங்கள் சைகள் ஏதுமின்றி
நடுவழியில் நின்றுவிட
பின்னும் முன்னும் வந்ததுகள்
வழி தெரியாது முழி பிதுங்கி நிற்க
பாசப்பறவைகளாய் சொல்லாடல்
புரியும் இவர்களுக்கல்லவா இங்கு வசந்தம்!

வாங்கு, கட்டில், கதிரை, மேசை
கோப்பை, பேணி, சட்டிகளும்
கன்றுகள், மரங்கள், பூத்தடிகள்
உடுபுடவை துணிமணிகள்
உணவுப் பண்டங்கள், பொருட்கள் பல
கொண்டுவந்து
வெட்ட வெளியில் கொட்டில் முளைத்திட
அவற்றின் கீழே இவை பரப்பி
வடக்கின் பணத்தை சுருட்டிச் செல்லும்
இவர்களுக்கும்
மலிவு மலிவு மெத்தையென
செத்தையெல்லாம் கூவித்திரியும்
இவர்களுக்குமல்லவா இங்கு வசந்தம்!

உங்கள் துயர் துடைப்போம்
உதவிகளும் நாம் தருவோம்
உங்கள் நண்பர் நாங்கள்
கனவிற் காணாத பல பொருட்களைத்
தந்திட வந்தோம்
உங்கள் பணத்தை வைப்பிலிடுங்கள்
என்று கூறி சொகுசு வாகனத்தில்
வருகை தந்து மாலை வாங்கி
நாடாவெட்டி படத்துக்கு முகங்காட்டி வீண் வசனம்
நாலு பேசி வந்த வருகையல்
சென்றுவிடும் வங்கிகள் பல திறக்கும்
இவர்களுக்கல்லவா வசந்தம்!

யுத்தம் ஓய்ந்தது என்று
சத்தம் போடுகிறது அங்கொருகூட்டம்
நித்தம் இங்கு நிலைத்து நின்றிட
புத்தம் புதிதாய் பொலிவுடன் நின்றிட
முகாம்கள் அதனில்
முகப்பொலிவுடன்
உலாவிடும் இவர்களுக்கும்
குச்சொழுங்கை பெரிய ஒழுங்கை
முச்சந்தி நாற்சந்திகளில்
முழத்துக் கொன்றாய் முளைத்து
நிற்கும் சட்டத்தின் காவலர்களாம்
இவர்களுக்கு மல்லவா இங்கு வசந்தம்!

விருந்திற்குப் பெயர் போன
தமிழினத்தின் வாரிசுகள்
விரோதிகளாய்ப் பார்த்த
வந்தவர்க்கும் வருகின்றவர்க்கும்
வர இருப்பவர்க்கும் ஒரு பொழுது
இளைப்பாற வாடகைக்கு
வீடு விடும் இவர்களுக்கும்
அறியாத பாசை சில அறிந்து
வந்தவனை அங்கிங்கு
அசையவிடாது தரமற்ற பொருளையெல்லாம்
அவன் தலையில் கட்டி விட்டு
தாளிற்கு கரம் நீட்டும்
இவர்களுக்குமல்லவா
இங்கு வசந்தம்!

வளர்த்த மண் கிடைக்குமென்று
வாக்குகளுக்காய்
வாய் கூறும் வார்த்தைகளைக் கேட்டு
வாழ்நாளை வீணாக்கும்
வலிகாம மக்களுக்கு எப்பொழுது தான்
வசந்தம்
எமது பள்ளிக்கு இயல்பாக
வந்து செல்ல
எம் வயலில் நாற்று நட்டு
அறுவடை கண்டு மகிழ்ந்திட
என் தாத்தாவும் பாட்டியும்
தம் பேரன் பேர்த்திகளுடன் தம்
வீட்டு முற்றத்தில் கூடியிருந்திட
எப்போ வரும் வசந்தம்.

**செல்வன்.ம.கோகுலசாயி**
**11A**

❀ ❀ ❀

## வெற்றிப் புன்னகை பூக்கட்டும்...

காலம் யாவும் கல்வியிலே
ஊக்கம் காண வேண்டுமென
ஞாலம் புகழ நம்முன்னோர்
ஆக்கிய அருங்கொடை எனத்திகழும்
யூனியன் தாயின் மைந்தர்கள்நாம்
சூழும் துயர்கள் தனைமறந்து
இனிதே பெற்ற வெற்றிகளை
நினைத்தே மகிழும் திருநாளே!
வெற்றித் திருமகள் எம்முன்னே
விரைந்தே உவந்து எமைவாழ்த்த
குற்றம் அறத்தினும் கற்றவர் நாம்
குதூகலம் மிகு விளையாடலிலும்
பெற்ற வெற்றி தனை நினைத்து
பேசும் வண்ணம் இந்நாளில்
ஏற்றம் மிகவே தரும் பரிசில்
ஏந்தி மகிழும் திருநாளே!

இன்னு மின்னும் இனிமை தரும்
இப்பெரு விழாவின் முன்னாக
நன்றே அதிதி தமைஅழைத்தும்
தார்கள் பலவே மதிசூட்ட
கொட்டி முழங்கும் வாத்தியங்கள்
கோலக் கவிதை மிகுபாட
நாட்டமுடனே வந்தவரை
நன்றே அழைத்து மகிழ்வோமே!

எம்மை ஆண்ட அன்னியர்கள்
எடுத்த கல்விக் கோயிலென
செம்மை உறவே திகழ்கின்ற
யூனியன் தாயின் மாட்சியினை
இம்மாநிலத்தில் ஏற்றிடவே
இலங்கும் புவனேஸ்வரி அன்னை
தம்மைத் தொழு தடிபணிந்தே
பெறுவோம் பரிசில் பெறுவோமே!

கல்வியில் உயர்ந்த மாணவரும்
கலைகளின் இருப்பிட மானவரும்
இல்லமெய் வன்மையில் சிறந்தவரும்
இனிதே ஒழுக்கம் படைத்தவரும்
நல்லவை செய்த நயத்தாலும்
நாளும் மகிழ்ச்சி பொங்கிடவே
கல்வித் தாய் தமைப் பணிந்தே
பெறுவார் பரிசில் பெறுவாரே!

வெற்றிக் கேடயம் முன்னொளிர
வேட்கையுடனே நாம் இருக்க
பெற்றோர், பெரியோர், மற்றவரும்
பேணிய சபையின் நடுவினிலே
குற்றமற்றவர் அதிதி என
குளிர்ந்தே எங்கள் முகம்நோக்கி
உற்றவர் கைகளை மிகுகுலுக்கி
உகந்தே தருவார் புகழோங்கும்

கல்விக் கலைமகள் யூனியனின்
கவினுறு கீதம் இசை முழங்க
இல்லக் கீதம் தானொலிக்க
இனிதே உவகைப் பூமலர
கல்லூரி வர்ணக் கொடி பறக்க
கவின்தா மரையாய் முகமலர
மெல்லச் சென்று பரிசினையே
வாங்கி மகிழ்வோம் மகிழ்வோமே!

கல்லூரித் தாயின் மடியினிலே
கவினுறத் தவழ்ந்தே பெற்றவராம்
எட்டுத் திசையும் இசைபாட
என்றும் எங்கள் நெஞ்சினிலே
சொல்லும் பெருமை பூரிப்பால்
சோகம் யாவும் மறைந்தோட
கூட்டும் இன்பம் குதூகலமே
கூடிக் களிக்கும் திருநாளே!

மாணவர் ஆக்கம் ஊக்கமெல்லாம்
மாட்சி படைக்கும் விதமாக
காணக் கருதி களிப்போங்க
கல்விச் செல்வி புகழோங்க
குணமுறு யூனியன் தாய்நினைவில்
குன்றாய்ப் புகழை எமக்களிக்கும்
மணமிகு வாச மலர் போலும்
திகழும் திருநாள் இதுவன்றோ!

என்றும் எம்தாய் எமக்களித்த
எழில்திரு கல்வி சிலையாக
பொன் னாபரணம் எனத்திகழும்
பூக்கும் கல்வி மலரோடும்
இன்னும் இனிமைச் செயல்களினால்
இறும்பூ தெய்த வைத்தநிலை
நன்றே நெஞ்சில் நிலைத்திடவே
நவிலும் திருநாள் வாழியவே!!

**செல்வி.க.சிவரூபிநாயகி**
**2013 கலைப்பிரிவு**

❀ ❀ ❀

# பழமொழிகள் சொல்வது

சி.மதுசனா(8B)

- நியாயமான உரிமைகள் கூடக் கேட்டால்தான் கிடைக்கும் "அழுத பிள்ளை பால் குடிக்கும்"
- வாழ்க்கைக்குக் கண்டிப்பு மிக அவசியம் "அடியாத மாடு படியாது"
- துணிச்சல் உள்ளவன் கடந்தகால நிகழ்ச்சிகளுக்கு கவலைப்படமாட்டான். அதனால் அவனுக்குத் துக்கமில்லை. "துணிந்தவனுக்கு துக்கமில்லை"
- ஏட்டிலே உள்ளது எண்ணங்களுக்கு ஆதாரமாகலாம்; எண்ணங்கள் செயல்வடிவம் பெற உழைப்புத் தேவை; உழைத்த்வுடனே பலனை எதிர்பார்க்கவும் கூடாது; பலனுக்காகக் காத்திருக்க பொறுமையும் வேண்டும். 'கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே"
- இரசிக்கத் தெரியாதவர்களிடம் திறமையைக் காட்டாதீர்கள்; மதிக்கத் தெரியாதவரிடம் திறமையைக் காட்டாதீர்கள் " கழுதைக்குத தெரியுமா கற்பூர வாசனை?"
- உதவி செய்தவர்களை உயிருள்ளவரையும் மறக்காதே "உப்பிட்டவரை உள்ளளவும் நினை"
- நம்முடைய குற்றங்களைப் போக்கிக் கொண்டால் உலகம் நன்மை நிறைந்ததாகத் தெரியும் "காமாலைக் கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சல்"
- பேசிக்கொண்டேயிருப்பவர்கள் காரியத்துக்குப் பயன்படமாட்டார்கள் "குரைக்கிற நாய் கடிக்காது"
- எம் குற்றம் குறைகளை உணராது, சூழ்நிலையினையோ மற்றவர்களையோ குறைசொல்லக் கூடாது "ஆடத்தெரியாதவன் கூடம் கோணல் என்றானாம்"
- தன்னுடைய கஸ்டங்களைத் தாங்கிக்கொள்வதோடு மற்றவர் கொடுக்கும் கஸ்டத்தையும் தாங்க வேண்டியுள்ளது. "எருதின் நோய் காக்கைகுத் தெரியுமா?"
- சிறுசிறு முயற்சிகள் பெரிய சாதனைக்கு வித்திடும்; சிறிய சேமிப்பு பெரிய சேமிப்புக்கு ஆதாரமாகும். "சிறுதுளி பெருவெள்ளம்"
- எதுவும் செயற்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். "இரும்பும் தொழிலும் இருக்கக் கெடும்"
- கோபத்தைத் தூண்டுகிற காரியத்தைச் செய்யாதிருப்போர் அமைதிச் சூழ்நிலையை உருவாக்குவர். "எரிகிற கொள்ளியில் எண்ணெய் ஊற்றாதே"

# எனது நோக்கில் எமது அதிபர் திரு.சு.புண்ணியசீலன் அவர்கள்

**திரு. இ. சண்முகேஸ்வரன்,**
**பிரதிஅதிபர்,**
**யா/யூனியன் கல்லூரி,**
**தெல்லிப்பழை**



சமூக நிறுவனங்களில் பாடசாலை என்ற அலகு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக சமகாலத்தில் கருதப்பட்டு வருகிறது. இப்பாடசாலைகளை நிர்வகிப்பதில் பல்வேறு சவால்கள் எதிர்நோக்கப்படுகிறது. இதில் அதிபர் ஒருவரின் பங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்து காணப்படுகிறது. தற்கால கல்விக் கொள்கைகளின் அடிப்படையில் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்த வேண்டிய செயற்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இவற்றுக்கெல்லாம் பொருத்தமான வகையில் முகங் கொடுக்கவேண்டியவர் பாடசாலை அதிபரே.

இந்த வகையில் எமது யூனியன் கல்லூரி புகழ்பூத்த கல்லூரிகளுள் ஒன்று. அதுவும் தனது இருநூறாவது அகவையை அண்மித்துக் கொண்டிருக்கும் மிகப் பழமைவாய்ந்த கல்லூரி. தென்னாசியாவில் முதல் கலவன் பாடசாலையும் எமது கல்லூரியே. இத்தகைய வரலாற்றுப் பின்னணி கொண்ட இக்கல்லூரியை 1935களில் சுதேசிய அதிபர் ஒருவர் பொறுப்பேற்றார். அவர்தான் புகழ்பூத்த அதிபர் திரு ஐ.பி.துரைரட்ணம் அவர்கள். அவர்களது காலத்தில் கல்லூரி துரித வளர்ச்சி கண்டு கல்லூரியின் புகழ் எங்கும் பரவியது. ஏறத்தாழ மூன்று தசாப்த காலமாக திரு.ஐ.பி.துரைரட்ணம் அவர்கள் இக்கல்லூரியை நிர்வகித்து வந்தார். அதன்பின்னர் பல்வேறு அதிபர்கள் இக்கல்லூரியை பொறுப்பேற்று நடாத்தி வந்துள்ளனர். 1990களில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகள் வலிவடக்கு மக்களையும், எமது கல்லூரியையும் தமது சொந்த இடத்திலிருந்து வெளியேற்றியது. 1990 – 1995 காலப்பகுதியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் தற்காலிகமாக மிகவும் வளங்குன்றிய நிலையில் பாடசாலை நடாத்தப்பட்டது. அக்காலத்தில் கடமையாற்றிய அதிபர் திரு நா.கந்தசாமி, அதிபர் திரு பொ.கமலநாதன் ஆகியோரது பங்களிப்புக்களையும் மறக்க முடியாது. 1995ல் மீண்டும் இடப்பெயர்வு ஏற்பட்டமையால் வலிகாமம் மக்கள் அனைவரும் தென்மராட்சி நோக்கி இடம்பெயர்ந்தனர். எமது கல்லூரியும் அக்காலப்பகுதியில் இடம்பெயர்ந்து மீசாலை விரசிங்கம் மகாவித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கியது. மாணவர்கள் பலரும் பல்வேறு இடங்களில் சிதறுண்டு காணப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

1996ல் எமது கல்லூரி மீண்டும் இராமநாதன் கல்லூரிக்கு வந்தது. அப்போது அப்பாடசாலையில் யூனியன் கல்லூரிக்குச் சொந்தமான எந்த வளங்களும் இல்லாத நிலை காணப்பட்டது. இக் காலகட்டத்தில்தான் எமது கல்லூரியின் தலைமைப்பதவி புதியவர் ஒருவரிடம் கைமாறியது. அப்புதியவர் தான் இன்றைய புகழ்பூத்த அதிபர் திரு.சு.புண்ணியசீலன் அவர்கள். 1996 அக்டோபர் 15ல் தனது அதிபர் பதவியினை பொறுப்பேற்றுக் கொண்டார். அன்றைய தினம் இக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்ட தினமாகும். மிகவும் நல்லதொரு நாளில் அவர் பதவியேற்ற நிகழ்வு இக்கல்லூரி வளர்ச்சியடைவதற்கு அடிநாதமாக காணப்பட்டது என்றும் சொல்லலாம்.

தளபாடப் பற்றாக்குறை, மலசலகூட வசதியின்மை போன்ற அடிப்படை வசதிகள் எதுவும் இன்றிய நிலையில் அவர் இக்கல்லூரியைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இன்னொரு பாடசாலை வளாகத்தில் தற்காலிகமாக இயங்கினாலும் மாணவர்களுக்கோ, ஆசிரியர்களுக்கோ அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற உணர்வு அப்புதிய அதிபரின் மனதில் ஆழப்பதிந்தது. தனது அயராத முயற்சியினால் பெற்றுக் கொண்ட உதவிகளைக் கொண்டு மாணவர்க்குத் தேவையான அடிப்படை வசதிகள், ஆசிரியர்கட்குத் தேவையான அடிப்படை வசதிகள், மைதான வசதிகள். குடிநீர் வசதிகள் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுத்தார். வசதிகள் படிப்படியாக அதிகரிக்க மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர் எண்ணிக்கை அதிகரித்தது. கற்றல் பெறுபேறுகள் அதிகரித்தன. இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளிலும் எமது கல்லூரி அதீத வளர்ச்சி கண்டது. கல்லூரியின் புகழ் தேசியரீதியில் மட்டுமன்றி, சர்வதேச ரீதியாகவும் பரவின. இதற்கு உந்துசக்தியாக இருந்தவர் கல்லூரி முதல்வர் திருவாளர் புண்ணியசீலன் அவர்களே. அவருக்கு பக்கபலமாக கல்லூரி நிர்வாகமும், அர்ப்பணிப்புள்ள ஆசிரியர் குழாமும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பல்வேறு அழுத்தங்களின் பின்னணியில் எமது கல்லூரி மீண்டும் பன்னிரண்டு ஆண்டுகளின் பின்னர் தனது சொந்த இடத்திற்கு 10.:09.:2002 ல் நகர்ந்தது. அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற சிறைக்குள் அகப்பட்டுக் கொண்டது எமது கல்லூரி. மனித நடமாட்டம் இன்றிய சூனியப் பிரதேசத்துள் கல்லூரியை நடாத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை எமது அதிபருக்கு ஏற்பட்டது. அவர் எதற்கும் சளைக்காத ஒரு அதிபர் என்பதால் அதியுயர் பாதுகாப்பு வலயத்தை அவர் சவாலாக எடுத்துக் கொண்டார். பாதுகாப்புப் படையினரின் பல்வேறு கெடுபிடிகளுக்குள்ளும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், இணைந்த பாடச் செயற்பாடுகள் நடைபெற்றன. பல்வேறு வெற்றிகளும் கிடைத்தன. பல்வேறு சந்தர்ப்பங்களில் கல்லூரியின் நன்மை கருதி பாதுகாப்புப் படையினருடன் முரண்பட்டுக் கொண்டவர் எமது அதிபர் புண்ணியசீலன் அவர்கள். பலதடவை பாதுகாப்புப் படையினரால் பலாலி படைத்தள முகாமுக்கு எமது அதிபர் அழைக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டார். எதற்கும் பயம் இல்லாமல் கல்லூரிக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் எமது அதிபர் என்றால் அது மிகையாகாது.

கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்படும் போட்டிகளிலோ, வேறு நிறுவனங்களால் நடாத்தப்படும் போட்டிகளிலோ எமது கல்லூரி மாணவர்கள் பங்குபற்றுகிறார்கள் என்றால் அந்தப் போட்டி நடைபெறும் இடங்களில் எமது அதிபர் பிரசன்னமாக இருப்பார். அவருடைய பிரசன்னமானது பங்குபற்றும் மாணவர்கட்கும், பொறுப்பாசிரியர்கட்கும் ஊக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. போட்டி நடைபெறும் இடங்களில் எந்த தவறுகள் ஏற்படினும் அவர் சுட்டிக் காட்டுவார். அதுவும் தக்க நியாயமான காரணங்களுடன் சுட்டிக்காட்டி எமது மாணவர்கட்கு நீதி கிடைக்கச் செய்வார். முதலில் மாணவர்கள் நலன். அதன் பின்னரே ஏனைய நலன்கள் என்று அடிக்கடி கூறுவார். அவருடைய காலப்பகுதியில் தொடர்ச்சியாக பதினான்கு வருடங்களாக க.பொ.த (சா/த) பெறுபேறுகள் வலிகாமம் வலய மட்டத்தில் 1ம் இடத்தையும், மாவட்ட மட்டத்தில் முதல் ஐந்து இடங்களுக்குள்ளும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இணைந்த பாடச் செயற்பாடுகளில் குறிப்பாக வலைப்பந்து, மேசைப்பந்து போன்ற

விளையாட்டுக்களில் தொடர்ச்சியாக பதினான்கு வருடங்களாக மாகாணமட்டம், தேசியமட்டம் வரை எமது மாணவர்கள் வெற்றியீட்டியுள்ளனர். மாணவர்களின் பங்களிப்பும், ஆசிரியர்களின் அர்ப்பணிப்புக்களும் இவ் வெற்றிகளுக்கு காரணம் என்று கூறுவதுடன் மேலதிக வகுப்புக்களை வைப்பதற்கு, பயிற்சிகளை வழங்குவதற்கு மிகவும் ஆர்வத்துடன் நெறிப்படுத்தியவர் எமது அதிபரே.

கல்வித் திணைக்களம் சார்ந்த எந்தக் கூட்டங்களிலும் தலைநிமிர்ந்து நின்று கதைக்கக் கூடியவரும், தவறுகளை பயப்படாமல் சுட்டிக்காட்டிக் கொள்பவரும் எமது அதிபர் தான். தனக்கு என்று இல்லாமல் ஏனைய அதிபர்கள், ஆசிரியர்களின் நன்மை கருதி குரல் கொடுப்பவரும் எமது அதிபரே. எமது கல்லூரியில் ஆசிரியர்க்கு பொறுப்புக்களை வழங்குவதுடன் நின்றுவிடாமல் அதற்குரிய அதிகாரங்களையும் வழங்கிவிடுவார். இதனால் ஆசிரியர்கள் தற்துணிவுடன் மகிழ்ச்சிகரமான நிலையில் தமது கடமைகளை ஆற்றுவார்கள். மேற்பார்வைப் பணிகளை அவர் செவ்வனே செய்து கொள்வார். கல்லூரியில் இறுக்கமான போக்கைக் கடைப்பிடித்தாலும், எந்த ஆசிரியர் என்றாலும் இவரது கட்டுப்பாடுகளுக்குள் இருந்து விலகிச் சென்று விடவேண்டும் என்று ஒருபோதும் எண்ணியதில்லை. கடமைகளைச் சரிவரச் செய்யும் ஆசிரியர்கள் மீது அவர் என்றும் நன்மதிப்பு வைத்துக் கொள்வார். அதேவேளை வேலைகள் செய்யாமல் தொடர்ச்சியாக ஏமாற்று வித்தைகளைக் காட்டும் ஆசிரியர்களை விட்டு வைக்கவும் மாட்டார். மாணவர்களின் கொள்ளளவு அறிந்து அவர்களை வழிப்படுத்துவார். தக்க தருணங்களில் மாணவர்களுக்கோ, ஆசிரியர்களுக்கோ உரிய கௌரவங்களை வழங்குவதுடன் அவற்றுக்கான ஊக்கலையும் ஏற்படுத்திக் கொடுப்பார். இன்று எமது கல்லூரி பல்வேறு புதிய கட்டிடங்கள், பல புதிய கற்பித்தல் சாதனங்கள், கட்புல செவிப்புல சாதனங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றுடன் புதுப்பொலிவு பெற்றுக் காணப்படுகிறதென்றால் அதற்குக் காரணம் எமது அதிபர் அவர்களே.

எமது அதிபர் காலத்திலேயே நான் இக்கல்லூரியில் ஆசிரியராக, உபஅதிபராக கடமையாற்றி தற்போது பிரதிஅதிபராக கடமையாற்றுகின்றேன். எனது பதவிக்குரிய பொறுப்புக்களுடன் அதிகாரங்களையும் எனக்கு வழங்கியமையால் நான் அதிபருக்கும், கல்லூரிக்கும் நம்பிக்கைக்குரியவனாகக் கடமையாற்றி வருகின்றேன். அதிபர் அவர்கள் தனது 58வது வயதுடன் ஓய்வு பெறுகிறார். அவருடைய இந்த ஓய்வு எமது கல்லூரிக்கு பேரிழப்பே. ஈடுசெய்ய முடியாத இழப்பு என்றே கூற வேண்டும். இருப்பினும் தனது ஓய்வு காலத்தில் இந்தியாவிலுள்ள தனது மனைவி பிள்ளைகளுடன் மிகவும் சிறப்பாக வாழ்வார்; வாழவேண்டும் என்று எல்லாம் வல்ல ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாளைக் கேட்டுக் கொள்கின்றேன். இருப்பினும் பதினைந்து வருட கால யூனியன் கல்லூரி அதிபர் வாழ்க்கையை எமது அதிபர் ஒருபோதும் மறக்கமாட்டார்; மறக்கவும் கூடாது என்று அவரை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

❀ ❀ ❀

# மொழியில் இரட்டை வழக்கு

செல்வி. ச. புலேந்திரன்
(ஆசிரியை)

மொழி மனிதனைத் தொடர்பு படுத்தும் சாதனம். ஒவ்வொரு மொழியிலும் பலவகை வழக்குகள் உண்டு. மொழியை வேறுபடுத்தும் ஊடகத்தின் வேறுபாட்டால் "எழுத்து வழக்கு", "பேச்சு வழக்கு" என்ற இரு பிரிவுகள் ஏற்படுகின்றன. இவ்விரு வழக்குகளும் ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு அல்லது வட்டாரத்திற் குரியதாக அமையாது, மொழி பேசும் அனைவருக்கும் பொது வழக்காக அமைந்து விடுகின்றன. இதனை மொழியாய்வாளர்கள் ஆராய்ந்து பல கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இவ்விரு வழக்குகளையும் மக்கள் தமக்குப் பொருந்தாத சூழலில் பயன்படுத்த இயலாத வண்ணம் சமூகக் கட்டுப்பாடு இயல்பாக அமைந்து விடுகின்றது. இத்தகைய கட்டப்பாடுகள் மொழியில் இருப்பதை "இரட்டை வழக்கு" (Didlossial) எனக் குறிப்பிடுவார். இந்த இரட்டை வழக்கு நிலை (Diglossia situation) எல்லா மொழிகளிலும் காணப்படுவதில்லை. எனவே இரட்டை வழக்குடைய மொழிகளைச் சிறப்பாக "இரட்டை வழக்கு மொழிகள்" (Diglossic language) எனச் சிறப்பித்துக் கூறப்படும்.

Ferguson என்பவர் 1959ல் முதன்முதலில் இரட்டை வழக்குக் கோட்பாட்டினை ஆராய்ந்த மொழியியலாளர். அராபிய மொழி, கிரேக்க மொழி, ஜேர்மன் மொழி, பிரெஞ்சு மொழி குறிப்பாக தமிழ் மொழியிலும் இரட்டை வழக்கு உள்ளதாய் குறிப்பிட்டிருந்தார்.

ஒரு மொழியில் இரட்டை வழக்கு தோன்றுவதற்கு மூன்று பெரும் காரணங்களை பெர்கூசன் கூறுகின்றார்.

- ஒரு மொழி நீண்ட இலக்கிய வரலாறு உடையதாக இருந்து நிறைய இலக்கிய நூல்களைப் பெற்றுத் திகழ வேண்டும்.
- அம்மொழி பேசும் மக்கள் கல்வியறிவு (Literacy) உடையவராக இருக்க வேண்டும்.
- அவ்வண்ணம் இலக்கிய வளமும் கல்வியறிவும் அச் சமூகத்தில் நீண்டகாலமாய் நிலைத்திருக்க வேண்டும்.

ஒரு மொழியில் இம் மூன்று கூறுகளும் இருக்குமானால் அது இரட்டை வழக்குப் பெற வாய்ப்புண்டு எனக் கூறுவார்.

உயர்வழக்கும், பேச்சுவழக்கும் தாம் பெற்றிருக்கும் மொழியியற் கூறுகளால், கற்றறியப்படும் முறைகளால் தாம் பயன்படுத்தப்படும் சூழலால் தமக்குச் சமூகம் அளிக்கும் மதிப்பு நிலைகளால் வேறுபட்டு விளங்குகின்றன. இதனை மொழி வல்லுநர்களும் பயன்படுத்தல், மதிப்பு, இலக்கிய மரபு, கற்றறிதல், நிலைபேறு, நிலைத்தன்மை, இலக்கணம், சொல், ஒலிப்பு முறை ஆகிய ஒன்பது பண்புகளும் இரட்டை வழக்கு மொழிகள் அனைத்துக்கும் வரும் எனக் கூறுவார்கள்.

எந்தச் சூழலில் எந்த வழக்குப் பயன்படுத்தப்படும் என்பதை ஓரளவு

மொழி வழக்குத் தீர்மானித்து விடும். ஒரு வழக்குப் பயன்படும் இடத்தில் வேறொரு வழக்கு பயன்படுவதில்லை. அப்படி வந்தாலும் அது பொருத்தமற்றது. எழுத்து வழக்கு செம்மையான சூழலுக்கும் (Formal Situation), பேச்சு வழக்கு இயல்பான சூழலிலும் (Informal Situation) பயன்படுகின்றன.

எழுத்து அல்லது உயர் வழக்கு பயன்படும் இடங்களாக நாம் பின்வருவனவற்றைக் கூறலாம்.

- ✠ கோவில், மசூதிப் பேருரைகள்
- ✠ தொழில் ரீதியான கடிதங்கள்
- ✠ அரசியல் மற்றும் நாடாளுமன்றச் சொற்பொழிவுகள்
- ✠ பல்கலைக்கழக விரிவுரைகள்
- ✠ செய்தி ஒலிபரப்புக்கள்
- ✠ செய்திகள், தலையங்கங்கள், கருத்துப்படத் தலைப்புக்கள்
- ✠ மரபுரீதியான கவிதைகள் என்பவற்றில் பெரும்பாலும் காணலாம்.

மற்றும் பேச்சு வழக்கு பயன்படும் இடங்களாக நாம் பின்வருவனவற்றைக் கூறலாம்.

- ✠ பணியாளர்கள், அலுவலர்கள் முதலியோருக்கு குறிப்புரை வழங்குதல்
- ✠ அலுவலக நண்பர்கள், உறவினர்களுடன் உரையாடல்
- ✠ வானொலி சமூக நாடகங்கள்
- ✠ அரசியல் கருத்துப்படத் தலைப்புக்கள்
- ✠ நாட்டுப்புற இலக்கியங்கள் போன்றவற்றில் பெரிதுங் காணலாம்.

இரட்டை வழக்குடைய மொழிகளுக்கு சூழல் ஒன்றாக அமையாது. அவை மொழிக்கு மொழி மாறுபடும் தன்மை கொண்டன. இலங்கையில் பேசப்படும் சிங்களமொழி இரட்டை வழக்கு மொழியாகும். அதில் உயர் வழக்கு எழுத மட்டுமே பயன்படுகின்றன. எழுதப்பட்டவற்றை வாசிக்கும் போது மட்டும் அதனைக் கேட்க முடியும். ஆனால் பேச்சு வழக்கானது அவ்வாறு இல்லை. தமிழ்மொழியில் உயர்வழக்குப் பயன்படும் சூழல் அவ்வாறு இல்லை. மேடைப் பேச்சுக்களிலும் ஏனைய அறிவுசார் மட்டங்களிலும் இரு வழக்கையும் சேர்த்தே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழில் நாவல்கள், திரைப்படப் பாடல்கள், கவிதைகள், சிறுகதைகள் ஆரம்ப காலங்களில் உயர்வழக்கே பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆனால் தற்காலத்தில் மேற்கூறிய விடயங்களில் பேச்சு வழக்கும் பயன்பட்டு வருகின்றன.

இரட்டை வழக்குடைய மொழிகளில் உயர்வழக்கு சமூகத்தால் பெரிதும் மதிக்கப்படுகின்றது. உயர் வழக்கில்தான் இலக்கியங்களைப் பெரிதும் படைக்கின்றார்கள். கல்விச் சூழல்களும் உயர்வழக்கினையே பயன்படுத்துகின்றன. ஏன்? ஒருவரின் கல்விப் புலமையும் அவரது உயர் வழக்கினாலேயே வெளிப்படுத்தப் படுகின்றது. உயர் வழக்கு என்பது அது பயன்படும் இலக்கியங்களைச் சுட்டுவதாகவும், உயர் வழக்கே மொழியாகப் பயன்படுத்துவதாலும் உயர்வழக்கே மொழியாகப் பயன்படுத்தப படுகிறது. மேலும் பேச்சு வழக்கானது குறையானது என்றும், திருந்தா மொழியென்றும், இழிசனர் வழக்கென்றும், கல்லாமாந்தர் பயன்படுத்துவதென்றும் கருதப் படுகின்றது. இப் பேச்சு வழக்கினை கல்வியறிவாளர்கள் மற்றவர்களுக்கு எளிதில் புரிய வேண்டும்

என்பதற்காகவே பயன்படுத்துகின்றார்கள் என்றும் காரணம் கற்பிக்கப்படுவதை நாம் காணலாம்.

எழுத்து வழக்குப் பெரும்பாலும் நிலைபேற்றுத் தன்மை கொண்டதாக இருக்கும். இலக்கிய மரபுடைய இரட்டை வழக்கு முறையில் காணும் எழுத்துக்கள், எழுத்து முறை, அவை ஒன்றோடு ஒன்று இணைந்து வரும் தன்மை, அவற்றின் ஒலிமுறை ஆகியன அவற்றின் நிலைபேற்றுக்கு காரணமாகின்றன. இத்தகைய நிலைபேற்றுத் தன்மை பேச்சுவழக்கிற்குக் கிடையாது. தொல்காப்பியர் காலத்தில் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனச் சொல்வேறுபாடுகள் குறிக்கப்படுகின்றன. தமிழ்மொழியிலும் தொல்காப்பியர் காலம் தொட்டே இரட்டை வழக்கு இருந்த வருவதாக ஃபெர்கூசன் கூறுகிறார்.

திரிசொல் என்பது எழுத்து வழக்கு என்றும் இயற்சொல் என்பது பொது வழக்கு என்றும் தொல்காப்பியர் காலத்தில் சொல்லளவில் வேறுபாடு நிலவின. கி.பி 6ம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுக்கள் பேச்சு வழக்கில் அமைந்திருந்தன. வடமொழிக்கலப்பும் பேச்சு வழக்கில் அதிகம் காணப்படுகின்றன.பக்தி இலக்கிய காலத்தில் பேச்சு வழக்கு, உயர்வழக்கு இலக்கியங்களிலும் மிகவும் விரவி வரலாயிற்று.

கி.பி 15ம், 16ம் நூற்றாண்டுகளில் எழுந்த பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் போன்ற சிற்றிலக்கியங்களிலும் பேச்சு வழக்கிற்கும் எழுத்து வழக்கிற்கும் இருந்த இடைவெளி குறையத் தொடங்கியது. ஆனால் 19ம் நூற்றாண்டில் இறுதியில் வலுப்பெற்ற மொழித்தூய்மை இயக்கம் இரு வழக்கிற்கும் இடையே உள்ள இடைவெளியை பெரிதுபடுத்தியது. மொழியறிவாளர்கள் சிலர் எழுத்து வழக்கே முதன்முதலில் தோன்றியது என்று கூற, சிலர் இல்லை எல்லா மொழிகளும் முதலில் பேசப்பட்ட பின்புதான் வரிவடிவம் பெற்று எழுத்து வழக்காகியது என வாதிடுவார்கள்.

Kloss (கிளொஸ், 1973) என்னும் மொழியாய்வாளர் ஒரு மொழிக் குடும்பத்தைச் சார்ந்த இரு மொழிகள் இரட்டை வழக்கு நிலையில் பயன்படுத்தப்படுவதை "அக இரட்டை வழக்கு" (In-diglossia) என்றும் இரு வேறுபட்ட குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் இரட்டை வழக்கு நிலையில் பயன்படுவதைப் "புற இரட்டை வழக்கு" (Out – diglossia) என்றும் குறிப்பிட்டுள்ளார்.

1959ல் ஃபெர்கூசன் இரட்டை வழக்குக் கோட்பாட்டினை வெளியிடும் போது அராபிய, கிரேக்க, சுவிஸ் நாட்டில் பேசப்படும் ஜேர்மன் மொழி ஆகியவற்றையே மேற்கோள் காட்டினார். அராபிய மொழியில் பன்னெடுங் காலமாக இரட்டை வழக்கு நிலை முன்னரே நிலைத்தன்மை பெற்றமையைக் காணலாம். கிரேக்க மொழி இரட்டை வழக்குடைய ஒரு மொழியாகும். கிரேக்க மொழியின் உயர்வழக்கினை "கத்தரேவுசா" (Katharovosa) எனப்படும். பேச்சு வழக்கு "திமோத்திஸி (Dhimotiki) என்றும் வழங்கப்படும்.

தமிழ்மொழிக்கு தொல்காப்பியர் காலத்தில் செய்யுள் வழக்கு, உரைநடை வழக்கு, பேச்சு வழக்கு என்னும் மூன்று வழக்குக் கூறப்பட்டு "மூவழக்கு நிலை" (Friglossia) எனக் கூறப்பட்டுள்ளது. தமிழ்மொழியில் சொற்கள் இயல்பு

வழக்கு, தகுதி வழக்கு, எனப் பயிலப்பட்டு எப்பொருட்கு எச் சொல் அமைந்ததோ அப்பொருளை அச்சொல்லால் அழைத்தலை இயல்பு வழக்காயும், இவற்றையே இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என்றும் ஒரு பொருளை அல்லது ஒரு விடயத்தினை குறிப்பிட்ட இயல்பான சொல் இருக்க அது தகுதி அன்று எனக் கருதி வேறு சொல்லால் தகுதிப்படுத்திக் கூறுவது தகுதி வழக்கு என்றும் இதனை முறையே இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என்றும் கூறுவர்.

எனவே இரட்டை வழக்கு சமுதாயத்தால் தீர்மானிக்கப்படுகிறது. இது தேவை கருதி பயன்படுத்தப்படுகிறது. எழுத்து அல்லது பேச்சு சிறப்பாக அமைய நடை (Style) மாற்றப்படுகிறது. நிலைபேறடைந்த எல்லா மொழிகளிலும் உயர்வழக்கு செம்மையான சூழல்களிலும் பேச்சு வழக்கு இயல்பான சூழல்களிலும் பயன்படுகின்றன. மராட்டியமொழி இரட்டை வழக்கற்ற ஒரு மொழியாகும். தமிழ்மொழியைப் பொறுத்தவரை எதிர்காலத்தில் இரட்டை வழக்கு தொடர்ந்து இருக்குமா? என்பதற்கு கல்வியறிவு பெருகப் பெருக தொடர்பு சாதனங்கள் (Mass Media) பெருகப் பெருக பலரும் பலருக்காக எழுதத் தொடங்கவும் இரட்டை வழக்கு நெகிழும் தன்மைக்கு வரும் எனலாம். எனவே நிலைபேற்றுத் தன்மையுடைய எல்லா மொழிகளுக்கும் இரட்டை வழக்கானது ஒன்றை ஒன்று சார்ந்து அதன் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு புதுமை செய்வனவாய் அமைவதை இன்றைய மொழிப் போக்கில் வைத்து உணரலாம்.

❀ ❀ ❀

# 1960களின் பின் ஈழத்து தமிழ் நாவல்

திருமதி. சி. தவராஜா
(ஆசிரியை)

அரசியல், பொருளாதாரம், சமூக மாற்றங்கள் என்பன காரணமாக அறுபதுகளின் பின் ஈழத்து நாவல் இலக்கியம் வளர்ச்சி கண்டுள்ளது. இக்காலப் பகுதியில் காணப்பட்ட சுய மொழிக்கல்வி நாவல் இலக்கியத்தின் நோக்கையும், போக்கையும் மாற்றம் பெறச் செய்த காரணிகளில் முதன்மையானது எனலாம்.

அறுபதுகளின் பின் சமுதாயச் சீர்திருத்த நோக்கில் இலக்கியம் படைக்கப்பட்டு சமூக முன்னேற்றப் பண்புமிக்க நாவல்கள் தோற்றம் பெற்றன. பிரதேச உணர்வு, சுயமொழி உணர்வு, பொதுவுடமை உணர்வு, சமத்துவம், மானிடம், பெண்ணியம் போன்ற உணர்வுகள் மேலோங்கிய காலம் ஏற்பட்டமையால் சாதிப்பிரச்சினை, சீதனக் கொடுமை, முற்போக்குச் சிந்தனை போன்ற பண்புகள் கொண்ட நாவல்கள் தோன்றின. காலத்தின் தேவையைப் பிரதிபலிக்கும் மண்வாசனை மிக்க நாவல்களும் பிறந்தன. இதனை ஊக்குவிக்கும் வகையில் இக்காலப் பகுதியில் சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் தொழிற்பட்டன என்றால் அது உண்மையே.

அறுபதுகளின் முன் ஈழத்தின் வடக்கு கிழக்கு சம்பந்தப்பட்ட நாவல்களே எழுந்தன. ஆனால் இந்நிலை அறுபதுகளின் பின் மாற்றமடைந்தது. ஈழத்தில் எங்கெங்கெல்லாம் தமிழ் வாசகர்கள் வாழ்கின்றார்களோ அங்கேயெல்லாம் அவர்களின் வாழ்க்கைக் கோலத்தை சித்திரிக்கும் நாவல்கள் தோற்றம் பெறலாயிற்று. குறிப்பாக முஸ்லீம் மக்கள் வாழ்ந்த பிரதேசம், மலையகம், வன்னிப்பிரதேசம் போன்றன பற்றிய பிரதேச நாவல்கள் தோற்றம் பெற்றன. இவற்றை விட தொழிலாளரின், மீனவர்களின், பெண்களின் துயர் நிறைந்த வாழ்க்கையைத் துடைக்கவும், மேல்மட்ட மக்களின் பண்பற்ற தன்மையைச் சாடவும், சாதிப்பிரச்சினையினை ஒழிக்கவும் நாவல்கள் தோற்றம் பெற்றன. எழுத்தாளர்களினால் கைவிடப்பட்ட இப் பிரச்சினைகள் யாவும் கருப்பொருளாகக் கொண்டு புதிய வேகத்துடன் முற்போக்கு எழுத்தாளர் சங்கமும், இளந் தலைமுறையினரும் நாவல்களைப் படைக்கத் தொடங்கினர்.

இந்த வகையில் காதல், குடும்பப் பிரச்சினை என்பவற்றிற்குப் பதிலாக சமூக முன்னேற்றப் பிரச்சினையை மையமாகக் கொண்ட நாவல்கள் பல தோன்றின. 1965ல் செ.கணேசலிங்கனின் 'நீண்ட பயணம்' நாவலுடன் சமூக விழப்புணர்வு மேலும் சுடர்விடத் தொடங்கியது. இதைவிட செ.கணேசலிங்கனின் 1966ல் வெளிவந்த 'சடங்கு'. இதனைத் தொடர்ந்து 1969ல் 'போர்க்கோலம்', 1967ல் 'செவ்வானம்', 1968ல் 'தரையும் தாரகையும்', 1970ல் 'மண்ணும் மக்களும்' என்ற நாவல்கள் சாதி, அரசியல் என்பவற்றைக் கருப்பொருளாகக் கொண்ட நாவல்களாகத் தோற்றம் பெற்றன.

மேலும் 1972ல் வெளிவந்த கே.டானியலின் பஞ்சமர், கோவிந்தன் அடிமைகள், கானல் தண்ணீர், 1975ல் வெளிவந்த சாதிப்பிரச்சினை பற்றிய குறிப்பிடத்தக்க நாவலாகும்.

எழுபதுகளின் இறுதிக் காலப்பகுதியில் நாவல் இலக்கியம் மேலும் விரிவு பெற்றது. அதன் களங்கள் வன்னி, பொலனறுவை போன்ற பிரதேசங்களிலும் இடம்பெறத் தொடங்கின. 1973ல் அ.பாலமனோகரின் நிலக்கிளி, 1977ல் செங்கையாழியானின் காட்டாறு, 1977ல் தாமரைச்செல்வியின் சுமைகள், 1977ல் ஞானதரனின் புதியபூமி என்பன குறிப்பிடத்தக்க நாவல்களாகும். மேலும் மட்டக்களப்பைக் களமாகக் கொண்டு 1976ல் வெளிவந்த ஜோன் ராஜனின் போடியார் பாம்பிள்ளையும் குறிப்பிடத்தக்க பிரதேச நாவலாக மிளிர்கின்றது.

மேலும் இலங்கையின் மற்றைய பிரதேசங்களின்றும் மலையக வாழ்வியல் அம்சங்கள் பிரச்சினைகள் என்பவற்றைக் கருவாகக் கொண்டு மலையக நாவல்கள் எழுந்தன. கோகிலம் சுப்பையாவின் 'தூரத்துப் பச்சை' மலையகத் தமிழ் நாவலின் எழுச்சிக்கு வித்திட்டது. அவரைத் தொடர்ந்து நந்தி யோ.பெனடிக்ற் பாலன், தொ.சிக்கனராஜீ, தெளிவத்தை ஜோசப், கே.ஆர் டேவிட், தி.ஞானசேகரன், புலோலியூர் க.சதாசிவம், சி.வி.வேலுப்பிள்ளை, மாத்தளை சோமு முதலானோர் மலையகம் தொடர்பான நாவல்களை எழுதியுள்ளனர்.

அறுபதுகளில் எழுச்சி பெற்ற வரலாற்று நாவல்களுள் வ.அ.இராசரத்தினத்தின் கிரௌஞ்சப் பறவைகள் (1973) குறிப்பிடத்தக்கதாகும். அருள் செல்வநாயகம், செங்கை ஆழியான், க.தா.செல்வராசகோபால் முதலானோரும் வரலாற்று நாவல்களைப் படைக்கும் முயற்சியில் ஈடுபட்டோர் ஆவார்.

பிறதுறை சார்ந்த நாவல்களைப் பொறுத்தவரை செங்கைஆழியானின் நகைச்சுவை நாவல்கள் சிறப்புக்குரியன. 1969ல் வெளிவந்த ஆச்சி பயணம் போகின்றாள். 1977ல் வெளிவந்த முற்றத்து ஒற்றைப்பனை, 1975ல் வெளிவந்த கொத்தியின் காதல் ஆகியவை இவரின் நகைச்சுவை நாவல்களாகும். இவற்றுள் கொத்தியன் காதல் பேய்களைப் பாத்திரங்களாகக் கொண்டு படைக்கப்பட்ட நாவலாகும். மேலும் எஸ்.பொன்னுத்துரையின் தீ, சடங்கு என்பன அறுபதுகளில் எழுச்சி பெற்ற நாவல்களுள் முக்கியமானதாகும். ஆண் - பெண் உறவை மையமாகக் கொண்டு நேர்த்தியாகப் பிறந்த நாவல்கள் இவையாகும்.

இவற்றை விட இக்காலப்பகுதியில் சிறுவர் நாவல்களும் தோற்றம் பெற முயற்சித்தன. சிறுவர் நாவலின் தோற்றுவாயாக க.நவசோதியின் ஓடிப் போனவன் நாவல் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையின் நாவல்துறை வளர்ச்சியடைந்த காலத்தில் பிறமொழி நாவல்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. சில தழுவியும் எழுதப்பட்டன. அந்த வகையில் இலங்கையர்கோன், அ.செ.முருகானந்தம், இராஜ அரியரத்தினம், தேவன், கெ.கணேஷ், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, அ.ந.கந்தசாமி என்போர் மொழிபெயர்ப்பு முயற்சியல் ஈடுபட்டனர். மொழிபெயர்ப்பு நூல்களாக மார்ட்டின் விக்கிரமசிங்கவின் கம்பெரலிய, பேராசிரியர ம.மு.உவைஸ் அவர்களின் கிராமப்பிறழ்வு, தி.பி.இலங்கரத்னவின் நாவலொன்று சரோஜினி அருணாசலத்தினால் இணைபிரியாத தோழர் என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்ட மொழி பெயர்ப்புத் துறைக்கு சிறந்த வரப்பிரசாதமாகும்.

மேலும் நாவல் துறை வளர்ச்சியில் பெண் எழுத்தாளர்களும் குறிப்பிடத்தக்கவராவார். இந்த வகையில் பாலேஸ்வரி, நயிமா ஏ.சித்திக் என்போர் குடும்பப் பாங்கான நாவல்களைப் படைத்துள்ளனர். இவர்களை விட கோகிலம் சுப்பையா, கோகிலா மகேந்திரன், தாமரைச்செல்வி, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் என்போரைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

இவ்வகையில் அறுபதுகளின் பின் வளர்ச்சியடைந்த நாவல் துறையில் பல நாவலாசிரியர்கள் தோற்றம் பெற்று பல துறைசார் நாவல்களைப் படைத்தள்ளனர். எதிர்காலத்தில் மேலும் பல நாவல்கள் தோற்றம் பெறும் என்பதில் ஐயமில்லை.

❀ ❀ ❀

# உயிரியல் பாட வினாக்களுக்கு எவ்வாறு விடையளித்தல்?

அ.தயாபரன்
(ஆசிரியர்)

உயர்தரப் பரீட்சை போட்டிப் பரீட்சையாக அமைவதனால் பாடங்களில் பெறப்படும் ஒவ்வொரு புள்ளிகளும் மிக முக்கியமாக அமைகிறது. எனவே வினாத்தாள்களுக்கு விடை அளிக்கும் போது மிக அவதானமாக இருத்தல் அவசியமாகும். அத்துடன் இங்கு நேர முகாமைத்துவம் மிக முக்கியமாக அமைதல் வேண்டும். பெரும்பாலும் மாணவர்கள் நேரம் போதாது எனக் கூறுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதற்கான காரணம் அவர்கள் ஏற்கனவே பாடசாலைப் பரீட்சைகளிலும் வினாத்தாள்களுக்கு விடை அளிக்கும் போது அதில் நன்கு கவனம் எடுப்பதில்லை. பரீட்சைகளுக்கு செல்வதில்லை. இதன் காரணமாகவே நேரப்பற்றாக்குறை ஓர் பிரச்சனையாக குறிப்பிடுகிறார்கள். இவர்கள் தகுந்த காலத்தில் ளுலடடயடிரள ஐ முடித்து அதற்குரிய மீட்டல்களை தாமாகவே செய்யும் போது நேரப் பிரச்சனை இல்லாது இருப்பதோடு நல்ல முடிவுகளையும் பெறக் கூடியதாக இருக்கும்.

இதனடிப்படையில் உயிரியல் பாடத்தைப் பொறுத்தவரையில் வினாத்தாள் பார்ப்பதற்கு இலகுவாக இருப்பினும் தகுந்த பரீட்சைப் பெறுபேறுகள் கிடைப்பதில்லை. ஏனெனில் அதற்குரிய புள்ளியிடும் திட்டம் பற்றி மாணவர்கள் நன்கு அறியாதிருப்பதே காரணமாகும்.

இதனடிப்படையில் 2011 புதிய பாடத்திட்டத்துக்கு அமைய மாணவர்கள் விட்ட சில தவறுகள் இங்கு குறிப்பிடத்தக்கவை.

- சரியான முறையில் வினாக்களை வாசிப்பதில்லை.
- சரியான நேர முகாமைத்தவத்தைக் கடைப்பிடிக்காமை
- இரு சொற் பெயரீட்டு முறை சரியாக எழுதப்படாமை
- பூரணமாக விடைகள் எழுதப்படாமை
- சுருக்கக் குறியீடுகள் பயன்படுத்துகின்றமை
- சரியான முறையில் படங்கள் வரையப்படாமை
- எழுத்து தெளிவின்மை
- ஆசிரியர் வழிகாட்டல் புத்தகங்களைச் சரியாகப் பார்வையிடாமை

1. வினாக்கள் பகுதியாகக் கேட்கப்படும் போது (யஇடிஇஉஇன) கேட்கும் வினாக்களின் பகுதிகளுக்கே விடை எழுதப்படல் வேண்டும். (ன) இற்குரிய விடையை (டி) பகுதியில் எழுதும் போது அதற்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. அவ்வாறான பிழைகளை இம்முறை புதிய பாடத்திட்டத்தில் வந்த விகாரம் தொடர்பான வினாவில் காணக்கூடியதாக இருந்தது.

அத்துடன் மண்ணிலிருந்து காழ் இழையத்திற்கான வினாவில் அங்குரட் வரைபில் நீர் கொண்டு செல்லும் முறை பற்றி மாணவர்கள் விடை அளித்திருந்தார்கள். அவ்வினா முன்னர் ஒரு முறை வந்தது. அதற்கேற்ப இங்கு விடையளித்தல் நேர விரயத்தை ஏற்படுத்தும்.

சிறுகுறிப்பு வினாவில் விஞ்ஞான முறை எனக் கேட்கப்பட்ட வினாவுக்கு இருசொற் பெயரீட்டு முறை எழுதி உள்ளார்கள். இவ்வாறான செயற்பாட்டால் நேரம் வீண்விரயம் ஆவதுடன் அதற்குப் புள்ளிகளும் கிடைப்பதில்லை. அத்துடன் மனித மூளையத்தின் கட்டமைப்பை விபரிக்க என கேட்கப்பட்ட வினாவுக்கு மனித மூளையின் கட்டமைப்பை விபரித்துள்ளார்கள்.

2. இங்கு அமைப்பு வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 15 நிமிடங்களும், கட்டுரை வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 30 நிமிடங்களும் ஒதுக்கப்படுகின்றன. எனவே நேரத்தில் அவதானமாகவிருத்தல் வேண்டும். சில மாணவர்கள் அமைப்புக் கட்டுரைக்கு அதிகளவு செலவழித்துப் பின்னர் கட்டுரை வினாக்களுக்கான நேரத்தை இழப்பதனால் கட்டுரை வினாவைப் பூரணப்படுத்தாமல் விடுகின்றனர். அத்துடன் சில கட்டுரை வினாக்களுக்கு அதிக நேரத்தை எடுத்து (தேவையில்லாமல் மேலதிகமாக எழுதவதனால்) ஏனைய கட்டுரை வினாக்களை எழுதி முடிக்க முடியாதுள்ளனர். உதாரணமாக விஞ்ஞான முறை என்ற சிறுகுறிப்பு வினாவுக்கு அதிகமாக விடை எழுதுவதுடன் சூழநழ இலையின் பரிசோதனைக்கும் பொருத்தமில்லாமல் அதிக விடை எழுதுகிறார்கள். இவற்றினால் நேரப்பற்றாக்குறை ஏற்படுகின்றது. மாணவர்கள் தெரிந்த விடை எழுதி விட்டு தெரியாத வினாக்களை விட்டுச் சென்று இறுதியில் அவற்றைச் செய்ய முயற்சித்தல் வேண்டும். மாணவர்கள் பாட விடயத்தில் நல்ல தெளிவுடன் இருக்கும் போது மட்டுமே விரைவாக விடைகளை எழுதக் கூடியதாக இருப்பதுடன், போதிய பயிற்சியும் இருத்தல் வேண்டும.

3. உயிரியலில் இருசொற் பெயரீட்டு முறை மிகவும் முக்கியகூறு. இது வினாப்பத்திரத்தின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை வருகின்றது. இதனால் பிழை விடுவதன் மூலம் பெரும்பாலான புள்ளிகளை மாணவர்கள் இழக்கின்றனர். இதற்கு ஆங்கிலத்தில் எழுதும போது ஒரு எழுத்துப் பிழை ஆயினும் அதற்குப் புள்ளி வழங்கப்படமாட்டாது. அத்துடன் எழுத்துக்களை சரியாக எழுதிவிட்டு அடிக்கோடு இட மறுக்கிறார்கள். எனவே இவ்விடத்தில் மாணவர்கள் மிகக் கூடிய கவனம் எடுத்தல் நல்லது. பெரும்பாலான மாணவர்கள் இதில் பிழை விடுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. சில மாணவர்கள் அடிக்கோட்டை பூரணப்படுத்தாமல் உள்ளனர்.

2011 புதிய பாடத்திட்டத்தில் இரு சொற் பெயரீடு பயன்படுத்தப்பட்ட இடங்கள்

1. உணவு மூலம் ஏற்படும் தொற்று நொய்கள்
2. உணவு நஞ்சாதல்
3. இலிங்கமில முறை இனப்பெருக்கம்
4. தாவர அசைவுகள்

கட்டுரை விடை (06) a பகுதி
கட்டுரை விடை (08) b பகுதி
கட்டுரை விடை (10) a பகுதி

சில மாணவர்கள் மேலே தரப்பட்ட பகுதி முழுவதிலும் பிழை விட்டுள்ளார்கள். இதனால் அதிக புள்ளிகளை இழக்க வேண்டியுள்ளது.

4. மாணவர்கள் விடை பூரணப்படுத்தாமல் குறுகிய விடைகளை எழுதும் போது அதற்குப் புள்ளிகள் வழங்கப்படுவதில்லை.

1. உதாரணமாக RNA ன் வகை, அவற்றின் தொழில்கள் பெரும்பாலும் பூரணப்படுத்தப்படாமல் எழுதப்படுகின்றது.
2. DNA Polymerase என எழுதவதற்கு Polymerse என எழுதுதல்
3. தாயின் பரிவகக்கீழ் என எழுதுவதற்குப் பதிலாக பரிவகக் கீழ் என எழுதுதல்
4. கபச்சுரப்பியின் முற்பக்கச் சோனை என எழுதுவதற்குப் பதிலாக கபச்சுரப்பி என எழுதுதல்
5. என்புகளின் பாரத்தைக் குறைத்தல் என எழுதவதற்குப் பதிலாக பாரத்தைக் குறைத்தல் என எழுதுதல்
6. கட்டுப்பட்ட காற்றின்றி வாழ் என எழுதுவதற்குப் பதிலாக காற்றின்றி வாழ் என எழுதுதல்
7. மூலச்செறிவு என எழுதுவதற்குப் பதிலாக செறிவு என எழுதுதல்
8. முதலான வாங்கியான PEP என எழுதுவதற்கு பதிலாக PEP என எழுதுதல்
9. காபன் இழப்பு அதிகம் என எழுதவதற்குப் பதிலாக காபன் இழப்பு ஏற்படும் என எழுதுதல்

5. மாணவர்கள் அவசரமாக குறிப்புக்கள் எழுதும் போது சில சுருக்க குறியீடுகளைப் பயன்படுத்துகின்றனர். இக்குறியீடுகளை விடைகள் எழுதும் போது பயன்படுத்துகிறார்கள். இதற்குப் புள்ளிகள் வழங்கப்படுவதில்லை.

உதாரணமாக

1. Thymine - T என எழுதுதல்
2. Cytosine - C என எழுதுதல்
3. கூடுதல் - ↑ என எழுதுதல்
4. குறைதல் - ↓ என எழுதுதல்
5. எண்ணிக்கை - எண் +கை
6. கொண்டிராது – கொ + து போன்றனவாகும்.

6. வினாக்களில் படங்கள் வரும் போது படங்களைப் பெரும்பாலும் மாணவர்கள் சீராக வரைவதில்லை. இம்முறை மனித முளையம் படம் வரைய வேண்டி இருந்தது. அப்படத்தையும் சீராக வரையவில்லை. இதற்கான காரணம் படங்களை வரைந்து பழகுவதில்லை. அத்துடன் படங்களை வரைவதற்கு அதிக நேரத்தையும் எடுக்கக் கூடாது. சரியான விகிதத்தில் படங்கள் அமைந்திருத்தல் வேண்டும்.

7. எழுத்துக்கள் அழகாக இருத்தல் வேண்டும் என்பது அவசியமில்லை. தெளிவாக இருத்தல் வேண்டும். தெளிவில்லாத எழுத்தக்களைத் திருத்துபவர்களுக்கு சிரமமாக இருப்பதனால் எழுத்துக்களை தெளிவாக எழுதுதல் விரும்பத்தக்கது.

8. பாடசாலைகளுக்கு வழிகாட்டல் புத்தகங்கள் அனுப்பப்படுகின்றன. அவற்றை பார்வையிடுதல் வெண்டும். அதில் உள்ள விடயங்கள் மாணவர்களினால் விளங்கப்படும் இடத்து புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும். அதுவே

மாணவர்களுக்கு முக்கியமானது எனக் குறிப்பிடப்படுவதனால் அதனை மாணவர்கள் ஒவ்வொருவரும் வைத்திருத்தல் விரும்பத்தக்கது. ஒவ்வொரு அலகையும் கற்பித்து முடிக்கும் போது மாணவர்கள் வழிகாட்டல் புத்தகங்களை பார்த்து இல்லாத விடயங்களை குறித்து வைத்திருத்தல் விரும்பத்தக்கது.

உதாரணமாக 6) டி) ஈரவெப்ப முறையில் 15 நிமிடம் என்பதை புள்ளி வழங்கல் திட்டத்தில் இருந்தது. எனினும் ஆசிரியர் வழிகாட்டல் புத்தகத்தில் 12 நிமிடம் எனக் குறிப்பிடப்பட்டள்ளது. எனவே 12 நிமிடம் என எழுதப்பட்டிருந்ததற்கும் புள்ளி வழங்கப்பட்டது.

வினாக்கள் பாடத்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை வருவதனால் மாணவர்கள் ஆரம்பத்திலிருந்து அக்கறையாக கற்பதன் மூலம் நல்ல பெறுபேறுகளை பெறலாம். அத்தடன் பாடவிதானங்களை விரைவாக கற்று முடிப்பதன் மூலம் பாடவிதானத்தின் இறுதிப்பகுதியில் வரும் வினாக்களுக்கு விடை அளிப்பது இலகுவாகும். இம்முறை இறுதிப்பகுதியில் வந்த வினாக்களுக்கு (அலகு 13) மாணவர்கள் திருப்திகரமாக விடையளிக்காது இருந்ததுடன் அவ்வினாவை பல மாணவர்கள் தெரிவு செய்யாமல் இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

❀ ❀ ❀

## அன்பர்களே

| | | |
|---|---|---|
| நல்ல நாள் | - | இன்று |
| நல்ல வெகுமதி | - | மன்னிப்பு |
| அறியக் கூடாதது | - | அடுத்தவன் செயலை |
| இருக்க வேண்டியது | - | மானம் |
| இருக்கக்கூடாதது | - | ஆணவம் |
| தேவைக்கேற்றது | - | சாமர்த்தியம் |
| தேவையற்றது | - | விவாதம் |
| எதிலும் சுலபமானது | - | குற்றம் காணல் |
| எதிலும் கடினமானது | - | பிழையின்றி வாழ்தல் |
| மேற்றரமானது | - | நட்பு |
| கீழ்த்தரமானது | - | துரோகம் |
| செய்ய வேண்டியது | - | உதவி |
| செய்யக்கூடாதது | - | உபத்திரவம் |
| அறிய வேண்டியது | - | உலக செயலை |
| அடங்க நினைப்பது | - | தாய் தந்தைக்கு |
| அடக்க நினைப்பது | - | உனது மனதை |
| நம்பக்கூடாதது | - | வதந்தியை |
| பார்க்கக்கூடாதது | - | பகுத்தறிவு |
| பார்க்கமுடியாதது | - | உன் மரணம் |
| ஆணுக்குத்தேவையானது | - | உழைப்பு |
| ஆணுக்குத்தேவையற்றது | - | அலங்காரம் |
| பெண்ணுக்குத் தேவையானது | - | அடக்கம் |
| பெண்ணுக்குத்தேவையற்றது | - | தனிமை |

# தற்சிந்தனையாளர் (Autism)

**திருமதி. ஜெயபானு சுரேந்திரநாத்**
**விசேட கல்வி ஆசிரியர்.**

கல்வி என்பது ஒவ்வொரு மனிதனினதும் பிறப்புரிமையாகும். ஒரு குழந்தைக்கு சுவாசம் எவ்வளவு இன்றியமையாததோ அந்த அளவுக்கு கல்வியும் இன்றியமையாததாகின்றது. அந்த வகையில் விசேட தேவையுடைய பிள்ளைகளும் கல்வி கற்பதற்குப் பூரண உரிமையுடையவர்களே. நல்ல கல்வியை பெற்றுக்கொள்வதற்கும் அதன் பயனை நுகர்ந்து கௌரவமான பிரஜைகளாக வாழ்வதற்கும் அவர்களுக்குப் பூரண உரிமை உண்டு. இவ்விதம் நல்ல முறையில் கல்வியூட்டப்பட்டு தகுந்த முறையில் பராமரிக்கப்படுகின்ற ஒரு பிள்ளை உலக சமுதாயத்தோடு இணைந்துகொள்வதில் எவ்வித இடர்பாடும் இருக்காது. சமுதாயத்தின் பயன்மிக்க பிரஜைகளாக வாழ்வதிலும் எந்தத் தடையும் இருக்காது.

அந்த வகையிலே விசேட கல்வி என்றால் என்ன? என்று நோக்குவமேயானால் உடல், உள, சமூக பாதிப்புக்குள்ளான மாணவர்கள் சாதாரண மாணவர்களைவிட பல சிக்கலான நடத்தைகளைக் காட்டுகின்றனர். அத்துடன் அவர்கள் தேர்ச்சி மட்டத்தை அடையமுடியாது தத்தளிக்கிள்றனர். அவ்வாறான மாணவர்களின் நடத்தைகளில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்காக வழங்கப்படும் கல்வியே விசேட கல்வி எனப்படும். இந்த விசேட கல்வி தேவையுடையோர் யார்? என நோக்குவோமேயானால் சாதாரண வகுப்பறை ஒன்றிலிருந்து தனது கற்றல் செயற்பாட்டினை மேற்கொள்வதில் பெருமளவு இடருறுகின்ற மாணவர்களே விசேட தேவையுடையவர்களாகக் கொள்ளப்படுகின்றனர்.

அந்தவகையில் எமது நாட்டைப் பொறுத்த வகையில் பின்வரும் பதின்மூன்று வகையானோர் விசேட தேவையுடையோராக கொள்ளப் படுகின்றனர்.

1) மீத்திறனுடையோரும் விசேட நிபுணத்துவம் உடையோரும். (Gifted students and talented students)
2) கற்றல் இயலாமை உடையோர். (Student with learning disabilities)
3) மொழிதலும் மொழிக் குறை பாடுமுடையோர். (Speech and language impairment)
4) மெதுவான உள வளர்ச்சியுடையோர். (Mentaly Retarded)
5) உக்கிர மனவெழுச்சிப் பிரச்சினை. (Severe emotional distrobances)
6) பல் வகை இயலாமை உடையோர். (Multiple disabilities)
7) உடலியற் குறைபாடுகள். (Physical impairment)
8) சுகாதாரக் குறைபாடுகள். (Health impairments)
9) கேட்டல் குறைபாடு. (Hearing impairments)
10) பார்வைக் குறைபாடுடையோர். (Visual impairments)
11) பூரணமான பார்வைக் குறை பாடுடையோரும் கேட்டல் குறை பாடுடையோரும். (Totally deafness and totally blindness)

12) தற்சிந்தனையாளர். (Autism)

13) மூளையில் ஏற்படும் பாதிப்பு. (Brain injury)

அந்த வகையிலே இன்று எமது நாட்டில் அதிகரித்துவரும் ஒரு பிரச்சினையாக ஓட்டிசம் காணப படுகின்றது. அப்பிரச்சினை பற்றி நாம் சற்று நோக்குவோமேயானால்

ஓட்டிசம் என்பது ஒருவருக்கு ஏற்படக்கூடிய ஒருவித உளம் சார்ந்த நிலையாகும். ஒருவர் தனக்கென உரிய ஒரு கற்பனை உலகில் புகுந்துகொண்டு அதிலிருந்து வெளிவர முடியாத நிலையில் தன்னில் தானே ஆழ்ந்து போகின்ற புற உலக தொடர்புகளிலிருந்து விடுபட்ட ஒரு நிலையே ஓட்டிசமாகும். இவர்களை தற்சிந்தனையாளர்கள் என்றும் அழைப்பர். இன்று இந் நிலைக்கு ஆட்பட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. எனினும் இது ஏன் ஏற்படுகின்றது இதை குணமாக்குவது எப்படி எனும் வினாக்களுக்கு இன்னும் விடை காணமுடியாத ஒரு நிலைமையே காணப்படுகின்றது.

இவ்வாறான நிலைமை ஏற்பட்ட ஒரு பிள்ளையை நாம் 15 தொடக்கம் 18 மாதங்களிலேயே இனங்காண முடிகின்றது. சில பிள்ளைகளுக்கு 3 வயதின் பின்னரே இந் நிலை வெளியே தெரிகின்றது. இந் நிலைமை பெண்களைவிட ஆண் பிள்ளைகளுக்கே அதிகமாக ஏற்படுகின்றது. ஓட்டிச நிலைக்கு உட்பட்டவர்களிடம் பின்வரும் மூவகை அம்சங்களைக் கொண்டு இனங்காண முடியும்.

1) தொடர்பாடலின்மை
2) சமூகத் தொடர்பின்மை
3) வித்தியாசமான நடத்தை

ஒரு பிள்ளையிடம் இம் மூன்று அம்சங்களும் இணைந்து காணப்பட்டால் அது ஓட்டிச நிலைக்குட்பட்ட பிள்ளையென நாம் ஒருவாறு வரையறுக்கலாம். ஒன்று அல்லது இரண்டு அம்சங்கள் காணப்படின் அப்பிள்ளையை ஓட்டிச இயல்புடையவரென நாம் குறிப்பிட முடியாது.

இவ்வாறான ஓட்டிச நிலைக்குட் பட்ட பிள்ளையிடன் நாம் பல்வேறு விதமான பொருத்தமற்ற நடத்தைக் கோலங்களை அவதானிக்க முடியும். அவற்றுள் சில வருமாறு.

1) கண்ணுக்குக் கண் தொடர்பு ஏற்படுவதைத் தவிர்ப்பர்.
2) விரல்களை அல்லது தமது இரு கைகளையும் கண்களுக்கு எதிரே பிடித்து விரைவாக அசைப்பர்.
3) விசேட உணவு வகைகளைத் விரும்புவதோடு பிள்ளைகள் இயல்பாய் விரும்பும் உணவு வகைகளை தவிர்ப்பர்.
4) உணவுப் பொருட்கள் அல்லாத வற்றை நாவினால் நக்குவர்.
5) சில பொருட்களை தமது மூக்கின் அருகே வைத்து மணந்து பார்ப்பர்.
6) நிற்கும்போதோ அமர்ந்திருக்கும் போதோ உடலை முன்னும் பின்னுமாக அசைப்பர், அல்லது ஆட்டுவர்.
7) ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்ல முன் நோக்கிப் பாய்வர்.
8) களைப்படையாமல் ஒரு செயலை தொடர்ந்து செய்வார்.
9) உண்மை அபாயங்களுக்குப் பயமின்மை. (உ+ம் - நீர், நெருப்பு)
10) விரல் நுனியால் நடப்பர்.

இவ்வாறு ஓட்டிச நிலைக்குட்பட்ட பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் தொடர்பாடல் தொடர்பாக மிகுந்த இடர்பாடுகளை எதிர்கொள்பவர்களாகவே காணப்படுவர். தொடர்பாடல் தொடர்பாக இவர்கள் பின்வரும் நடத்தைக் கோலங்களைக் கொண்டிருப்பர்.

1) சத்தமில்லாமல் பேசுவர்.
2) தனக்குக் பரீட்சயமான சொற்களையோ தொடர்களையோ மீண்டும் கூறிக்கொண்டிருப்பர்.
3) பொருத்தமற்ற சுட்டுப் பெயர்களைப் பயன்படுத்துவர்.
4) சில சமயங்களில் பொருத்தப் பாடில்லாமல் வினாக்களை எழுப்புவர்.
5) பெரும்பாலும் தனிமையாக இருப் பதையே விரும்புவர்.
6) ஏனைய சாதாரண பிள்ளைகளைப் போன்று தமக்குத் தேவையானவற்றை கேட்க மாட்டார்கள்.
7) சொற்கள் அல்லது சைகைகளுக்குப் பதிலாக மெய்ப்பாடுகளை வெளிக் காட்டுவர்.
8) குறித்த பிள்ளையின் பெயரைக்கூறி அழைக்கும்போது அழைப்பவரைப் பார்க்காதிருப்பர்.
9) பொருத்தமற்றவகையில் அல்லது பொருத்தமற்ற இடங்களில் ஆம், இல்லை என்று கூறுவர்.
10) பேச்சுப் பிரச்சினை காணப்படும்.

ஓட்டிச நிலைக்குட்பட்ட பிள்ளைகள் எப்போதும் தமக்கே உரிய கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருப்பவர்கள் என்ற வகையில் இவர்கள் சமூகத்தோடு இயைந்து வாழ்வதோ அன்றி சமூகப் பொருத்தப் பாட்டோடு வாழ்வதோ பெரும்பாலும் இல்லை என்றே கூற வேண்டும். சமூகம் சார் செயற்பாடுகள் தொடர்பாகவும் பின்வரும் அம்சங்களை இவர்களிடத்தே அவதானிக்க முடியும்.

1) ஏனையவர்களைப் பொருட் படுத்தவோ அன்றி அனுசரித்து நடக்கவோ விரும்ப மாட்டார்கள்.
2) தனக்குப் பரீட்சயமில்லாதவர்கள் தன் உடலைத் தொடுவதை விரும்ப மாட்டார்கள்.
3) விளையாட்டுப் போன்ற செயற்பாடுகளின்போது ஏனைய வர்களைப் பின்பற்றி நடந்து கொள்ளமாட்டார்கள்.
4) காரணமின்றிப் பயப்பிடுதல், திகைத்தல் போன்ற மெய்ப்பாடுகளை வெளிக்காட்டுவர்.
5) மற்றவர்கள் விடயத்தில் தயவு தாட்சண்யம் காட்டமாட்டார்கள்.
6) தனக்கு மிக அருகில் உள்ளவர்களைக்கூட பொருட்படுத்த மாட்டார்கள்.
7) விளையாட்டுப் பொருட்களையும் ஏனைய பொருட்களையும் பொருத்த மற்ற வகையில் பயன் படுத்துவார்.
8) தனது சூழலின் ஒழுங்கு மாறும் பட்சத்தில் அல்லது புதியதொரு சூழலுக்கு செல்ல நேரும் பட்சத்தில் பதற்றமடைவர்.
9) பாதுகாப்புக்காக மட்டும் ஏனைய நபர்களுடன் பழகுவர்.
10) தொடுகை மூலம் அன்பு அரவணைப்பைத் தேடுவர்.

இவ்வாறான ஓட்டிச நிலைக்குட்பட்ட பிள்ளைகளுக்கு அவர்களின் உணர்வுகளைத் தட்டியெழுப் புவதற்கான கட்டியெழுப்புவதற்கான மீட்டெடுப்பதற்கான விசேட பயிற்சிகள் இதற்கெனப் பயிற்சி பெற்றவர்களால் உரியவாறு வழங்கப்பட வேண்டும். இவர்களிடத்தில் நாம் அன்புடனும் அக்கறையுடனும் பொறுமையுடனும் நடந்துகொள்ள வேண்டும். அவர்களைப் பாதுகாக்க வேண்டும். முடிந்தவரை அவர்களை சாதாரண நிலைக்கு மீட்டெடுக்க முயன்றுகொண்டே இருக்க வேண்டும்.

# இன்று ஒரு தகவல்

## சிறுபிள்ளைத் தனம்

**திரு.அ.தயாபரன் (ஆசிரியர்)**

தற்போதைய இனம் சமுதாயத்தின் அனுபவமின்மை சாதாரணமாக தமது வயதுக்கு ஒவ்வாத செயற்பாட்டில் ஈடுபடுகிறார்கள். இது சின்னப்பிள்ளைத்தனமாக அமைகின்றது. இதன் காரணமாக தமது எதிர்காலத்தை பழாக்குவதுடன் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

பாடசாலை மாணவர்கள் கல்வியின் முக்கியத்துவத்தை அறியாமல், பாடசாலைக்கும், தனியார் கல்வி நிலையங்களுக்கும் ஒழுங்காகச் செல்லாமல், தமது பெற்றோரின் அறிவுரைகளை பொருட்படுத்தாமல் இருப்பதனால் கல்வியில் பின் தங்கிய நிலை ஏற்படுவது அவதானிக்க கூடியதாக உள்ளது. இதனால் மாணவர்களின் இடைவிலகலம் அதிகரிக்கின்றது.

இதே போன்று இளம் சமுதாயத்தினதும் மாணவர்களதும் வீதிகளில் செல்லும் போது சமாந்தரமாக செல்வதால் பல்வேறுபட்ட விபத்துக்கு ஆளாவதுடன் வீதியில் செல்லும் வாகனங்களுக்கும் பாதிப்பாக உள்ளது. இவ்வாறான பிரச்சினைகள் இச் சமுதாயத்திற்குத் தெரிந்தும் இவர்கள் தங்களது சின்னப்பிள்ளைத் தனத்தாலும் குழுவாக சேருவதனாலும் பல்வேறுபட்ட பிரச்சினைக்குள்ளாகின்றார்கள்.

இன்று மதுபான பாவனையிலும், சிகரெட் பாவனையிலும் இளம் சமுதாயத்தினர் அதிகளவில் ஈடுபடுகின்றார்கள். குழுவான இளைஞர்கள் சேரும்போது இதனை பயன்படுத்த எத்தணிக்கப்படுகின்றார்கள். இப் பழக்கத்தை பழக ஆரம்பிப்பதனால் பின்னர் மதுபானம், சிகரெட் இல்லாத நிலையில் வாழ முடியாமல் உள்ளார்கள். எனவே இவ்வாறாக பழக்கங்கள் இளம் சமுதாயத்தினர் தமது சின்னப்பிள்ளைத்தனத்தின் காரணமாகவே பழகுகின்றார்கள். அத்துடன் இளைஞர்கள் சிறு வேளைகளில் தற்போது இணைகின்றனர். இதன் போது பெறப்படும் பணத்தையும் குடிகளுக்கே பயன்படுத்தினர். அந்தப் பழக்கங்களை பழகுகின்றனர்.

தற்போதைய இளைஞர்கள் ஆறு, குளம், கடல் போன்றவற்றிற்கு நீராட சென்று அங்கு பரிதாபகரமாக இறக்கும் பல நிகழ்வுகளை காணக்கூடியதாக உள்ளது. “ஆழமறியாமல் காலைவிடாதே” என்பதற்கு ஏற்ப அவர்களின் துடிப்பும் அவதானமின்மையும் அவர்களின் உயிரை எடுக்கும் அளவுக்கு விபரீதமாக முடிந்து வருகின்றது. இவர்களது மது அருந்தும் பழக்கமும் இவ்வாறான உயிரிழப்பிற்கு காரணமாக அமைகின்றது.

அத்துடன் கூட்டமாக சென்று விளையாட்டாக நீராடுதல் காரணமாகவும் பல இழப்புக்களை சந்திக்க வேண்டியுள்ளது. இதற்கு உதாரணமாக ஒரு கதை கூறலாம். “மூன்று மாணவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராக்கப்படுகின்றார்கள். நீதிபதி ஒவ்வொருவராக

அழைத்து விசாரிக்கின்றார். 1ம் நபரை அழைத்து "என்ன தவறு செய்தாய் என வினாவினார் அதற்கு அவன் "நான் பட்டாணி நீரில் போட்டேன் என்றான்" இது ஒரு பெரிய தவறில்லை இதற்காக ஏன் இங்கு வந்தாய் என்று கூறி விட்டு அடுத்தவரையும் அழைத்தார் அவரும் அதே பதிலைச் சொன்னார். மூன்றாவது நபரை அழைத்தார் அவர் "நான் தான் அந்த பட்டானி" எனக் குறிப்பிட்டார். இவ்வாறு விளையாட்டாக சிறுபிள்ளைத்தனமாக இளைஞர்கள் நடப்பதால் பல்வேறு பிரச்சினைக்கு உள்ளாகின்றார்கள். எனவே இளைஞர்கள் இந்த சிறுபிள்ளைத்தனங்களை விட்டு விடுவதனால் நன்றாக வாழலாம் என்கின்றது கதை".

❀ ❀ ❀

# புதிய பாடத்திட்டம் தரும் பரீட்சையும் சவால்களும்

திருமதி. T. ஜெயக்குமாரன்

எம்மிடையே நீண்டகாலமாக நிலைத்துள்ள அசாதாரண சூழல் காரணமாக ஒரு காத்திரமானதாக இருந்து வந்த பல விடயங்கள் வளக்கொழிந்து போய்விட்டன. இந் நிலமை இந்த உலகு பற்றிய ஒரு நிலையான உறுதியான பார்வையை இழக்கச் செய்துள்ளது. தனிமனித ஆளுமையில் ஒருவன் தான் யார்? தனது இலட்சியம் என்ன? அதற்காகத் தான் என்ன செய்ய வேண்டும்? என்பது பற்றிய உறுதியான சிந்தனை காணப்படவேண்டும். இது அண்மைக்காலங்களில் இல்லாதுள்ளமை மிகுந்த வேதனைக்குரியது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய ஒரு மலேசியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் யாழ் மாணவர் பற்றிய அவதானிப்பு பின்வருமாறு

1. ஆங்கில மொழி அறிவு பூச்சியம்
2. மாணவர்களிடம் ஒரு இலட்சியமற்ற கல்விப்போக்குக் காணப்படல்

மேற்குறித்த அவரது அவதானம் எமது இளம் மாணவரிடம் தொடர்ச்சியாக காணப்படுமிடத்து நல்லதொரு ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டி எழுப்ப முடியாது போய்விடும் ஆபத்து எமக்குண்டு.

மறுபுறம் கல்வி கற்கின்றோம் கல்வி கற்கின்றோம் என்று தம்முடைய நேரத்தை செலவழித்த மாணவர்கள் வெறுமையானவர்களாக்கப்படுவர். ஏமாந்து நிற்போர்களாவர். (இங்கு குறிப்பிடும் குறைபாடு இலக்குத் தவறிய அதிகமான மாணவர்களுக்குரியது)

2007ம் ஆண்டில் 6ஆம், 7ஆம் தரங்களில் அறிமுகம் செய்யப்பட்ட தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை படிப்படியாக அடுத்தடுத்த ஆண்டுகளில் 7ஆம், 11ஆம் மற்றும் 8ஆம் தர கலைத்திட்டங்கள் தொடர்பாகப் பயன்படுதப்பட்டது. 2009இல் க.பொ.த உயர்தர, வகுப்புக்காகவும் அவ்வணுகு முறையை

வரிவுபடுத்தப்பட்டது. இந்தப் புதிய பாடத்திட்டமானது ஆசிரியர்களுடைய கற்பித்தலை இலகுபடுத்துதல், மாணவர்களுடைய அலகுரீதியான நுணுக்கமான கற்றலை மேம்படுத்துதல், சுயகற்றலை விருத்தி செய்தல் போன்ற நோக்கங்களைக் கொண்டிருந்தது.

புதிய கல்விச் சீர்திருத்தங்களால் கல்வி வளரச்சியில் என்ன நிகழ்ந்துள்ளது என்று பார்க்கின்றபோது இங்கு மாணவருடைய சுய கற்றல் என்பது திருப்திகரமானதாக இல்லை. இதுமட்டுமன்றி சிந்தித்துச் செயற்படும் திறனும் அருகி வருகின்றது. எதிலுமே பொறுப்பற்றவாறு நடந்துகொண்டு, "தம்மால் பிறகு முடியும்" "பிறகுமுடியும்" என எல்லாவற்றையும் பின்தள்ளிப் போடுகின்ற நிலமையே அவதானிக்க முடிகிறது. இந்த ஆபத்த சுயவளரச்சி, குடும்பவளரச்சி எமது தேசத்தின் வளரச்சிக்குப் பாரிய பின்னடைவையே தரும்.

அடுத்த புதிய பாடத்திட்ட அமைவிற்கிணங்க 2011ற்குரிய க.பொ.த உயர்தரப் பரீட்சை அண்மையில் நடைபெற்று முடிந்துள்ளது. இந்தப் புதிய பாடத்திட்டப் பரீட்சைக்கான மாதிரி அமைப்பு, மாணவர் விடை எழுதிய விதம், பெற்ற புள்ளி என்பவற்றை மனதில் கொண்டு இங்கு நோக்கப்படுகின்றது.

குறிப்பாக நாடகமும் அரங்கியலும் பாடத்தினை அடிப்படையாகக் கொண்டு நோக்கப்படுகிறது.

பகுதி I வினாவில் 40 பல்தேர்வு வினாக்கள் உள்ளன. இதில் 40ற்கும் பொருத்தமான விடைகள் வளங்கப்பட்ட அதில் மிகவும் பொருத்தமான விடையைத் மாணவர் தெரிவு செய்ய வேண்டி இருந்தது.

பகுதி II, பிரிவு அ, பகுதியில் கட்டமைப்பு வினாக்கள் அமைந்திருந்தன. இப்பகுதியில் இருந்து இரண்டு வினாக்களை மாணவர்கள் தெரிவு செய்யவேண்டும். வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 15 புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வினாக்களுக்கும் உள்ளே குறுவினாகக்ள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றுக்கான புள்ளிகளும் (உதாரணம் 04, 04,07) குறிப்பிடப்பட்டிருந்தன.

இதே போன்று பிரிவு "ஆ" இல் கட்டுரை வினா இங்கேயும் ஒவ்வொரு வினாவுக்கும் 15 புள்ளிவீதம் வழங்கப்பட்டிருந்தன.

1. இங்கு மாணவர்களுடைய விடை அளித்தவிதத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றபோது பல்தேர்வு வினாக்களில் 40இற்கும் தலா ஒரு புள்ளி வீதம் 40 புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தன. இதில் 40 புள்ளிகளில் சுமார் 20 புள்ளிகளையே மாணவர் சராசரியாகப் பெற்றுக் கொள்கின்றார். இப்பிரச்சினைகளில் மாணவர் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

2. பகுதி II வினாக்களில் வினாக்களுக்குரிய அறிவுறுத்தல்களைச் சரியாக வாசித்துச் செயற்படாத ஆபத்துண்டு

உதாரணமாக : ஆசிரியர் கற்பித்து மாணவர் குறித்த அந்த அலகைக் கற்று இதற்கப்பால் அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றதாக இதற்கப்பால் அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றாத ஆபத்தையும் அவதானிக்க முடிகிறது. இதன் காரணமாக குறித்த புள்ளிகளை மாணவர் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமையை அவதானிக்க முடியும்.

3. அடுத்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் உரிய புள்ளிகள் வழங்கப்பட்டு அவற்றுக்குரிய புள்ளித்திட்டத்தை அவதானித்து அதற்கு ஏற்ப சுருக்கமாகவோ அல்லது விரிவாகவோ விடை எழுதாமை

உதாரணமாக இங்கு வினாவுக்குரிய புள்ளி 05 எனக் குறிப்பிட்டிருந்தால் அதனை அவதானிக்காது பக்கம் பக்கமாக விடை எழுதுகின்ற நிலைமையுள்ளது.

இந்த நிலமை வினாக்களுக்கு வழங்கப்பட்டிருந்த வரையறுக்கப்ட்ட நேரத்தைப் பாதிக்கும். குறிப்பாகத் தெரிவுசெய்து விடையளிக்க வேண்டிய வினாக்களைப் பாதிக்கும்.

உதாரணம் : நான்கு வினாவுக்குப் பதிலாக மூன்று வினாவிற்கு விடையளிக்க வைக்கும்.

மேற்குறிப்பிட்டது போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளைத் கருத்தில் கொண்டு பரீட்சை விதிமுறைகளை மாணவர்கள் நன்கு அவதானித்துச் செயற்பட வேண்டும். அதன் மூலம் தமது இலக்குகளைத் தமதாக்கிக் கொள்ள முடியும்.

இத்துடன் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செயல்முறைப் பரீட்சையும் நடைபெறும். இது மாணவர்களுடைய இன்னொரு திறமையை நேரடியாகப் பரீட்சிப்பதாகும். மாணவனுடைய இன்னொரு வித திறமையை அவதானிக்கும் அளவீட்டுக் கருவி இலக்குகளை அடைய உறுதியான செயலில் ஈடுபடுவீராக.

# சைவ உலகில் சிவாகமங்களுக்குரிய மரபுவழிச் சிறப்புக்கள்

செல்வி.பு.இளையதம்பி
பகுதித் தலைவர்

இந்துக்களின் சமய நடை முறைகளை ஒழுங்குபடுத்துவதில் ஆகமங்களின் பங்கு குறிப்பிட்டத் தக்கதாகும். பண்பாட்டின் மூலக் கூறுகளாகிய சமயம், தத்துவம், கலைமரபு ஆகியவற்றை உள்ளடக்கிய நிலையில் இச்சமய இலக்கியம் இந்து சமயத்தின் அடித்தளமாக அமைந்து இந்துப் பண்பாட்டை வளம்படுத்தி வந்துள்ளது.

முதனூல்கள்

சைவசமயம் அநாதியானது சிவ சம்பந்தமுடையது ஆழமும், அகலமும் கொண்டது. இச் சமயத்துக்குரிய முதனூல்களாக விளங்குவன வேதம், ஆகமம் ஆகிய இரண்டுமாம். இவை ஆன்மாக்கள் தம்மை வழிபட்டு உய்ந்து கடைத்தேறும் பொருட்டு இறைவனால் அருளிச் செய்யப்பட்ட முதல் நூல்களாகப் போற்றப்படுகின்றன.

வேதத்துக்கும், ஆகமத்திற்கும் இடையே உள்ள நெருங்கிய பிணைப்பை வலியுறுத்தும் மரபுவழி விளக்கங்கள் குறிப்பிடத்தக்கன. சிவபிரானுக்கு வேதம் அங்கம் எனவும், சிவாகமம் அங்கி எனவும் சிறப்புப் பெறுகின்றன. வேதம் துதிநூல் எனவும், ஆகமம் விதிநூல் எனவும் ஏற்படுகின்றன. வேதத்தை மந்திர சாஸ்த்திரம் எனவும் ஆகமத்தை தந்திரசாஸத்திரம் எனவும் கூறுவர். மந்திரம் நினைப்பவரைக் காப்பாற்றுவது தந்திரம் தன்னை அடைந்தோரைக் காப்பாற்றுவது எனப் பொருள் கொள்ளப்படும்.

வேதமும் ஆகமமும் இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை என்பதை திருமூலர் திருமந்திரம் எடுத்துக் காட்டுகின்றது.

“வேதமோடாகமம், மெய்யாமிறைவன் நூல்
ஓது பொதுவுஞ் சிறப்பு மென்றுள்ளன
நாதனுரையிவை நாடிலிரண்டந்தம்
பேதமதென்பர் பெரியோர்க்கபேதமே”

வேதம் பொதுநூலாகவும், ஆகமம் சிறப்பு நூலாகவும் விளங்குவன. வேதமும், ஆகமமும் இரு வேறுபாடான முடிவுகளைக் கூறும் என்பர். ஆனால் நுணுகிப் பார்த்தால் பெரியோர்கள் இவை இரண்டிற்கும் இடையே வேறுபாடுகள் காணமாட்டார்கள். இக் கருத்து இவை இரண்டிற்கும் இடையே உள்ள ஒற்றுமையை விளக்குவனவாக உள்ளன.

ஆகமங்களின் தொன்மை

ஆகமங்களின் தொன்மையை நிலைநாட்ட அவற்றை தேவதங்களோடு ஒரே நிலையில் வைத்து வேறுபாடின்றி கொள்ளும் மரபு நெடுங்காலமாக இருந்து வந்துள்ளது. திருமூலர் “ஆகுமனாதி கலையாகமவேதம்” என்ற குறிப்பின் மூலம் வேதத்தையும், ஆகமத்தையும் அநாதி எனக் குறிப்பிடுகின்றார். அருணந்தி சிவாச்சாரியார் அவர்கள் வேதங்கள் சூத்திரம் போன்று இருத்தலால் பொதுநூல் எனவும் அவ் வேதங்களுக்குப் பாஷ்யம் போன்று இருத்தலால் சிவாகமங்கள் சிறப்பு நூல் எனவும்

குறிப்பிடுகின்றார். அத்துடன் ஏனைய நூல்கள் இவற்றின் விரிந்த நூல்கள் எனவும், இவையே அநாதி நூல்கள் எனவும் குறிப்பிடும் கருத்துக்கள் கவனிக்கத்தக்கது.

நித்தியத் தன்மை வாய்ந்த சாஸ்த்திரங்களை இன்ன காலத்தில் தோன்றின என யாராலும் அறுதியிட்டுக் கூறமுடியாது. எனினும் சிவாகமங்கள் வரிவடிவ அமைப்பை ஒரு குறிப்பிட்ட காலத்தில் பெற்றிருக்க வேண்டும் என்பதை யாராலும் மறுக்க முடியாது. வேத சங்கிதைகள், பிராமணங்கள், ஆரணியங்கள் இவற்றை அடிப்படையாகக் கொண்டு சிரௌத சூத்திரங்கள், கிருஹிய சூத்திரங்கள், தரும சூத்திரங்கள் இயற்றப்பட்டன. இச் சூத்திரங்கள் கல்ப சூத்திரங்கள் என்ற பொதுப்பெயரால் அழைக்கப்படும். சிவாகமங்களின் விதிமுறைகள் பல கல்பசூத்திரங்களில் காணப்படுவதனால், சிவாகமங்கள் கல்ப சூத்திரங்களுக்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்தவையாகவே இருக்கவேண்டும். கல்பசூத்திரங்களின் காலத்தைக் கி.மு 4ம் நூற்றாண்டு என பெரும்பாலான அறிஞர்கள் கணித்துள்ளனர். எனவே சிவாகமங்கள் கி.மு 4ம்நூற்றாண்டுக்கு முற்பட்டவை என கருத்தப்படுகின்றது. மேலும் திருமூலர் காமிகம் முதல் ஒன்பது சிவாகமங்களை அடிப்படையாகக் கொண்டே திருமந்திரத்தை படைத் துள்ளார் என்பதை அவரது வாக்காலே அறியலாம். எனவே சிவாகமங்கள் திருமூலர் திருமந்திரத்திற்கு முற்பட்டது எனப் படுகின்றது. திருமூலர் கி.பி4, கி.பி6ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். மாணிக்க வாசகர் காலத்தை கருத்திற் கொண்டு கி.பி8ம் நூற்றாண்டை ஆகமத்தின் பின எல்லையாகவும் கொள்ளப் படுகின்றது.

மேலும் வேதத்தை பசுவாகவும் அதன் பாலை நெய்யாகவும், உருவகப்படுத்தும் மரபு இவற்றிற் கிடையே உள்ள தொடர்பைக் காட்டி நிற்கின்றது. வேதங்களைப் போல ஆகமங்கள் தெய்வீக நிலையில் உணர்த்தப்பட்டது எனச் சுட்டும் வகையில் திருமூலர் "அண்ணலருளா லருளுஞ் சிவாகமம்" என்று குறிப்பிடப்படுகின்றது. வேதம், ஆகமம் இவற்றிற்கிடையிலான ஒருமைப்பாடு

சைவ உண்மைகளை உணர்ந்த பெரியார் ஸ்ரீகண்டசிவாச்சாரியார் வேதாந்த சூத்திரத்திற்குரிய தமது பாடியத்தில்

"வேதசிவாகமங்களுக்குப் பேதம் காண்கிலம்
வேதமும் சிவாகமமும் ஒன்றே"

எனக் கூறி வேதாகம, ஒருமைப் பாட்டினை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

சுருதி

காதால் கேட்கப்பட்டு வந்த காரணத்தினால் வேதங்கள் சுருதி என அழைக்கப்படுகின்றது. ஆகமங்களும் பன்னெடுங்காலம் குருசீட மரபில் பேணப்பட்டமையினால் ஆகமங் களுக்கும் இச் சிறப்புப்பெயர் ஏற்படலாயிற்று. வேதங்களில் மறை பொருளாகக் கூறப்பட்ட பஞ்சாட்சரம் போன்ற விடயங்கள் ஆகமங்களில் விரிவுபெறுவதால் இவற்றிற்கு சிரௌதம் என்ற பெயர் வழங்கப்படலாயிற்று. வேதங்களில் சுட்டப்படாத ஆலய அமைப்பு பிரதிஸ்டை, உற்சவம் முதலியவற்றை ஆகமங்கள் தாமாகவே விரித்துக் கூறும் தன்மையால் அவற்றிற்கு சுவதந்திரம் என்ற பெயரும் உண்டாயிற்று.

## சொல்வழக்கு

ஆகமம் என்ற பெயருக்கு பொதுவான விளக்கங்களும், சிறப்பான விளக்கங்களும் கூறப்படுவதைக் காணலாம். இப் பெயர் உணர்த்தும் பல்வேறு பெயர்களுள் தோற்றம், வருகை, சாஸ்த்திரம், சாஸ்திரஞானம், ஆப்தவாக்கியம் என்பன குறிப்பிடத் தக்கன. ஆகமம் என்ற சொல்லுக்கு "தொன்று தொட்டு வரும் அறிவு", "போய்ச் சேருதல்" அல்லது "வந்தடைதல்" இறைவனை அடைவதற்கான வழி வகைகளைக் கூறும் நூல் "அஞ் ஞானத்தைக் கெடுத்து, மெய் ஞானத்தைப் புகட்டுதல்" எனப் பல பொருள் விளக்கம் கூறப்படுகின்றது. ஆ+க + ம என்ற மூன்று எழுத்தும் முறையே பாசம், பசு, பதி எனப் பொருள் தந்து திரிபதார்த்தங்களை உணர்த்தி நிற்கின்றது. மேலும் ஆ + க +ம என்பது சிவஞானம், மோட்ச சாதனம், மலநாசம் எனப் பொருள் தந்து ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம் செய்து சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தைக் கொடுக்கும் என்ற சிறப்பான விளக்கமும் தரப்படுகின்றது.

## சிவாகமங்களின் தொகை

சிவாகமங்கள் இருபத் தெட்டாகும். இவை சதாசிவ மூர்த்தியின் ஈசான முகத்திலிருந்து தோன்றின எனப்படுகின்றது. இவை காமிகம், யோகஜம், சிர்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகஸ்ரம், அஞ்சுமான், சுப்ரபேதம், விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்நேயம், வீரம், புரோற்கீதம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என இருப்பத்தெட்டாகும். திருமூலர் திருமந்திரத்தில்

"அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சோடிருப்பத்து மூன்றுள ஆகமம்"

எனக் கூறியிருப்பது நோக்கத்தக்கது.

## உபதேசமுறைமை

இருபத்தெட்டு ஆகமங்களுக்கும் முறையான உபதேச கிரமம் கூறப்படுகின்றது. காமிகம் முதல் அஜிதம் வரை உள்ள ஐந்தும் சந்தியோஜாத முகத்தினின்றும் கௌசிக முனிவருக்கும், தீப்தம் முதல் சுப்பிரபேதம் வரை உள்ளவை, வாமதேவ முகத்தினின்றும் காசிபமுனிவருக்கும், விஜயம் முதல் வீரம் வரை உள்ளவை அகோர முகத்தினின்றும் பரத்துவாசமுனிவருக்கும், இரௌம் முதல் முகவிம்பம் வரையுள்ளவை தற்புருட முகத்தினின்றும் கௌதமமுனிவருக்கும், புரோற்கீதம் முதல் வாதுளம் வரையுள்ள எட்டும் ஈசான் முகத்திலிருந்து அகத்திய முனிவருக்கும் உபதேசிக்கப்பட்டதாக மரபு உண்டு.

இவ்வாகமங்களில் முதல் பத்தும் விஞ்ஞான கலருட் பரமசிவன் அனுக் கிரகத்தை பெற்ற பிரணவர் முதலிய அணுசதாசிவர் பதின்மருக்கு அருளிச் செய்யப்பட்டதால் சிவபேதம் எனவும், ஏனைய பதினெட்டு ஆகமங்களும் அநாதிருத்திரர் முதலிய பதினெட்டு உருத்திரர்களுக்கும் அருளிச் செய்யப் பட்டமையால் உருத்திரபேதம் எனவும் வழங்கப்படுகின்றன. இவ்வாறு மூலாகமங்களை கேட்டவர்கள் பிரணவர் முதல் அறுபத்தறுவர் என வழங்கப் படுகின்றது.

இவ்வாகமங்கள் உபதேச கிரமத்தின்படி ஒவ்வொரு தலை முறைக்கும் வழங்கப்பட்டுள்ளதை உணரமுடிகின்றது. இந்த வகையில்

ஆகமங்களைச் சதாசிவ மூர்த்தி அநந்ததேவருக்கு உபதேசித் தருளிய தாகவும் அநந்த தேவர் ஸ்ரீகண்ட உருத்திரருக்கும், ஸ்ரீகண்டஉருத்திரர் திருநந்தி தேவருக்கும், திருநந்திதேவர் சனற்குமார முனிவருக்கும், முனிவர்கள் மானுடருக்கும் மானுடரால் மானுடருக்கும் குருபரம்பரையாக உபதேசிக்கப்பட்டு உலகத்தில் பரவுவனவாகவுள்ளன.

இந்த வகையில் சிவாகமம் தொன்றுதொட்டு ஆன்மாக்கள் இடத்தில் சிவப்பண்பு நிறைவதற்கு வழிவகைகளை தரும் நூலாக விளங்கியுள்ளது என கூறுவது மிகப் பொருத்தமுடையதாகும். இறைவன் மெய்யடியார்களின் பொய்யில்லாத திருவுள்ளத்திலே அருளுருவாய் நின்று உபதேசித்து அருளுகின்றான் என்பதும் உணரத்தக்கதாகும். குருவையே இறைவனாக வழிபடும் பாரம்பரியமான சுலோகம் வடமொழியில் உள்ளது.

"குருப் பிரம்மா குருவிஷ்ணு குருதேவோ மகேஸ்வரா
குரு சாசஷாத் பரப்பிரம்மா தஸ்மை ஸ்ரீகுருவே நமஹ"

குருவையே பிரம்மாவாகவும், விஸ்ணுவாகவும், மகேசுவரராகவும், பரப்பிரம்மாகவும், கொண்டு குரு வணக்கம் செய்ய வேண்டும் என மேற்குறிப்பிட்ட சுலோகம் வலியுறுத்து கின்றது. திருமூலர் திரு மந்திரத்தில் முதற்தந்திரமாகிய உபதேசத்தில்

"தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே"

என வருவது நோக்கத்தக்கது. தெளிவு என்பது இங்கு ஞானத்தைக் குறித்து நிற்கும் ஆத்மஞானம் பெறுவதற்குக் குரு வழிகாட்டல் இன்றியமையாதது அறிவாகிய ஆத்ம ஒளியைப் பிரகாசிக்கச் செய்யவும், துக்கமின்றி இருப்பதற்குரிய வழி வகைகளைக் கூறவும் நமக்குக் குரு பரம்பரை இன்றியமையாததாகின்றது.

## நாற்பாதங்கள்

சிவாகமங்களின் உள்ளடக் கத்தை நோக்கினால் அவை சரியாபாதம், கிரியாபாதம், யோகாபாதம், ஞானபாதம் என நான் பிரிவுகளைக் கொண்டுள்ன. இவை ஒவ்வொன்றும் சரியையில் சரியை, சரியையில் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என வகுக்கப் படுகின்றன. மேலும் ஒவ்வொரு ஆகமத்திலும் சிறப்புற்ற பாதங்கள் மட்டும் வழங்கி வருவதையும் காணலாம். உதாரணமாக காரணாகமத்திலும், காமிக ஆகமத்திலும் கிரியாபாதம் மட்டுமே வழங்கப்படுகின்றது. சரியாபாதம் சமயாசாரங்களை எடுத்துக் கூறும் கிரியாபாதம் மந்திர உச்சாடனம், சந்தியாவந்தனம், பூசை, ஜபம் செய்தல், ஓமம் என்பவற்றை உபதேசிக்கும் யோகா பாதம் பிராணாயமம் முதலிய அங்கங்களோடு கூடியசிவயோகத்தைக் கூறும் ஞானபாதம் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் பற்றி உபதேசிக்கும்.

ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு இறைவன் அருள்பாலிக்கும் இடம் ஆலயமாகும். ஆலய சேவை பற்றி விரிவாக அறிவதற்கு உரிய ஆதார நூல்களாக விளங்குபவை சிவாகமங்களே ஆகும். இது பற்றிக் கிரியாபாதம், கர்ஷணம், பிரதிஸ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என நான்கு பிரிவுகளில் விளங்குகின்றது. காமிக ஆகமத்தில் எழுபத்தோராவது பிரகார லட்சணம்

விதிப் படலத்தில் ஆலயம் அமைய வேண்டிய இடம், பரிவார ஆலயங்கள், பரிவாரத் தெய்வங்கள், பிரகாரங்களின் எண்ணிக்கை, ஆலயப் பிரமாணங்கள் என்பன பற்றியும் விளக்கப்படுகின்றன. காமிக ஆகமத்தில் அறுபத்தைந்தாம் படலத்தில் பிரதிமாலட்சணம் என்ற பிரிவில் திருவுருவங்களின் அமைப்பு முறைபற்றி விளக்கப்படுகின்றது.

ஆகமங்கள் தென்னாட்டிற்கே சிறப்பாக உரிய என எனப்படுகின்றது. இலங்கையிலும் சைவம் ஆகமங்களுடன் நெருங்கி தொடர்பு கொண்டிருப்பதை நாம் அறியலாம். "இவை மக்களின் தேவையை ஒட்டியோ, மக்களுக்கு விளக்கம் ஏற்படுவதை மட்டும் குறிக்கோளாகக் கொண்டே காலத்திற்கு காலம், சூழ்நிலைக்கு ஏற்ப வேறுபடுத்தி அமைக்கப்படுவனவல்ல எனவே ஆகமங்கள் கூறும் கிரியைகளை அவதானித்து அவற்றை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டுவதே அன்றி காலப்போக்கினை ஒட்டி மக்கள் விளங்கும் வகையில் அவற்றை மாற்றியமைக்க இந்தியப் பண்பாடு இடம் தராது" என ஆகம மரபின் சிறப்பை எடுத்துக்கூறும் கைலாசநாதக் குருக்கள் அவர்களின் கருத்து மனங்கொள்ளத்தக்கதாகும்.

ஆகமங்கள் கூறும் விதிகளை பிரமாணமாகக் கொண்டு கிரியைகள் செய்யும் முறையினை ஒழுங்குபடுத்திக் கூறும் தனிநூலாக பத்தததிகள் விளங்குகின்றன. பத்ததி என்றால் மார்க்கம் எனப் பொருள்படும். பதினெண் தலைவர்கள், சைவத்தலைவர்களாக விளங்கிப் பதினென் பத்ததிகளை உருவாக்கியுள்ளனர். அவற்றுள் அகோர சிவாச்சாரியார் பத்ததி குறிப்பிடத்தக கதாகும்.

சிவாகமங்களுக்கு உப பேதங்களாக இருநூற்றேழு உபாகமங்கள் உள்ளன. இவற்றுள் சிவதருமோத்திரம், மிருகேந்த்திரம் என்பன குறிப்பிடத்தகவை. மூலாக மங்களிலும், உபாகமங்களிலும் உள்ள ஞானபாதக் கருத்துக்களில் சிலவற்றைத் தொகுத்தும், விளக்கியும் எழுந்த நூல்கள் சார்பு நூல்கள் எனப்படும். தத்துவப் பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், தத்துவத்திரய நிர்ணயம், இரத்தினத் திரயம், போககாரிகை, நாதகாரிகை, மோட்சகாமிகை, பரமோட்ச நிராசகாரிகை என்பன சார்பு நூல்களாகக் கொள்ளப் படுகின்றன.

தென்னாட்டில் வளர்ச்சி பெற்ற சைவத்திற்குச் சிவாகமங்கள் பெருமளவில் உதவியுள்ளன. பல்லவர் காலத்தில் இராஜசிம்ம மன்னன் ஆகமங்களைப் பிராமணமாக ஏற்று அம்மரபைப் பேணியமைக்கான சான்றுகளைக் கல்வெட்டுக்களில் காணலாம். "ஆகமத்தைப் பிரமாணமாகக் கொண்டவன்" போன்ற கூற்றுக்கள் சான்றாக விளங்குகின்றன. சைவ இயக்கத்திற்குச் தலைமையேற்ற நாயன்மார்களும் ஆகமக் கருத்துக்களைப் பின்பற்றி வாழ்ந்து ள்ளார்கள்.

ஆகமங்களின் ஞானபாதப் பொருளைப் பரஞ்சோதி முனிவர், மெய்கண்டதேவருக்கு உபதேசிக்க அவர் அதனைச் சிவஞானபோத சாத்திரமாகத் தமிழிலே ஆக்கியுள்ளார். இந்நூல் இரௌரவ ஆகமத்தின் எழுபத்துமூன்றாம் படலமாகிய பாபவிமோசனப் படலத்தின் பன்னிரண்டாம் அத்தியாத்தினை அடிப்படையாகக் கொண்டது எனப் படுகின்றது. முப்பொருள் பற்றியும்,

அவற்றிற்கிடையே உள்ள தொடர்பு, தன்மை, ஆகியன பற்றியும் முத்தியடைவதற்குரிய வழிவகைகள் பற்றியும், முத்தியின் தன்மை பற்றியும் ஆராயப்படுகின்றன. சிவஞான போதத்தை அடிப்படையாக்க கொண்டு அதிலுள்ள கருத்துக்களை விரிவுபடுத்தும் பொருட்டுத் தேவையான விசயங்களை ஆகமத்தில் இருந்து திரட்டிச் சிவஞானசித்தியார் என்னும் பெயரில் வழங்கியுள்ளார். அருணந்தி சிவாச் சாரியார் அவர்கள். இவ்வாறு சிவாகமத்தின் ஞானகண்டப் பொருளை உள்ளடக்கியனவாகப் பதினான்கு மெய்கண்டசாஸ்திரங்கள் விளக்கு கின்றன. "சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" எனக் கூறுகின்றது சித்தியார். சித்தாந்தம் என்பது முடிந்த முடிபாகும்.........

சமுதாய மேம்பாட்டுக்கும், தனிமனிதனின் தெய்வீக வாழ்க்கைக்கும் சைவ மரபில் சிவாகமங்களுக்குரிய மரபு வழிச் சிறப்பும், முக்கியத்துவமும் தனித்துவம் வாய்ந்தவையாகும்.


உசாத்துணை நூல்கள்

1. இந்துப்பண்பாட்டு மரபுகள்
   கலாநிதி ஏ.கோபாலகிருஷ்ணஐயர்
   பல்கலைக்கழகம்
2. சைவாகமங்கள் ஓர் அறிமுகம்
   முனைவர் எஸ்.பி.சபாரத்தினம்
   தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம்.


# ஆசிரியரும் கல்வி உளவியலும்


திருமதி. ரு .பக்தரன்
ஆசிரியர்


உளவியல் என்ற சொல் அதாவது Psychology = Psyche + Logos ஆகிய இரு கிரேக்கச் சொற்களிலிருந்து வந்தது. இன்றைய காலகட்டத்திலே உளவியல் என்பது அறிகை பற்றியதும் நடத்தை பற்றியதும் உடற்கூற்றுத் தொழிற்பாடு பற்றியதுமான கற்கைநெறி ஆகும். இவ்வுளவியலில் பல பிரிவுகள் காணப்படுகின்றன. அதில் கல்வி உளவியலும் ஒன்றாகும்.

பலவழிமுறைகளாலும் திரட்டப்படுகின்ற உளவியல் அறிவானது ஒவ்வொரு ஒவ்வொரு துறை சார்பாகப் பிரயோகிக்கப்படின் அப்பிரிவுசார் உளவியலாகக் கருதப்படும். உதாரணமாக உளவியற் கருத்துக்களைக் கல்வித் துறையில் பயன்படுத்துவது கல்வி உளவியல் எனப்படும். இதன் மெய்ப் பொருள் கல்வி பயிலும் மாணவர்களின் இயல்புகளும் நடத்தைகளுமாகும். பள்ளிச் சூழ்நிலையாலும் ஆசிரியர்களது செல்வாக்கினாலும் பாடத்திட்டங் களினாலும் மாணவர்களின் திறன்களும் நடத்தை களும் எவ்வாறு பாதிக்கப்

படுகின்றன? இவற்றை எங்ஙனம் மாற்றியமைத்தால் மாணவர்களின் பலதிறப்பட்ட திறன்கள் வெளிப் படுத்தப்பட்டு வளர்ச்சியுறும்? மாண வர்களின் நடத்தைக் கோலங்களை அவரவர்க்கும் அவர் வாழும் சமூகத் திற்கும் பயன் தரும் வகையில் எவ்வாறு மாற்றியமைக்கலாம்? என்பன போன்றவை கல்வி உளவியலில் ஆராயப்படும். பாடங்களைக் கற்பிக்கும் முறைகள், ஆசிரியமாணவ உறவு, கற்றலில் மாணவருக்கு ஏற்படும் இடர்பாடுகள், இவற்றின் காரணங்கள், இவற்றை நீக்கும் வழிகள், ஊனமோ, பிற்போக்கோ, மிகுதிறனோ (handicapped, backword, gifted) உடைய குழந்தை களுக்கான கல்வி, மாணவர்களுக்கு வழகாட்டல் (Guidance) ஆகியவை பற்றிய திருத்தமான அறிவை கல்வியுளவியல் வழங்குகின்றது.

ஆசிரியர் தம்பணியை செவ்வனே மேற்கொள்வதற்கு உறுது ணையாக அமைவது அவரது கல்வி உளவியல் அறிவாகும். கற்போனின் விருப்பு, வெறுப்பு உள்ளடங்கிய ஆயத்தநிலை, கற்றல் செயல்களில் அவர் ஈடுபடுகின்ற விதமும் அச்செயல் களினூடாக அவன் பெறுகின்ற தகைமைகளும் கற்றலின் போது எதிர்ப்படும் தடங்கல்கள் அல்லது இடர்பாடுகளை வெற்றிகொள்ளும் வழிமுறைகள் போன்ற இன்னோரன்ன விடயங்கள் பற்றிய பூரண அறிவை ஆசிரியர் பெற்றிருத்தல் அவசியமாகும். இவற்றோடு கூடிய திறன்களைப் பெற்றிடவும் உரிய மனப்பாங்கினை வளர்த்திடவும் கல்வியுளவியலறிவு அவருக்கு இன்றியமையாததாகும்.

பாடத்தைக் கற்பிக்க விளையும் ஆசிரியர் பாடப்பொருளை மட்டும் அறிந்திருத்தல் போதாது. தம் மாணவனையும் அறிந்திருத்தல் வேண்டும். மாணவனை அறிந்திருத்தல் எனும் போது அவனது அறிகைசார், உளஇயக்கம்சார் விருத்திகள் பற்றி ஆசிரியர் அக்கறை கொண்டிருக்க வேண்டும். அத்துடன் ஒவ்வொரு பிள்ளையினதும் ஒவ்வொரு வகை விருத்திக்கும் விருத்திப் படிநிலை களுக்கும் ஏற்பக் கற்றல் நிலைமைகளை கையாளும் திறனையும் ஆசிரியர் கொண்டிருக்க வேண்டும். மாணவரிடத்தே காணப்படும் மாற்றங்களினூடாகவே அவனிடத்தில் ஏற்படுகின்ற கற்றல் பற்றி நாம் அறிய முடிகின்றது. ஆயினும் மாணவரிடத்து ஏற்படக்கூடிய நடத்தை இயல்புகள் யாவற்றையும் நாம் எமது புலனனுபவங்களினூடாக நேரடியாக அறிய முடியாது. பிள்ளையில் அவதானிக்கப்படக்கூடிய பிற செயல்கள் அல்லது நடத்தை மாற்றங்களினூடாக அவனது அறிகை, விருத்தி பற்றிய அனுமானங்களை மேற்கொள்ள முடியும். இந்த வகையில் எமது புலன் அனுபவங்களின் மூலம் நேரடியாக அறியப்பட முடியாத அறிகைத் தொழிற்பாடுகள் பற்றிய உளவி யலாளரின் கருத்துக்களையும் விளக் கங்களையும் அறிவதன் மூலமே ஓர் ஆசிரியர் தனது மாணவர்களுக்கு உதவ முடியும்.

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள். சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லத் தொடங்கிய காலம் முதல் அவர்களது நாள்களின் கணிசமான பகுதி பாடசாலையிலேயே கழிகின்றது.

இதனால் சிறுவர்களை அவதானிப்பதிலும் வழிப்படுத்துவதிலும்

அவர்களது சிந்தனைகளை வளர்த்தெடுப்பதிலும் அவர்களது படிப்பு என்ற அறிவுத் தேவைக்கும் அப்பால் அன்பு, அரவணைப்பு, ஆதரவு போன்ற உணர்ச்சித் தேவைகளை வழங்குவதிலும் ஆசிரியர்களின் பங்கு முக்கியமானது. அநேகமான சிறுவர்கள் தங்கள் ஆசிரியர்கள் மீது பற்றும் அவர்களது சொல், செயல் என்பவற்றின் மீது அதீதமான நம்பிக்கையும் வைப்பார்கள். ஆசிரியர் கூற்றே வேதவாக்காகவும், முடிந்த முடிவாகவும் எண்ணத் தலைப்படுவார்கள் இதிலிருந்து பொதுவாக எல்லா ஆசிரியர்களும் குறிப்பாக ஆரம்ப வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பிள்ளைகள் மீது செலுத்தும் செல்வாக்குப் பற்றி புரிந்து கொள்ளலாம்.

ஆசிரியர்கள் இவ்வாறான ஒரு செல்வாக்கு நிலையில் இருப்பதனால் ஆசிரியர்களின் பொறுப்புக்களும் அதிகமாகின்றன. ஆசிரியர்களே பிள்ளைகளின் பாதுகாவலர் ஆகின்றனர். அவர்கள் தங்களிடம் கற்கின்ற பிள்ளைகளின் எல்லா விதமான வளர்ச்சியிலும் விருத்தியிலும் அக்கறை செலுத்த வேண்டியவர்களாகின்றனர். அதேவேளை பிள்ளைகளின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் ஏற்படுகின்ற பின்னடைவுகள் பற்றியும் அவர்களது தேவைகளில் ஏற்படுகின்ற குறைபாடுகள் பற்றியும் ஆசிரியர்கள் தெரிந்துகொண்டு அதற்கேற்ப அவற்றைக் களைவதற்கு அல்லது நிவர்த்தி செய்வதற்கு முயல வேண்டும். சில வேளைகளில் இவ்வாறான முயற்சிகள் பாடசாலை என்ற நிர்வாகச் சூழலைக் கடந்து பிள்ளைகளினது குடும்பம், சமூகம் போன்ற சூழல்களிலும் செய்யப்பட வேண்டியிருக்கும். பிள்ளைகளின் வளர்ச்சியையும் விருத்தியையும் பாதிக்கின்ற பல நிலைமைகளை ஆசிரியர் இனங்கண்டு அவற்றைச் சரிசெய்ய வேண்டும். ஒவ்வொரு வயதினரும் தத்தமது வயதுக்கேற்ற திறன்களை, அடைவு மட்டத்தை அடைந்துவிட்டார்களா? என்று அவதானிக்க வேண்டும். ஒதுங்கியிருக்கும் பிள்ளைகள் பற்றியும் கட்டுப்படுத்த முடியாத பிள்ளைகள் பற்றியும், மெதுவாகக் கற்போர் பற்றியும் விஷேட கவனம் செலுத்த வேண்டும். இவற்றை விடவும் இடைக்கிடை பெற்றோரைச் சந்தித்து அளவளாவி இடைவினைகளை ஏற்படுத்துவதனூடாக பிள்ளைகளின் வளர்ச்சிக்கு உதவுபவராக ஆசிரியர் இருக்க வேண்டும்.

மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் அவர்களது உடல்நலத்தில் தங்கியுள்ளது. கற்றலுக்கான ஆர்வம், உந்துதல் தொடக்கம் கருத்தூன்றல், கிரகித்தல், ஞாபகத்தில் இருத்தல், நுண்ணறிவு விருத்தி எனக் கற்றலின் எல்லாப் பகுதிகளும் ஒழுங்காக நடைபெற மாணவரது உள்ளம் நலமாக இருக்க வேண்டும். உளநலப் பிரச்சினையுடைய மாணவர்கள் வகுப்பறையில் மற்றவர்களைக் குழப்புதல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஆசிரியருடன் ஒத்துழையாமை போன்ற பலவிதமான இடர்தரு நடத்தைகளைக் காட்டலாம். எனவே கற்பித்தல் கற்றல் செயற்பாடுகள் ஒழுங்காகவும் நன்றாகவும் நடைபெறுவதற்கு மாணவர்களது உளநலம் மேம்பாடான ஒருநிலையில் இருப்பது அவசியமாகிறது.

கல்வி உளவியல் என்பது கலைத்திட்டத்தை உள்ளடக்கிய உளவியலாகவும் வளர்ச்சி பெற்றுள்ளது. யாருக்குக் கற்பித்தல்? எவற்றைக்

கற்பித்தல்? எவ்வாறு கற்பித்தல்? எத்தகைய விளைவுகளுடன் கற்பித்தல்? மாணவர்களின் அடைவுகளை எவ்வாறு மதிப்பீடு செய்தல்? எவ்வாறு பின்னூட்டல்களை வழங்குதல்? முதலிய செயற்பாடுகளிலே கல்வி உளவியல் நேரடியாகப் பங்குபற்றிச் செயற் பாடுகளை வளம்படுத்தி வருகின்றது. வகுப்பறைக் கல்வி நிலையை ஒழுங்கமைத்தல், வகுப்பறை முகாமைத் துவத்தை இதமாக இயக்குதல், குழுச்செயற்பாடுகளை முன்னெடுத்தல், மாணவரிடத்து இங்கிதமான சமூக உணர்வுகளை வளர்த்தெடுத்தல், விரக்திக்கு உட்பட்ட மாணவரிடத்து நேர்சீராக்க நுண் உபாயங்களை வளர்த்தெடுத்தல். கற்றலைக் குவியப்படுத்துவதற்குரிய கவன ஈர்ப்பை வளர்த்தெடுத்தல், அறிக்கைக்கு ஆதாரமான புலக்காட்சியை வளப்படுத்தல், சீர்மியம் மற்றும் ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளை முன்னெடுத்தல் முதலிய அனைத்தும் கல்வி உளவியலுடன் கலந்து நிற்கும் நடவடிக்கைகள் ஆகின்றன.

கல்வியின் ஆக்கம் பல கிளைகளாக விரிவாக்கம் பெறத் தொடங்கியுள்ளது. தொடர்தொழில் வழிகாட்டல், பொருத்தமான தொழில்களுக்கு மாணவர்களை இட்டுச் செல்லல், வாழ்க்கையை வளம்படுத்திச் செல்வதற்குரிய சீர்மியச் செயற்பாடுகளை வளர்த்தல், தலைமைத்துவப் பண்புகளை மாணவரிடத்து மேம்பட வைத்தல், தொடர்பாடலை வினைத்திறன் படுத்தல் என்றவாறான பலநிலை விரிவாக்கங்கள் கல்வி உளவியலினால் உள்வாங்கப்பட்டு வருகின்றன.

இன்றைய அறிகைச் சூழலில் அதி முக்கியத்துவம் கொடுக்கப்படும் ஆய்வுத்துறைகளில் ஒன்றாகக் கல்வி உளவியல் மேலெழுந்து வருகின்றது. கல்வி நிலைப்பட்ட பிரச்சினைகள், நடைமுறைகள், விளைவுகள், கருத்தியல்கள், கருத்து வினைப்பாடுகள் முதலியவற்றைக் கல்வி உளவியல் உள்ளடக்கி நிற்கின்றது.

கல்வி உளவியல் ஆசிரியத்துவத்தின் மேம்பாட்டிற்குரிய உளவியலாகின்றது. கற்பித்தலை வளம்படுத்துவதற்குரிய கற்றற் கோட் பாடுகள், நினைவில் நிறுத்தல், மறத்தல் தொடர்பான கோட்பாடுகள், கற்றல் இடமாற்றக் கோட்பாடுகள் முதலியவை உளவியலிலே உருவாக்கப் பட்டுள்ளன. இக்கோட்பாடுகள் ஆசிரியரின் வாண்மைப் புலக்காட்சியை வளம்படுத்து வதற்கும் வலுப்படுத்து வதற்கும் துணை நிற்கின்றன.

❀ ❀ ❀

# மகாத்மா காந்தியினுடைய கல்வி சிந்தனைகள்

திரு. வேலும்மயிலும் சேந்தன்
ஆசிரியர்

பாரதத்தின் மக்கள் தலைவரும் அரசியல் வாதியும் கல்விமானுமாகிய மகாத்மா காந்தி மேலைத்தேய ஏகாதிபத்திய வாதிகளின் பிடியிலிருந்து தனது தாய்நாட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்காக முன்னோடியாக நடவடிக்கை எடுத்தார். அந்த ஒவ்வொரு நடவடிக்கையின் போதும் அவரது தத்துவக் கருத்துக்கள் எவ்வாறு இந்திய தேவைகளை அடியொற்றியதாக அமைந்தது என்பதை ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதோடு அவற்றை இலகுவில் விளங்கிக் கொள்ள அவற்றுக்கு அடிப்படையாக அமைந்த தத்துவக் கருத்துக்களை விளங்கிக் கொள்ளவும் முயற்சிப்போம்.

காந்தியின் தத்துவ, மற்றும் கல்விக் கருத்துக்கள் மீது ஏற்பட்ட தாக்கங்கள்

காந்தியின் தத்துவம் உண்மையைக் கண்டறிவதற்கும் தெய்வீகம் அல்லது கடவுள் என்பது உண்மையாகும். ஒவ்வொரு மனிதனின் கடமை இந்த உண்மையைக் கண்டறிவதாகும். மானிடம் மனிதத்துவம் பற்றி யதார்த்தமாகப் பார்க்கும். அவர் உடல் ரீதியாக வேறுபட்டாலும் எல்லோருக் குள்ளும் ஒரே ஆன்மா தான் இருப்பதாக காந்தி கூறுகிறார். மனிதர்கள் அனைவரும் ஒரே சமூகத்திலிருந்து தோன்றியவர்கள் என காந்தி நம்பினார். கடவுள் என்பது உண்மையென்றும் உண்மையென்பது அன்பென்றும் கூறும் அவர் உண்மையை விளங்க வேண்டுமாயின் அஹிம்சை வழியில் வாழவேண்டும் என்றும் கூறுகின்றார். அதற்காக ஆன்மிகத்தை வளப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அடக்க ஒடுக்கமாக வாழ்வதால் ஆளுமை வளர்ச்சி ஏற்படுகின்றது. இவ்வாறு எல்ல நபர்களினதும் ஆளுமை வளர்ச்சி ஏற்பட்டவுடன் சமூக வளர்ச்சி ஏற்படுகின்றதென்றும் சமூக வளர்ச்சி ஆளுமை வளர்ச்சிக்குக் காரணமாகின்ற தென்றும் கூறுகின்றார். அஹிம்சை உண்மையைக் கண்டறியும் வழி எனக் கருதிய காந்தி, எல்லோரும் உண்மையைத் தேடும் வழியைப் பழகிக் கொண்டால் சமூகத்தில் நிலவும் உயர்வு தாழ்வுகள் நீங்கி ஒருமைப்பாட்டைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று அவர் நம்பினார். அதன் மூலம் அக்கால இந்திய சமுதாயத்தில் மக்கள் ஒற்றுமைக்குப் பிரதான தடையாக நிலவிய குலம், கோத்திரம், சாதி, நிற, வகுப்பு பேதங்களை நீக்குதல் அவரது அபிலாசையாக இருந்தது.

காந்தியிடம் அ ஹிம்சைக் கருத்துக்கள், ஒழுக்கம், அனைவர் மீதும் அன்பு செலுத்துதல் முதலிய கருத்துக்கள் தோன்றுவதில் ஜோன் ரஸ்கின், டோல்ஸ்டோய், ஹென்றி தோரோ முதலானோரின் சிந்தனைகள் அவரது குரு எனக் கருதப்பட்ட ராய்சாந்த்பாயின் கருத்துக்களும் என்பன பெரிதும் தாக்கத்தை எற்படுத்தியுள்ளன.

மாகாணமட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்ட
கொக்கி அணி 19 வயதுப்பிரிவு-2011



வலயமட்டத்தில் இரண்டாம் இடத்தை பெற்ற
காற்பந்தாட்ட அணி 19வயதுப்பிரிவு - 2011



மாவட்ட மட்டத்தில் இரண்டாம் பிரிவில்
தெரிவாகிய துடுப்பாட்ட அணி 17வயதுப்பிரிவு









மாவட்டமட்டத்திற்கு
தெரிவாகிய
மெய்வல்லுநர்கள் -2011

மாகாணமட்டத்தில்
மதலாம் இடத்தை
பெற்றுக்கொண்ட
மேசைப்பந்தாட்ட
அணி பெண்கள்-2011





மாவட்ட மட்டத்தில்
முதலாம் இடத்தை
பெற்றுக்கொண்ட
மேசைப்பந்தாட்ட அணி
ஆண்கள்-2011

மேலும் அவர் தென்னா பிரிக்காவில் இருந்த காலத்தில் டோல்ஸ்டோய் பண்ணையில் மேற் கொண்ட பரிசோதனை மூலம் பிள்ளையின் நடத்தை விருத்திக்கு மேலதிகமாகப் பிள்ளையிடம் உழைப்பு விருப்பத்தை ஏற்படுத்தவும் வாழ்க்கைத் தொழிற்றிறன்களை விருத்தி செய்யவும் கல்வியைப் பயன்படுத்திக் கொள்வது பற்றிய கருத்துக்கள் அவரிடம் தோன்றின. சுயமாகக் கற்றுக்கொள்ளல் பற்றிய கருத்துக்கள் வளர அவருக்கு இந்த அனுபவம் உதவியது. உணவு சமைப்பதில் லிருந்து சாக்கடைச் சுத்திகரிப்பு வரை எல்லா வீட்டு அலுவல்களையும் இங்கு எல்லோரும் செய்யவேண்டியிருந்தது. மேலும் கல்வியையும் மேலதிக வாழ்க்கைத் தொழிற் பயிற்சியையும் பெற்றுக் கொடுப்பதற்கும் அங்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டிருந்தன. டோல்ஸ்டோய் பண்ணையில் அவர் பரிசோதித்துப் பார்த்த மற்றுமொரு வேலைதான் குழுவாக வேலை செய்வதன் மூலம் பெரும் பயன்களை அடைந்து கொள்ள முடியும் என்பதாகும். புதிய கல்வி முறையொன்றை இந்தியாவில் அறிமுகம் செய்ய வேண்டிய தேவையைக் காந்தி அறிந்து கொள்ள மற்றுமொரு காரணமும் இருந்தது. அதுதான் அக்காலத்தில் இந்தியாவில் இருந்த கல்வி முறையில் காணப்பட்ட குறைபாடுகள். அப்போதிருந்த கல்வியின் தேவை, மக்களை அடிமைகளாகவும் தாழ்ந்தவா களாகவும் ஆங்கிலேயரின் அடிவருடி களாகவும் உள்ள ஒரு சமுதாயத்தைத் தோற்றுவிப்பதாகும். மேலும் பாடப் போதனைக்கு கூடிய முக்கியத்துவம் வழங்கப்படுவதாகவும் ஆங்கிலம் கல்வி ஊடகமாகவும் இருந்ததால் மாணவரின் முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கு அதன் மூலம் இடம் கிடைக்காததோடு மாணவர் தமது கிராமத்திலிருந்தும் சமூகத்திலிருந்தும் கலாசாரத்திலிருந்தும் விலகிய ஒரு சாரராக உருவாக அந்தக் கல்வி முறை காரணமாக இருந்தது. மேலும் மாணவரை அடிமை மனப்பாங் கிலிருந்து விடுவித்து, சுதந்திரமான உளப்பாங்கைக் கொண்டவர்களாக ஆக்குவது காந்தியின் எதிர்பார்க்கையாக இருந்தது. அவரது கல்விக் கோட்பாட்டின் அடிப்படை இலக்காக இருந்தது மாணவர் பூரண ஆளுமை வளர்ச்சியடைவதாகும்.

"பிள்ளையின் உள்ளத்திலும், ஆன்மாவிலும் காணப்படும் அதிசிறந்த பண்புகளைக் கூட்டாக மலரச் செய்வதே, கல்வி என நான் கருதுகிறேன்" என்று காந்தியடிகள் கூறினார்கள். மக்களின் உள்ளங்களிலும் இதயங்களிலும் ஒரு புரட்சியை ஏற்படுத்துவது அவரது கல்விக் கருத்துக்களின் குறிக்கோளாகும்.

இதற்கான தனது கவனத்தைச் செலுத்திய காந்தியடிகள் தமது சமகால பாரதத்தில் நிலவிய குடியேற்ற நாட்டியல்புகளையும், மக்களை அழுத் தத்துக்கு உள்ளாக்கிய தரித்திரத்தையும், கல்லாமையையும் மேலைத் தேயத்தவர் வளர்த்து வந்த கல்வி எண்ணக் கருக்களையும் ஒழித்துக்கட்ட நடவடிக்கை எடுத்தார்.

## காந்தியடிகளின் கல்விக் கருத்துக்கள்

உண்மையைத் தேடிக் கண்டு பிடிப்பதை நோக்கமாகக் கொண்ட காந்தியடிகள், அதன் பொருட்டு ஆன்மிக விருத்தி ஏற்படுவது அவசியமாகிறது என்றும் அஹிம்சையைக் கடைப் பிடிப்பதால் அதை அடைந்து கொள்ளலாம் என்றும் நம்பினார். அதன்

மூலம் எல்லா விதமான பேதங்களையும் உயர்வு தாழ்வுகளையும் வெற்றிகொண்டு தனிநபர்களுக்கிடையில் ஒருமைப் பாட்டைப் பாதுகாக்கக்கூடிய ஒரு சமூகத்தை உருவாக்குவது அவரது எதிர்பார்க்கையாக இருந்தது. மேலே குறிப்பிட்டவாறு டோல்ஸ்டோய் பண்ணையின் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு சுயதேவைப் பூர்த்திக் கல்வி பற்றி எண்ணக்கருவை முன்வைத்த காந்தி, அதற்கான வேலைத்திட்டத்தைத் திட்டமிட்டுத் தயாரித்துச் செயற் படுத்தினார். சாக்கடைத் தொழிலாளி வரை (தோட்டிவரை) யிலான சமூகத்தில் வாழும் எல்லோரினதும் மலர்ச்சியையும் நலனையும் ஏற்படுத்துவது அவரது எதிர்பார்கையாக இருந்தது. உழைப்பை மதிக்கும் எண்ணக் கருவுக்கும் இதுவேஅடிப்படையாக இருந்தது.

எல்லோரினதும் நலனைக் கவனிக்கும் ஒரு சமூகத்தைக் கட்டியெடுப்ப வேண்டு மென்றால் ஆன்மிகப் போசாக்கு எனப்படும் ஒரு பயிற்சி எல்லோருக்கும் தேவை. அதனால் தலை, கை மற்றும் இருதயம் ஆகிய மூன்றினதும் ஒருவகையாக சமனான வளர்ச்சி ஏற்படும் விதத்திலான கல்வி அமைய வேண்டும் என காந்தி வலியுறுத்தினார். அக்காலத்தில் இந்தியாவில் பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளின் கருத்துக் களையும் தேவைகளையும் நிறைவு செய்வதற்கான கல்வி முறையே இருந்த வந்தது. அதனால் அன்று சிலருக்கு மட்டுமே கல்வி கிடைத்தது. கற்றோர் கல்லாதோர் பேதத்தை ஏற்படுத்திய அந்தக் கல்வி முறை சமூக ஏற்றத்தாழ்வு ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தது. அந்தக் கல்வி முறையின் மற்றொரு பண்பு அது தலைமை மட்டும் போஷாக்குமொன்றாக அமைந்திருந்ததுவாகும். உள்ளமும் கையும் இங்கு புறக்கணிக்கப்பட்டிருந்தன. சம ஆளுமையுடைய நபர்கள் அதனால் தோன்றிவில்லை. சுதந்திரமானதும் நியாயமானதும் ஒருமைப் பாடுடைய துமான ஓர் அரசைக் கட்டியெடுப்ப அவர்கள் பொருத்த மானவர்கள் அல்லர். அதனால் தலையை மட்டுமே போஷிக்கும் அக்கல்வி முறையை ஒதுக்கிவிட வேண்டும் என்பது காந்தியின் கருத்தாகும்.

ஏழு இலட்சம் கிராமங்களைக் அக்காலக் கல்வி கொண்ட இந்தியாவில் அன்று நடைமுறைப் படுத்தப்பட்டது. கிராமங்களி லிருந்து நகரங்களை நோக்கி இழக்கின்ற கிராமங்களைப் பாழாக்கும் ஒரு கல்வி முறையாகும். நாட்டின் அபிவிருத்திக்கு அது ஒரு தடையாக இருந்தது. கல்வி தனியார் வாழும் சூழலிலேயே வழங்கப்பட வேண்டும் என்பதை அவர் உறுதியாகக் கூறினார்.

அன்று செயற்படுத்தப்பட்டது இம்சைப்படுத்தும் கல்வி என்பது காந்தி மகானின் கருத்தாகும். கற்பதற்குக் கட்டாயப்படுத்துவது தண்டனை வழங்குவதும் அதன் பண்புகளாகும். அது இம்சித்தலாகும். அஹிம்சைச் சமூக மொன்றைக் கட்டியெழுப்ப வேண்டு மாயின் அஹிம்சைக் கல்வி செயற் படுத்தப்பட வேண்டும் பாடசா லையில் அரசோச்ச வேண்டியது பயம் அன்று மகிழ்ச்சியே ஆகும்.

காந்தியின் தத்துவத்துக்கு அடிப்படை இல்க்காக அமைந்தது கிராமியப் பிள்ளைகளாகும். அக் காலத்தில் நிலவிய கல்வி முறையின்

பலவீனங்களைச் சமாளித்துக் கொள்ளவும் அவரது தத்து வத்தைச் செயற் படுத்தவும் "நய்தலிம்" (Naithalim) எனும் புதிய முறை யொன்றைக் காந்தி அறிமுகம் செய்தார்.

காந்தி 1942இல் அறிமுகம் செய்த நய்தலிம் எனும் புதிய கல்வி முறையில் கீழே குறிப்பிடப்படும் மூன்று புதிய தத்துவங்களும் அடிப்படையாக அமைந்துள்ளன.

1. கற்றலென்றும் கற்பித்தல் என்றும் ஒரு பேதம் இருக்கக் கூடாதென்பது கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர், கற்கும் மாணவன் ஒருவன் என்ற பேதம் இருக்கக் கூடாது. இருவரும் ஒரே வேலையில் ஈடுபடுகிறார்கள். அதாவது உண்மையைக் கண்டு பிடித்தல் இருவரதும் செயலாகும். அதன் காரணமாக ஆசிரிய மாணவர் பேதம் ஒழிய வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். ஒரே நோக் கங்களை அடைந்து கொள்வதற்கு ஈடுபடுத்திக் கொள்ளப்படும் ஒரு செயன்முறையே கற்றல் - கற்பித்தல் செயன்முறை.

2. செயல், அறிவு, மகிழ்ச்சி, மூன்றும் ஒன்றாகப் பிணைந்துள்ளன என்பது அறிவும் - வேலையும் (Knowledge and work) ஒன்றாகப் போக வேண்டும். உண்மையைக் கல்வியைச் செயலின்றிப் பெற முடியாது. சமூகத்தில் ஒரு குதி அறிவுக்காகவும் மற்றொரு பகுதி செயலுக்காகவும் ஈடுபடுவது பொருத்தமானதன்று. அவ்வாறிருந்தால் வகுப்புப் பேதம் ஏற்படமுடியும். ஆகையால் செயல், அறிவு, மகிழ்ச்சி ஆகிய மூன்றும் ஒன்றாக இருக்க வேண்டுமென்று காந்தி கூறினார். அப்போது தான் உண்மையான கல்வி ஏற்படும் என்கிறார். இதன்படி பாடங்களைப் படிப்பிக்கும் போது கோட்பாட்டுக் கல்வியை மட்டும் மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதால் கல்வி பூரணமடைவதில்லை. நடைமுறைச் செயற்பாடுகளின்றிப் பெறப்படும் கல்வி வெற்றியடையமாட்டாது. காந்தியின் கருத்துப்படி மனதை விருத்தி செய்யச் செயற்பாடுகள் உதவுகின்றன. அவரின் கருத்துப்படி நூல் நூற்றலும் ஒரு தியானமாகும்.

3. கல்வி பிள்ளையைச் சுதந்திரமான ஒருவனாகவும் அடிமைத் தளையி லிருந்து விடுவிக்கப்பட்ட ஒருவனாகவும் ஆக்குவதாக அமைய வேண்டும்.

கல்வி பிள்ளையிடம் சுதந்தி ரத்தையும் சுயாதீனத்தையும் தோற்றுவிக்கும் ஒன்றாதல் வேண்டும். அவன் வயது வந்த ஒருவனின் அடிமையாக இருக்கக் கூடாது. சுய முயற்சியால் ஒழுக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எதிர் பார்க்கப் படுகின்றது. மற்றவர்களது தண்டனைக்கும் சொல்லுக்கும் வளையும் ஒரு நபரிடம் சுய கட்டுப்பாடு தோன்றாது. அது ஒரு சுதந்திரமானதும் சுயாதீன மானதுமான ஒரு சூழலில் ஆகும். பாடசாலை அத்தகைய ஓர் இடமாக இருக்க வேண்டும். இங்கு ஜனநாயக சமூகம் ஒன்றை உருவாக்கிக் கொள்வது அவரது நோக்கமாக அமைந்தது. தனியாள் வளர்ச்சி அவரது தத்துவத்தில் முதலிடம் பெற்றது. தனியாளிடம் உள்ள இயல்பான திறன்களை உச்ச

அளவுக்கு வளர்த்துக் கொள்ள கல்விச் செயன்முறை தயாரிக்கப்பட வேண்டும்.

**காந்தியின் கல்விப் பிரேரணைகள்**

மேலே குறிப்பிட்ட சித்தாத்தங்கைள அடிப்படையாகக் கொண்டு காந்திமகான் கல்வி ஆலோசனைகள் பலவற்றைச் சமர்ப்பித்தார். அவையாவன,

**மாணவர் மையக்கல்வி**

இது காந்திமகானின் கல்விப் பிரேரணையாகும். இதன் கருத்து மாணவனை ஆதாரமாகக் கொண்டு கல்வி வழங்கப்பட வேண்டும் என்பதாகும். கல்வி வாழ்க்கையினூடாக, வாழ்வதற்காக வாழ்நாள் முழுவதும் பெறப்பட வேண்டும். கல்விக்கும் வாழ்க்கைக்குமிடையில் தொடர்பு இதிலிருந்து தெரிகிறது. வாழ்வதற்கு உணவையும் உடையையும் வழங்கிக் கொள்ள வேண்டும்.

சுதந்திர சுயாதீனமான ஒருவராக வேண்டின் அவர் தமது கருமங்களைத் தமக்காகச் செய்துகொள்ள வேண்டும். அதன் பொருட்டு அறிவும் செயலும் ஒன்றாகத் தொடர்புற வேண்டும். இதற்கு மிகச் சிறந்த பாடமாக அவர் கருதியது ஆடை நெய்தலாகும். அிம்சையை அடிப்படையாகக் கொண்ட குண வொழுக்கங்களை வளர்க்கும் ஒரு கல்வி முறையை வழங்குவதற்கு அது ஒரு தொழிலைச் சுற்றிக் கட்டியெழுப்ப வேண்டும். என்று அவர் கூறினார். விசேடமாக 7 வருட ஆரம்பக் கட்டாயக் கல்வி அவ்வாறு அமைய வேண்டும் என்பது அவரது கருத்தாக இருந்தது. விஞ்ஞானம், கணிதம், வரலாறு, புவியியல் ஆகியவற்றையும் இந்தப் புடைவை நெய்யும் தொழிலை ஆதாரமாகக் கொண்டே கற்பித்தார். பாடசாலை அரசிலோ தனியாளிடமோ தங்கியிருக்கக் கூடாது. பாடசாலைக்குத் தேவையான உணவு, உடை ஆகியவற்றைக் பாடசாலை யிலேயே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். அது தன்னிறைவுக் கல்வி முறையாகும். இதனைய மாணவர் மையக் கல்வி முறை என அவாட கருதினார். சமுதாயத்துக்குத் தன்னால் ஒரு சேவை நடந்துள்ளது என்னும் உணர்வு ஏற்படுவதால் பிள்ளைகளிடம் தேசாபிமானத்தை ஏற்படுத்தவும் இந்த முறை உதவும். தொழிற் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளவும் இதன்மூலம் இடம் கிடைக்கின்றது. வேலை செய்வதால் புலன்களுக்குப் பயிற்சியும் உடல் வளர்ச்சியும் அறிவு வளர்ச்சியும் ஏற்படும். பொருளாதார முன்னேற்றம் கல்வி முன்னேற்றத்துக்கும் கல்வி முன்னேற்றம் பொருளாதார முன்னேற்றத்துக்கும் காரணமாக அமைகின்றதென்பது விளக்கப்பட்டுள்ளது. அவரது கருத்தின் படி “செயல் மூலம் விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளும் செயன்முறை ஆரம்பக் கல்வியாகும்”

**தாய்மொழி கற்பித்தல் ஊடகமாதல்**

“கற்பித்தல் ஊடகம் தாய் மொழியாதல் வேண்டும்” என்பது காந்தியின் மற்றுமொரு பிரேரணையாகும். இந்தியாவில் பல மொழிகள் பயன்படுத்தப்படுவதால் இதனை வெற்றிகரமாகச் செயற்படுத்துதல் மிகக் கஷ்டமாகும். இருந்தபோதிலும் சுதந்திரமான, சுயாதீனமான ஒரு மக்கள் தொகுதியைத் தோற்றுவிப்பதற்குத் தாய்மொழியில் கற்பித்தல் அத்திய வசியமானதாகும் எனக் குறிப்பிட்டார். அவர்கள் தாய்மொழியில் கற்றுக் கொண்டால் மட்டுமே சுதந்திரமாகச்

சிந்திக்க முடியும் என்பது நவீன உளவியலாளர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும். ஆரம்பக் கல்வியைத் தாய்மொழியில் வழங்கும் முக்கியத்துவத்தை இன்று ஏராளமான நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. ஆரம்பக் கல்வி வாழும் வழியாக அமைய வேண்டும் என்று கருதிய அவர் ஒவ்வொரு கிராமத்திலும் ஓர் ஆச்சிரமத்தை அண்டித் தாய்மொழியில் கற்பிக்கும் ஆரம்பப் பாடசாலை ஏற்படுத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்கினார்.

கல்வியின் மூலம் சமூகத்தில் பற்பல விழுமியங்கள் போற்றப்படுகின்றன. வளர்க்கப்பட்டுகின்றன, கையளிக்கப் படுகின்றன. ஒவ்வொரு சமூகமும் குறிக்கப்பட்ட நோக்கங்களையும், விழுமியங்களையும் கொண்டுள்ளது. பொருளாதாரம், தொழில், கலை, கலாசாரம், பண்பாடு, ஆன்மீகம், அரசியல், அறிவியல் என்று விழுமிய முறைமைகள் சமூகத்திலே வேறுபடுகின்றன. இத்தகைய விழுமி யங்களை எல்லாம் சமூகம் உள்ளடக் கியுள்ளது. ஆகவே இவை யாவும் ஒன்று சேர்ந்து, சமூக பொருளாதார விழுமியங்கள் என்று கொள்ளப் படுகின்றன.

எந்த ஒரு சமூகத்திலும், சமூகப் பாரம்பரிய வழியிலே பின்பற்றப்படுகின்ற விழுமியங்களுக்கும், அதன் சமூகத்தின் விருத்திக்கும், நெருங்கிய தொடர்பு நிலவுகின்றது. ஒரு சமூகத்திலே, பாரம்பரிய வழக்கிலுள்ள விழுமியங்கள், அச்சமூகத்தின் வாழ்கைநெறியை ஓரளவிற்கு நிர்ணயிக்கின்றன. ஒரு சமூகத்தின் விருத்தியை அங்கு நிலவும் புவியியற் காரணிகள் நிர்ணயிப்பது பொன்று ஒரு சமூகத்தின் விருத்தியை அங்கு நிலவும் விழுமிய முறைமைகள் நிர்ணயிக்கின்றன.

சமூக மக்களிடையே காணப்படும் திறன்கள், புரிந்துணர்வு, நம்பிக்கை ஆகியவற்றை வளர்த்து, மக்களால் மக்களின் ஆட்சிக்கு வகுப்பதே கல்வியாகும். இக்கல்வியினால் பெற்ற அறிவின் மூலம், ஒவ்வொருவரும் இச்சமூகத்திலே மற்றையவர்களோடு சேர்ந்து வாழ்கின்றார்கள். கல்வியின் மூலம் சமூகத்திலே இளையோர்களது ஆற்றல் முழுமையாக வளர்வதோடு அவர்களது தொழிற்றிறனுக்குக் கல்வி பெரும் பங்காற்றுகின்றது. சிந்திக்கும் ஆற்றலினால் உண்மைகளை அறியும் வாய்ப்பு ஏற்படுகின்றது. அறிவினை வளர்த்துக் கொள்ளும் போது ஒருவருக்குச் சமூகத்திலே வாழ்வது பற்றிய பயம் நீங்குகின்றது. சமூகத்தில் உள்ள அனைவரும் கல்வியைப் பெற வேண்டும் என்ற நிலையில் அரசும், சமூகமும் நிறுவன ரீதியாகவும் நிறுவன ரீதியற்றதுமான செயற்பாடுகளை மேற்கொள்ளல் சிறந்ததாகும்.

இந்தியக் கல்வி மரபானது, முக்கியத்துவமாகத் தனிமனிதனின் ஆன்மீக ஈடேற்றம் தொடர்பாக ஈடுபாடு கொண்டிருப்பினும், சமூகத்தில் மனிதர் செம்மையாகவும், வளமாகவும் வாழ வேண்டும் என்பதற்கான, அவர்கள் பெற வேண்டிய சமூகத்திறன்கள், பொருளாதாரத் திறன்கள் பற்றியும் அக்கறை கொண்டுள்ளது. அண்மைக் காலத்திலே அறிவுப்பெருக்கம், விஞ்ஞான தொழில் நுட்ப அறிவு, காரணமாகப் பொருளாதாரச் செழிப்பு உருவாகியுள்ள போதிலும் மனித விழுமியங்கள் வீழ்ச்சியடைந்து வருகின்றன. இதன் காரணமாக ஒரு

நெருக்கடி நிலை தோன்றியுள்ளது. எனினும், மனித குலத்தின் முன்னேற்ற வரலாற்றில் பல தீர்க்கதரிசிகளும், பெரியோர்களும் தோன்றி உண்மை, நேர்மை, மனிதநேயம், அன்பு, போன்ற விழுமியங்களின் சிறப்பையும் உணர்த்தியுள்ளார்கள். இத்தகைய மனிதநேயக் கருத்துக்கள் மனித ஒருமைப்பாட்டிற்கு அவசியமானதென்று கருதப்பட்டது. இத்தகைய கருத்துக்கள் மகாத்மா காந்தியின் சிந்தனைகளோடு தொடர்பு படுத்தி நோக்கற்பாலது. மகாத்மா காந்தியை கூறுவதோடு அவருடைய ஆதாரக்கல்வித் திட்டம் இந்திய கல்வி மரபின் சமூகப் பொருளாதார நோக்கங்களோடு இணைந்தவை என்றும் கொள்ளப்படலாம்.

## ஆதாரக் கல்வித் திட்டம்

காந்தியடிகள் காட்டிய ஆதாரக் கல்வித் திட்டம் சர்வோதய சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றுள்ளது. கல்வி சார்ந்த சர்வோதய இயக்கமானது பல துறைகளின் வளர்ச்சியைத் தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது. ஆதாரக் கல்வி, முதியோர் கல்வி, தாய்மொழிவளர்ச்சி, மாதர் முன்னேற்றம், உழவர் நிலை உயர்தல், தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்வு, பூர்வீக குடிகளின் உயர்வு போன்ற சகல துறைகளின் வளர்ச்சியையும் அது தன்னுள் அடக்கியுள்ளது. ஆன்மீக, பொருளாதார, அரசியல் விடுதலைக்கு வித்திட்டு, நாடு விடுதலை பெற்ற பின்னர் சமூகத்தில் காணப்படும் உயர்வு தாழ்வு என்ற சிக்கல், கல்வியின் மூலம் எழுந்த சர்வோதய சமுதாயத்தினால் நீக்கப்பட வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டிருந்தார். ஆதாரக் கல்வி மூலம் தேசிய நோக்கை வளர்த்துச் சுயாட்சி ஏற்பட வேண்டும என்று காந்தியடிகள் விரும்பினார்.

கல்வி மூலம் பாரதத்தின் பழம்பெருமைகள் சிறப்பவும், புதுமை மலர்ந்து நவபாரதம் உருவாகவும் காந்தியடிகளின் கல்வித் திட்டம் வழிகாட்டியது. காந்தியடிகளின் கருத்துக்கள், ஆன்மீகம் சார்ந்த சமூக பொருளியில் தத்துவங்களாக அமைகின்றன. அடிகள் உடல் உழைப்பைக் கல்வியுடன் இணைத்தார். உடல் உழைப்பிற்குரிய இடம் கொடுக்கும் கல்வியே சிறந்த கல்வி என்பது அவருடைய சித்தாந்தம் ஆகும். வெறுமனே பெறும் ஏட்டுக்கல்வி மட்டும் கல்வியாகாது. தொழிற் பயிற்சியும் கல்வியின் பாற்பட்டது என்பதானால் கைத் தொழில் ஒன்றையும் கற்கவேண்டும் என்கிறார். எனவே காந்தியடிகளின் ஆதாரக் கல்வி மக்களின் சுயதேவைகளை நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்டிருந்ததோடு, உழைக்கும் பண்பினை வளர்த்தல், கூட்டுறவு மனப்பான்மையை ஏற்படுத்துதல், என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளன. பிறருக்கு உதவி புரிந்து வாழும் பண்பு மலர்ந்து, சமூக நலனாக உயர்கின்றது. மனிதகுல முதற்பணி என்று கூறும் காந்தியடிகள் இந்நிலை ஏற்படும் போது சமூகத்தில் சுரண்டல்கள், ஏற்றத் தாழ்வுகள், சமூகவிரோதச் செயல்கள் மறைந்து ஒருமைப்பாடு சமத்துவம், சுதந்திரம், சமாதானம் என்பன மலரும் எனக் கொண்டார். இத்தகைய சர்வோதய சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்புவதே கல்வியின் நோக்கமாகும்.

ஆதாரக் கல்வி என்பது, ஒரு வாழ்க்கைநெறி, இது ஒரு கற்றல் முறையும், வாழும் முறையுமாகும்.

வாழ்க்கை மூலம் கற்றல் என்ற உயர் விழுமிய முறையினையும் இது கொண்டுள்ளது. சிறு பருவத்திலிருந்தே மனிதத் தன்மைகளோடு இயைந்த, சமூகக் கூட்டுறவு வாழ்க்கையினை வாழ்வதற்கு மனிதர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இதன் அடிப்படையில், பின்னர் சமூகப் பொருளாதார வாழ்க்கையை ஒழுங்குபடுத்தப் பயிற்சியைப் பெறலாம். இத்தகையதொரு சமுதாயத்தில், மக்கள் சுதந்திரமாகவும், திருப்தியுடனும், வளமாகவும் வாழ முடிகின்றது. கூட்டு முறையிலான சமுதாய வாழ்க்கையை இலட்சியமாகக் கொண்டு, மனித சக்திகளைப் பயன்படுத்துவதன் மூலம், மானிட முழுத்தன்மையை ஏற்படுத்தும் தத்துவத்தைக் காந்தியடிகள் அளித்தார். கல்வியானது மனிதர்களுக்கு உட்பலத்தை அளிப்பதன் மூலம் வெளிப் பலத்தையும், சமுதாய உறுதியையும், அமைதியையும் ஏற்படுத்த உதவுகின்றது.

கல்வி தனிமனிதர்களுக்கு வளர்ச்சியையும், பயிற்சியையும் அளிக்க வேண்டும் என்பது ஏற்கப்பட வேண்டியதாகும். அதேவேளை சமூகச் சூழ்நிலையோட தொடர்பு இல்லாமல் ஒருவனுக்கு வளர்ச்சி என்பது இல்லை. ஆகவே கல்வியானது தனிமனித முன்னேற்றம், சமூக முன்னேற்றம் ஆகிய இரண்டினையும் ஒருங்கே அடைவதற்கு வழிவகுக்க வேண்டும்.

கல்வியானது தனிமனித நோக்கு, சமூகநோக்க என்பவற்றைக் கொண்டிருக்க வேண்டும் என்று கொள்ளும் போது தனிமனித நலன் சமுதாய நலனுக்குத் தடையாகவே அமையும். தனமன நலன், தன்னலமாக உருவெடுத்துச் சமூக நலன்கள் முழுவதையும் தானே துய்க்க வேண்டும் என் எண்ணும் போது, காந்தியின் சமூகநோக்கு பாதிப்படைகின்றது. மனிதனின் ஆளுமை, தனித்துவம் என்பவற்றின் வளர்ச்சியும் பாதிப்படையக் கூடாது. இவைகளைப் பாதிப்பு அடையவிடாமல் சமூகநலனையும் உள்ளடக்கிக் கல்வி செயற்பட வேண்டும். தனிமனித சுதந்திரத்தையும் அவனது ஆளுமை வளர்ச்சியையும் மதிக்கும் இம்மரபுக்கல்வி சமூகநலன், அதனது முன்னேற்றம் கருதி, தனி மனிதனது தனித்துவத்தைச் சீர்செய்து சமுதாயத்தோட ஒத்துக்போகும் பண்பினையும் அளிக்கின்றது.

## தொழிற்கல்வி

கல்வியிலே தொழிற்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, கைத்தொழிற் கல்வியின் முக்கியத் தவத்தைக் காந்தியடிகள் வலியுறுத்தினார். இதன் அடிப்படையில் அவருடைய கல்வித் திட்டத்திலே கிராமங்கள் சிறப்பிடம் பெற்றன. உண்மை இந்தியாவைக் கிராமங் களிலேயே காணமுடியும் என்று கருதினார். இந்தியாவில் உள்ள கிராமங்கள் வளர்ச்சி அடைந்தால் இந்தியா வளர்ச்சியடைந்ததாக அமையும். காந்தியடிகளின் ஆதாரக் கல்விநெறி, சுயதேவைப் பூர்த்தி அடிப்படையில் அமைந்தமை. அது தேசிய நோக்கை வளர்த்து, சுயாட்சி பெறுவதற்கான உள்நோக்கத்தைக் கொண்டு இருந்த மையினாலே ஆகும். ஆகவே நாட்டின் பொருளாதாரம் பற்றிச் சிந்தித்த போது, விவசாயத்தைப் பற்றிக் கூடுதலாகச் சிந்தித்தார். கல்வி அளிக்கும் போது அது கிராமத்தில் உள்ள தொழில்கள் பலவற்றையும் அடிப்படையாகக் கொண்டு அளிக்கப்பட வேண்டும். இவற்றோடு தொடர்புபட்டதாகவே

அடிகளினால் முன்வைக்கப்பட்ட ஆதாரக் கல்வி பற்றிய கருத்துக்கள் இடம் பெற்றன. தொழில் மூலமாகக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்னும் போது, அத்தொழில் ஒரு பிரதான தொழிலையும் ஒரு உபதொழிலையும் அடிப்படையாகக் கொண்டு அத்தோடு தொடர்பு பட்டதாகக் கல்வி அமைய வேண்டும் எனக் கருதினார். கல்வியானது செயல் அடிப்படையானது என்ற எண்ணமே காந்தியடிகள் எண்ணமாகும்.

தொழில் பற்றியும், அத்தோட தொடர்பான அறிவும் எல்லோர்க்கும் ஊட்டப்பட வேண்டும் என்றும், அவர் சிந்திக்கின்றபோது, இந்திய நாட்டிற்குப் பொருத்தமான தொழில்கள் நெசவு, விவசாயம், போன்றவற்றைக் கருத்தில் கொள்கின்றார். இந்த இரண்டு தொழில்களோடு தொடர்பாக சூழல், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி போன்ற பாடங்கள் இடம்பெற வேண்டும். ஆகவே பள்ளிக் கூடக்கலைத்திட்டத்திலே தொழிற்கல்வி பற்றிய சிந்தனை மிக முக்கியமானது என்பது காந்தி யடிகளின் வாதமாகும். இவ்வகையான கல்வியளிக்கும் பாடசாலை, தன் ஆசிரியர்களின் செலவை ஏற்கக் கூடியதாக இருக்க வேண்டும். ஆகவே இத்தகைய தொழில்களைச் செய்து கல்வி கற்பதன் மூலம் மாணவன் சமூகம் பற்றிய விளக்கத்தைப் பெறுவதோடு சமூக நலனில் அக்கறை செலுத்த வேண்டும் என்ற உணர்வைப் பெறுகின்றான். இவ்வகையில் காந்தியடிகளின் கல்விச் சிந்தகைகளில் சமூகம் பற்றிய சிந்தனைகள் காணப்படுவதனை உணர முடிகின்றது.

கல்விச் சிந்தனையின் வளர்ச்சியில், இருபதாம் நூற்றாண்டுக் கல்விச் சிந்தனைகள் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தின. தனி மனிதன், தன் வளர்ச்சி மூலம் வாழ்க்கையின் உயர்ச்சியைப் பெறுவதற்குப் பெறும் கல்வியானது, சமூகத்தில் மனிதனை ஓர் அங்கமாக்க ஆதாரமாக அமைய வேண்டும். இக்கருத்துக்கள் காந்தியடிகளின் கருத்துகளோடு தொடர்புபட்ட வகையில் உள்ளன. அவருடைய கல்வித்திட்டத்திலே உடல் உழைப்பே முக்கியம் பெறுகின்றது. உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் வளர்ச்சி கல்வியின் மூலம் ஏற்படவேண்டும். இவ்வகையில் தோன்றிய விசாய அறிவியற் கலையானது வாழ்க்கையிலே உடல் உழைப்பின் மூலம் பொருளைச் சம்பாதித்து உயர்வடைய எல்லோருக்கும் சம சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

விவசாயம், கைத்தொழில் மூலம் வளருகின்ற சமுதாயம் நாட்டிலே தோன்றியுள்ள அந்நிய ஆட்சியை அகற்றும் என நம்பினார். இலட்சியம் சிறந்ததாக இருந்தால் மட்டும் போதாது, அதனை அடையக் கையாளும வழிமுறைகளும் உயர்ந்தனவாக இருக்க வேண்டும் என வாதிட்டார். அடிகளினால் முன்வைக்கப்பட்ட ஆதாரக் கல்வித் திட்டமானது உளவியல் அடிப்படையிலும், சமூகவியல், பொருளியில் அடிப் படையிலும் எழுந்த கல்வி நெறியாகும். சமூகம் அறிவியல் ரீதியான கருத்துக்களைப் பெற்று முன்னேற்ற மடைய வேண்டும் என்னும், நாட்டின் பொருளாதாரம் உயர வேண்டும் என்றும் தோன்றிய கருத்துக்களின் மீது கட்டியெழுப்பப்பட்ட கல்வி நெறியாக விளங்குகின்றது. ஆதாரக் கல்வியானது

வேலை வாயிலாகக் கல்வி என்பதையும், கல்வியானது வேலை வாயிலாகக்கல்வி என்பதையும், சுயதேவையை நிறைவு செய்யும் முறையிற் கல்வி அமைதல் என்பதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றது. ஆகவே அறிவியல் ரீதியாகக் கல்வி வளர்ச்சியடைந்து ஆராய்வூக்கத்தை வளர்ப்பதன் மூலம், ஆராய்ச்சி ஊக்கம் சிந்தனையைத் தூண்டுவதுடன் உடற்பயிற் சியையும் உற்பத்திக்கு வழிவகுக்கின்ற போது பொருளாதார நிலை மேலோங்கு கின்றது. "செய்து கற்றல்" முறைமூலம் கருத்து, நாட்டம், கவர்ச்சி போன்றனவும் வளர்ச்சி பெறுகின்றன. சிறந்த சமூக மனப்பான்மை தோன்றுகின்றது.

ஆகவே கல்வியானது வாழ்க் கையோடு ஒட்டியதாக, வாழ் கையை மையமாகக் கொண்டதாக அமைதல் சிறப்பானது என்று அடிகள் கருதிக் கொண்டார். கல்வியானது வாழ்க்கை யோடு ஒட்டியதாக அமையும் அதேவேளை, வாழ்வின் எல்லாத் துறைகளையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும். கல்வித் தத்துவத்திற்கு அடிப்படையாக அமைவது, வாழ்க்கைத் தத்துவம் என்று கொள்ளப்படுகின்றது. வாழ்க்கை இலக்கே கல்வி இலக்கை நிர்ணயிக்கின்றது. வாழ்க்கையே கல்வியின் பாடப் பொருளாக அமை கின்றது. ஆகவே அனுபவம் தான் கல்வியெனக் கொள்ளலாம். இக்கருத்தில் காந்தியடிகளும், ஜோன்டூயி அவர்களும் ஒன்றுபடுகின்றார்கள்.

எனவே சமூக வாழ்க்கையிலே சமூகத்தின் பொருளாதார வளத்தைக் கல்வியால் வளமாக்க வேண்டுமானால், குழந்தைகளுக்கு ஆரம்பம் தொட்டே விவசாயம், நெசவு ஆகிய இரு தொழில்களும் பள்ளிக்கூடத்தில கற்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்பது காந்தியடிகளின் எண்ணமாகும். இந்திய நாட்டின் பொருளாதாரம், அந்நிய ஏகாதி பத்திய வாதிகளினால் மக்கள பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில், கல்வி, அமைய வேண்டும் என்று சிந்தித்தார். அவ்வாறாயின் கல்வி, தொழிலை மையமாகக் கொண்டு அமைய வேண்டும். அதற்குத் தெரிந் தெடுக்கப்படும் தொழில் செறிவுள்ளதாக இருத்தல் வேண்டும்.

தொழில் மூலம் பெறப்படும் பொருட்கள் நாணயப் பெறுமதி உள்ளதாக அமைந்து பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும் என்பது காந்தி யடிகளின் பெருவிருப்பமாய் அமைந்தது. அவரின் ஆதாரக் கல்வித்திட்டம் உளவியல், சமூகவியல், பொருளியல், அடிப்படையில் அமைந்த கல்வி நெறியாகும். சமூகம் முன்னேற்றமடைய வேண்டும். நாட்டின் பொருளாதாரம் உயர வேண்டும் என்ற கருத்துக்களின் மீது கட்டியெடெப்பப்பட்ட கல்விநெறியாக இத்தகைய விழுமியங்கள் பற்றி பல்வகைக் கருத்துக்களையும், உள்ளடக் கியுள்ளன எனக் கொள்ளலாம்.

**உசாத்துணைகள்**


1. சந்திரசேகரன், சோ. (1996) புதிய நூற்றாண்டுக்கான கல்வி, தர்ஷனா வெளியீடு, கொழும்பு.
2. இராசநாயகம், ஜெயலட்சுமி (2004) சமுதாயக்கல்வி தஞ்சாவூர் - 4, தமிழ்நாடு.
3. அண்ணாமலை, அ (2008) காந்தி கல்விச்சிந்தனைகள், காந்தி கல்வி நிலையம், சென்னை

# நீடு வாழ்வாய் தாயே

திருமதி. ரு.பகீரதன்
ஆசிரியர்



கண்களில் கருணை முகத்தினில் சிரிப்பு
கனிவான பேச்சு கண்ணிய நடத்தை
நேர்மனப்பாங்கு நட்புறவுள்ளம்
நேரிழையாள் இவள் நீடுழி வாழ்க!

அன்னை புவனேஸ்வரியை வணங்கி
அனுதினம் தன்கடமை செய்வாள்
அன்புடன் மாணவ்ரகளை அரவணைத்தே
ஆக்கமும் ஊக்கமும் நல்கிடுவாள்.

சிறப்புடன் இந்துநாகரிகம் கற்பித்து
சீரிய வழிகாட்டல் ஆலோசனை வழங்கி
விருப்புடன் பல பொறுப்புக்களை ஏற்று
பொறுமையுடன் இவள் சேவையாற்றிடுவாள்.

ஆசிரியராய், தரஇணைப்பாளராய், பகுதித்தலைவராய்
ஆனந்தமுடன் அரும்பணியாற்றி
காலில் சக்கரம் பூட்டியது போல
கடிதென விரைந்து செயல்களை முடிப்பாள்.

ஆற்றல், அறிவு, அன்பரவணைப்பு
ஏற்ற நன்னடத்தை கடினமான உழைப்பு
பல்துறைப் புலமை படைத்தெமை ஆளும்
புஸ்பராணியே உம்பணி நீள்க......................!

❀ ❀ ❀

# A New Approach to English Teaching and Learning – English as a life skill / Tool of communication

**Miss. Vasanthi Vaithilingam,**
**Teacher of English**

The aim of His Excellency the President is to bring about a paradigm shift in the teaching of English in our country. From colonial times till the launch of the present Presidential Initiative, English was taught as a subject, as a language and not as a Tool of communication. English was taught in our schools through its grammar and structure and not through the spoken word. Children were taught how to 'construct' the English language and not how to 'use' it.

Spoken English therefore has never been a part of the school curriculum. Spoken English skills are not tested either, in the examination system currently followed in our schools.

The idea held by linguists that "Language is both rule governed and creative" has been dealt, only with the first part of this tenet so far, i.e. rule learning which includes rules, order, regularities, structures, patterns and theories in the process of teaching English to develop only reading and writing.

The creative aspect of this idea of language which goes beyond rule learning to make use of language especially for communication has not or hardly been dealt with at our schools. In other words, what we have been doing so far was "Teaching about the language" and not "Teaching the Language how to use it" to our students whose principal aim is to learn English to use it as a powerful means of effective communication. The terrible consequence of this rule teaching and learning of English has produced today, a generation of students whose communicative skills are blocked and clogged to such an extent where English has no utility value for them. The other bad effect of this learning and teaching process is that our students are reluctant and hesitant to speak English today.

The major problem today among our students who have passed English with As, Bs, and Cs both at their O/L and A/L exams is that still they are fighting a bitter battle and grappling with the problem of using English meaningfully mainly for purposes of useful communication in different situations and contexts in their true life. The major cause of this problem of inability to use the language in different situations in their real life conditions has been attributed to the approach and methodology advocated and adopted to teach and learn English was purely for reading and writing only for academic purposes, during their 10 - year period of formal learning at schools, and listening and speaking has not been dealt with sufficiently, nor has special provision or component been made available specially for speaking opportunities in their syllabus.

Therefore, little did our students realize the importance of communication when learning English at school, but it is only when they step into the society, and especially in the field of work, they understand the value of communication.

With a view to find a permanent and viable solution to the burning problem of communication in English faced by our students, the Special Initiative Unit of the Presidential Secretariat in collaboration with the Ministry of Education has embarked on a very effective, fruitful and result oriented project to disseminate Communicative English Skills across the country, first to the schoolchildren and later to the school leavers and others.

In order to provide a paradigm shift from English as a subject or language to English as a life skill / Tool of communication, The National Evaluation and Testing Service (NETS) of the Education Ministry under the Commissioner General of Examinations has planned to evaluate listening and speaking skills at the G.C.E (O/L) Examination through the SBA system from 2012 with 30 marks out of 100 marks in the English paper given for these two competencies.

As a Master trainer and a teacher at school training the teachers of English and students, I found this course to be very effective and empirically productive in dealing with the strategies for developing spontaneous speaking. Providing ample opportunities for the students to speak English is the pivotal role and the essence of this programme. In other words, the students with the able guidance, direction and support of the teacher, acquire the language informally through very stimulating and interesting activities rather than learning it formally with no activities at all, except the chalk, board and talk all by the teacher which make English teaching and learning a very dull, drab, and dry academic exercise for both the teacher and the student as well.

Given the correct impetus and full backing, and properly implemented by teachers with a sense of deep dedication, great commitment, and vehement duty consciousness, this programme will undoubtedly be a very successful one as any other programme by the government.

❀ ❀ ❀



சரஸ்வதி பூசை நிகழ்வு

கொழும்பு ரோட்டரக் கழகத்தால் கணனி வழங்கப்பட்ட நிகழ்வு – 2011

மாற்று வலுவுள்ளோருக்கான நிகழ்வு – 2011

மனைப் பொருளியல் கண்காட்சி – 2011

பாடசாலை மாணவர்களுக்கான இலவச சப்பாத்துகள் வழங்கும் நிகழ்வு

பாடசாலைல வலைப்பந்தாட்ட அணி மொனராகலைக்கு சென்ற போது

# கல்லூரி நிகழ்வுகளின் பதிவுகள்




வரலாற்று கண்காட்சி – 2011

பரிசளிப்பு விழா 2010

ஆதிதி உரை – ஆசிரியர்

"ஆசிரியம்"

நூலகக்கண்காட்சி – 2011

நாணய கண்காட்சி – 2011

இடைவினைக்கழகத்தால் நடாத்தப்பட்ட

சிரமதான நிகழ்வு – 2011

# Electricity

**S.Srithuvaraka**
**Part time English Teacher**

From the Greek electron (amber), the name applied originally to the unknown cause of the attraction, repulsions, spark lings, etc.which attend the friction of amber and similar substances. The same cause is now recognized as giving rise, under various circumstances, to many phenomena.

Many attempts have been made to ascertain the true nature of electricity, but it cannot be said that we have yet any sure knowledge of what this subtle agent really is. Electricity behaves as if it were an in compressible fluid substance, but it differs from all known fluids in so many particulars, that it may be asserted that whatever else it may be, it is not a fluid in the ordinary sense of the word. Neither is it a form of energy, though electrification as distinguished from electricity certainly is such. Many scientific men hold the view that electricity is the either itself and that the phenomena of positive and negative electrifications are due to displacement of the ether at the surfaces of bodies. The researches of Hertz, who by direct experiment verified James clerk Maxwell's brilliant theory that electrical action is propagated through space by wave motion in the ether, differing only in respect of wave length and period from the vibrations which constitute light, have been of the utmost value in helping to arrive at a solution of this question. Investigations into the phenomena of electric discharges in high vacuum followed by the discovery of roentgen of the x-rays have also thrown great light on the subject.

The application of electricity is extremely varied. Its employment for telegraphy and electro-metallurgy, for chemical and for medical and physiological purposes, for the production of light to illuminate streets and buildings, for driving vehicles and machinery of various kinds, may be mentioned as examples.

**The application of electricity-medicine:**

The chief diseases in which electricity appears of service are cases of mild nervous lesions, rheumatic affections, neuralgia, and etc. Electro puncture and electro-cautery have also been successfully used in medicine, the farmer in the treatment of aneurism, the later for the removal of tumors, etc

**Electric lighting:**

The brilliant and dazzling light obtained by transmitting a powerful electric current between two sticks of carbon was first discovered by Sir Humphry Davy who exhibited it in 1813 at the Royal Institution employing for the purposes a voltaic battery of 2000 cells.

One of the chief obstacles to the earlier, introduction of the light was the cost and trouble of maintaining a sufficiently strong current by means of a voltaic battery. Faraday's discovery of magneto-electric induction furnished a new source of electricity, and machines founded on this principle were successively improved till a larger pattern, commenced by Nollet in 1850, was so far improved by Holmes in 1853 and following years, as to be adopted by the Trinity Board in 1857 for lighthouse purposes, modern dynamos consist essentially of two principal parts, via, the electro-magnet or magnets usually fixed, and the armature, which revolves. The electro-magnet when excited by the current through its coils creates a magnetic field of intense power. The armature a coil or collection of coils mounted on a spindle is revolved in this magnetic field. Powerful currents of electricity are thus obtained, which are collected and directed by various devices.

# Evil Effects of Tele - drama

**Mrs.C.Jeyamanon**
**Teacher of English.**

Television plays an important role in all aspect of human life. In the field of entertainment there are tele-dramas instead of making the entertainers happier produce evil situations on which people bent on taking up those evil things upon themselves and end their life in unending sorrows and misery.

Certain housewives without concerning their normal duties spend hours watching these tele-dramas fall into numerous problems. Their eye sight affected owing to watching for a long time. Sitting for a long time in front of the T.V they are affected psychologically and physically of mental weaknesses and pain all over the body.

Even the children too join with the parents, watching tele-dramas undermining their studies and doing their home work.

When things which are not suitable to be screened the children get attracted in these and encouraged themselves involving in criminal activities. Such as gang robberies, burglaries, mob violence, child abuses, sexual crimes, anti government terrorist activities, murder etc. Eventually they take to refuge in prisons and gallows.

The directors of these tele-dramas, if they produce good and useful thing to uplift the society in all walks of life that pursuit is acceptable. Parents and leaders should be vigilant to take their children and the society on the way to progress. If these goals are achieved we could expect a prosperous society full of happiness and peace.

# J/UNION COLLEGE, TELLIPPALAI
# TUTORIAL STAFF

| | | |
|---|---|---|
| 1. | Mr.S.Punniyaseelan (Principal) | B.Ed (Hons), SLPS I |
| 2. | Mr.R.Shanmugeswaran (Deputy Principal) | B.Sc, Dip in Ed, M.Ed, SLTS I |
| 3. | Mr.V.Chandrasekar (Vice Principal) | B.Sc, Dip in Ed, M.Ed, SLTS 2 I |
| 4. | Miss.P.Elayathamby (Sectional Head) | B.A, Dip in Ed, M.A, SLTS I |
| 5. | Mr.S.Jeyaruban (Sectional Head) | B.A, Dip in Ed, SLTS I |
| 6. | Mrs.N.Kamalanthan (Sectional Head) | Sp.Trd in Sci, SLTS I |
| 7. | Mr.A.Thayaparan | B.Sc, Dip in Ed, SLTS 2II |
| 8. | Mr.B.Tharmaseelan | B.Sc, Dip in Ed, SLTS 2 II |
| 9. | Mr.R.Navaketheeswaran | B.A.F, Dip in Ed, M.Ed, SLTS 2 II |
| 10. | Mr.M.Joojin Calistrus | B.Sc, Dip in Ed, SLTS 2 II |
| 11. | Mr.R.Rajarajan | B.A, Dip in Ed, SLTS 2 II |
| 12. | Mr.M.Raveeswaran | Dip in Teach Sci,B.A, SLTS 2 II |
| 13. | Mr.V.Thushyanthan | B.Sc, SLTS 2 II |
| 14. | Mr.S.Sritharan | Dip in Teach Maths, B.A, SLTS 2 II |
| 15. | Mr.K.Balavisakan | Sp.Trd.English, SLTS 3 II |
| 16. | Mr.V.Senthan | B.A, Dip in Pu.Adm,Dip in Ed, SLTS 2 II |
| 17. | Mr.S.Jeevananthan | Sp.Trd.Sci, SLTS 2 II |
| 18. | Miss.J.Senthivel | B.Com, Dip in Ed, SLTS I |
| 19. | Mrs.L.S.Lloyd | Sp.Trd.Art, SLTS 2 II |
| 20. | Mrs.J.Jeyatharan | B.A, Dip in Ed, SLTS 2 I |
| 21. | Mrs.K.Nathasorupan | B.A, Dip in Ed, SLTS I |
| 22. | Mrs.M.Premkumar | Dip in Dance, Dip in Ed,SLTS 2 II |
| 23. | Mrs.J.Thavendrarajah | B.A, Dip in Ed, SLTS 2 II |
| 24. | Mrs.A.Lister Joseph | B.A, Dip in Ed, SLTS 2 II |
| 25. | Miss.V.Vaithilingam | B.A, Dip in Ed, M.Ed,SLTS 2 II |
| 26. | Mrs.M.Raveendran | B.Sc, Dip in Ed, SLTS 2 II |
| 27. | Mrs.S.Ganeshamoorthy | B.A, Dip in Ed, SLTS I |
| 28. | Miss,J,Murugaiah | B.A, (Hons) SLTS 2 II |
| 29. | Mrs.R.Tharmaseelan | Sp.Trd.Ho.Eco, SLTS 2 II |
| 30. | Mrs.J.Thavalingam | Sp.Trd.Maths, SLTS 2 II |
| 31. | Mrs.C.Jeyamanon | B.A, SLTS 2 II |
| 32. | Mrs.R.Pakeetharan | B.A, SLTS 2 II |
| 33. | Miss.P.Pathmanathan(Teacher Librarian) | B.A(Hons), Dip in Library & Information Science, SLTS 3 I |
| 34. | Miss.V.Suppaiah (Teacher Librarian) | B.A (Hons), SLTS 2 II |

| | |
|---|---|
| 35. Mrs.M.Jegaruban | Dip in Teach ICT, SLTS 3 I |
| 36. Mrs.K.Sivananthan | Teacher Assistant |
| 37. Mrs,J.Surendranath | Teacher Assistant. |
| 38. Mrs.S.Thavarajah | B.A, Dip in Ed, SLTS 2 II |
| 39. Mrs.J.Sivarajah | Sp.Trd Com, SLTS 2 II |
| 40. Mrs.T.Jeyakumar | B.A, Dip in Ed, SLTS 2 II |
| 41. Miss.S.Pulendran | B.A, SLTS 3 I |
| 42. Mrs.J.Lambotharan | B.F.A, SLTS 3 I |
| 43. Mrs.V.Vasikaran | B.F.A, SLTS 3 I |
| 44. Mrs.S.Sriram | Part time English Teacher |

**NON ACADEMIC STAFF**

| | |
|---|---|
| 1. Mrs.S.Ravirajan | B.B.A,(Planning / Financial Assistant) Grade III |
| 2. Mr.T.Thavarajan | School Labourer, Grade I |
| 3. Mr.I.Pushparajah | Watcher, Grade II |

பொன் கடன் அடகுச் சேவை
தற்போது,
கொமர்ஷல் வங்கியின்



# சுன்னாகக் கிளையில்



மாதாந்த வட்டி
00.9%
மட்டுமே

தங்க நகைகளுக்கு அதிகூடிய தொகை

தொடர்பு கொள்ள:
021 224 0521/ 021 224 0522

**கொமர்ஷல் வங்கி**
பொன் கடன் அடகுச் சேவை

சகல வகையான அப்பியாசப் புத்தகங்கள்,
பயிற்சிப் புத்தகங்கள், காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள்
அனைத்தையும் ஓரே கூரையில் மலரிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

Pentium PASTELS | Pentium PEN


ஆகியவற்றின்
யாழ் மாவட்ட முகவர்கள்

தர உள்ளீட்டுப் பொருள் விற்பனையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

# SRIKARAN BOOK CENTRE
# ஸ்ரீகரன் புக் சென்ரர்

கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்

ஸ்ரேசன் வீதி,
சுன்னாகம்.


Kajamugan
Hardware
கட்டிடப் பொருட்கள், மிற்சுஜி சீமேந்து,
Dulux (Akzo Nobel)
பெயின்ற் வகைகள் National PVC Pipes &
Fitting, Macson Mesh அனைத்தையும்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
No.147,149 Stanley Road,
Jaffna.
T.P : 021 222 2833

With Best Compliments to Union's Special Souvenir 2010

# FASHION HOUSE



அழகு சாதனப் பொருட்கள்,

அன்பளிப்புப் பொருட்கள்,

இலத்திரனியல் சாதனங்கள்

என்பவற்றைப்

பெற்றிட நாடவேண்டிய இடம்





சுந்தர்சன்
மானிப்பாய்
SUNDHARSON
Distributors of Electrical Item
and Appliances
Water Pump
Sanitary War
Floor & Wall Tile
யாழ் வீதி
மானிப்பாய்
T.P 021 225 513


Sangeetha Agent
& Communication
MMBL Money Master
WESTERN UNION MONEY TRANSFER
SANGEETHA AGENT
SriLankan
சங்கீதா ஏஜன்ட் &
கொமினிக்கேசன்
WESTERN UNION
MONEY TRANSFER
aramex
AIR MAIL
யாழ் மக்களுக்கென சேவையை வழங்கும் பொருட்டு இப்போது நாம் சகல
நாடுகளுக்குமான விமான பயண சீட்டுக்கள் Date change,
Conform Travels Insurance போன்றவற்றையும்
மக்களுக்கு மத்தியில் இருந்தே வழங்குகின்றோம்
Spice Travels & Tours ( at Joining - Sangeetha Agent )
021 222 8591
இங்கிருந்தவாறு உலகின் எந்தவொரு நாட்டுக்கும் உங்கள்
உறவுகளின் வாசல்வரை உணவுகள், உடைகள், CD க்கள் முக்கிய
ஆவணங்கள், கடிதங்கள்,போன்றவற்றை 4நாட்களுக்குள்
மிகவும் குறைந்த கட்டணத்துடன் அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.
உலகின் எப்பாகத்தில் இருந்தும் வெஸ்டன் யூனியன்
மூலமாக அனுப்பும் பணத்தினை உடனடியாக
இங்கு பெற்றுக் கொள்ளமுடியும்.
மற்றும் உங்களுக்கு தேவையான போட்டோ பிரதிகள்,
Book Binding , Printout(Colour / B/w )
Skype Calls, Internet Browsing & Net Games
போன்றவற்றையும் மிகவும் குறைந்த கட்டணத்தில்
உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்.
யாழ் - கொழும்பு
அதிசொகுசு , சொகுசு, அரை சொகுசு,பஸ் ஆசன பதிவுகளும் ஒழுங்குபடுத்தல்களும்
மிகவும் இலகுவாக பெற்றுக் கொள்ளலாம்.
Dialog
Sri Lanka Telecom Mobitel
airtel
HUTCH
etisalat
Tel : 021 222 2525 Fax : 021 222 8546
email:sangeethaagent@gmail.com
412, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.
(யாழ் மத்திய பஸ் நிலையம்முன்பாக)



C.P.T.
CAUSEWAY
PAINTS LANKA (PVT) LTD.
The Magic
Colour box
Winner of
NCE Export Merit Award
2002
DEBEER
CAR-REFINISHES
OVER 50,000
COLOURS
LUXURY
EMULSION PAINT
KENLUX
SYNTHETIC ENAMEL
Sunny
Auto HI-BUILD
LACQUER
Golden Europe Award for Quality New Millennium Award-2003
Winner of NCE Export Bronze Award 2003
Golden Asia Award for Excellence New Millennium Award-2002 (Hong Kong)
CAUSEWAY
EMULSION
ULTRA
Colour box
KENLUX
CAR-REFINISHES
DEBEER
BeroBase
5
MM 577
CAUSEWAY
LUXURY
15, Noel Mendis Mw, Moderawila Industrial Estate, Panadura.
Tel: (038)224 0040, (038)224 3166-9 Fax: (038)224 0046
E-mail:causeway@sltnet.lk Website:www.causewaypaints.com
Causeway Paints - Globally Accepted
Virus Graphics Inuvil. : 021 224 1815